மதியம் செவ்வாய், டிசம்பர் 2, 2008

ஞானவழி -1

பொன், நிலம், பெண் இவைகள்ல ஆசை வைத்தவங்களோ, வைக்காதவங்களோ அவங்களோட உள்ளே இருக்கிறது ஒரே சச்சிதானந்த சொரூபமான ப்ரம்மமே. அது நம் மனத்தடைகளை அகற்றி ஞானம் ஒளிர உதவட்டும் என்று பிரார்த்தனை செய்து ஆரம்பிக்கிறோம்...

ஞான யோகம் ன்னாலே நமக்கு இதெல்லாம் சரிப்படாதுன்னு ஒரு மனத்தடை வர வாய்ப்பு இருக்கு. கொஞ்சம் கூர்ந்து கவனிச்சு யோசிக்கணும்னாலும் போதிய உழைப்பு இருந்தா யாருமே புரிஞ்சுக்கலாம்.

ஞானம் சம்பந்தப்பட்ட புத்தகங்கள்லே முதல்ல இந்த புத்தகத்தை படிச்சு பயன் பெறக்கூடியவங்க யார் ன்னு சொல்லிடுவாங்க. சரியான முன் தயாரிப்பு இல்லாத போய் யாரும் குழம்பிவிடக்கூடாதுன்னுதான் அப்படி சொல்கிறது.

ஞானத்துக்கு யார் சரியான அதிகாரி?

யாருக்கு வைராக்கியம் வந்தாச்சோ அவர் ஞானம் பெற சரியான நபர். வைராக்கியம்னா உறுதி இல்லை. பலர் தப்பா இப்படி நினைக்கிறாங்க. வைராக்கியம்னா பற்று இல்லாம இருக்கிறது. அட! இது நமக்கு பழக்கமானதுதானே என்கிறீங்களா ? ஆமாம் கர்ம யோகத்தில திருப்பி திருப்பி பாத்த அதே பற்றின்மை. அப்ப கர்ம யோகத்தில தேரினவங்க ஞானத்துக்கு அதிகாரிதானே? அட சரியா சொல்லிட்டீங்க! பண்ணுருட்டி வழியா சென்னை போற பாதை திண்டிவனத்தில பாண்டி சென்னை பாதையோட சேருகிறது போல, கர்ம வழியானது ஞான வழில போய் சேந்துடும்.

மனிதர்கள்ல பல தரப்பட்டவங்க இருக்காங்க இல்லையா? நினைவாற்றலும் புரிஞ்சுகிற திறனும் வேறுபடும். ஆனா இதால ஒத்தரை உயர்வாகவோ, ஒத்தரை தாழ்வாகவோ நினைக்கக்கூடாது. ஆதி சங்கரருக்கு சிஷ்யர்கள்ல ஒத்தர். மத்தவங்களுக்கு இவர் குறிச்சு கொஞ்சம் இளப்பம். மத்தவங்க பாடம் எடுக்கச்ச சந்தேகம் எல்லாம் கேட்டு பதில் வந்த பின் ஆஹா ஆஹான்னு கொண்டாடுவாங்க. இவரோ சாதுவா வாயே திறக்காம உக்காந்து இருப்பார். இதனால இவருக்கு புத்தி அவ்வளவு இல்லைன்னு மத்தவங்களுக்கு நினைப்பு. சங்கரருக்கு இது தெரியாம இருக்குமா. நம்மகிட்ட ஆசார்யன்னு வந்து சேந்த பசங்களுக்கு வித்யா கர்வம் வரக்கூடாதே, இதை சரி செய்யணும்னு நினைச்சார். ஒரு நாள் பாடம் எடுக்க தயாராயிட்டார். ஆனா இந்த சாது சிஷ்யரை காணலை. அவர் வந்த பிறகு பாடம் ஆரம்பிக்கலாம்ன்னு சங்கரர் சொன்னார். எல்லாரும் இவனுக்கு போய் தாமதிக்கணுமான்னு நினைச்சாங்க. எங்கேடா போனான்னு எல்லாரும் யோசிச்சுகிட்டு இருக்கிறப்ப சாது சிஷ்யர் பாட்டு பாடிகிட்டே வந்து சேர்ந்தார். பாட்டை கேட்டவங்க திகைச்சுப்போயிட்டாங்க. ஏன்னா அது ரொம்ப கடினமான நடையில - தோடகம் என்கிற அமைப்பில அமைஞ்சது. அப்ப புதுசா கவனம் செஞ்சு குதிச்சுண்டே பாடினார். அன்னிலிருந்து அவரை தோடகாச்சாரியார் ன்னு கூப்பிட ஆரம்பிச்சுட்டாங்க. இது எப்படி சாத்தியமாச்சு? குருவருள் இருந்தா எல்லாமே சாத்தியம்தான்.

சிலர் சொல்லிதர சொல்லித்தர பிடிச்சுப்பாங்க. சிலருக்கு பல தரம் விளக்கமா சொல்லித்தர பிடிச்சுப்பாங்க. சிலருக்கு ஒரு தரம் புரிஞ்சு போச்சுனா அப்படியே ஞாபகம் இருக்கும். சிலர் மறந்து போவாங்க. இதை எல்லாம் நம்ம முன்னோர்கள் க்ளாசிபை பண்ணி வெச்சு இருக்காங்க. நமக்கு அது இப்ப அத்தியாவசியம் இல்லைனாலும் சுவாரசியமானதால அத கொஞ்சம் பாக்கலாம்

---

மதியம் புதன், டிசம்பர் 3, 2008

ராஜ யோகம்.

ஹடயோகம் அல்லது ராஜ யோகம் என்கிறது மூன்றாம் வழி என்று முன்னமேயே பாத்தோம். முன்னமேயே அதைப்பத்தி ஒரு ஐடியா கொடுத்தாச்சு. அதைப்பத்தி இப்ப விரிவா எழுதப்போறது இல்லை.

முதலாவது இது ஒரு குருகிட்ட இருந்து நேரடியா பழக வேண்டிய சமாசாரம். இப்படி சரியா

அமையாம போனா என்ன ஆகும்ன்னு முன்னேயே பாத்தோம். இப்படி விபரீதமா போய் விடக்கூடாது.
இரண்டாவதா இதில எனக்கு குறிப்பிடத்தக்க பரிச்சயம் கிடையாது. தெரியாத விஷயத்தில புகுந்து புறப்பட நான் விரும்பலை. எளிதா ஏதேனும் கிடைக்குமோன்னு பதஞ்சலி யோக சூத்திரத்தை புரட்டிப்பாத்தா தலையை சுத்துது. கொஞ்சம் சாம்பிள் பாக்கிறீங்களா?

முதல் இரண்டு சூத்திரங்கள்

** சித்தத்தின் விருத்தியை (வளர்ச்சியை) அடக்குதல் யோகம்.
அப்படி செய்யும் போது சைதன்யமான (இயங்கு சக்தியாக உள்ள) புருஷனுக்கு தன் சொந்த வடிவில் இருப்பு ஏற்படுகிறது.**

கண்ணீர் மல்க சில பேர் எனக்கு நன்றி சொல்கிறது காதுல விழுது. :-))

ஊன்றி படிக்காம ஒண்ணும் புரிஞ்சுக்க முடியாது. அப்பக்கூட ஒரு அனுபவியோட உதவி தேவைப்படும். அதனால பேசாம இத விட்டுட்டு அடுத்ததுக்கு போயிடலாம். மேலும் இதில வரக்கூடிய சில விஷயங்கள் ஞான யோகத்தில கூட வரும். ஒரு வேளை ஞான யோகம் முடிச்ச பிறகு பதஞ்சலி யோகம் சுலபமா புரியுமோ என்னவோ.

பொன் நிலம் பெண் இவைகள்ல ஆசை வைத்தவங்களோ வைக்காதவங்களோ அவங்களோட உள்ளே இருக்கிறது ஒரே சச்சிதானந்த சொரூபமான ப்ரம்மமே. அது நம் மனத்தடைகளை அகற்றி ஞானம் ஒளிர உதவட்டும் என்று பிரார்த்தனை செய்து ஆரம்பிக்கிறோம்...

---

மதியம் வெள்ளி, டிசம்பர் 5, 2008

பரிட்சை விடைத்தாள்-2

கீதா அக்கா முந்திகிட்டு முதல் விடைத்தாளை அனுப்பினாங்களா! இப்ப ஜீவா ரெண்டாவது. கீதா அக்கா நான் எழுதற ஞான வழிக்கு முன்னுரை போல எழுதி இருந்தாங்க. ஜீவா டு தெ பாய்ன்ட் கர்ம யோகத்தில அவரோட புரிதலை எழுதறாரு. போனசா ரெண்டு வெண்பா வேற! என்சாய்!

~~~~~~~~~~~~~~~~~~~~~
கண்ணன் என்னதான் சொல்லறாரு கர்ம யோகம் என்று?
ஏதோ நமக்குப் புரிந்தது இது:

செயலா, துறவா? செயல்களைத் துறந்து, தியானித்து,
சச்சிதானந்த சொரூபத்தினைக் காண விழைவது ஞான வழி.

செயல்களைத் துறவாமல், ஞானத்திற்கு தயார் செய்து கொள்வது கர்ம வழி.
(தயார் செய்தாப் போதும், ஞானம், பச்சக்குன்னு வந்து பற்றிக்கும்!)
செயல்களை செய்யும்போதோ, நம் விருப்பு வெறுப்புகளென்னும் வண்ணக் கண்ணாடிகளால், இவ்வுலகத்தை பார்க்க நேரிடுகிறது. இவ்விருப்பு, வெறுப்புகள் தான்
ஞானத்தினை அடைவதில் பெரும் தடைக் கற்கள் என்பதனால், அவை விலக்க வேண்டியவை.

விருப்பு, வெறுப்புகளில் இருந்து விடுபடுவது எப்படி?
செயலில் எப்படிப்பட்ட பலன் ஏற்படினும், அதை ஒரே மனநிலையுடன் எதிர்கொள்வதால்.
இந்த சமச்சீரான மனநிலைக்குப் பக்குவப்படுத்துவது தான் கர்ம யோகம்.

கர்ம யோகம்:
செயலைச் செய். ஆனால், எப்படிப்பட்ட பலன் ஏற்பட்டாலும், அதை இறைவனின் பிரசாதமாக நன்றியுடன் ஏற்றுக்கொள்வது கர்மயோகம்.
மனதை அமைதியுறச் செய்து, ஞானத்தை ஏற்றுக் கொள்வதற்கு, அது தயார் செய்திடும்.

செய்ய வேண்டிய செயலை துறப்பதால் துறவியாக முடியாது. துறவு என்னும் நிலை தானாகக் கனிய வேண்டும். செய்யும் தொழிலே தெய்வம், செய்வன திருந்தச் செய்ய, அதுவே யாகம்.

---
~~~~~~~~~~~~~~~~~~~~~

எல்லாம், இயற்கையால், முக்குணங்களின் தூண்டுதலால், நடப்பவை.
ஆகவே, தன்னால் நடந்தது என்ற ஆணவத்தினை அழித்தொழி.

எல்லாமும் என்னால் எனவே அகந்தையே
இல்லாமல் சும்மா இருக்கவே - எல்லாம்
உலகினில் தானாய் நடந்திட கர்மமும்
செய்வாய் மனமே நிதம்.

இராஜச குணத்தால், தூண்டப்படும் ஆசையானது, சித்தம், மனம், புத்தி
- இவைதனை மூடி மறைத்து, உயர் ஞானம் வந்தடையும் வழி தனை மறிக்கும்.

உடலை விட, புலன்களும், புலன்களை விட மனமும், மனத்தை விட புத்தியும்,
புத்தியை விட ஆன்மாவும் உயர்ந்தது. ஆகவே அந்த ஆன்மாவை அறிவதே குறிக்கோள்.

அந்த உயரிய குறிக்கோளை அடைய, ஆசையை ஒழித்து, பலன்களில் மேல் பற்று வைக்காமல்,
பிரசாதமாக பலன்களை ஏற்று, பகவானைப் போற்று.

பிரசாதம் என்றே பலனை நினைத்தால்
வருமோ இடரும்? கருமம் புரிகையில்,
நானெனத் தெரிவதை நீக்கி சரணமலர்
தானடை சிக்கெனத் தான்.

---

மதியம் திங்கள், டிசம்பர் 8, 2008

பரிட்சை விடைத்தாள் -3

இது மௌலியோட பார்வை. தொடாத ஒரு விஷயத்தை தொட்டு இருக்கார். அது பத்தி பின்னால் எழுதுவேன்.
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~
கர்மா என்று ஆரம்பித்து நித்ய-நைமித்திக கர்மாக்களை விளக்கி நிஷ்காம்ய கர்மாவிற்கு வந்து கீதை ஸ்லோகங்களை பிரிச்சு மேஞ்சுட்டார் திவாண்ணா. ஆரம்பம் முதல் அழகிய மணவாளரது வெண்பாக்களையும் அளித்து, மேலும், பையர், தனது மறுபாதி, வேளுக்குடியார்ன்னு ஒரு குருப்பையே துணைக்கு வைத்துக் கொண்டு பதிவுகளை எழுதியது அழகு. நிறைய தெரிந்து கொள்ள முடிந்தது. கீழே வருவது எனது சொந்த புரிதல்கள். தவறுகள் இருப்பின் அது எனது புரிதலால் மட்டுமே. திவாண்ணா மற்றும் படிப்பவர்கள் பிழைதிருத்தினால் மகிழ்வேன்.

யத: ப்ரவ்ருத்திர் பூதானாம்

யேன ஸர்வமிதம் ததம்

ஸ்வகர்மணா தமப்யர்ச்ய

ஸித்தம் விந்ததி மானவ ||18.46||

அதாவது அவரவர் ஸ்வகர்மாவை அடிப்படையாகக் கொண்டு கர்மங்கள் செய்தால் அதுவே தனக்குப் ப்ரீதியாகிறது என்று கூறியிருக்கிறான் கண்ணன். இந்த கர்மாவின் பலனையும் ஈஸ்வர-ப்ரீதியாக செய்யவேண்டும். அது அவ்வளவு சுலபமானதல்ல. கர்மாக்களால் புண்ணியம் அல்லது நன்மை ஏற்படுவதில்லை. ஆனால் பற்றினைத் துறந்து கர்மாவைச் செய்வதால்தான் நன்மை கிடைக்கிறது. சரி, விதிக்கப்பட்ட கர்மாவை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தொடர்வதால் என்ன நடக்கும்?, சிரத்தை உருவாகும், அதன் மூலம் புலன்களை அடக்கி முடிவாக கர்மா நம்மை பற்றற்ற நிலைக்குக் கொண்டு செல்லும்.

கல்பம், நிருக்தம், சந்தம் வியாகரணம் போன்ற எல்லா அங்கங்ளையும் கொண்ட வேதத்தை
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

அத்யயனம் செய்தாலும், பரமாத்மாவை அடைதலைக் குறிக்கோளாக கொள்ளாது, லௌகீக சுகத்தில் ஒருவன் இச்சை கொண்டால், அவனது அந்திம-காலத்தில் வேதம் இறகு முளைத்த பறவை போல அவனை விட்டு விலகிச் சென்றுவிடும் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆக, கர்மாவைச் செய்தல் மட்டும் பெரிதல்ல, பண்ணும் கர்மா, கர்மாவின் பலன் போன்ற எல்லாமும் ஈஸ்வரனை நோக்கியே இருக்க வேண்டும்.

சரி, கர்மா என்பதில் எல்லாம் அடக்கம், எது நல்ல கர்மா, எது தவறானது என்று எப்படி அறிவது?, அதற்கும் கண்ணன் பதில் சொல்லியிருக்கிறான். எது செய்யக்கூடிய கர்மா, எது செய்யக்கூடாதது என்பதை அறிந்து கொள்ள சாஸ்திரங்களே பிரமாணம் என்கிறான்.

ப்ரக்ருதே: க்ரியமாணாநி குணை: கர்மாணி ஸர்வச:

அஹங்காரவிமூடாத்மா கர்தாஹமிதி மந்யதே ||3.27||

ப்ரக்ருத்யைவ ச கர்மாணி க்ரியமாணநி ஸர்வச

ய: பச்யதி ததாத்மானம் அகர்த்தாரம் ஸ பச்யதி ||13.29||

என்பதாக கீதையில் மூன்று வகையான கர்மங்களை பற்றி கூறியிருக்கிறான் கண்ணன். அவை, க்ரியமாண கர்மா (நிகழ்காலத்தில் செய்வது), ஸஞ்சித கர்மா, ப்ராராப்த கர்மா எனப்படுகிறது.

அதாவது சாஸ்திரம் சொன்ன விதிமுறைகளின்படி செய்வது சுபமான க்ரியமாண கர்மம். அதே சமயம் காம-க்ரோத-லோப-ஆஸக்தியால் (குருட்டுப் பற்று) தூண்டப்பட்டு சாஸ்திரம் கூடாது என்று கூறும் செயல்களைச் செய்வது அசுப க்ரியமாண கர்மா.
இதே போல, அநேக மனிதப் பிறவிகளில் எந்த கர்மாக்கள் பற்றிக் கொண்டிருக்கிறதோ அவை சஞ்சித கர்மா என்று கூறக் கேட்டிருக்கிறேன். இந்த சஞ்சித கர்மாவின் முடிவாக பயன் மற்றும் சம்ஸ்காரம் வருகிறது.
இந்த சஞ்சித கர்மாவிலிருந்தே, இக்கர்மாவின் பயனே ப்ராரப்தம் என்று எங்கோ படித்த நினைவு. அது பற்றிய தொடர்பினை இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்லியிருக்கலாமோ என்று நினைக்கிறேன். ஒரு வேளை தனித்தனி பதிவுகளைப் படித்ததில், எனக்கு அந்த புரிதலுக்கு வரவில்லையோ?. திவா அண்ணா வழிகாட்டினாலும் நான் சேர வேண்டிய இடத்திற்கு இன்னும் தொலைவு அதிகம் என்றே தோன்றுகிறது. பராம்பிகை அருளட்டும்.

---

மதியம் செவ்வாய், டிசம்பர் 9, 2008

பரிட்சை விடைத்தாள் -4

ஒரு சின்ன ஸர்ப்ரைஸ் ஆக நம்ம கேஆர்எஸ் மறைஞ்சு இருந்து படிச்சுட்டு இப்ப வெளிப்படையா தேர்வு எழுதி இருக்கார். அவரோட பார்வை கொஞ்சம் வித்தியாசமா தோணினாலும்.... ம்ம்ம் படிங்க! படிச்சுட்டு சொல்லுங்க.
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

திவா சாரின் கண்ணன் காட்டும் கர்ம வழி என்னும் தொடர் பதிவுகள் இட்டிருந்தார். அதை மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன? என்பது போல் பின்னூட்டம் இடாமல், நிஷ் காம்யமாகப் படித்து வந்ததில் அடியேனும் ஒருவன்!
அந்தத் தொடர் பற்றி இப்போது தேர்வு வைத்துள்ளார் திவா சார்!
பாடம் மறைந்திருந்து கேட்டாலும், பரீட்சை நேர்முகமாகத் தானே எழுத வேண்டும்? இதோ அடியேனின் விடைத்தாள்!
*****************************************************************************

கர்மம் என்றால் செயல்! எதுக்குச் செயல் செய்யணும்?
ஒன்றை விரும்புகிறோம் (காமம்)! அதை அடையச் செயல் செய்தாகணும்!
இப்படி "காமம்-கர்மம்" என்றே இந்தச் சுழல் இருக்கிறது!

எப்பமே இப்படித் தானா? என்று கேட்டால், அதற்குத் தான் வெறுமனே "கர்மம்" என்னாது, "கர்ம-யோகம்" என்று கர்மத்தோடு, யோகத்தையும் சேர்த்துக் கொள்கிறான்!

---
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

தேர்த்தட்டு மொழியிலே சொல்வது என்ன?
* யோகம் = ஒருங்கிணைதல்
* கர்மம் = செயல்
செய்யும் செயலால் ஒருங்கிணைதல் கர்ம யோகம்!

* ஞானமா? கர்மமா?
* துறக்க வேண்டுமா? செய்ய வேண்டுமா?
துறவாமல் செய்து கொண்டிருக்கும் செயலில், ஞானம் கொஞ்சம் கொஞ்சமாகக் கலந்து கொள்ளும்!
ஞானம் கலந்து கொள்ள, கலந்து கொள்ள...
செயலைத் துறவாமல், செயலின் நோக்கத்துக்குத் தடையாக இருப்பதை மட்டும் ஒவ்வொன்றாகத் துறக்கத் தொடங்கி விடுவோம்!
**************************************************************************

ஒரு செயல் செய்யும் போது கூடவே பல செயல்கள் எழும்! தனித்த செயல் என்ற ஒன்றுமே கிடையாது!
சமைக்க வேண்டும் என்றால் நெருப்புச் செயல் வேண்டும், நீர்ச் செயல் வேண்டும், பல அங்கங்களை உள்ளே கொட்டவும் வேண்டும்!
ஆனால் நோக்கம் என்னவோ உணவைச் சமைப்பது மட்டுமே!
இந்த எண்ணம் இருந்து கொண்டே இருந்தால், நெருப்பு, நீர் இதையெல்லாம் உணவுக்கு மட்டுமே பயன்படுத்துவோமே தவிர,
அதை வைத்துக் கொண்டு வேறு ஏதும் கொளுத்தவோ, இல்லை நீரை வைத்து விளையாடவோ செஞ்சி திசை திரும்ப மாட்டோம்!

அதே போல் நாம் செய்யும் கர்மங்களின் நோக்கம் ஈஸ்வர ப்ரீதி என்னும் உணவு/பிரசாதம்!
இறைவனின் திருவுள்ள உகப்பு என்பது தான் நோக்கம் என்பதை அறிந்து கொண்டால்...
அதை நோக்கிச் செல்லும் போது வரும் வேறு செயல்களில் சிதறிப் போக மாட்டோம்!
பல செயல்களின் ஒருங்கிணைப்பில் இறுதியில் அந்த உணவு/பிரசாதம் கிட்டும்!

திவா சார், இதைச் சில இடங்களில் பிராக்டிகலாகக் கொண்டு சென்றது பிடித்தது! வேளுக்குடி சுவாமிகள் எடுத்துக்காட்டுகள், தமிழில் வெண்பா என்று லைட்டாகவே கொண்டு சென்றார்!
* திருடர்கள் 4 பேர். உதவியாளர்கள்= இந்திரியம், மனசு, புத்தி! தலைவன்=காமம்!
* இந்திரியங்களை கர்ம யோகத்திலே திசை திருப்பி விடலாம்.
* ரஜோ குணத்தை சாப்பாட்டினால் மாற்றலாம்.
இப்படி எல்லாம் செய்தால் உதவியாளர்கள் காலி! அவர்கள் போன பின் தலைவனும் காலி!
**************************************************************************

ஆக,
* காமம் அற்ற கர்மமா?
* விருப்பு/வெறுப்பு அற்ற செயல்களா?
இல்லை!

* காமத்தோடு கூடிய கர்மம்!
* விருப்புடன் கூடிய செயல்!

அச்சோ! நிஷ்காம்ய கர்மம் என்று கீதை சொல்கிறதே!
அதைத் தானே திவா சார், இம்புட்டு கஷ்டப்பட்டு இருபது பதிவுகளா சொல்லிட்டு வந்தாரு!
அத்தனையும் படிச்சிட்டு, படிச்சது ராமாயணம், இடிச்சது பெருமாள் கோயில்-ன்னா நீங்க நினைக்கறீங்க? ஹிஹி!

சமைக்கும் போது, நீர்/நெருப்பின் மேல் அதீதமாக ஈடுபடாமல், எப்படிச் சமைக்க வேண்டிய உணவில் மட்டும் நம் கவனம் இருந்ததோ, அதே போல!
பகவத் ப்ரீதி-க்குச் செய்வோம் என்ற எண்ணம் மட்டும் இருக்கட்டும்! அது தான் நோக்கம் என்று அவ்வப்போது ஞாபகப்படுத்திக் கொண்டு உன் கர்மங்களைச் செய்!

* இறைவனின் மேல் காமம் செலுத்திக் கர்மங்களைச் செய்!
* மற்ற உடன் வரும் செயல்களின் மேல் காமம் செலுத்திக் கர்மங்களைச் செய்யாதே!

யக்ஞார்த்தாத் கர்மணோ அந்யத்ர| லோகோயாம் கர்ம பந்தன||
தத் அர்த்தம் கர்ம கௌந்தேயா| முக்த சங்க சமாசர|| 3.9

மற்றைய காமங்கள் வேண்டாம்! மாதவன் காமங்கள் வேண்டும்!
"மற்றை நம் காமங்கள்", "மாற்று" ஏல்-ஓர் எம்பாவாய்!

---

மதியம் புதன், டிசம்பர் 10, 2008

வகை வகையா புத்தி...

சிலர் சொல்லிதர சொல்லித்தர பிடிச்சுப்பாங்க. சிலருக்கு பல தரம் விளக்கமா சொல்லித்தர பிடிச்சுப்பாங்க. சிலருக்கு ஒரு தரம் புரிஞ்சு போச்சுனா அப்படியே ஞாபகம் இருக்கும். சிலர் மறந்து போவாங்க. இதை எல்லாம் நம்ம முன்னோர்கள் க்ளாசிபை பண்ணி வெச்சு இருக்காங்க. நமக்கு அது இப்ப அத்தியாவசியம் இல்லைனாலும் சுவாரசியமானதால அத கொஞ்சம் பாக்கலாம்.
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~
மண் புத்தி: மண் சுவத்திலே ஆணி அடிக்கிறதும் அதை பிடுங்குகிறதும் ரொம்ப சுலபமா இருக்காப்போலே குருகிட்ட கேட்டது உடனே புரிஞ்சும் உடனே மறந்தும் போகிறது மண் புத்தி.

பச்சை மரத்தாணி போல் ன்னு சொல்லுவாங்க. அடிச்சு இறக்குகிறதும் சுலபம். அப்படியே கப்புனு பிடிச்சுக்கும். இப்படி கேட்டதை சுலபமா மனசுல வெச்சு அப்புறம் அதைப்பத்தி அதுக்கு மேலே ஒண்ணும் தெரியாம இருக்கறது;
பட்ட மரத்தில ஆணி இறங்குவது கொஞ்சம் கஷ்டம். அதே போல சுலபமா கழண்டு வந்துடும். இது போல கஷ்டப்பட்டுதான் உள் வாங்க முடியும். நினைவு வெச்சுகிறதும் கஷ்டம், மறந்து போயிடும்.
இது ரெண்டும் தாரு புத்தி.

பாறாங்கல் உடைக்க ரெண்டு மூணு துளை போட்டு தட்ட அப்படியே விண்டுடும். அது போல சில ஹிண்ட்ஸ் ஆலேயே விஷயத்தை புரிஞ்சுகிறவங்க ஒரு ரகம். இது சிலா புத்தி.

மூங்கில் கணுவில ஒரு பக்கம் உளி வெச்சு அடிச்சா இரண்டு பக்கமும் பிளந்துக்கும். இது போல ஒரு விஷயத்தை கேட்டா முன் பின் விஷயங்களையும் தெரிந்து கொள்கிறது வேணு புத்தி. (வேணு = மூங்கில். வேணுகோபாலன் நினைவு வருமே!)

ஒரு சொட்டு எண்ணையை தண்ணில ஊற்றும் போது சட்டுனு முழுக்கவே பரவுகிறது போல குரு சுருக்கமா சொல்கிற விஷயத்தை சட்டுன்னு முழுமையா பரவலா தெரிந்து கொள்ள முடிகிறது சிலருக்கு. இது தைல புத்தி.
(இந்த காலத்திலே எண்ணை தேய்ச்சு குளிக்கிறது குறைஞ்சு போச்சே! சரி, தண்ணில ஒரு துளி டிடர்ஜென்ட் விழுந்தாப்போலன்னு யோசிங்க!)

இதெல்லாம் ஏன் இங்க இழுக்கறேன்னா ...

நான் இந்த விஷயங்கள் படிச்ச புத்தகத்தில சாதாரணமா ஒண்ணும் புரியாதவங்களுக்கு கூட புரிகிறாப்பல சொல்லித்தரேன்னு புத்தக ஆசிரியர் சொல்லி இருக்கார். அதான். அவர் சொல்லிக்கொடுக்கிற அளவு சுலபமா ஆக்க முடியாட்டாலும் ஓரளவு சுலபமா சொல்லித்தர முயற்சி செய்யறேன்.

இந்த ஞான வழியை முதல்ல கொஞ்சம் புரிஞ்சுக்கணும். அப்புறம் சரி, தப்பு; ஒத்துக்கலாம், வேண்டாம்னு ஆராய்ச்சில இறங்கலாம். "செய்லிங் வித் த ஐடியா" ன்னு ஆங்கிலத்தில சொல்கிறாப்போல இருந்தாதான் சொல்ல வருகிறது புரியும். ஆரம்பத்திலேயே மனத்தடை இருந்தா புரிகிறது கொஞ்சம் கஷ்டம்தான்.

---

மதியம் வியாழன், டிசம்பர் 11, 2008
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

படிகள் -1

எல்லா சப்ஜெக்ட்லேயும் இருக்கிறது போல ஞானவழியிலேயும் தனி அகராதி உண்டு. ஞானத்தை பத்தி பேசுற நூல்கள் எல்லாமே சில வார்த்தைகளை பயன்படுத்தும். படிக்கிறவங்களுக்கு அது முதல்லேயே தெரிஞ்சு இருக்கணும் என்பது எதிர்பார்ப்பு. தெரிவது புரிதலை சுலபமாக்கும். அது இல்லாமலே முடியுமான்னு பாக்கலாம்.

அதனால பிஜி (PG) பாய்ண்டை தனியா தரப்போகிறேன். வேணும்னா படிக்கலாம். இல்லைனா விட்டுடலாம். பெரிய பிரச்சினை ஒண்ணும் இல்லை.

சரி, ஞான வழிகள்ல என்ன படிகள்? ஏற்கெனவே பாத்தாச்சு. இருந்தாலும் இப்ப கொஞ்சம் விரிவா பாக்கலாம்.
நித்ய அநித்ய வஸ்து விவேகம் முதலாவது.

இந்த பிரபஞ்சத்திலே எது நிலையா இருக்கக்கூடியது எது அழிஞ்சு போகக்கூடியது என்பதை பத்திய அறிவு. ஒரு அழிஞ்சு போகக்கூடிய விஷயத்தை எவ்வளோ கஷ்டப்பட்டு சம்பாதிக்கலாம், அழிஞ்சு போகாததுக்கு எவ்வளோ கஷ்டப்பட்டலாம்ன்னு நாம முடிவு செய்யலாம் இல்லையா?

நிலையா இருக்கக்கூடிய ஆன்மா, அதோட நம்மை சம்பந்தப்படுத்துற அதை உணர வழிவகை செய்யக்கூடியவற்றை தேடறதும் சம்பாதிக்கிறதும் செய்கிறவங்க புத்திசாலிங்க. அது கொடுக்கிற சந்தோஷம் எப்பவும் இருக்கும். நிலையா இல்லாதவைகளை தேடி சம்பாதிச்சா அவை நிச்சயமா ஒரு நாள் அழியும். அது நமக்கு துக்கத்தை தரும். துக்கம் இல்லாமல் இருக்க நித்திய வஸ்துவைதான் தேடி சம்பாதிக்க வேண்டும்.

**** இதை த்ருக்கு த்ருஷ்ய விவேகம் ன்னும் சொல்வாங்க. அந்த பேர்ல ஒரு புத்தகமே இருக்கு. த்ருக்கு என்பதுக்கு பேர் கிடையாது. வடிவம் கிடையாது. எப்பவும் இருக்கும். அதாவது ப்ரம்மம். சத்தசித் ஆனந்தமா இருக்கிற ஆன்மா. த்ருஷ்யம் என்கிறது நாம் பாத்து பெயர் வெச்சு கூப்பிடக்கூடியவைகள்.***

இரண்டாவதா இகபர விராகம்.

இகம்? இந்த உலக வாழ்க்கை. பரம் - அடுத்த உலக வாழ்க்கை. அது சுவர்க்கமோ, நரகமோ, வேற ஏதோ....இந்த உலக சமாசாரங்களை சம்பாதிப்பதில் கஷ்டமும் அனுபவிப்பதும் தற்காலிகமாகவும் இருக்கு. ஆசை ஆசையா சேர்த்து வைக்கிறவங்க அதை அனுபவிக்கவும் கொடுத்து வெச்சு இருக்க வேண்டி இருக்கு. சேத்ததை பத்திரப்படுத்த வேற வேண்டி இருக்கு. களவு போயிடுமோன்னு பயம். ஒண்ணுமில்லாத ஆசாமி நிம்மதியா தூங்க பொருள் சேத்த ஆசாமிக்கு பல பிரச்சினைகளாள தூக்கம் வரதில்லை. அனுபவிப்போம் ன்னு நினைக்கிற ஆசாமி அனுபவிக்கக்கூடிய காலம் வரப்ப காலனே வந்துறதும் உண்டு. அப்ப சேத்ததிலே ஒரு சின்ன கர்சீப்பாவது எடுத்து போக முடியுதா?

சரிப்பா நான் நிறைய நல்ல காரியம் செய்யறேன்! பூஜை, ஹோமம், யாகம் எல்லாம் செஞ்சு புண்ணியம் சம்பாதிக்கிறேன். யாகங்கள் செய்து தேவனாகிடறேன். அப்ப என்ன செய்வீங்க, அப்ப என்ன செய்வீங்கன்னு கேட்டா.....

சுவர்கத்திலே எல்லாமே நல்லா இருக்கும். மீமாம்சை படி சுவர்கத்தோட வரையரையே துக்கம் இல்லாத சுக அனுபவம், என்றும் அழியாதது, விரும்பியது கிடைக்கும். அப்படிப்பட்ட இடம்தான். ஆனா தேவலோகம் அப்படி இல்லியே.
அது நிரந்தரமும் இல்லை. செய்த கர்மாக்களுக்கு தகுந்தபடி அனுபவிச்சுட்டு திருப்பி இங்கேதான் வந்தாகணும்.
இந்திரனா இருந்தாக்கூட அசுரர்களால அப்பப்ப தொல்லை. ஓடறான் ஒளியறான்.

மஹரிஷிகள்கிட்ட அபராதம் பண்ணி, சாபம் வாங்கி, கஷ்டமும் பட்டதா படிக்கிறோமே! எங்கே காமம், கோபம் எல்லாம் இருக்கோ அங்க துக்கமும் இருக்கும். தேவர்களுக்கு அது எல்லாம் உண்டு.

சரி, நான் தேவலோகம் போகாம சுவர்க்கம் போறேன்னாலும் சுகம் அனுபவிச்சு முடிஞ்சு திருப்பி பூமிக்கு அனுப்பிடுவாங்க. "தந்தனத்தோம் என்று சொல்லியே..." அப்படின்னு திருப்பி இந்த வாழ்க்கை ஆரம்பிச்சுடும். இந்த உலக வாழ்க்கை இரும்பு விலங்குன்னா தேவலோக வாழ்க்கை பொன் விலங்கு என்கிறாங்க. இரும்பானாலும் தங்கமானாலும் விலங்கு விலங்குதானே. பெயரும் உருவமும் இருக்கிற எந்த ஜன்மமானாலும் அதில் துக்கம் இருக்கும்.

அதனால இந்த உலக வாழ்க்கை, மேல் உலக வாழ்க்கை இரண்டிலுமே பற்றை நீக்க வேண்டியதுதான். என் உறவினர் ஒத்தர். நாக்கு சபலம் அதிகம். ஆனா வயிறு ஒத்துழைக்காது. இவரோ நல்ல விருந்துனா சபலப்பட்டுகொண்டு நல்லா ஒரு பிடி பிடிப்பார். ஜீரண சக்தி இல்லாததாலே கொஞ்ச நேரத்தில வயித்து வலி வந்து, வாந்தி எடுத்துதான் சரியாகும். ஆசை ஆசையா சாப்பிட்ட லட்டு வடையெல்லாம் அப்படியே வந்துடும். அதை இப்ப பாத்தா ஆசையா வரும்? வெறுத்து ஒதுக்குவார் இல்லியா? அது போல திருப்பி திருப்பி நாம் அனுபவிச்ச இந்த இரண்டு லோகங்கள் மேல இருக்கிற பற்றையும் விடணும்.

**** கிடைக்கிறது யோகம். கிடைச்சதை அனுபவிக்கிறது க்ஷேமம். ரெண்டும் வேற வேற. நிறைய லட்டு கிடைக்கலாம். அது யோகம். அதை சாப்பிட சக்கரை வியாதி இல்லாம இருக்கணுமே. அல்லது களவு போகாம இருக்கணும். இப்படி தடைகளை தாண்டி அனுபவிச்சா க்ஷேமம் இருக்குன்னு சொல்லலாம்!****

---

மதியம் வெள்ளி, டிசம்பர் 12, 2008

பரிட்சை விடைத்தாள்- ரு

ஒரே ஆணி. பரிட்சை எழுத வரலைன்னு சொன்ன கவி அக்கா நேரம் கண்டு பிடிச்சு பரிட்சை எழுதிட்டாங்க. சரியாவே பாய்ண்ட் எல்லாம் பிடிச்சு இருக்காங்க பாருங்க. கடேசில எனக்கு வேலையும் கொடுத்து இருக்காங்க! நாளைக்கு போட வேண்டியதை இப்பவே போடறேன்.
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

உ

கர்மயோகம் என்பது பற்றில்லாத வாழ்க்கைக்கும் ஞானத்திற்கும் வழி காட்டக் கூடியது. மனிதனாகப் பிறந்துட்டு எதுவுமே செய்யாம சும்மா இருக்க முடியுமா? யோகிகள் கூடஒரு வேளையாவது சாப்பிட வேண்டியிருக்கு. சாதனைகள் செய்ய வேண்டியிருக்கு. இறைவன் கூட கர்மவிதிகளுக்குட்பட்டு காரியங்கள் செய்கிறான். அப்படிஇருக்கும்போது உலகவாழ்வில் ஈடுபட்டவங்களுக்கு, எவ்வளவு கடமைகள், எவ்வளவுவேலைகள்?

கர்மயோகத்துடைய குறிக்கோள் என்ன? ஞான யோகத்துக்கு வழி காட்டுவது. அங்கே போறதுக்கு பற்றில்லாத வாழ்க்கை அவசியம். அந்த பற்று எப்படி விடும்? விருப்பு வெறுப்பில்லாம நம்ம கர்மாக்களைச் செய்யற போது பற்று விடும். ஆனால்இல்லறத்தில் ஈடு பட்ட எல்லோருமே ஏதோவொரு விருப்பத்திற்காகத்தான் காரியங்கள்செய்யறோம். அப்படி இருக்கும்போது பற்றில்லாம செய்யறது எப்படி? கண்ணன்சொல்கிறான், செயல்களைச் செய்யும்போது அவற்றை உன் விருப்பப்படி செய்துக்கோ. ஆனால் அதனால் ஏற்படும் பலன்களை என்கிட்ட விட்டுருன்னு.

நம்முடைய புலன்களே நமக்கு நண்பர்களும், எதிரிகளும் அப்படிங்கிறதை உணரணும். அவைகளை நம்ம முதலாளியாகி விடாம பார்த்துக்கணும். நம்ம விருப்பு, வெறுப்புகள்புலன்களால ஏற்படுது; அதற்கேற்றாற்போல செயல்களைச் செய்ய நம்முடையமுக்குணங்கள் நம்மைத் தூண்டி விடுது. அதனால, அப்படிச் செய்யும்போது
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

பாவபுண்ணியங்களைச் சேர்ப்பதைத் தவிர்க்க முடியாது. அப்படிச் சேர்ந்துகிட்டே இருந்தாநம்ம கதி? நம்ம கணக்கு பூஜ்யத்துக்கு வர்ற வரை பிறவிகள் எடுத்து உழன்றுகொண்டே இருக்க வேண்டியதுதான்.

அதற்கும் நம்ம கண்ணன் வழி சொல்றான் கேளுங்க – நாம செய்யற செயல்களின்பலன்களை இறைவனுக்கே அர்ப்பணம் செய்தால், பாவ புண்ணியக் கணக்குஅவனுக்கு போயிரும்! நமக்கு ஒண்ணும் சேராது. சமபுத்தியும் மன அமைதியும்தான்நமக்குக் கிடைக்கும். அதை நினைச்சாலே எத்தனை ஆனந்தமா இருக்கு. ரொம்பசுலபமாவும் தெரியுது. ஆனா நடைமுறையில ரொம்ப கஷ்டம். முடிஞ்ச வரை முயன்றுகொண்டே இருக்க வேண்டியதுதான்.

இதுல ஒரே ஒரு (முக்கியமான) கேள்வி, நமக்கு விதிக்கப்பட்ட கர்மாக்கள் என்னன்னுஎப்படித் தெரிஞ்சிக்கிறது? அதுக்கு திவா தனிப் பதிவு போடறதாச் சொல்லியிருக்கார் ☺

எளிமையான உதாரணங்களுடன் கண்ணன் காட்டிய வழியை அருமையாக விளக்கியதிவா அவர்களுக்கு நன்றிகள் பல.

--கவிநயா

---

மதியம் ஞாயிறு, டிசம்பர் 14, 2008
சமம்
மூணாவதா சமாதி ஷட்சம்பத்தி.

முதல்ல சமம்.
சமம் என்பது அகக்கரண தண்டம். அதாவது உள்ளே இருக்கிற கருவியை கண்டிக்கிறது - கருவி மேல கன்ட்ரோல். அட அதென்னப்பா உள்ளே இருக்கிற கருவி?

மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம் இது ஐந்தும் சேர்ந்ததுதான். அதுக்கு அந்தக்கரணம்ன்னு பேரு. தமிழ்ல அகக்கரணம்.

இதை கட்டுப்படுத்தறதே சமம். இந்த மனம் இச்சையால அலைஞ்சு கொண்டே இருக்கு. இதோட நிறைவேறாத ஆசைகளாலதான் அடுத்த பிறவியே வருது. அதனால இத அதோட இஷ்டப்படி அலைய விடாமல் தடுக்கணும்.

இந்த அஞ்சும் உண்மைல ஒண்ணே -வேற வேற வடிவம். தண்ணீரையே அது இருக்கிற விதத்தை பாத்து ஐஸ் கட்டி, மூடுபனி, தண்ணி, நீராவி ன்னு வேறு வேறா சொல்கிறோம் இல்லையா? அது போல ஒரே விஷயம் அஞ்சா வடிவம் பெற்று இருக்கு. அதனால இவை ஒண்ணுக்கொண்ணு உதவி பண்ணி நிக்கும்.

உதாரணமா காலை சீக்கிரம் எழுந்திருக்க நினைக்கிறோம். நாலு மணிக்கெல்லாம் எழுந்தாதான் சரிப்பட்டு வரும்ன்னு புத்தி சொல்லுது. அப்படியே நினைச்சுகிட்டு படுக்கிறோம். காலை அலாரம் அடிக்குது. புத்தி எழுதிரிடான்னு சொல்லுது. மனசு ஒத்துக்கலை. இன்னும் அஞ்சு நிமிஷம்ன்னு சொல்லுது. புத்திக்கு தெரியும் - அப்படியே விட்டா திருப்பி தூங்கிடுவோம், எழுந்திரிக்க மாட்டோம்ன்னு. இருந்தாலும் அது பேசாம விட்டுவிடும். காலை மெதுவா எழுந்தபிறகு "அடடா இப்படி தூங்கிட்டோமே"ன்னு தோணுமா! அப்ப ஏன் சீக்கிரம் எழுந்துக்க முடியலைன்னு புத்தி அருமையான விளக்கம் கொடுத்து மனசை குற்ற உணர்ச்சிலேந்து காப்பாத்திடும்! ரொம்ப குளிரா இருந்தது, படுக்கவே லேட்டா போச்சு. ஆறு மணி நேரமாவது தூங்கலைனா உடம்புக்கு நல்லது இல்லை- இப்படி ஏதோ ஒண்ணு!

சாதாரணமா இப்படி புத்தி மனசுக்கு துணை போகும். ஆனா நாம் பெரிய முயற்சி பண்ணி புத்தி சொல்கிறது போல நடக்கணும். புத்தியும் நல்ல புத்தியா இருக்கணுமே? சின்ன வயசுல சாமிக்கிட்ட வேண்டிக்க அம்மா சொல்லி தந்தப்ப "சாமி நல்ல புத்தி கொடு" ன்னுதான் சொல்லி

கொடுத்தாங்க! இப்ப எப்படின்னு தெரியலே! நல்லதையே யோசிச்சு நல்லதையே படிச்சு நல்லதையே செஞ்சு நல்லதையே பேசி இந்த நல்ல புத்தியை வளத்துக்கணும். ஒரு போதும் கெட்ட விஷயங்களுக்கு இது துணை போகக்கூடாது. மூர்க்கமான புத்தி மனசு வேணா வேணான்னு அடிச்சிகிட்டாக்கூட பிடிவாதமா கெட்ட செயலை செய்யும். ஏன் செய்யணும்ன்னு சரியான காரணம் கற்பிக்கவும் அதுக்குத்தெரியும்.

சித்தம். அதையும் கட்டுப்படுத்தணும். புத்தி சொல்லுது ஜபம் நல்லதுன்னு. மனசும் இடங்கொடுத்தாச்சு. ஜபத்துக்கு உக்காருகிறோம். முதல்ல சிந்தனை ஜபத்திலே நல்லா போகுது. கொஞ்ச நேரம் கழிச்சு வேற எங்கேயோ போகுது. ஏதேதோ சிந்தனைகள். திடுதிப்புன்னு நமக்கு ஞாபகம் வர "அடடா ஜபம் பண்ண உக்காந்து வேற எங்கேயோ போயிட்டோமே" ன்னு நினைச்சு வருத்தப்படறோம். இது சித்தத்து மேலே கட்டுப்பாடு இல்லைன்னு காட்டுது.

அகங்காரம் எல்லாத்தையும் போட்டு கவுக்கிற திறமை கொண்டது. அடங்கறா மாதிரி அடங்கி மெதுவா கள்ளத்தனமா மேலே வந்து முழு கண்ட்ரோலும் பிடிச்சுடும். "என்னடா நல்லபடியாதானே இருந்தாரு, ஜபம், பூஜை எல்லாம் பண்ணி ஆசாமிய பாத்தாலே கும்புடுற மாதிரி இல்லே ஒரு நிலைல இருந்தாரு. இப்ப என்ன போல ஜபம் தவம் பண்ண ஆசாமி உண்டான்னு சொல்லிகிட்டு திரியறாரே. அவ்ளோ அகங்காரமா" ன்னு மக்கள் யோசிப்பாங்க. அவருக்கோ எப்ப இப்படி ஒரு நிலை வந்ததுன்னே தெரியாது.

**

திடீர்ன்னு மனசு ன்னு ஆரம்பிச்சு அஞ்சு விஷயம் சொல்லி குழப்பறேனா? முன்னாலேயே ஒரு தரம் குழப்பியாச்சு!
சரி. இப்ப இதை தெளிவு படுத்திக்கலாம்.
பஞ்சீகரணம் என்கிற நிகழ்வு பற்றி பின்னால வரப்போகுது. இப்ப அனாவசியமா அதைப்பத்தி வேண்டாம். அந்த சமயத்தில இன்னும் விரிவா சொல்றேன். இப்ப கொஞ்சம் மட்டும் தெரிஞ்சுக்கலாம்.
இந்த பஞ்சீகரணத்தால அந்தக்கரணம் உண்டாகும். இது 5 வகையாக காட்சி அளிக்கும்.
உள்ளம் என்கிறது ஆகாய தத்துவம். அதனால் மற்றா எல்லா அந்தக்கரண காட்சிகளுக்கும் இடம் கொடுக்கும். அதான் அதோட வேலை.
மனம் என்கிறது வாயுவின் தத்துவம். அதனால சலித்து (நிலையா இல்லாம அலைபாய்ந்து) கொண்டே இருக்கும்.
புத்தி அக்னி தத்துவம். அதனால அது விஷயங்களை வெளிச்சம் போட்டு தெளிவா, பிரகாசமா காட்டிகிட்டே இருக்கும்.
சித்தம் நீர் தத்துவம். அதனால் அது ஒண்ணுலேந்து ஒண்ணை பற்றிகிட்டு போய்கிட்டே இருக்கும். எண்ண ஓட்டம் என்கிறது இதுதான். சித்தத்தை சிவன் பால் வைத்து என்கிறதும் இதனாலதான். அவனைப்பத்தியே எண்ணம் போகணும்னு அப்படி சொல்கிறது. சாதாரணமா அப்படி இல்லை நமக்கு. ஒரு பேப்பர் எடுத்துக்கிட்டு 5 நிமிஷம் முன்னால என்ன நினைச்சுகொண்டு இருந்தோம் ன்னு எழுதி அப்புறம் அப்புறம்ன்னு போய்கிட்டே இருந்தா செஸ் குதிரை கணக்கா அது எங்கெங்கோ போறதை பாக்கலாம்.
கடைசியா அகங்காரம். இது நில தத்துவம். அதோட குணம் எதையும் கடினமா எதிர்த்து நிக்கிறது. அதே போல அகங்காரம் மத்த யார் சொல்கிறதையும் கேக்காம எனக்கு நிகர் யாரும் இல்லைன்னு சொல்லிகிட்டு பிடிவாதமா நிக்கும். இதை நீக்க செய்கிற எல்லா முயற்சிகளையும் அது கடுமையா எதிர்க்கும்.
**

---

மதியம் திங்கள், டிசம்பர் 15, 2008

தமம்

தமம் என்கிறது இந்த மனசு கண், காது முதலானவற்றால மனசு வெளியே போய் உலக விஷயங்கள்ல ஈடுபட்டு சுகம் என்கிற கஷ்டத்துல { :-)) } அகப்படறதை தடுப்பது. அதாவது

புறக்கரணத்தை கண்டிக்கிறது. புறக்கரணம்? அதாங்க இந்திரியங்கள் / புலன்கள்.

ஐந்து கர்மேந்திரியங்களும் ஐந்து ஞானேந்திரியங்களும் இருக்கு இல்லையா? கை பல விஷயங்களை செய்கிறது. கால் நடக்க; வாய் பேச, இன்னும் இரண்டு இந்திரியங்கள் கழிவுகளையும் வீர்யத்தையும் வெளியே தள்ள. இவை 5 கர்மேந்திரியங்கள். வெளியே உள்ள விஷயங்களை அறிய பயன்படுவது ஞானேந்திரியங்கள். சப்தத்தை கேட்க காது; வழவழ, சொரசொர, சில்லுன்னு, சூடா, இப்படி அனுபவிக்க தோல்; வண்ண மயமா உலகை பார்க்க கண்கள்; பல சுவைகளை அறிய நாக்கு (வாய்); பல வாஸனைகளை அறிய மூக்கு.

இதையெல்லாம் கட்டுக்குள்ள வைக்காததுதான் பல பிரச்சினைகளுக்கும் காரணம். ஒவ்வொரு இந்திரியமும் கொடுக்கக்கூடிய அனுபோகத்தில இருக்கிற ஆசையாலதான்ஒரு ஜீவன் இந்த மாயா லோகத்திலே கட்டிப்போடப்படுகிறது. இந்த மாயைல இருக்கிற வரை ஆத்மாவை புரிஞ்சுக்க முடியாது என்பதாலே ஆத்ம நாட்டம் இருக்கிறவங்க இதை கட்டிப்போடணும்.

சமம் தமம் ரெண்டுமே அடக்கு என்கிற பொருளைதான் தருதுக. இருந்தாலும் வெளி விஷயங்களை அறிந்து அனுபோகத்துக்கு உதவி செய்யறவற்றை அடக்கறது தனியாவும், இந்திரியங்கள் உதவி இல்லாட்டாக்கூட தானே எண்ணங்களை உற்பத்தி பண்ணி சலிக்கிற மனசை அடக்குகிறது தனியாகவும் இருக்கிறதால ரெண்டாச்சு. சமம் மனவடக்கமாயும் தமம் புலனடக்கமாயும் ஆச்சு. ரெண்டிலே மனவடக்கம்தான் முக்கியம். ஏன்னா, புறக்கரணம்ன்னு சொன்னாலும் இந்த இந்திரியங்கள் வழியே வெளியே பாய்கிறது என்னவோ மனசுதான். மனசை கண்டிச்சுட்டா புலன்களுக்கு ரொம்ப ஒண்ணும் வேலை இல்லை. ஆதனாலதான் சமம் முதல்ல சொன்னாங்க.

அப்ப மனசை கட்டுப்படுத்தறது ஒண்ணே போதுமே? ஏன் புலன் கட்டுப்பாடு?

நல்ல கேள்வி. மனசை முழுக்க கட்டுக்கு கொண்டு வரது ஞான வழியிலே ரொம்ப தூரம் போன பிறகுதான் கை வரும். அது வரை கொஞ்சம் கொஞ்சம் கட்டுப்பாட்டுல இருக்கும்.

கேசரி வாசனை மூக்குக்கு எட்டாதவரைக்கும் மனசு அது பின்னால போகாது. வாசனை கிடைச்சாச்சுன்னா கை கால் பரபரக்கும்; ஓடிப்போய் கேசரியை பாத்ததும் கை எடுக்கும், வாய் திறக்கும்; நாக்கு ருசி பாக்கும் ஹா! இப்படி நிறைய விஷயங்கள் புலன்களுக்கு தென் படாத வரை பிரச்சினை இல்லாம தென்பட்டா இந்திரியங்கள் அதுக்கு ஆலாப்பறக்க, உடனடியா மனசு பிச்சுக்கொண்டு அலைய ஆரம்பிக்கும். மேல் மட்டங்களுக்கு போகிற வரையிலே இப்படித்தான் மனசு வெளிக்கவர்ச்சி இல்லாதவரை ஓரளவு அடங்கியும் அது புலப்பட்டா அலைகிறதுமா இருக்கும். புலப்படும் இந்த நேரத்துக்குத்தான் இந்திரியங்களை கட்டுப்படுத்தணும் என்கிறதும் அதை தனியா வெச்சு இருக்கிறதும்.

கடோபநிஷத்துல அழகான உதாரணம் புலன்களைப்பத்தி.

ஜீவன் தேர்ல இருக்கிற யஜமானன் மாதிரி.
சரீரமே தேர்.
ஓட்டுறவன் புத்தி.
தேரை இழுக்கிற குதிரைகள் புலன்கள். இவற்றை கட்டுப்படுத்துகிற லகான் மனசு. இது புத்தி கைலதானே இருக்கும்.
இந்த விவேக வைராக்கியத்துல கெட்டியான நல்ல புத்தி சரியான ஆத்ம வழியில போகிற மாதிரி மனசால லகானை பக்குவமா பிடிச்சு விட வேண்டிய அளவு மட்டுமே விட்டா புலன்களான குதிரைகள் தேவையான அளவு நல்ல அனுபோகங்களுக்கு மட்டுமே போய் இழுத்துப்போக இறங்க வேண்டிய இடமான ஆத்ம சாக்ஷாத்காரம் வரும். அப்புறம் என்ன! இவை ஏதும் தேவையில்லை என்கிறதாலே குதிரைகளையும் லகானையும் அவுத்துவிட்டு சாரதியையும் அனுப்பி வைத்துட்டு யஜமானன் சுகமா இருக்கலாம்!

மதியம் செவ்வாய், டிசம்பர் 16, 2008

சமம் -தமம்

சாதாரணமா ஞான இந்திரியங்களைத்தான் கட்டுப்படுத்த சொல்கிறோம். கர்ம இந்திரியங்களை இல்லை. ஏன்னா ஞான இந்திரியம் தூண்டிதான் கர்ம இந்திரியம் வேலை செய்யும்.

இந்த 5 ஞான இந்திரியங்கள் வழியா ஜீவன்கள் அழிவடையறதை முன்னேயே பாத்து இருக்கோம் இல்லையா? பக்தி பதிவுகள்ல விமோகம் பத்தி பாக்கிறப்ப. (வி.சூ 76/8)

இருந்தாலும் விவேக சூடாமணில தமம் ன்னா என்னன்னு நிர்ணயம் செய்யறப்ப ரெண்டுமேதான் சொல்லி இருக்கார்.

விஷயேப்ய: பராவர்த்ய ஸ்தாபநம் ஸ்வஸ்வ கோளகே|
உபயேஷாம் இந்த்ரியாணாம் ஸ தம: பரிகீர்த்திதித:

அனுபோக வஸ்துக்களான விஷயங்களில் இருந்து இரண்டு வகை இந்த்ரியங்களையும் இழுத்து அதனதன் வட்டத்தில் நிலை நிறுத்துவது.
சரி அதென்ன வட்டம் மாவட்டம்?

தமம் என்கிறது ஒண்ணையுமே பாக்கக்கூடாது, ஒண்ணையுமே கேட்க்ககூடாது, வாசனை பாக்கக்கூடாது, ருசிக்கக்கூடாது - இப்படி இல்லை. கையை காலை ஆட்டி ஒரு வேலையும் செய்யக்கூடாதா?

ஒரேயடியா இந்திரியங்களோட வேலையை நிறுத்தினா! உயிர் வாழ உலக வியாபாரம் நடக்கணுமே! சரீர யாத்திரைக்கு தேவையான அளவு மட்டும் செய்யத்தான் வேண்டும். அத்தியாவசியமா பாக்க வேண்டியதை பாத்து, கேட்க வேண்டியதை கேட்டு, இப்படியே சாப்பிட்டு நடந்து இப்படி...

இந்த அத்தியாவசியம் என்ன என்பதைதான் வட்டம்ன்னு சொல்லி இருக்கார்.

மேலும் கர்மம் செய்யாமல் இருப்பதால் உனக்கு உடலைப் பேணுவது கூட ஸாத்யமாகாது ன்னு ஏற்கெனவே கண்ணன் சொல்லி இருக்கானே!

---

மதியம் புதன், டிசம்பர் 17, 2008

சமம்-தமம் எப்படிங்க?

எல்லாம் சரி சமமோ தமமோ, இதை எப்படி அடக்குவதுன்னு சொல்லுங்கன்னா...

முதல்ல கொஞ்சமாவது வெற்றிகரமா செய்யக்கூடியது தமம்தான்.
அதாவது புலனடக்கம்தான்.

இதுக்குத்தான் விரதம், ஆசாரம், தீக்ஷை சாஸ்திரம்ன்னு நிறைய கட்டுப்பாடு. காமத்தை தணிக்கணுமா கல்யாணம் பண்ணிக்கோ, பெண்ணாட்டியோட மட்டும் அனுபவி. அதுவும் இன்ன இன்ன நாட்கள் விலகி இருக்கணும். மாம்சம் சாப்படணுமா. சரி, இந்த இந்த பிராணியோடது எல்லாம் கூடாது. இந்த இந்த நாட்கள் கூடாது. இப்படி நிறைய கட்டுப்பாடுகள். இவை நமக்கு புலன்கள் மனம் போன படி பின்னாலேயே போகாம ஓரளவாவது கட்டுப்பாடு வர உதவுது.

மேலும் இந்த ஆசைகளை எல்லாம் பகவான் பக்கம் திருப்பி விடணும். சக்கரை பொங்கல் சாப்பிடனுமா? மார்கழி மாசம் இப்ப. சீக்கிரம் எழுந்து பகவானுக்கு பூஜை பண்ணி சாப்பிடலாம்!

இப்படி செய்த பின்னே மனசும் ஓஹோ நம்மால் இதெல்லாம் இல்லாம கூட இருக்க முடியும்

போல இருக்குன்னு ஆரம்பத்துல கொஞ்சம் ஒத்துழைச்சு அவற்றோட நினைப்பிலே*யே* அலையறதை ஓரளவு நிறுத்திவிடலாம். அதாவது தனியா இருக்கிற வரை மனசு இதில் எல்லாம் போக இருக்க முடியும். தனியா இல்லாம உலக நடப்புல இறங்கும் போது பிச்சுகிட்டு ஓடும். சினிமா பாட்டு எங்கெப்பா, புதுசா என்ன சினிமா, எங்க ஹோட்டல் ஆரம்பிச்சு இருக்கான்னு ஓடும். எல்லாம் வாசனைகளாலதான்! குதிரைகள் லகான் இல்லாம இஷ்டத்துக்கு ஓடறா மாதிரி.

இப்ப சமத்தை கொண்டு வரணும். அதாவது மன அடக்கம். மனசு என்கிற நிலையிலேந்து புத்திங்கிற நிலைக்கு கொண்டு போனால் இது முடியும். அதாவது சலனத்தை விட்டு ஸ்திரமா நல்லதா கெட்டதான்னு நிர்ணயம் செய்கிற நிலைக்கு போகணும். இப்படி போக மன உறுதி ரொம்பவே வேணும். எவ்வளவுக்கு எவ்வளவு வைராக்கியம் இருக்கோ அவ்வளவுக்கு அவ்வளவு இது சுலபம். முன்னாலேயே இது கெட்டது, ஆன்ம முன்னேற்றத்துக்கு உதவாதுன்னு யோசிச்சு நிச்சயப்படுத்தி கொண்டதை இப்ப நினைவு படுத்தி சலனப்படாம இருக்கலாம்.

இப்படி சமம் தமம் ரெண்டையும் மாத்தி மாத்தி பயிற்சி செஞ்சு - உண்மைல வெகு வேகமா இரண்டும் நடப்பதால சேத்தேன்னு கூட சொல்லலாம்- பயிற்சி செஞ்சு சாதித்தே விட்டோம் என்கிற நிலைக்கு வந்துவிடலாம். இந்த முடிவு சமத்தோட நிறைவாகவே இருக்கும். அதாவது மனசு பரி பூரணமா அடங்கி இருக்கும். இது ஆன்மீகத்துல ரொம்ப முன்னேறிய நேரத்துலதான் வரும்ன்னு சொன்னது ஞாபகம் இருக்கலாம். அது வரை பயிற்சி செய்துகிட்டே மத்த படிகளையும் பாக்க வேண்டியதுதான்.

அப்பா, என்னால முடிஞ்சது இவ்வளோதான். மேலே வைராக்கியம் நீதான் பிச்சையா கொடுக்கணும்ன்னு பகவானை வேண்டிக்கணும். அவனும் பாவம் இந்த குழந்தை இவ்வளோ முயற்சி செய்யுதேன்னு கொஞ்சம் தருவான்.

கர்ம யோகத்திலே பாத்த இது நினைவு இருக்கு இல்லியா?

---

மதியம் வியாழன், டிசம்பர் 18, 2008

விடல்

அடுத்து விடல்.
உபரதின்னும் சொல்லுவாங்க.

ஒரு வேலையும் இல்லாம மனசு ஓய்ஞ்சு போய் விட்ட நிலை. சமதம பயிற்சியால வெளியே இருக்கிற பிடிப்பு எல்லாத்திலிருந்தும் விடுபட்டு ஒரு செயலும் இல்லாம இருக்கிற நிலை. அப்படித்தான் விவேக சூடாமணி சொல்லுது. (1)

வெளியே உள்ளதில்பிடிப்பு விட்ட உத்தமமான நிலை. வெளியேன்னா? ஆத்மாவுக்கு வெளியே இருக்கிற எல்லாமேதான். மனது எழுப்புகிற எண்ணங்களும் இந்த ¨வெளி¨யில்தான் இருக்கு.

ஒரு பட்டி மன்றம் நடக்குது. ஒரு பக்க பேச்சாளர் ரொம்ப திறமையா வாதாடறார். ஆணித்தரமான வாதங்கள். எவ்வளோ திறமைனா எதிர் தரப்பு பேச்சாளர் சொல்லறத்துக்கு ஒண்ணுமே இல்லாம வாயடைச்சு போய் ஓஞ்சு நிக்கிறார்! இப்படி செயலத்து போகிறது உபரதி.

எல்லாருக்கும் பல விஷயங்கள் விட்டு விட முடிஞ்சாலும் மூணு கஷ்டமாம். மகன், பெண்ணாட்டி, பணம். பலருக்கும் மகன் மேல பாசம் விடறது கஷ்டம். (இந்த கால அரசியல் பத்தி சொல்லல சாமி!) எல்லாத்தையும் விட்ட சன்னியாச வாழ்கை வாழறதா மத்தவங்க நினைக்கிற பேர்கள் கூட. அப்படி இருந்தவர் ¨அண்ணா¨ ன்னு பலராலும் அழைக்கப்பட்ட சுப்ரமண்ய சர்மா. ராம கிருஷ்ண மட தமிழ் வெளியீடுன்னா அனேகமா இவருதா இருக்கும். அப்படி ஒரு கால கட்டத்திலே நிறைய கிரந்தங்கள் மொழி பெயர்ப்பு, தமிழாக்கம் இப்படி செய்தவர். ஏறக்குறைய சன்னியாச வாழ்க்கையே வாழ்ந்தவர். ஆனாலும் இவரோட மகன் இறந்து போனதா

கேள்விப்பட்ட பின் மூணு நாளாச்சாம் சுய நிலைக்கு வர.

பெண்டாட்டி மேலே இருக்கிற ஆசையும் பாசமும் சொல்ல வேண்டியதில்லே. தொண்டு கிழமானாலும் இந்தா பாட்டி காபின்னு கொடுக்கச்சே அந்த கிழம் குடிச்சுடுத்தா ன்னு கேட்டுட்டு குடிக்கிற பாட்டியை பாத்து இருக்கோமே! கிழவனும் அதே மாதிரி ஏண்டி காப்பி குடிச்சயான்னு தட்டு தடுமாறிக் கொண்டு வந்து கேட்டு போகும்!

பணம்/ சொத்து மேலே ஆசையும் நல்லா தெரிஞ்சதுதானே! இதுக்காக மக்கள் அலைகிற அலைச்சல்! பல சமயம் ஆச்சரியமா இருக்கும். இத்தனைக்கும் இதை எல்லாம் மூட்டை கட்டிகிட்டு போக முடியாதுன்னு நல்லாவே தெரியும். பின்னே ஏம்பான்னா i can´t help it ன்னு பதில் வரும். நகரத்திலே வாழ ஒரு வீடுதான் இருக்கே இன்னும் ஒண்ணு எதுக்கு? இருந்தாலும் மாநகரத்திலே ஒண்ணு வாங்கிப்போடுவாங்க. புத்தியும் அப்பப்ப மாநகரம் போறப்ப பயன்படுமேன்னு ஒரு சமாதானம் கற்பிக்கும். இது போல பலது.

இந்த மகன், பெண்ணாட்டி, பணம் மூணையும் ஏஷணா த்ரயம் என்பர்.(2)
இந்த மூணு மேலே ஆசையும் விட்டவன்னா உபரதி வந்தாச்சுன்னு அர்த்தமாம்! விடல் ன்னா இந்த மூணையும் விடல்.

அட, முன்னேயே வைராக்கியம் பத்தி பாத்தோமே, அதுல இதை எல்லாம் விடலையா? அப்படின்னா....

வைராக்கியத்துல ஒரு வெறுப்பு இருக்கும். ஆசையை ஒழிக்கிறதுன்னே முனைப்பு இருக்கும். சம தமங்கள்லே மனசையும் புலன்களையும் அடக்குகிறதா இருக்கும். இப்படி எல்லாம் செஞ்சு இப்ப வெறுப்பும் இல்லை ஆசையும் இல்லை. ஓய்வு! சம தமத்தால மனசு ஓய்ஞ்சு போச்சு. ஒரேயடியா இன்னும் ஒழியலை. அது ரொம்ப கடேசிலதான் நடக்கும். ஆத்ம அனுபவம், ஆனந்தம் எல்லாம் இன்னும் வரலை. இப்ப சும்மா வெத்தா பாழா சூன்யமா இருக்கு. இருந்தாலும் சஞ்சலங்கள் இல்லை. அதனால் ஒரு நிம்மதி நிலை.

சரி மனசு இப்படி உபரதில ஓய்ஞ்சு போச்சே, அப்படியே போயிடுமான்னா..

இல்லை.
இப்படி ஓய்ஞ்சு போச்சுன்னா மேலே எப்படி ப்ரஹ்ம சத்தியத்தை தெரிஞ்சுக்க காரியம் நடக்கும்? அதனால் பகவானோட ஒரு அனுக்கிரஹம் இங்கே கிடைக்கும். அதுக்குன்னு உடனடியா பிரஹ்ம சாக்ஷாத்காரமும் கிடைச்சுடாது. வெத்தா இருக்கிற நிலையாவும் இல்லாம இரண்டுக்கும் நடுவே அடுத்த/ மற்ற நிலையான ஜீவனோட இருக்கிற சமாதானம் என்கிற நிலைக்கு கொண்டுபோவான்.
சில சமயம் வாசனைகள் பலமா இருந்தா திருப்பி நழுவுகிறதும் இருக்கும்.

ஆசைகள் விட்டு போனதால இதையே சன்னியாசம்ன்னு சங்கரர் பிருஹதாரண்ய பாஷ்யத்திலே சொல்லிவிடறார். அது எப்படி சொல்லலாம்? இன்னும் திதிக்ஷா, ஷ்ரத்தா, சமாதானம், முமுக்ஷுத்துவம்ன்னு எவ்வளோ பாக்கி இருக்குன்னா....
முன்னேயே சொன்ன மாதிரி இவை எல்லாம் வரிசையான படிகள் இல்லை. ஏறத்தாழ ஒரே நேரத்திலே பயிற்சி செய்ய வேண்டிய சமாசாரங்கள். சில சமயம் சிலது அதிகம் சிலது குறைவுன்னு போகும்.
உபரதி பூரணமா வந்தாச்சுன்னா சன்னியாசம் வந்தாச்சு.

1.பாஹ்யாவலம்பனம் வ்ருத்தே: ஏஷோ(உ)பரதிருத்தமா
பாஹ்ய = வெளி. அவலம்பனம்= பிடிப்பு. உபரதிர் உத்தமா= உத்தமமான உபரதி நிலை
2. ஏஷணா ரஹிதாத்ருதா = ஆசைகள் அற்றவர்களால் பூஜிக்கப்படுபவள்.

மதியம் வெள்ளி, டிசம்பர் 19, 2008

சகித்தல்

அடுத்து நாம பார்க்கிறது திதிக்ஷா என்கிற சகித்தல்.
பொறுமை. பொறை உடைமைன்னு திருவள்ளுவர் சொன்னது.
மயக்கம் செய்கிற காமம் குரோதம் முதலியவை வந்தா அடக்குதல் (பொறுத்தல்) சகித்தல்.
மனசை அடக்க தடையா இருக்கிறது இந்த காமம்தானே? ஆசைப்பட்ட பொருள் கிடைக்காம போனால் வருவது இந்த குரோதம்தானே? இவற்றையும் அடக்குவது.

ஆத்ம சாக்ஷாத்காரம் - நேரடியாக ஆத்மாவை அனுபவிப்பது நடந்தால்தான் விஷயங்கள்ல ருசி முழுக்க முழுக்க நசிஞ்சு போகும். புலனடக்கத்தால புலன்களுக்கு தீனி போடறதை நிறுத்திவிட்டா கொஞ்சம் கொஞ்சமா அவை அடங்குமானாலும் ருசி கண்ட பூனை மாதிரி சாதகன் அனுபவிச்சது உள்ளுக்குள்ளே இருக்கும்தான். இது எப்படா விலகும்ன்னா ஆத்ம தரிசனம் கிடைச்ச பிறகுதான். (1)

¨இது என்னய்யா! பைத்தியம் தெளிஞ்சால் கல்யாணம் ஆகும்; கல்யாணமானால் பைத்தியம் தெளியும் ங்கிறா மாதிரி இருக்கே!¨

இல்லை.
ருசியை அழிச்சு மனசை அழிச்சு ஆத்மாவை பாக்க சாதகன் முயற்சியை பண்ணதான் வேண்டும். இருந்தாலும் முழுக்க செய்ய இவனால முடியாது. இப்படி இவன் முழுக்க முடிஞ்சவரை முயற்சி பண்ண பிறகு ஈஸ்வரன் சீர் தூக்கிப்பாத்து ¨ம்ம்ம்.... பரவாயில்லை. போதுமான முயற்சி பண்ணி இருக்கான். பாவம் முழுக்க செய்ய முடியலை. போனாப்போறது¨ ன்னு கொஞ்சம் மன்னிச்சுவிட்டு கருணையோட ஆத்ம தரிசனத்தை கொடுப்பான். இதனால ருசியும், ருசியை காண்கிற மனசையும் சேத்து அழிச்சுடுவான்.

சரி, அதான் வைராக்கியம் வந்து எல்லாத்தையும் விட்டாச்சே, இது என்ன சகித்தல்ன்னா...

உபாரதி நிலைக்கு வந்ததும் மனசு வெறிச்சுன்னு ஆகிடும்தான். இருந்தாலும் சாதாரண வாழ்க்கையா இல்லாம கொஞ்சம் வித்தியாசமா அளவு கடந்த துக்கமோ கோபத்தை உண்டாக்குகிற விஷயமோ நடந்தா என்ன செய்கிறது? அப்பவும் மனசை பாத்திப்புக்கு விடாதேப்பான்னுதான் இந்த சகித்தலை யும் சொல்லி இருக்கு.

குளிர்- சூடு போல இரட்டைகளா எதிர் எதிரே இருக்கிற ஜோடிகளுக்கு த்வந்த்வம் ன்னு பேரு. இந்த இரட்டைகளை எல்லாம் பொறுத்துக்கப்பா ன்னு அர்ஜுனனுக்கு கண்ணன் சொல்கிறப்ப ¨திதிக்ஷ்வ¨ ன்னு சொல்லறார். (ப.கீ 2-14) மேலும் பல இரட்டைகள் வெற்றி தோல்வி, காரியம் நடக்கிறது- நடக்காமல் இருக்கிறது, லாபம்- நஷ்டம் இப்படி பலதும் சொல்லி இதை எல்லாம் பொறுத்துக்க என்கிறான்.

நல்லதை சுலபமா பொறுத்து போயிடுவோம். கெட்டதை பொறுக்கிறது இன்னும் சிரமம். ஆனால் அதுக்கு பழகணும். பழகி பழகி அப்புறமா அதை அசட்டை - உதாசீனம் செய்கிற பக்குவம் வந்துடும்.

அது சரி, நல்லதையும் ஏன் சகிக்கணும்? ஏன் கெட்டதை மட்டும் அசட்டை பண்ண சொல்லி இருக்கலாமேன்னா, அப்படி இல்லை. இரண்டையுமே சமமா பாக்கணும் என்கிறார். ஒரு பக்கத்தோட எக்ஸ்ட்ரீம் தெரியறப்பதானே இன்னும் ஒண்ணு, மறுபக்கம் இருக்குன்னு தெரியும்? இது ஆத்ம சாதனைல கொஞ்சம் முன்னேறின பிறகு புரியும். தென்றல் வீசுதுன்னு தோணினா ¨அட, தென்றலோ புயலோ ஏதா இருந்தாலும் பரவாயில்லைன்னு தானே இருக்கணும். ஏன் இது தென்றல்ன்னு தனியா தோணணும்¨ன்னு நினைப்பு வரும். மனிதர்கள் ரொம்ப பிரியமா இருந்தா இல்லாவிட்டாலும்தான் என்னன்னு தோணும். அதாவது இப்ப சாதாரணமா நமக்கு கெட்டதை

அசட்டை செய்கிறா மாதிரி சாதனைல கொஞ்சம் முன்னேறிய பிறகு நடக்கிற படி நடக்கட்டும் என்று தோணும். அதானே திதிக்ஷா? விடல்?

நல்லது நடக்கிறப்ப மனசு சந்தோஷப்பட்டா அதுவும்தான் மனசு சஞ்சலம், கொந்தளிப்பு. உண்மையில் துக்கம் ன்னு நினைக்கிறது துக்கமும் இல்லை. சுகம் ன்னு நாம சாதாரணமா நினைக்கிறது சுகமே இல்லை. ஆத்ம அனுபவம் மட்டும்தான் உண்மையான சுகம். நல்லதுன்னு நமக்கு தோணுவதை ஆஹான்னு அனுபவிச்சுட்டா பிறகு அந்த நல்லது நடக்காதான்னு எதிர்பார்ப்பு ஆரம்பிச்சுடும் இல்லையா? (இதுக்கு ஸ்ப்ருஹா ன்னு ஒரு சொல் வட மொழிலே) இதை ஏற்படாம பாத்துகிறதும் விடல்தான்.

இப்படி இந்த இரட்டைகள் விடுகிறதுதான் ¨தொந்தம்¨ விடுகிறது! (த்வந்த்வம்). அப்ப த்வைதமும் போய் அத்வைதம் வந்துடும்!

த்வந்த்வம் போகிறவன் பந்தத்தில் இருந்து சுலபமா விடுபடறான் ன்னு கண்ணன் சொல்கிறான். (2)

சங்கரர் ப்ருஹதாரண்ய பாஷ்யத்தில் திதிக்ஷு : த்வந்த்வ ஸஹிஷ்ணு: - எதிரெதிரான இரட்டைகளை சகித்துக்கொள்பவன் திதிக்ஷு என்கிறார்.

நேராக துக்கமா தோணினாலும் அல்லது சுகமா தோணினாலும் ஏதானாலும் அதைப்பத்தி புலம்பாம, விசாரப்படாம, இதை தடுக்க என்ன செய்யலாம்ன்னு யோசிக்காம, பேசாமல் சகிச்சுக்கிறதுதான் தேவை - இதான் சங்கரரோட உபதேசம்.(3)

ஒண்ணு பாத்தீங்களா? விவேகம், தமம் ஆண்பால். வைராக்கியம் ஆண்பால் ஆனா இங்கே நியூட்டர். உபரதி பெண்பால். செயல் துடிப்பு ஆண்மைனா செயல் இல்லாம அடங்கி இருக்கிறது பெண்மை. கிடக்கட்டும், திதிக்ஷா பெண் பால். அவங்க பொறுமை, சகிப்புத்தன்மை யாருக்கு வரும்? பொறுமைக்கு பூமா தேவிதானே!

1.ப.கீ 2.59
விஷயா விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹிந
ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்ததே||

2.ப.கீ 5-3
நிர்த்வந்த்வோ ஹி மஹா பாஹோ ஸுகம் பந்தாத் பிரமுச்யதே|

3.ஸஹநம் ஸர்வது:க்காநாம் அப்ரதீகா பூர்வகம்|
சிந்தா விலாப ரஹிதம் ஸா திதிக்ஷா நிகத்யதே|| (வி.சூ 24/25)

---

மதியம் திங்கள், டிசம்பர் 22, 2008

சிரத்தை

அடுத்து சிரத்தை.
பரம சற்குரு (ஈஸ்வரன்) நூல் (வேத சாத்திரங்கள்) மீது அன்பு பற்றுதலே சிரத்தையாகும்.

இது கொஞ்சம் ஆச்சரியமா இருக்கலாம். ஆரம்ப காலத்திலே சரி, இப்பவா?
ஆரம்ப காலத்திலே நமக்கு ஒண்ணும் ஆத்மா பத்தி அறிவு இல்லை. சொல்லால சொல்ல முடியாத ஒண்ணைத்தானே சொல்ல முயற்சி பண்ணறோம்? அதனால இதில் நிறைய விஷயங்களுக்கு நேரடி ஆதாரம் காட்ட முடியாது. வேதம், சாத்திரங்கள், ஞான நூல்கள், பெரியவர்கள் சொன்னது இப்படி பலதுல ஒரு நம்பிக்கை இருந்தாதான் கொஞ்சம் இந்த கருத்துக்களோட கூடப்போய் பார்த்து புரிஞ்சுக்கலாம். அந்த நேரத்துல சிரத்தை வேணும்ன்னு சொன்னா சரி கரெக்ட்டு.

இப்ப நிறையவே பண்ணியாச்சு. எது நித்தியம் எது அநித்தியம் என்கிற அறிவை ஓரளவாவது வளத்தாச்சு; ஓரளவு வைராக்கியம் வந்தாச்சு; இந்திரியங்களையும் மனசையும் கட்டிப்போட்டு மனசை சாந்தமா வைக்க பழகியாச்சு. மனசில வெறுமை, பொறுமை எல்லாம் வந்தாச்சு. அப்புறம் இப்ப என்ன சிரத்தை?

இப்படி முன்னேறியதாலதான் சிரத்தை!

ஆரம்ப காலத்தில சாதகனுக்கு இப்படி ஒரு எண்ணம் இருக்கும்.¨நமக்கு இந்த ஆத்ம வித்யை பத்தி ஒண்ணுமே தெரியாதே! பேசாம பெரியவங்க, இதில் திளைச்சவங்க சொல்கிறதை கேட்டுப்போம்¨ அதனால சிரத்தை தானா இருக்கும். ஆனா இப்பவோ எனக்கு மனசு, புத்தி குழப்பம் எல்லாம் போய் தெளிவா இருக்கோம். இனிமேல சாக்ஷாத்காரம் விஷயமா நடக்க வேண்டியது எல்லாம் தானா நமக்கே புரிஞ்சுடும். இப்படி தோண ஆரம்பிச்சுடும். முன்னேயே சொன்னது போல அகங்காரம் எப்ப வந்ததுன்னு தெரியாமலேயே உள்ளே வந்து வளந்தும் விடும்.

ஆனா ஆத்ம தரிசனம் கிடைக்கும் முடிவான நிலைவரைக்கும் கூட பல விஷயங்கள் புத்திக்கு எட்டாதபடிதான் நடந்து கொண்டு போகும். சாக்ஷாத்காரம் கிடைத்து ஞானி ஆகிவிட்டாலும் கூட புத்தி மட்டத்துல பல விஷயங்களை தெளிவு பண்ண முடியாமலே இருக்கும். அதுவரைக்கும் பின்பற்றின வழியையே கேள்வி கேட்காமல் தொடர்ந்து போகணும். என்னென்னமோ சிலது நடந்துதான் திடீர்ன்னு சூர்யோதயம் மாதிரி ஆத்ம சாக்ஷாத்காரம் பிரகாசிக்கும். அது என்ன என்பது அவனுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். இப்படி சிலது நடந்து கொண்டு போகும் போது புத்தியால விசாரிக்காம எளிமையா அப்படியே அடங்கி ஏத்துக்கொண்டு போகணும். அது நடத்துவிக்கிறப்படி நடக்கணும். ¨இவ்வளோ தூரம் சாதனைல வந்தோம். இதுக்கு அருள் பண்ண பகவானுடைய அனுக்கிரஹ சக்தி இன்னும் மேலே கொண்டுவிடாம போகாது; இப்ப ஏதோ புத்திக்கு விளங்காம நடக்கிறது. இது ஒரு சோதனைதான் என்கிற தெளிவோட புத்தியை கொண்டு வராம நம்பிக்கையோட நடக்கிறதை ஏத்துக்கிட்டா கடைதேறலாம். அந்த விமோசனம் பெற்ற பிறகு கூட புத்தி விசாரணைக்கு எல்லாமே எட்டாது. மகா ஆசார்யராக பலரும் ஒத்துக்கிற சங்கரர் கூட அந்த ரகஸ்யத்தை புத்திக்கு புரிகிற மாதிரி சொல்ல முடியாதுன்னு சிரத்தைன்னு ஒரு படியா வெச்சுட்டார்.

---

மதியம் செவ்வாய், டிசம்பர் 23, 2008

சிரத்தை -2

(ஷெட்யூல் பண்ணப்போய் பப்ளிஷ் பண்ணிட்டேன்.! ஹிஹி!)

இந்த மாதிரி புத்திக்கு எட்டாதபடிக்கு பல விஷயங்கள் இருகிறதாலேதானே யாரும் எதையும் முடிந்த முடிவா சொல்ல முடியலை! அத்வைதம், விசிஷ்டாத்வைதம். த்வைதம் என்று பலவிதமாக பிலாஸபி இருக்கு! எதையுமே தப்புன்னு சொல்லவும் முடியலை. அவரவர் தான் அனுபவித்தபடி சொல்லிப்போனார்கள். இதிலே ஒத்தர் உசத்தின்னோ ஒத்தர் தாழ்த்தின்னோ சொல்ல எதுவுமே இல்லை.

எப்படி இருந்தாலும் ஒரு கட்டத்திலே புத்தியை விட்டு விட்டு சிரத்தையின் பலத்திலேயே போக வேண்டி இருக்கு. அப்படித்தான் அந்த விளையாட்டு இருக்கு. என்ன பண்ணுவது! அடைய வேண்டியது புத்திக்கு எட்டாததாச்சே! ஆத்ம வழில நல்ல முன்னேற்றம் கண்டவர் கூட தொடர்ந்து இதே வழில ஆசாரியர் உபதேசித்தபடிக்கு போகலாம்ன்னு போனாலே இலக்கை அடையலாம். ஒரு ஸ்டேஜுக்கு மேலே கேள்வி கேட்கிறதுல பலன் கிடையாது. அனுபவத்திலேயே புரிஞ்சு கொள்ளணும். கேள்வி கேட்டா ஆசாரியரும் புத்திக்கு புரிகிறாப்பல சொல்ல முடியாது/மாட்டார்.

அதனால ஆரம்பத்திலேன்னு இல்லாம கடைசி வரைக்கும்கூட சாஸ்திரம் சொல்வது மேலேயும் குரு சொல்வது மேலயும் ஒரு தளராத நம்பிக்கை வைக்கணும். நடுவிலே என்ன நடந்தாலும்

கூட அதன்படி செய்து கொண்டு போகணும். நிறுத்தாம நம்பிக்கையோடவே சாதனை செய்யணும். இப்படிப்பட்ட சிரத்தை சாதனையின் ஒரு உபாயம் மட்டும் இல்லை. இதுவே உச்சியான உபாயம். (1)

கண்ணனும் திடமாகவே சொல்கிறான்: சிரத்தை உள்ளவன்தான் ஞானம் அடைகிறான்.(2)

ஸாம வேதத்து மஹா வாக்கியம்தான் நாலுலேயும் கொண்டாடப்படுவது. அதை உபநிஷத்திலே சொல்கிற போது ஆசார்யனான உத்தாலக ஆருணி தன் பிள்ளையான ச்வேதகேதுக்கு உபதேசிக்கிறதா வருகிறது. ஆல விதையை பிளந்து கொண்டே போகச்சொன்ன ஆருணி உள்ளே ஒண்ணுமே இல்லை என்ற பிள்ளையிடம் ¨நீ ஒண்ணுமே இல்லை என்றதில் இருந்து சூக்ஷ்மமான சத்து ஆலமரமாக வரப்போகிறது¨ என்று சொல்லி குளிர்ச்சியாக ¨ஸௌம்ய¨ என்று கூப்பிட்டு ¨இதில் சிரத்தை வை¨ - ச்ரத்தஸ்வ என்கிறார்.
மஹா வாக்கிய உபதேசம் பெறும் தகுதி உள்ளவரிடம் கூட ச்ரத்தை வைன்னு சொல்ல வேண்டி இருக்கு! அப்ப ப்ரஹ்ம அனுபவம் ப்ரத்யக்ஷமா - நேரடியா உண்டாகிற வரை நம்பிக்கையே முக்கியம் என்று ஆகிறது.

விஷயங்களை நம்புவது மட்டும் இல்லை. அதை சொல்லுகிற குருவிடத்திலே கூட நம்பிக்கை வேண்டி இருக்கு. இது ரொம்பவே முக்கியம். குரு ஞானியா இருந்தா கூட பல விஷயங்களிலே அஞ்ஞானியா நடிக்க வேண்டி இருக்கும். அப்பதான் அவர் தன் வாழ்க்கையை நிம்மதியா நடத்திக்கொண்டு போக முடியும். யார் கிட்டேயாவது கொஞ்சம் சக்தி இருக்குன்னா அவரை விடாம படுத்தி எடுத்து தனக்கு முக்கியமா தோணுகிற காரியங்களை சாத்திச்சு கொண்டு அப்புறம் கஷ்டப்படறதுதான் நமக்கு கைவந்த கலையாச்சே! அவர் சொல்கிறதை பின் பற்ற தயாராக இருக்க மாட்டோம்; ஆனா அவர் நமக்கு வேண்டிய காரியங்களை சாதிச்சு கொடுக்கணும். ம்ம்ம்...... இதுதானே உலகம்! போகட்டும்.

ஒரு வேளை யாரானா அசத்துகிட்ட இவர்தான் குருன்னு மாட்டிகிட்டா என்ன செய்வது? இது பல பேருக்கும் வரக்கூடிய சந்தேகம்தான். அப்படி வந்தா தர்ம சங்கடம் தான்!

குருவை தீர விசாரித்துதான் அடைக்கலம் ஆக வேண்டும். அதுவும் போலிகள் பெருகிவிட்ட இந்த காலகட்டத்திலே ரொம்பவும் பிரச்சினையான விஷயம். இவர் நிஜமாவே ஞானிதானா? அப்படின்னா ஏன் இப்படி சாதாரண மனுஷன் போல கோபப்படுகிறார், தாபப்படுகிறார்? இப்படி சந்தேகம் வந்தா தொலைந்தது. அந்த சந்தேகப்பேய் பெரிசா வளந்து மூளையை ஆக்கிரமித்து கொண்டு ஒரு சாதனையும் பண்ணவிடாம ¨ஏமாந்து போயிட்டோமோ, ஏமாந்து போயிட்டோமோ ¨ன்னு இலக்கை கோட்டை விட செய்துடும்.

பகவான் அதனாலதான் சந்தேகப்படுபவன் அழிந்தே போவான் (3) என்று சொல்கிறான். இதையே தமிழ்ல அழகா சொல்லி இருக்கு- பாஸிடிவ்வா! நம்பினோர் கெடுவதில்லை. அப்படின்னா நம்பாதவங்க? அதை சொல்வானேன்!

அப்படி சொன்னா எப்படி? ஒரு வேளை போலியிடம் போய் சேர்ந்துவிட்டோமானால்? நம்ம சாதனா என்ன ஆறது? அவர் நம்மை உபயோகிச்சு (exploit செய்து) கொண்டா?

அப்படி ஆனாலும் உண்மையில் ஒரு பிரச்சினையும் இல்லை. ¨இந்த குருகிட்ட வந்து விழுந்துட்டோம். அவர் வெளியே எப்படி வேணுமானாலும் தோன்றிவிட்டு போகட்டும். நம்மை பொறுத்தவரை அவர் மூலமா பகவான் விமோசனம் தராம கை விட மாட்டான்¨னு திடமான நம்பிக்கையோட சிரத்தையை மனசில ஆணிவேரோட விட விட்டு சரணாகதி செய்துடணும். ஆரம்ப பாடம் சொல்லித்தர ஆசார்யனை விட இது ஞான வழி காட்டற குருகிட்ட ரொம்பவே முக்கியம். அப்படி செய்தா குருவா வரிச்ச ஆசாமி போலியா இருந்தாலும், அவருக்கு ஞானம் இல்லாவிட்டாலும் அவர் மூலமா பகவான் இந்த சிஷ்யனுக்கு ஞான அனுக்கிரஹம் செய்துடுவான்.

நாமே தெரிஞ்சு கொள்கிறதைதான் உண்மை என்றும் சாஸ்திரம் சொல்லி அதை ஆசார்யன் தனக்கு சொல்வதை நம்பிக்கையிலேதான் எடுத்துக்கணும் என்று அவ்வளவு திட புத்தி இல்லாமல் இருக்கிறது சிரத்தை இல்லை. அதானே ஆரம்பத்துல சொன்னோம்?
பரம சற்குரு (ஈஸ்வரன்) நூல் (வேத சாத்திரங்கள்) மீது அன்பு பற்றுதலே சிரத்தையாகும்.

சரி, சரி, ஏன் வேத, சாஸ்திரத்துக்கு இவ்வளோ முக்கியத்வம்ன்னா....
வேதங்களும் சாத்திரங்களும் பகவான் ரிஷிகளுக்கு காட்டிக்கொடுத்து இருக்கிற சத்தியம். இதுல ஒரு நம்பிக்கை வேணும். இதுவே சிரத்தை
சிரத்தை என்கிற வார்த்தையை நிருக்தத்திலே பிரிச்சு வேர்ச்சொல் ஆராய்ச்சி செய்கிறபோது ச்ரத், தா என்று ரெண்டு சொல்லாக சொல்கிறாங்க. ச்ரத் = சத்யம். தா = fix செய்வது. ஒரு விஷயத்தில் இதுதான் சத்தியம் என்று மனசை திடப்படுத்துவது. அதான் சிரத்தை.

சாந்தோக்கியத்திலே இப்படிப்பட்ட ச்ரத்தை நாம் மனசில ஆழ்ந்து நினைக்க வேண்டிய, கண்ணுக்கு தெரியாத, தத்தவத்திலே இருந்தாதான் ஒருத்தன் சரியாக அப்படி நினைப்பான். இல்லாதவன் அப்படி நினைக்கவே முடியாது என்கிறது.(4) ¨எப்போது சிரத்தை வைக்கிறானோ அப்போதே சரியாக நினைப்பது¨.

முண்டகோபநிஷத் பாட்டியல் போடுகிறது - யாருக்கு பிரம்ம வித்தையை சொல்லிக்கொடுக்க வேண்டும் என்று. பல யோக்யதைகளில் - க்ரியாவந்தர் (கர்ம அநுஷ்டானமுள்ளவர்) ச்ரோத்திரியன் (வேத பொருளை உணர்ந்தவர்), ப்ரம்மத்தில் நிலை பெறும் தாபம் உள்ளவர் என்று சொல்லி மேலே அது ச்ரத்தையை சொல்லுகிறது. (5) ப்ரச்னோபநிஷத் ஆத்மாவை தேடிப்போகிறவர்கள் தபஸாலும், ப்ரஹ்மசர்யத்தாலும். ச்ரத்தையாலும் வித்யையாலும் தகுதி பெறுவதாக சொல்லுகிறது. (6)

கண்ணனும் ¨சாஸ்திர விதியை மீறி தன் இஷ்டப்படி செய்கிறவனுக்கு சித்தி கிடைக்காது, பர கதியும் கிடைக்காது. அதனால அர்ஜுனா சாஸ்திரத்தையே பிரமாணமா வைத்து கொண்டு என்ன செய்யலாம் என்ன செய்யக்கூடாதுன்னு வழி வகுத்துக்க¨ ன்னு சொல்றார். (7)

1.ச்ரத்தா ச ப்ரஹ்ம விஜ்ஞானே பரமம் ஸாதனம் - ப்ருஹ -அத் 2 முகவுரை.
2.ச்ரத்தாவான் லபதே ஞானம் ப.கீ 4, 39
3.அச்ரத்ததானச்ச சம்சயாத்மா வினச்யதி ப.கீ 4, 40
4.சாந்தோ 7-19-1
5.சாந்தோ 3-2-10
6.ப்ரச்னோ1-10
7.ப.கீ 16 – 23, 24

---

மதியம் புதன், டிசம்பர் 24, 2008

சிரத்தை -3

கொஞ்சம் ரிவிஷன்.

அநித்தியம் எதுன்னு நமக்கு போகப்போக நல்லாவே தெரிகிறது. ஆனா நித்திய வஸ்துவை அனுபவிக்காததால அதைப்பத்தி தெரியாதுதான். ஆத்ம வஸ்துவை பத்தி பெரியவங்க சொன்னதை கேட்டும் புத்தகங்களை படித்தும் ஒரு வழியா ஒரு சின்ன ஐடியா இருக்கும். ஆனாலும் அநித்திய வஸ்துவை பத்தி உறுதியா அனுபவத்திலே தெரிஞ்சுக்கிற அளவு இதை தெரிஞ்சுக்க முடியாது. இருந்தாலும் அநித்தியம்ன்னு தெரியறதை வேண்டாம்ன்னு வெறுத்து தள்ள ஆரம்பிக்கிறோம், இல்லையா? இது வைராக்கியம். அப்புறம் அநித்தியங்களை தேடிப்போக

மனசையும் இந்திரியங்களையும் கட்டிப்போடறோம். - சமம், தமம். நாளடைவிலே வேண்டியது கிடைக்காம ஒருவழியா அலுத்து போய் மனசு அலை பாயறதை நிறுத்திடும். - உபரதி. இங்கேயும் ஆத்மா இல்லாததை அனுபவிக்கிற கஷ்டம் இல்லைனாலும் ஆத்ம சுகம் ஒண்ணுமில்லை. வெளியிருந்து வருகிற சுக துக்கங்களை பொறுத்துக்க பழகுறோம்.- திதிக்ஷா. இப்போகூட ஆத்ம சுகமில்லை. இன்னும் வரலை.

இப்படி ஒரேயடியா ஒண்ணுமேயில்லைன்னு இல்லை. அப்பப்ப வெயில்ல எங்கேயோ மழை பெஞ்சு சிலு சிலுன்னு ஒரு காத்து திடீர்ன்னு அடிக்கிற மாதிரி ஏதோ அனுபவம் கிடைக்கும். அப்பப்ப கொஞ்சம் அதிகமாவும் கிடைக்கலாம். மாறி மாறி வரும். கொஞ்சம் கூட சாம்பிள் இல்லைனா பயல் சாதனையை விட்டுவிட்டுவானோன்னு பகவான் அப்பப்ப போடுகிற பிச்சை அது! ¨இத்தனை காலமும் சாதனை பண்ணி ஒண்ணும் பெரிசா தெரியலையே! சமயத்தில கொஞ்சம் மட்டுமே தெரிந்து கண நேரத்தில அதுவும் ஓடிப்போகிறதே! லட்சியம் எப்ப சித்திக்குமோ! எத்தனை ஜன்மம் ஆகுமோ?¨ ன்னு ஆதங்கம் வரலாம். கடப்பாரையை முழுங்கிட்டு சுக்கு கஷாயம் குடிச்சு இருக்கிறப்ப கடப்பாரையை முழுங்கினது பெரிசா தோணாமல் சுக்கு கஷாயம் குடிச்சது மட்டும் பெரிசா தெரியும்! ஏக்கமும் ஏமாத்தமும் வரும். ஓரளவு திதிக்ஷா இருக்கிறதா நினைச்சு கொண்டு இருக்கும்போது இப்படி சகிக்க முடியாம ஆதங்கம் எப்படி வந்ததுனே தெரியாம வந்துடும். அனுக்கிரஹம் பண்ணுகிற பகவானே இப்படி பரிட்சையும் வெக்கிறதாலேதான் இப்படி நடக்கிறது. அதுக்குத்தான் சாதனையை விட்டுவிடக்கூடாதேன்னு சிரத்தையை வைச்சாங்க.

ச்ரத்தைக்கு லட்சணமா இப்படி சொல்கிறாங்க.

> சாஸ்த்ரஸ்ய குரு வாக்யஸ்ய ஸத்ய புத்த்யாவதாரணா|
> ஸா ச்ரத்தா கதிதா ஸத்பிர்- யயா வஸ்தூபலப்யதே||

வி.சூ 25/26

சாஸ்திரமும் குரு வாக்கியமும் சத்யம் என்று புத்தியால உறுதியா தீர்மானம் செய்வதே சிரத்தை ன்னு சத்துக்களால சொல்லப்பட்டு இருக்கு. இதனால்தான் மெய்ப்பொருள் அடையப்படுகிறது.

இது கொஞ்சம் வித்தியாசமா இருக்குன்னு தெரியறதா?
அதாவது, முன்னாலே என்ன சொன்னோம்? புத்தியை தள்ளி வெச்சுட்டு நம்பிக்கை அடிப்படைல மேலே போகணும்ன்னு சொன்னோம். இப்ப கொஞ்சம் வித்தியாசம். புத்தியாலேயே உறுதி பண்ணிக்க ன்னு சொல்கிறோம். முரண்பாடு மாதிரி இருக்கு இல்லே!
இல்லை, முரண் இல்லை.

புத்தியாலேயே யோசிக்கலாம்.

யோசிச்சு அட நம்மால – புத்தியால- எல்லாத்தையுமே தெரிஞ்சுக்க முடியாது. எல்லத்தையும் ஜட்ஜ் பண்ணவும் முடியாது. கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு. அதுவும் ஆத்ம சம்பந்தமான பல விஷயங்கள் நமக்கு புரிகிறது கஷ்டம். அதில பகவான் தெரியப்பண்ணியும் சொந்த அனுபவத்திலேயும் ஏற்கெனவே தெரிஞ்சு கொண்ட பெரியவங்க சொல்கிறதை அப்படியே எடுத்துகிறதுதான் உசிதம். அதனால் இங்கே நமக்கு வேலை இல்லைன்னு புத்தி புரிஞ்சுக்கணும்.

புத்திக்கு நிறையவே வேலை உண்டே? நித்திய அநித்தியங்களை பகுத்து ஆராயணும். அதுக்கு அவசியமா புத்தி வேணும். மத்தது மனம் என்கிற நிலையை சம்பத்தப்பட்டது. கடைசில இங்கே நமக்கு வேலை இல்லைன்னு புத்திக்கு உறுதியா தெரியணும். வேலையை செய்வதில் சக்தியை காட்டுகிறதைவிட இப்படி காட்டாம இருகிறதுதான் கஷ்டம்! அதுக்கு ரொம்பவே விநயம் வேணும்.

ஒரு அறிவில்லாதவனோட நம்பிக்கையா இல்லாம அறிவோட கூடிய நம்பிக்கையா இருக்கணும். அவ்ளோதான்.

நாரதர் ஒரு முறை மகா விஷ்ணுவை பாக்க போய் கொண்டு இருந்தார். வழில ரெண்டு பேர் மோக்ஷம் வேணும்னு தவம் செய்து கொண்டு இருந்தாங்க. அவங்க நாரதரை பாத்து "எங்கே போறீங்க"ன்னு கேட்டாங்க. "நான் மகா விஷ்ணுவை பாக்கப்போறேன்"ன்னு நாரதர் சொல்ல "அப்படியா! எங்க ரெண்டு பேருக்கும் எப்ப மோக்ஷம் கிடைக்கும்ன்னு கேட்டு வாங்க" அப்படின்னாங்க. "சரி" ன்னு நாரதரும் சொன்னார். திரும்பி வரப்ப நாரதரை பாத்து ரெண்டு பேரும் ஆவலா "பதில் கிடைச்சுதா" ன்னு கேட்டாங்க. நாரதர் விஷ்ணு சொல்லச் சொன்ன பதிலையே சொன்னார். முதல் நபரை பாத்து "உங்களுக்கு இன்னும் 3 ஜன்மா போகணும்" ன்னார். கேட்டவர் "நாராயணா! இன்னும் 3 ஜன்மமா" ன்னு அழ ஆரம்பிச்சுட்டார். ரெண்டாவது நபரை பாத்து "இந்த மரத்திலே நிறைய இலைகள் இருக்கு இல்ல? உங்களுக்கு அத்தனை ஜன்மா போகணும்" ன்னார். கேட்டவரோ "ஆஹா! நிச்சயம் மோக்ஷம் கிடைச்சிடும்" ன்னு டான்ஸ் ஆட ஆரம்பிச்சுட்டார்!

சாதனையால மோக்ஷம் நிச்சயம் என்கிற நம்பிக்கையோட சாதனை பண்ணணும்!

---

மதியம் வியாழன், டிசம்பர் 25, 2008

சமாதானம்

அடுத்து நாம பாக்கப்போறது சமாதானம். இதுவும் ஏறக்குறைய சிரத்தை போலத்தான். அதாவது அசிரத்தையாலயும் சந்தேகத்தாலயும் வருகிறதை எதிர்த்து போராடி ஜெயிக்கிறது. அவநம்பிக்கை இருக்கிற வரை சிரத்தை. அப்புறம் சமாதானம்.
சந்தேகம் தெளிஞ்சு போச்சுன்னா சமாதானம் ஆகிடுவோம்!

ஒத்தரோட சித்தத்தை முழுக்க முழுக்க ஒரே இடத்தில கொண்டு சேத்து வைக்கிறது சமாதானம். சம ஆதானம். சமிதாதானம் ன்னா சமித்தை அக்னியில் கொண்டு சேத்து வைக்கிறது. அது போல சமத்தில சித்தத்தை கொண்டு வைக்கிறது சமாதானம். சமம் - எதிலேயும் ஏற்ற இறக்கம் இல்லாத நிலை. இப்படியும் சொல்லலாம்.

ஆனா இங்கே சொல்ல வருவது பிரம்மத்தில் கொண்டு சித்தத்தை நிலையா வைக்கிறதுதான்.

ஸம்யக் ஆஸ்தாபனம் புத்தே: சுத்தே ப்ரம்ஹணி ஸர்வதா| தத் ஸமாதானம் இத்யுக்தம்
வி.சூ 26/27

ஸம்யக் - சாரியாக, பூர்ணமாக. ஆஸ்தாபனம்= நிலை நாட்டுவது. ஸர்வதா -எப்போதும் சுத்தமான ப்ரம்மத்தில் பூர்ணமாகவும் சரியாகவும் எக்காலமும் நிலைநாட்டுவதாக எது உண்டோ அதுவே ஸமாதானம் என்று சொல்லப்படுகிறது.

ப்ரம்மம் ஒண்ணுதான் மாயை கலப்பு இல்லாதது. எல்லா லோகங்களுக்கு அதுவே ஆதாரம். அது ஒரு சீவனுக்கு ஆதாரமான போது அதை ஆத்மா அல்லது ஜீவாத்மா என்கிறோம். ஈஸ்வரன் கூட மாயையுடன் கூடியவன்தான். மாயையான லோகத்தை நிர்வாகம் பண்ணுகிற அவனுக்கும் மாயை சம்பந்தம் இருக்கு.

அதனாலதான் சுத்த ப்ரம்மம் ன்னு இங்கே சொன்னது. இந்த குணமில்லாத ப்ரம்மத்தில சித்தத்தை நிலை வைக்கிறது சமாதானம். சாதனா ஆரம்பத்திலே அவரவர் சௌகரியத்துக்கு தகுந்தபடி ஈஸ்வரனை மூர்த்தியாக – உருவத்தோட கூடி- உபாசனை பண்ணோம்தான். அதுல சித்தம் நிற்க பழகினோம்தான். ஆனா அது முதல் கட்டம். இப்ப செய்ய வேண்டியது நிர்குண ப்ரமத்தில சித்தம் நிலைக்க வைக்கிறது.

---

ஆனா இவ்வளோ நாள் உருவத்தோட பூஜை எல்லாம் பண்ண நினைப்பு போயிடுமா? போகாது. இருந்தாலும் மாயையிலிருந்து ஞானத்துக்கு போக அறிவை கொடுத்த அனுகிரஹம் பண்ணற சொரூபம் அதுன்னு நினைச்சு அவனே நிர்குணத்தில சேக்கிற வழியை காட்டறானே, ஆதனால் இன்னும் அவனோட நாம ரூபத்த பிடிச்சுகிட்டு தொங்கக்கூடாதுன்னு தெளிவடைஞ்சு ஆத்ம தத்துவத்தில சித்தத்தை திருப்பணும்.

நாம் சித்தம், சித்தம்ன்னு பேசறோம். ஆனா சங்கரர் புத்தின்னு இல்லே சொல்கிறார்? அது வேற நிலைதானே ஒழிய வேற வஸ்து இல்லையே. முன்னேயே பாத்துட்டோம், இல்லை? அலையாம இருக்கணும்ன்னு புத்திங்கிறார். ஸ்திரமா இருக்கிறது அதுதானே? வேற இடத்திலே அவரே சித்தம் என்கிறார். (1)

இங்கே புத்திதான் வேலை செய்யணும். உணர்ச்சியால இழுபடாம சரியா விசாரிச்சு உண்மை பொய் எல்லாத்தையும் உள்ளபடி பாக்கிற புத்தியை அதோட வேலைலேந்து விடுவிச்சு ப்ரம்மத்து பக்கம் திருப்பினாதான் சமாதானம் வரும்.

1. சித்தைகாக்ரியம் து ஸல்லக்ஷ்யே ஸமாதனமிது ஸ்ம்ருதம் - அபரோக்ஷ அனுபூதி.

---

மதியம் வெள்ளி, டிசம்பர் 26, 2008

சமாதானம் -2

ஸ்ரீசங்கரர் "ப்ரஹ்மணி புத்தே: ஸ்தாபனம்" அப்படின்னார்.

பிரம்மத்தில் புத்தியை நிலை நாட்டு.

ஆமாம், இது வரை நாம கேள்வி பட்டதெல்லாம் புத்தியால ஆத்மாவை பிடிக்க முடியாதுன்னுதானே? முன்னுரையிலேயே அப்படி கொஞ்சம் சிரமப்பட்டு சொன்னாப்பல ஞாபகம்!
உண்மைதான். புத்தியால பிடிக்க முடியாதுதான். ஒண்ணுக்கு ரெண்டா உபநிஷத்துக்களிலே (1) ந மேதயா - புத்தி சக்தியால இல்லை- அப்படின்னு சொல்லி இருக்கு.
பின்னே என்ன அர்த்தம்?
இங்கே அவர் முடிவு நிலையான சமாதியை சொல்லலை. அதுக்கு கீழே இருக்கிறதாலதான் சமாதானம் ன்னு சொல்லி இருக்கார்.
புத்தியாலே பிடிக்க முடியாதுன்னா வேற என்னதான் செய்யறது?
அதை வரணம் செய்யணும்.
வரணம்?

கல்யாணத்துக்கு வரன் தேடறோம். வரன் = சிறந்தவன். இப்படி ஒரு அர்த்தம். இன்னும் ஒண்ணு பல பேரிலே தேர்ந்து எடுக்கப்பட்டவன். சூஸ்! அதான். ஸ்வயம்வரம். அந்த காலத்து ராஜ குமாரிகள் தன் கணவனை தேர்ந்து எடுத்தாங்க. இப்படி செய்கிறதுதான் வரணம். குரு சிஷ்யனை தேர்ந்து எடுக்கிறது சிஷ்ய வரணம். சிஷ்யன் நமக்கு குரு யார்ன்னு தேடி தேர்ந்து எடுக்கிறது குரு வரணம்.

இதே போல பலதையும் தள்ளிவிட்டு ஆத்மாவையே தேர்ந்து எடுத்து "நீயே உன்னை தெரிவிச்சுக்க. என்னதான் நான்தான் நீ; நீதான் நான்னு இருந்தாலும் அறியாமையால அது எனக்கு பிடிபடலை. என் மனசு, வாக்கு, புத்தியால உன்னை பிடிக்க முடியலை. அதனால் நீயேதான் உன்னை காட்டிக்கணும்" ன்னு பிரார்த்தனை செய்யணும். இப்படி செய்து கொண்டே இருந்தா ஒரு நாள் திடீர்ன்னு அது பளிச்சுன்னு வெளியாகிடுமாம். பிரார்த்தனை செய்தவன் புத்தி, மனசு, வாக்கு எல்லாத்தையும் அவனதுன்னு இல்லாம ஆக்கி இவன் ஆத்ம சொரூபமாகவே சுய அனுபூதி பெறப்பண்ணிடும். அது விவரணம். வரணம் செய்தவனுக்கு கிடைக்கிறது விவரணம்! அதாவது மூடி இருப்பதை திறந்து விடுகிறது. *Revelation!*

திருப்பி கேள்விக்கு வரலாம். இப்படி புத்தியால முடியாது என்கிறத தெரிஞ்சு இருக்கிறப்ப புத்தியை ப்ரம்மத்தில பொருத்துன்னா என்ன அர்த்தம்?

ப்ரம்மத்தை பத்தி வேத சாஸ்திரங்களிலே சொல்லி இருக்கிறதிலேயும் குரு சொன்னதிலேயும் உன் புத்தியை ஒரே சிந்தனையா பதிய வை.

புத்தியை ப்ரம்மத்திலேயே முழுக்க முழுக்க முழுக விடுகிறது சமாதி. அது அப்புறம் வரது. இப்ப ப்ரம்ஹணி (மானஸ சஞ்சரரே ஞாபகம் வருதா? மானஸ சஞ்சரரே... ப்ரஹ்மணி...மானஸ சஞ்சரரே. -பிரம்மத்தில் - பிரம்மத்தை பத்திய விஷயங்களில்.
இதில் புத்தியை பொருத்து. இதுக்கு முன்னாலே நாம் பாத்தது சிரத்தை இல்லையா? பரம சற்குரு (ஈஸ்வரன்) நூல் (வேத சாத்திரங்கள்) மீது அன்பு பற்றுதலே சிரத்தையாகும். ஞாபகம் இருக்கு இல்லே?

இப்ப அதோட தர்க்கரீதியான தொடர்ச்சியா சத் குரு சொன்னது மேலேயும் நூல்கள்ல இருக்கிறதிலேயும் புத்தியை பொருத்தச் சொல்லறாங்க.

ப்ரம்மத்தோட அனுபவம் வரது பின்னால. இப்போதைக்கு அதைப்பத்தி புத்தி வழியா என்னவெல்லாம் தெரிஞ்சுக்க முடியுமோ அதெல்லாம் தெரிஞ்சுக்கணும். அப்படியும் அது போல ப்ரம்மம் இருக்காது!

அட, பின்ன என்ன பிரயோசனம்?

ஒருத்தனுக்கு ஆனை பத்தி ஒண்ணுமே தெரியாது (பாவம்!) பாத்ததே இல்லை. (ரொம்ப பாவம்!) அவனுக்கு "இப்படி இப்படி இருக்கும்; இப்படி இப்படி இருக்காது"ன்னு சொன்னாலும் சரியான கற்பனை வர முடியாது. ஆனா இப்படி கொஞ்சம் புத்தியால தெரிஞ்சு கொண்ட பிறகு எங்கேயாவது ஆனையை பாத்தா ஓ, இதுதான் ஆனை ன்னு உடனே புரிஞ்சுடும்!

அப்படித்தான் இப்ப இந்த புத்தி இன்னும் ஒழிஞ்சு போகாததாலே அதுக்கு ஏதும் நல்ல தீனி போடணும்ன்னு அதை "ப்ரம்மத்தை சுத்தியே கிட" ன்னு சொல்லறது!

(1) கடோபநிஷத் 2-23; முண்டகோபநிஷத் 3- 2.3

---

மதியம் திங்கள், டிசம்பர் 29, 2008
சமாதானத்தில் இன்னும் ஒண்ணே ஒண்ணு...
சமாதானத்தில் இன்னும் ஒண்ணே ஒண்ணு பாக்கி இருக்கு.
முன்ன சொன்ன ஸ்லோகம் முடியலை, பாதில நிக்குது, இல்லையா?

ஸம்யக் ஆஸ்தாபனம் புத்தே: சுத்தே ப்ரம்ஹணி ஸர்வதா| தத் ஸமாதானம் இத்யுக்தம் ந து சித்தஸ்ய லாலநம்.
வி.சூ 26/27
அது என்ன "ந து சித்தஸ்ய லாலநம்"? சித்தத்துக்கு செல்லம் கொடுக்கிறது இல்லை.

அடம் பிடிக்கற குழந்தையை மிட்டாய் தரேன் என்கிறாப்பல தாஜா பண்ணி காரியத்தை செய்ய வைக்கிறது போல, சாதகனுக்கும் ஆரம்ப நிலைகள்ல கொஞ்சம் சலுகை கொடுத்து முன்னேற தூண்டுகிறது உண்டு. அது முடியலையா, பரவாயில்லை; இத பண்ணு என்கிறது போல. எடுத்த எடுப்பில ப்ரம்மத்துக்கு உருவம் இல்லை, உருவம் இல்லாமலே பக்தி பண்ணுன்னு சொல்லாம ஆனை, பூனைன்னு எப்படி வேணுமானா வெச்சுக்க, பக்தி பண்ணு சொன்னது போல. அது ஆரம்ப நிலை. இப்ப இன்னும் முன்னேறியாச்சு. போகப்போக கன்செஷன் கம்மி, அப்புறம் இல்லவே இல்லை. அப்படி இப்ப புத்தியை நிலை நாட்டறதுல சலுகை ஒண்ணும் இல்லை என்கிறார் சங்கரர். நிர்குணமான வஸ்துலதான் புத்தியை வைக்கணும் என்கிறார். அட, இதெல்லாம் நமக்கு வராதேன்னா...

இப்ப வராதுதான். பொறுமை வேணும். ஆத்ம முன்னேற்றம் பல ஜன்மங்கள்ல நடக்கிற விஷயம். எல்லாருக்கும் திடுதிப்புன்னு வந்துடாது. ஒவ்வொரு ஜன்மத்திலேயும் முன்னே விட்ட இடத்துலேந்து தொடருவோம். அதனால கவலை வேணாம்.
அதானால இப்ப நாம செய்கிறது புத்தி பூர்வமா இது எல்லாம் என்னன்னு தெரிஞ்சுகிறதுதான். சாதனையில போகப்போக அனுபவம் ஏற்படும்.

ஆக நிர்குணமான சுத்தமான ப்ரம்மத்தில் பூர்ணமாகவும் சரியாகவும் எக்காலமும் நிலைநாட்டுவதாக எது உண்டோ அதுவே ஸமாதானம் என்று சொல்லப்படுகிறது.
--
ஆக சமாதி ஷட்சம்பத்தில ஆறும் முடிஞ்சது.

அடுத்த நிலை முமுக்ஷுத்வம். மோக்ஷத்தை தீவிரமா விரும்பறது. இந்த விருப்பம் நிறைவேறினா கிடைச்சா அவன் முக்தன்.

அட, எல்லாருக்கும்தான் மோக்ஷம் வேணும் என்கிறதுல விருப்பம் இருக்கும்.

அப்படியா? ஆச்சரியம் என்னன்னா, அதுதான் இல்லை.

நான் இந்த வழிக்கு வந்த புதிசில ஒரு சிருங்கேரி சங்கர மடத்து சன்னியாசி ஒத்தரை பார்த்து பேசிக்கொண்டு இருந்தேன். இப்ப நான் எழுதற சமாசாரம் எல்லாம் அப்பதான் படிக்க ஆரம்பிச்சு இருந்தேன். படிச்சு புரியறதைவிட கேட்டுக்கலாமேன்னு நிறைய கேள்விகள் கேக்க ஆரம்பிச்சேன். அவரும் சளைக்காம பதில் சொல்ல ஆரம்பிச்சார். இப்படியே போகிற போது ஒரு இடத்திலே "சாதாரணமா மக்கள் மோக்ஷத்தை விரும்ப மாட்டாங்க" ன்னார். எனக்கு ஆச்சரியமா போச்சு. "ஏன், இதோ நான் கேக்கிறேனே?" ன்னேன். "அட! உன்னை பாத்து அப்பலேந்து ஆச்சரியப்பட்டு கொண்டு இருக்கேன்பா! இவ்வளவு வருஷத்தில என்கிட்ட சிஷ்யர்கள் தவிர யாரும் இப்படி இந்த விஷயத்திலே கேள்வி கேட்டதே இல்லை" ன்னார். அப்புறம் உலகத்தை கொஞ்சம் கூர்ந்து பாத்ததிலே அது உண்மைதான்னு தெரிஞ்சது.

"ஏன் இந்த பதிவுகளை படிச்சுட்டே எவ்வளோ பேர் து.கா து.கா ன்னு ஓடறாங்க!" அப்படின்னு யாரோ சொல்கிறது காதில விழுது!

> மனுஷ ஜன்மம் கிடைக்கிறதே பெரிசு. அதிலும் ஆன்மீக நாட்டம் இருக்கற சூழ்நிலைல பிறக்கறது இன்னும் பெரிசு. ஆதிலும் ஆன்மீக ஈர்ப்பு இருக்கிறது பெரிசு. அதிலும் வெறும் ஈர்ப்போட நின்னுவிடாம சாதனா செய்யணும்ன்னு ஒரு நினைப்பு வறதும் அதில ஈடு படறதும் ரொம்ப பெரிசு! ஆத்ம ஞானத்துக்கு எல்லாத்தையும் த்யாகம் செய்யறது ரொம்ப ரொம்ப பெரிசு!

குறிப்பா மேல் நாட்டு மக்களுக்கு இது அதிர்ச்சி தரதாவே இருக்கு. தன்னோட சுய அடையாளத்தை இழக்கணும்னா வெல வெலத்து போயிடறாங்க! அதுக்கு நான் ரெடி இல்லேன்னே சுத்தமா சொல்லிடறாங்க. ஒரு போலந்து நாட்டு பெண்மணியோட மடலாடிகிட்டு இருந்தேன். இந்தியா பத்தின விஷயங்களை அவங்க ரொம்ப ஆர்வமா கேட்டுகிட்டே வந்தாங்க. கடேசில இந்த பிலாசபி தான் அவங்களுக்கு பிடி படலே!
அது எப்படி தான் என்கிறதை விட்டுக்கொடுக்க முடியும்?

தான் என்கிற பொய் தோற்றத்தை விட்டுட்டு தான் உண்மையில யார் ன்னு தெரிஞ்சுக்கணும். அப்படி புரிஞ்சா அந்த "தான்" தானா இருக்காது. இன்னும் பரந்து விரிந்து போயிடும்!

---

மதியம் செவ்வாய், டிசம்பர் 30, 2008

முமுக்ஷு

சாதகன் தயா நிதே ன்னு கூப்ட்டு இந்த சம்சார பந்தத்திலேந்து எப்பப்பா எனக்கு விமோசனம் கிடைக்கும்ன்னு கதறுகிறானாம். இப்படிப்பட்ட நிலை முமுக்ஷுத்வம். (1)

சர்வ சாதாரணமா பாக்கிறோம் ஒரு விஷயம். நிறைய கடன், பிரச்சினைகள், துக்கம், நோய் இப்படி சில காரணங்களால மனசு வெறுத்துபோய் போதும்பா இந்த வாழ்க்கை, அப்படின்னு சம்சாரத்திலேந்து விடுதலை கேக்கிறதை இங்க சேக்க முடியாது. ஓரளவு சுக ஜீவனம் இருக்கும்போது கூட அல்லது கஷ்டங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதை ஒரு பொருட்டா நினைக்காம இதெல்லாம் மாயைதான். இதிலேந்து விடுபடணும்னு நினைக்கணும். இதுதான் நல்ல திடமான புத்தி. அப்பதான் அதை முமுக்ஷுத்வமா ஏத்துக்கலாம்.

எவ்வளோ சுகமா தோணினாலும் இது மாயை இதை நீக்கணும்ன்னு தீர்மானமா ஒரே தாபமா இருக்கணும். அதே சமயத்திலே ஸத்தியமான அனுபவம் வரனும்ன்னு தவிப்பு இருக்கணும். பொதுவா இந்த பேசறப்ப சத்திய அனுபவத்துக்கு அவ்வளவு முக்கியத்துவம் தரதில்லே. மாயையிலிருந்து முக்தி- விடுதலைதான் - வீடுதான் -முக்கியமா படுது.

ஏன் ஸத்யமான அனுபவத்தை கண்டுக்கலே?

ஏன்னா அதை விவரிக்க வார்த்தைகளே கிடையாது. வார்த்தைகளுக்கு எட்டாத விஷயம். எப்பவும் ஜீவன் பிரம்மமாதான் இருக்கான், மாயைதான் அதை உணராம கட்டிப்போடுது. கட்டு போச்சுன்னா தானா ப்ரம்ம அனுபவம் கிடைச்சுடும்.

ம்ம்ம்...விவேக சூடாமணியிலேயும் என்ன சொல்லறாங்கன்னு ஒரு பார்வை பாத்துடலாம். (2)

அஞ்ஞானம் என்பதுதான் மாயை. இந்த மாயையால்தான் பரமாத்மாவுக்கு அன்னியமா ¨நான்¨ ன்னு ஒண்ணு தோணுது. அதுதான் அஹங்காரம். சூக்குமமா இருக்கிற இந்த அஹங்காரத்தில் இருந்து தூலமான தேகம் வரை இது விரிஞ்சு கட்டிப்போட்டு இருக்கு. இதுதான் முதல் வரிக்கு பொருள். இதிலேந்து விடுபடணும் என்கிற இச்சை -ஆசையே முமுக்ஷுதா. முடிவான நிலை என்ன?

பந்தம் மட்டும் போனால் போதும். அப்புறமா கல் மண் மாதிரி எப்படி வேண்ணா இருக்கலாம். என்கிறது இல்லை. தன் உண்மையான தன்மையான ஆத்மாவை குறித்து ஞானம் பெறுவது. இதனால முக்தி கிடைக்கணும் என்கிறார்.

அஞ்ஞானம் போகிறதும் ஞானம் வருகிறதும் ஒரே நேரத்திலே நடக்கிற விஷயம்தான். தீக்குச்சியை உரசி பத்த வெச்சா இருட்டு முதல்ல போகுமா இல்லை வெளிச்சம் முதல்ல வருமா என்கிறது போல.

முமுக்ஷுக்கு நல்ல உதாரணமா புத்தரை சொல்லறாங்க. அவர் போதி மரத்தடில உக்காரும் முன் சொன்னதா ஒரு வாசகம் சொல்லராங்க. ¨இந்த ஆசனத்திலேயே இந்த உடம்பு வத்தி சுக்கா போகட்டும்; தோலும், எலும்பும் மாமிசமும் நசிந்தே போகட்டும்; போதம் (ஞானம்) பெறாம - எத்தனையோ கல்ப காலம் ஆகும்னாலும் சரி, - இந்த இடத்தை விட்டு இந்த உடம்பு நகராதாக்கும்.¨

1. ஸம்சார பந்த நிர்முக்தி: கதம் ஸ்யாந் மே தயாநிதே|
இதி யா ஸுத்ருடா புத்திர் - வக்தவ்யா ஸா முமுக்ஷுதா||

- அபரோக்ஷ அனுபூதி

2.அஹங்காராதி தேஹாந்தான் பந்தான் - அஜ்ஞாந கல்பிதான் |
ஸ்வஸ்வரூபாவபோதேந மோக்துமிச்சா முக்ஷுதா ||

மதியம் வியாழன், ஜனவரி 1, 2009

குரு

ஞானிகள் தங்கள் அனுபவத்தை எப்படி சொல்கிறார்கள்ன்னு பாத்தா ஆத்ம விசாரம் பண்ணி கொண்டே போனதாயும் பட்ன்னு ஆத்மா பிரகாசித்து விட்டதாயும் இருக்கும்.
எப்படியானாலும் சாதகனோட ஒரே லட்சியம் ஆத்ம சாக்ஷாத்காரம்தான். அதுக்காக அவன் சதா ஆனந்தத்துல இருந்துண்டு மஹா வாக்கியங்களை எப்பவும் தியானம் செய்து கொண்டே இருப்பான். அப்படி இருப்பதாலேயே அந்த வாக்கியங்கள் சொல்ற நிலையை அனுபவிச்சுடுவான். அதுதான் "ஸ்வ ஸ்வரூப அவபோதேந மோக்ஷம்" (அவபோதம் =விழிப்பு)

இதெல்லாம் படிச்சுட்டு "அடடா, நமக்கு இவ்வளோ தீவிரமெல்லாம் வராதே" ன்னு நாம நினைக்கலாம்.

கவலையே வேண்டாம். அவ்வளோ தீவிரம் இல்லாதவங்களையும் உற்சாகப்படுத்தற மாதிரி மந்த மத்திய நிலை முமுக்ஷுக்கள் ன்னு பிரிச்சு சொல்கிறாங்க.

உத்தம அதிகாரிங்கிற தீவிர முமுக்ஷுதான் சிறந்தவன்; அவன் எல்லாவத்தையும் தள்ளி ஆத்ம நாட்டத்திலேயே இருப்பான் - அப்படின்னாலும், அடிநிலையிலே இருக்கிறவன் கூட ஒரு நாட்டம் வெச்சுதானே இதுல இறங்கி இருக்கான்? அதனால அவனைப்பத்தியும் சங்கரர் அக்கறைப்படுறார். கொஞ்சம் சாதனை அவன் செய்ததுமே இன்னும் கொஞ்சம் பக்குவம் வந்து இந்த வாழ்க்கை மாயைன்னு தெரிஞ்சு கொஞ்சம் தீவிரம் வரும். இப்பவும் இதிலேயே நிலையா இல்லாம சித்தம் அலை பாஞ்சாலும் ஆரம்பத்தில இருந்ததை விட இப்ப கொஞ்சம் அதிக நேரம் சித்தம் பிரம்மத்தில நிக்கும். ஆனா மாயை விடுமா? ச்சே, நமக்காவது மகா பெரிசான மோக்ஷம் கிடைக்கிறதாவதுன்னு நம்பிக்கை போயிடறதும் உண்டு.

இப்படி பட்டவங்களைப்பாத்து சங்கரர் கருணையோட சொல்கிறார் "அப்பா அழாதே! குரு பிரசாதம் இருந்தா எதுவும் நடக்கும். ஆனா நீயும் அதுக்கு தகுந்தவனா ஆக முடிஞ்சவரை வைராக்கியத்தை கடை பிடி. சமம் முதலான ஆறையும் பயிற்சி பண்ணு. அப்படி செஞ்சா உன் முமுக்ஷுத்வம் முன்னே பின்னே இருந்தாலும் குருவோட அனுகிரஹத்துல அது நல்லா வளந்துடும்." (1)

குரு கிருபை இங்கே மட்டும்ன்னு இல்லே. ஒவ்வொரு படியிலேயும் அவரோட கிருபை இருந்தா எல்லா சுலபமா முன்னேறும். தானா முன்னேறினாலும் அவரோட ஆசீர்வாத பலத்திலேதான் அது முழுமை ஆகணும். பாவம் இந்த பயல் ரொம்பதான் சிரத்தையா முயற்சி செய்யறான்; ஆனா தடை இருக்கேன்னு கருணையோட அந்த தடைகளை அவர் நீக்கிதான் ஒருத்தன் அடுத்த படிக்கு போவது.

முன்னேயே பாத்த மாதிரி மூணாவது படியிலேதான் குருகிட்ட முழு சரணாகதியும் அவரோட முழு அனுகிரஹமும் அவசியம்.

முன் படிகள்ள நாமே சரி பண்ணிக்கலாம் என்கிற ரீதியிலே சில தப்புகள் இந்திரிய விஷயங்களிலே இருக்கலாம். அங்க கொஞ்சம் நீக்கு போக்கு இருக்கு. ஆனா முமுக்ஷுதவம் வந்த பின் சன்னியாசம் வாங்கிக்கொண்டு மகா வாக்கிய உபதேசம் வாங்கிக்கொண்ட பின்னே அப்படி இருக்க முடியாது. கொஞ்சம் தவறினாலும் ரொம்ப பெரிய குற்றம் ஆகிடும். சாதனா வழியிலேயே ரயில் சக்கரம் கொஞ்சம் கூட இப்படி அப்படி போகாம இருக்கிறது போல சீரா முன்னே போகணும். அதுக்கு குரு கிருபை ரொம்பவே அவசியம்.

1. மந்த-மத்யம ரூபாபி வைராக்யேண சமாதிநா|
ப்ரஸாதேன குரோ; ஸேயம் ப்ரவ்ருத்தா ஸூயதே பலம்||

"புலியின் வாய்ப்பட்ட மான் மீள முடியாதது போல், சற்குருவின் அருள் ஞானப் பார்வையில்

அகப்பட்டோர் அற்பத் தன்மையான அகந்தை இயல்பு அழிக்கப்பட்டுக் கைவல்ய நிலை பெறுவரேயன்றி, ஒருக்காலும் கைவிடப்படவே மாட்டார் என்று உறுதியாய் உணர்க." - குருவாசகக் கோவை, 284

---

மதியம் வெள்ளி, ஜனவரி 2, 2009

அடுத்த படி?

இதுவரை விவேக சூடாமணியை ஒட்டி சங்கரர் கொடுத்த கிரமத்திலே விஷயங்களை தெய்வத்தின் குரல் சொல்லிக்கொண்டு போனதை நம்ம நடையிலே பாத்துகொண்டு இருக்கிறோம். இங்கே முதல் படியா சங்கரர் சொல்வது பக்தி/ கர்மா செய்து நம்மோட மனசிலேந்து அழுக்கையும் தடுமாட்டத்தையும் போக்கி கொள்வது; இரண்டாவதா சாதனா சதுஷ்டயம் என்கிறது. சாதனா சதுஷ்டயத்திலே ஆத்ம நாட்டமா முமுக்ஷுவா கொண்டுவிடப்படுவாங்க. அடுத்து மூணாவது படிக்கு சன்னியாசம் வாங்கிக்கொண்டு மகா வாக்கிய உபதேசம் வாங்கிக்கொண்டு பரீட்சைக்கு போகணும்! [சன்னியாசம் முக்கியமா மனசிலே இருக்குன்னு முன்னேயே பாத்து இருக்கோம்] நாம இந்த இடத்தை இப்ப பாத்துகிட்டு இருக்கோம்.

குருவோட பங்கைப்பத்தி இப்ப இங்கே மேலும் எழுதப்போறதில்லை. ஆரம்பிச்சா அதுவே பல பதிவுகள் இழுத்துக்கொண்டு போயிடும்.
அதனால குரு இல்லாம இந்த படிகள் ஒண்ணு கூட சாத்தியமாகாதுன்னு திருப்பியும் சொல்லி அதோட குறிப்பா குருவைப்பத்தி சொல்லுவதை இப்போதைக்கு நிறுத்திக்கறோம்.

சன்னியாசம் வாங்கிண்ட முமுக்ஷுவான சாதகன் அடுத்து என்ன செய்யணும்?
சிரவணம், மனனம், நிதித்யாசனம் அப்படின்னு சொல்லுவாங்க. இதை எதிர்பாத்தா சங்கரர் பக்தின்னு சொல்லி திடீர்ன்னு ஒரே போடா போட்டு ஒரு திருப்பத்தை கொண்டுவரார்! மேலே ஆச்சரியமா இதுதான் முக்கியமான உபகரணம்ன்னு வேற சொல்கிறார். (1)

சாதாரணமா கொஞ்சம் ஆன்மீகத்திலே முன்னாலே போனவங்களுக்கு பக்தி மேலே ஒரு சின்ன இளப்பம் மனசுக்குள்ள ஒளிஞ்சுண்டு இருக்கும்! அதெல்லாம் ஏதோ மந்த சாதகர்களுக்குன்னு நினைப்பு! அவங்களுக்கு புத்தி புகட்டுறாப்பலே இங்கே ரொம்ப மேலே போன சாதகனுக்கு இதை பரிந்துரைக்கிறார்!

ஆனா இது முன்னே பாத்த பக்தின்னு சொல்ல முடியாது. இது கொஞ்சம் மேல் மட்டம். இதுக்கும் மேலே இருக்கிற மட்டத்தில அத்வைத சித்தியே அடைஞ்ச ஞானி செய்கிற பக்தி. அது ஏன், எப்படி என்கிறதெல்லாம் அவனுக்கும் பகவானுக்கும் இடையிலே இருக்கிற ரகசியம். நமக்கு தெரியாது! இப்ப பாக்கிற மேல் மட்டத்திலே .....

உருவமில்லா பரமாத்மாவை ஒரு உருவம் கொடுத்து நாம அன்பு செய்வது என்பதே பொதுவா நாம பக்தி பத்தி தெரிஞ்சு வெச்சு இருக்கிறது.
இந்த மட்டத்தில அப்படி ஒரு குணத்தோட நினைக்காம அருவமாவே கருதி அப்பவும் அன்பு செய்ய பழகணும். அதில தேறணும்.
நமக்கு இது முடியவே முடியாதுன்னு தோணும். ஆனா முமுக்ஷுவுக்கு இது முடியும் ன்னு சொல்கிறாங்க.
நாம பாக்கிற சாமிக்கு ஏதோ நம்மை கவர்ந்த குணம் ஒண்ணு இருக்கும். ஆனையாட்டம் ரூபம், இல்லை சிவன் போல சுலபமா சந்தோஷப்பட்டு வரம் தர குணம், கண்ணனோட லீலைகள் மாதிரி - இப்படி ஏதோ ஒண்ணு இருந்தாதான் நாம அதில லயிச்சு உருகி பக்தி செய்ய முடியுது. இப்படி காரணம் எதுவும் இல்லாம தானாவே சுபாவமா அன்பு செய்யவும் முடியுமே! இதைத்தான் சொல்கிறாங்க.

1. மோக்ஷ காரண ஸாமக்ரீயாம் பக்திரேவ கரீயஸீ|
ஸ்வஸ்வரூபானுஸந்தாநம் பக்திரித்யபிதீயதே||

---

மதியம் திங்கள், ஜனவரி 5, 2009

மேலும் பக்தி

பக்தி என்பது என்ன? அன்புதான். அம்மாவுக்கு குழந்தையிடம் இருப்பது வாத்ஸல்யம். புருஷனிடம் இருப்பது காதல். இப்படி பலவிதமா இருக்கிற அன்பிலே பகவானிடம் உள்ள அன்பே பக்தி. கண்ணுக்கு அழகாக இருக்கிற கடவுள் விக்கிரஹம் அதன் மேல அன்பை காட்ட உதவுது. அரங்கன் கண்ணை கண்டு மயங்கினவர் உண்டல்லவா? (பூரி ஜகன்நாத் போய் அங்கே தரிசனம் செய்த பிறகு இந்த வடக்கத்தியர்களுக்குத்தான் உண்மையிலேயே நல்ல பக்தி என்று நினைத்துக்கொண்டேன். பொதுவா வட இந்திய மூர்த்திகளுக்கு அழகான உருவம் அமைவது துர்லபமே. அந்த சிற்பக்கலை எல்லாம் தென் இந்தியாவில்தான். அல்லது முகலாய படையெடுப்பில் எல்லாம் போய்விட்டதோ என்னவோ? இப்போது இல்லை. ஆனால் அவர்களுக்கு பக்தியில் ஒண்ணும் குறைச்சலில்லை.)

அதே போல அவனுக்கு சாத்துகிற சந்தனத்தின் வாசனை - இப்படி புலன்களுக்கு எல்லாம் இடம் கொடுத்து அவற்றை பகவான் பால் திருப்பி விடுகிறதே இந்த பக்திதான். இது கொஞ்சம் சுலபமா முடிவதில ஆச்சரியம் இல்லை.

ஆனா இன்னும் பண்பட்ட பிறகு ஒரு குணமும் இல்லாத வஸ்து மேலே அன்பு வைன்னா... எதுகிட்டே நல்ல வடிவம், அழகு, குணம், லீலை எல்லாம் இருக்கோ அந்த அதுகிட்டே சுபாவமா ஒரு அன்பு உருவாக முடியும். இதை சாதிக்க முடியலைன்னா எல்லா சாதனையும் அகங்காரத்திலே போய் முட்டி நின்னு போயிடும். நான் அல்லவோ புலன்களை கட்டிப்போட்டேன்; மனசை கட்டிப்போட்டேன்; சமநிலை பெற்றேன்! இதனால மோக்ஷ நிலை தள்ளிப்போகும்.

ஒரே பரமாத்மாதான் இத்தனை உருவங்களோட வந்திருக்கு. பலதா காட்டறதாலதான் இந்த உலகம் யூனிவெர்ஸ்- பிரபஞ்சம்- எல்லாம் மாய வினோதமா காட்சி கொடுக்குது. இந்த விஷயங்கள் அத்தனைகிட்டேயும் காட்டுகிற அன்பு பகவான்கிட்ட காட்டுகிற அன்புதான். பொதுவா ஆசைபட்டு மத்ததுகிட்டே இருந்து ஒண்ணை வாங்கிக்கொண்டு லாபம் அடைவோம். இங்கேயோ நம்மை மத்ததுகிட்டே கொடுத்து லாபம் அடைகிறோம். அது அன்பு. இதுவே அன்புக்கும் ஆசைக்கும் வேறுபாடு. ஆசையால வாங்கி லாபம். அன்பால கொடுத்து லாபம். மத்ததுகிட்டே நமக்கு கொடுக்க ஒண்ணும் இல்லைன்னா அது மேலே பற்று உண்டாகாது. தண்ணி கொடுக்காத கிணறு மேலே பற்று இல்லை. தூர்த்துடுவோம். பழமோ நிழலோ தராத மரம் மேலே பற்று இல்லை. வெட்டிவிடுவோம். இதெல்லாம் இருக்கும்போது அவற்றின் மேலே பற்று இருக்கும். அது ஆசை; அன்புன்னு நாம தப்பா நினைத்து கொண்டு இருக்கலாம்.

அன்பு உண்மையா இருந்தா ஒரு பிரதிபலனும் இல்லாம அதன் மேலே பற்று இருக்கணும். அதுக்கு கொடுக்கணும். எல்லாம் இருக்கிற பகவானுக்கு நாம் என்னதான் கொடுக்கமுடியும்? நம்மையேதான் கொடுக்கணும். இப்படி இருக்கிற நிலையிலே அந்தகரணம் உசந்த நிலையிலே இருக்கும். மனசாவோ புத்தியாவோ இருக்காது. இப்படி அன்பு சுரக்கிற அந்தக்கரணத்தை ஹ்ருதயம் ன்னு சொல்கிறதும் உண்டு.

சாதனையால மனசும் புத்தியும் இயங்காம போயாச்சுன்னா இந்த ஹ்ருதயமே அந்தக்கரணத்தோட நிரந்தர நிலையா போயிடும்.

இந்த ஹ்ருதயம் மனிதனோட உடல்ல இருக்கறது இல்லை. ஸுஷும்னா நாடில இருக்கிற அநாஹத சக்கரமும் இல்லை. இது உண்மையாவே ஆத்மாவுடைய இடம்.

என்ன குழப்பம்? ஆத்மா எல்லா இடத்திலேயும் பரவி இருக்கிறது இல்லையோ?

ஆமாம். அத்வைத பாவனை வந்தாச்சுன்னா அப்படித்தான். ஆனா நாம் இருக்கிறதோ த்வைத

பாவனைதான். அதாவது நாம் வேற: இந்த உலகம் வெவ்வேற; கடவுள் வேற; இப்படித்தான் சாதாரணமா இருக்கோம். எல்லாத்தையும் ஒண்ணா பாக்க இன்னும் தெரிஞ்சு கொள்ளலே! இந்த நிலையில இருந்துகிட்டுதான் அத்வைத பாவனையை கொண்டு வர முயற்சி பண்ணுவோம். அப்போ வெளியே இருந்து உள்ளே பார்வையை இழுத்து நிலை நாட்ட ஏதோ ஒரு புள்ளி வேணுமே? அதனால்தான் உருவம், குணம்ன்னு கற்பனை இல்லாவிட்டாலும் பரமாத்மாவுக்கு ஒரு இடத்தை மனிதனோட உடம்பிலே கொடுத்து இருக்கு!

---

மதியம் செவ்வாய், ஜனவரி 6, 2009

மேலும் பக்தி 2

இப்படி பரம கருணையோட ப்ரம்மத்தில் ஃபோகஸ் (focus) செய்ய ஒரு புள்ளியை கொடுத்து வெச்சு இருக்கிறது அந்த பகவான்தான். தான் ஜீவன் என்கிற நினைப்பு உண்டாகி வெளிவந்து விரிவடைகிறது இந்த புள்ளியிலே இருந்துதான். இதே புள்ளியிலேதான் ¨தான்¨ போய் ப்ரம்மத்தில் லயமடைகிறதும் (involution). நாராயண சூக்தத்திலே இதைப்பத்தி சொல்லி இருக்கு. இது நீவாரம் என்கிற செந்நெல்லுடைய கூரான நுனி போல மிகவும் நுட்பமானதாம். தலைகீழா இருக்கிற தாமரைமொக்கு மாதிரியாம் ஹ்ருதயம். அதன் கூம்பின நுனியில் சூக்குமமான துவாரம். அதிலிருந்து உடம்பு முழுக்க பரவுகிற ஒரு உயிர் சக்தியான அக்னி. அதன் நடுவிலே அணு அளவான ஜ்வாலை -தீக்கொழுந்து. இது மின்னல் கொடி போல நுண்ணியது. இது செந்நெல் போல முடியும் இடத்திலே பரமாத்மா உறைகிறது.

இந்த இடத்துக்கு தஹ்ரம் என்றும் அம்பலம் என்றும் சொல்கிறார்கள். அதெப்படி இத்தனை சின்ன இடத்தில் பரமாத்மா இருக்கு என்றால், அப்படித்தான்! அது பரப்ரம்மம். என்ன வேணுமானாலும் செய்ய முடியும்.

தனி மரம் போல இருக்கிறது வியக்தி. காடு போல இருக்கிறது சமஷ்டி.

மனிதன் தனி- வியக்தின்னா சமஷ்டியாக இருக்கிற பரந்து விரிந்த உலகத்துக்கு அப்படிப்பட்ட இடமாதான் சிதம்பரம் இருக்கு. அது ரகசியமாக இருக்கு. அதனால் அது ஆகாச தத்துவம் என்கிறார்கள். ஞான ஆகாசம். இதுதான் சித் அம்பரம். (அம்பரம் என்பது சம்ஸ்கிருத சொல். ஆகாசம் என்றும் வஸ்திரம் என்றும் பொருள். அம்பலம் என்கிற தமிழ் சொல்லுக்குத்தான் ஆகாசம், சபை என்று பொருள். தமிழ்ல சிற்றம்பலம்- அம்பரம் என்பது அம்பலம் என்று ஆகி இருக்கலாம். அம்பலத்துக்கு சபை என்ற பொருள் இருக்கிறதால சித் சபை ன்னு வந்து இருக்கலாம்.) இது போலதான் மனிதன் உள்ளே ஒரு சின்ன இடம் அத்தனையும் உள்ளடக்கி இருக்கு.

சயன்ஸ் துணை கொண்டு பாக்கிறவங்க இதை ஒரு portel ன்னு நினைச்சு பாருங்க. இது வழியா ஜீவனும் பரம்பொருளும் ஒண்ணுக்கொண்ணு தொடர்பு வெச்சு இருக்கு. ஜீவன் ப்ரம்மத்தோட லயமாக இது வழியா உள்ளே போகும். பரப்ரம்மம் ஜீவனா உருவெடுக்க இதுவழியா வெளி வரும்.

அப்படி வெளிவர அஹங்காரம் முதல்ல தோன்றும். அப்பதானே தான் ன்னு ஒண்ணு வந்து வேறுபாடு பிறக்கும்?

அதே போல உள்ளே லயமாகி போகவும் இந்த ¨நான்¨ மெலிந்து அழிந்து போகணும். அப்பதானே உள்ளே போய் லயமாகலாம்? ஆனா இப்படி உள்ளே போக முடியாம வெளி விஷயங்கள்ல ஈடுபட்டு இந்த தான் ரொம்பவும் தடிச்சு போயிருக்கு! சின்ன வாசல் வழியா உள்ளே போக முடியாது. அந்த வாசலை இடிச்சு பெரிசா கட்டவும் முடியாது. :-))

எல்லாத்தையும் வேறா - த்வைதமா- பாத்து பாத்துதானே இப்படி குண்டா போச்சு? குண்டா இருப்பதை கரைத்து இன்னும் ஒல்லியாக்க தனக்கு என்பதை விட்டுவிட்டு தன்னை அன்பிலே

ப்ரம்மத்துக்கு கொடுத்துக் கொள்ள கொள்ள முன்னேற்றம் இருக்கும். இது ஒண்ணே வழி. சமம் தமம் எல்லாம் இதை கரைக்கலையா என்றால் அதெல்லாம் கரைச்சது புத்தியையும் மனசையும். அதை எல்லாம் விட இன்னும் சூக்குமமா இருக்கிறது அந்தக்கரணம். முன்னேயே பாத்து இருக்கோம் இல்லையா?- நானாக்கும் சமம் தமம் எல்லாத்தையும் சாதிச்சேன்? நானாக்கும் வைராக்கியத்தை சம்பாதிச்சேன்? இப்படி நமக்கே தெரியாம இது கொழுத்து கொண்டு இருக்கும். இது கரைய ப்ரம்மத்துகிட்டே பக்தி செலுத்தற இதுவே வழி.

---

மதியம் வியாழன், ஜனவரி 8, 2009

பக்தி-3

சில பேர் இப்படி நினைக்கலாம். பிரமத்தை நினைச்சு அது மேல பக்தி செலுத்த கஷ்டமா இருக்குமே அதனால இப்படி செய்யலாமோ? இந்த பிரபஞ்சமே ப்ரமத்தோட மாயா சொரூபம்தானே? அதனால இந்த உலகத்து மேலேயும் அதில் இருக்கிற மக்கள் மேலேயும் அன்பு வைத்து அவங்களுக்கு தொண்டு செய்தா அது ப்ரம்மத்துக்கு செய்ததாதானே ஆகும்?

அது சரிதான், ஆனால் இந்த படியிலே அப்படி செய்யக்கூடாது. இப்படி செய்கிறது கர்ம வழில இருக்கிறப்ப செய்யலாம். பரோபகாரம் இதம் சரீரம் (மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கே இந்த உடல் இருக்கு) என்ற படி ஊருக்கு தொண்டு, தேச சேவை, உலகத்தொண்டு அப்படின்னு அந்த வழில பலன் எதிர்பாராம செய்வது சித்த சுத்தியை கொடுக்கும்.

இப்ப வழியே வேற. இந்த உலகம் நிலையானது இல்லை; நிலையான வஸ்துவை தேடிப்போகணும் ன்னு முடிவு செய்து ஞானத்தை தேடுகிறபோது உலகத்தோட சம்பந்தத்தை அதிகப்படுத்திக்கொள்வது ஆபத்து இருக்கு! சன்னியாசி பூனை வளத்த கதையும் ஜட பரதர் கதையும் தெரிஞ்சதுதானே! எதை விட்டு விட்டு போக நினைக்கிறோமோ அதையே வலுக்கட்டாயமா பிடிச்சுகிறதுல என்ன பிரயோஜனம்?

இதுக்கு சிலர் ஆட்சேபிக்கலாம். ஞானியான பிறகு எத்தனை பேர் தொண்டு செய்து இருக்காங்க? நீங்க அடிக்கடி மேற்கோள் காட்டுகிற சங்கரரே அப்படி தேசம் முழுக்க சுத்தி ஆன்மீக தொண்டு செய்தவர்தானே?

உண்மைதான். அப்படி செய்வது மாயையை சரியான படி புரிஞ்சு கொண்டு அதால பாதிக்காதபடி ஆகிவிட்டவர்கள் மாயா லோக அதிபதியான ஈஸ்வரன் கொடுத்த கட்டளைப்படி செய்வது. தனக்குன்னு உத்தேசம் ஏதும் இல்லாம பகவான் கட்டளைப்படி செய்வதில தப்பு இருக்காது. "நீ ப்ரம்மத்தை உணர்ந்துட்டேப்பா; ஆனா உன்னால இந்த மாய லோகத்துக்கு சில காரியங்கள் உன்னால நடக்க வேண்டி இருக்கு; அதை நீதான் செய்ய முடியும்" ன்னு கட்டளை இடும்போது செய்வது. (அந்த நிலையிலே தானே தனக்கு இட்டுக் கொள்கிற கட்டளைதானே அது!)

பார்க்கப்போனால் மற்றவர்களுக்கு சாதனா மார்கத்திலே இருக்கிறவங்க செய்வது இல்லாம, மத்தவங்கதான் "அட, கோடியிலே ஒத்தர் இப்படி சாதனைல ஈடுபட்டு இவ்வளோ முன்னேறி இருக்காங்களே, இவங்களுக்கு சரீர பயணம் நடக்க நாமா உதவணும்" ன்னு உதவி செய்யணும்.

ஆதனால தனி மனிதர்கள்கிட்டே அன்பு செய்வதற்கு இந்த நிலையிலே ஒண்ணுமில்லை. அப்படியானா வெறுப்பு இருக்கா என்றால் சன்னியாசம் வாங்கிக்கொள்ளும்போதே "எந்த உயிருக்கும் என்னிடம் பயம் வரக்கூடாது" ன்னு அவன் சபதம் எடுத்துக்கிறதால அவன் யாரையும் விரோதித்துக் கொள்ளுவதில்லை. அன்பும் காட்டுவதில்லை. ரெண்டுமே கிடையாது.

இந்த நிலையிலே அன்பு வைக்க வேண்டியது ஆத்மாவிடம்தான்.

---

மதியம் வெள்ளி, ஜனவரி 9, 2009

கைவல்லிய நவநீதம்-1

ப்ரம்மம் நிர்குணமாச்சே? அது எப்படி அனுக்கிரஹம் எல்லாம் செய்யும்? தன்னோடு தானாக ஐக்கியம் ஆக்கிக்கும்? அதுதானே மோக்ஷம்?

அப்படி கேள்வி கேட்காதே என்கிறாங்க! இங்கேதான் சிரத்தை வருது. குரு இப்படித்தான் சொல்லி இருக்கார். உபநிஷத் எல்லாம் இப்படித்தான் சொல்லி இருக்கு. அதன் மேலே நம்பிக்கை வைத்து மேலே போகணும். தேவையான அனுகிரஹம் செய்யும்போது குணத்தோட இருக்கிற ஈஸ்வரனா இருந்து ஐக்கியப்படுத்தும் போது உள்ளே குணமில்லா ப்ரம்மமா இருக்குன்னு எடுத்துக்கலாம்.

எப்படி இருந்தாலும் இங்கே குணமில்லாத ப்ரம்மமாதான் பக்தி செலுத்தணும். இது வரை குணத்தோட ஈஸ்வரனை பக்தி பண்ணது மனசிலே வருமே? வரும்தான்? என் ஆனையை எல்லாம் விட முடியாதுன்னு யாரோ சொன்னாங்க இல்லையா!

"அப்பா (அல்லது அம்மா) உன் கிருபையாலேதான் எனக்கு அத்வைதத்திலே மனசு போய் இருக்கு. உன் கிருபையாலே கொஞ்சம் கொஞ்சம் சாதனை பண்ணிக்கொண்டு இருக்கேன். முடிவா நிர்குண பக்தி வரணும்ன்னு உனக்கே தெரியுமே? குணத்தோட பக்தி செய்தா நான் பின்னேறி விடுவேன். அப்படி ஆகாம நீதான் காப்பாத்தணும்" ன்னு வேண்டிக்கொண்டா எல்லாம் சரி ஆகிவிடும்.

இந்த படியிலே பக்தி இல்லைனா ரொம்பவே சாரம் இல்லாம டிரையா (dry) சாதனை போய் கொண்டு இருக்கும். ஆனா அடைய வேண்டியதோ சத் சித் ஆனந்தமாச்சே! ரொம்பவே சாரம் உள்ளது. அதற்காக இப்ப கொஞ்சம் குளு குளுன்னு பக்தி தண்ணி பாய்சறோம்.

நல்லது. இப்ப இந்த விஷயங்களை கொஞ்சம் நிறுத்திக்கலாம்.

ஞான வழில சாதனை படிகள் என்னன்னு பாத்தோம். இப்போதைக்கு தியரிதான். கொஞ்சம் கொஞ்சமா அனுபவத்துக்கு வர வேண்டியது. முன்னேயே சொன்னது போல இதில ஏதாவது ஒண்ணை முழுக்க சாதிச்சாலும் மத்த எல்லாமே கூட வந்துடும்.

அடுத்து நாம கைவல்லிய நவநீதம் என்கிற எளிமையான நடையிலே எழுதப்பட்ட நூலை ஒட்டி ஞான வழியை பார்க்கலாம். இவ்வளோ நாள் இந்த வழியிலே படிகள் ன்னு நாம பாத்த விஷயங்களை இவர் மூணே மூணு செய்யுட்களிலே நகர்த்திண்டு போயிட்டார். (நீயும் அப்படியே செஞ்சு இருக்கக்கூடாதான்னு பல்லை கடிக்கறது தெரியுது. போனாப்போறது).

எழுதியவர் ஸ்ரீ தாண்டவராய ஸ்வாமிகள். காலம் சுமார் 700 வருஷங்களுக்கு முன். இவரது குரு ஸ்ரீ நாராயணன். நன்னிலம் என்ற ஊரை சேர்ந்தவர். இப்பவும் அங்கே பேருந்து நிலையத்துக்கு அருகே ஒரு 200 மீ தூரத்தில் இவர்களது அதிஷ்டானம் இருக்கு.

தத்துவ விளக்கப்படலம்.

1.

நித்திய வநித்தியங்க ணிண்ணயந் தெரிவிவேகம்
மத்திய விகபரங்கள் வருபோகங் களினிராசை
சத்திய முரைக்க வேண்டுஞ் சமாதியென் றாறுகூட்டம்
முத்தியை விரும்புமிச்சை மொழிவர்சா தனமிந்நான்கே

நித்திய அநித்தியங்களில் நிண்ணயம் (நிர்ணயம்) தெரி(கின்ற) விவேகம், மத்திய (இடையில் உள்ள) இக (இந்த லோக) பரங்கள் (மறு லோகங்கள்) வரும் போகங்களில் நிராசை, சமாதியென்று ஆறு கூட்டம் (சமம் முதலான ஆறு தொகுதி) முத்தியை விரும்பும் இச்சை- சத்தியம் உரைக்க வேண்டும் (உண்மையாக அதிகாரிக்கு உரிய) சாதனம் இந்நான்கே (என

சத்துக்கள்) மொழிவர்.

2.சம தமாதிகளின் இலக்கணம்:

சமம்தமம் விடல் சகித்தல் சமாதானஞ் சிரத்தை யாறாம்
சமமகக் கரண தண்டந் தமம்புறக் கரண தண்டம்
அமர்தரு கருமம் பற்றா தறுத்தலே விடலென்றாகும்
மமர்செயுங் காமமாதி வரினடக் குதல் சகித்தல்

சமம், தமம், விடல்=உபரதி, சகித்தல்=திதிக்ஷா, சமாதானம், சிரத்தை ஆறாம். சமம் அகக் கரண தண்டம் (மனதை அடக்குதல்) தமம் புறக் கரண தண்டம். (வெளி விவகாரங்களை கவனிக்கும் ஐந்து இந்திரியங்களை அடக்குதல்) அமர்தரு கருமம் (பொருந்திய பாவம் கலந்த கர்மங்களையும் புண்ணிய கர்மங்களையும்) பற்றாது (பலன் விரும்பாது) அறுத்தலே (நீக்குதலே) விடல் என்றாகும். மமர் (மயக்கம்) செயும் காமம் ஆதி (காமம் குரோதம் முதலியவை) வரின் அடக்குதல் (பொறுத்தல்) சகித்தல்.

3.சிரவணப் பொருளைத்தானே சித்தஞ்சிந் திக்குமாறு
சரதமா வைக்குமித்தைச் சமாதானமென்பர் மேலோர்
பரமசற் குருநூ லன்பு பற்றுதலே சிரத்தையாகும்
வரமிகு சமாதியாறு வகையின்சொற் பொருளிதாமே

(வேதாந்த) சிரவண (கேள்வி) பொருளைத்தானே சித்தம் (உள்ளம்) சிந்திக்குமாறு சரதமாய் (சத்தியமாக) வைக்கும் இத்தை (இதை) சமாதானமென்பர் மேலோர். பரம சற்குரு (ஈஸ்வரன்) நூல் (வேத சாத்திரங்கள்) மீது அன்பு பற்றுதலே சிரத்தையாகும். வரமிகு (மேன்மை மிக்க) சம ஆதி ஆறு வகையின் சொற் பொருள் இதாமே.

---

மதியம் திங்கள், ஜனவரி 12, 2009

யாருக்கு ஞான வழி?

ஒத்தர் ஒரு வேலையை சரியா செய்யணும்னா அதுக்கான தகுதி இருக்கணும் இல்லையா? ஞான வழியிலே போக என்ன தேவைன்னு இதுவரை படிகளை பாத்தோம். இது நமக்கு இப்ப இருக்கோ இல்லையோன்னு சந்தேகம் வேண்டாம். இந்த பதிவுகளை எழுதற எனக்கு இன்னும் ஞானம் வரலை. படித்து முடித்த பின்னும் எல்லாருக்கும் வந்துவிடாது. ஆனா இது இவ்வளவு வேகத்திலே- கால கட்டத்திலே வரும் வாராதுன்னு ஒரு நியதியும் கிடையாது. எப்ப வேணா வரலாம். அதனால தியரிடிகலா இது என்னன்னு தெரிந்துகொண்டா பின்னால சிலது சௌகரியமா இருக்கலாம். அதுக்காக இப்ப படிப்போம்.

விட்டதை பிடிக்க - ஞான வழிக்கு தேவை சித்த சுத்தி. இந்த சித்த சுத்தி சுலபமா கிடைக்கிறது கர்ம வழியை பின்பற்றுவதாலே. பக்தி ஒத்தருக்கு முதல்லேயும் சரி கடைசியிலேயும் சரி கட்டாயமா வேணும் என்கிறதையும் பாத்து இருக்கோம். ஈஸ்வரன் மேலே அன்பை திடமா வைத்து கொண்டு மனசை அடக்குகிறதுன்னு ஒவ்வொண்ணா செய்து கொண்டு போகணும். ¨ஞான வழி ஆராய்ச்சிதான் நம்ம முதல் கட்டாய தொழில். மத்தது எல்லாம் உலக விஷயங்கள்: இந்த சரீரத்தை காப்பாத்த ஜீவனத்துக்கு செய்கிறது¨ என்கிற உறுதி இருக்கணும். எவ்வளவுக்கு எவ்வளவு தீவிரமா இதை செய்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு முக்தி கிட்டே இருக்கு. (அவரவரை பொருத்து). இந்த விஷயங்கள் எல்லார் புத்தியிலேயும் நுழையாது. யார் பல ஜென்மங்களா பலன் கருதா காரியங்களை செய்து சித்தம் சுத்தியாகி இருக்காங்களோ அவங்களுக்கு சட்டுன்னு பிடிபடும். மத்தவங்களுக்கு தாமதமா புரியலாம்.

இந்த சித்த சுத்தி இருக்கிறவன் மத்தபடி பணக்காரனோ ஏழையோ; இந்த ஜாதியோ, அந்த ஜாதியோ; ப்ரம்மச்சாரியோ, குடும்பஸ்தனோ - இதெல்லாம் ஒரு பொருட்டு இல்லை. மனப்பக்குவம் ஒண்ணுதான் விஷயம்.

---

இப்படி சித்த சுத்தி அடைஞ்ச ஒத்தன் மூணு துன்பங்களாலும் கஷ்டப்பட்டு ஓடி வந்து குருவை தேடி சரணாகதி செய்து உபதேசம் கேட்பதாக நூல் ஆரம்பிக்கிறது.

அதென்ன 3 துன்பம்?

1.பசி, தாகம், நம்ம புலன்களுக்கு கேடு - கண் சரியா தெரியலை, காது சரியா கேக்கலை, உடலுக்கு உள்ள நோய்கள் இப்டி இருக்கிறது சில துன்பங்கள். இதுக்கெல்லாம் பெயர் ஆதியாத்மிகம்.
2.மழை பெய்யறது, சுனாமி, இடி விழுகிறது, வெள்ளம்,விபத்துக்கள் இப்படி சிலது எல்லாம் இருக்கே. இதை ஆங்கிலத்துல act of god அப்படிம்பாங்க. தெய்வச்செயல்கள். இதெல்லாம் நம்ம கையிலே இல்லை. (ஆனா பெய்கிற மழையை இன்னும் பிரச்சினை ஆக்கிக்கொள்ள நமக்கு சாய்ஸ் இருக்கு!) இப்படி நிகழ்கிறதால வர துன்பங்கள் ஆதி தெய்விகம்.
3.திருடர்கள், கொலைகாரர்கள், மிருகங்கள், பாம்பு இது போல மத்த பிராணிகள் மூலமா நமக்கு துன்பங்கள் ஏற்படலாம். இது ஆதி பௌதிகம்.

இப்படி வருகிற சொற்களை எல்லாம் ஒரு பக்கத்திலே போட்டு ஒரு கலைச்சொல் அகராதி செய்யப்போகிறேன். தொடுப்பை பக்கத்திலே பாருங்க.

இந்த மூணு வகை துன்பங்கள் எல்லாருக்கும்தான் இருக்கும் இல்லையா? இதிலேந்து விடுபட நாம் எடுக்கிற முயற்சிதான் வேற வேற. பொதுவா நாம் செய்கிறதால கிடைப்பது தற்காலிக தீர்வுகள்தான்.

11.
சாதன மின்றி யொன்றைச் சாதிப்பா ருலகி லில்லை
ஆதலா லிந்த நான்கு மடைந்தவர்க் கறிவுண் டாகும்
நூதன விவேகி யுள்ளி னுழையாது நுழையுமாகில்
பூதசென் மங்கள் கோடி புனிதனாம் புருட னாமே

சாதனமின்றி ஒன்றைச் (ஒரு தொழிலை) சாதிப்பார் உலகில் இல்லை. ஆதலால் இந்த [சாதனங்கள்] நான்கும் அடைந்தவர்க்கு அறிவு (சொரூப ஞானம்) உண்டாகும். நூதன விவேகி உள்ளின் (மனதில்) [ஞானம்] நுழையாது. நுழையுமாகில் பூத சென்மங்கள் கோடி [-இல் சித்த சுத்தி அடைந்த] புனிதனாம் புருடனாமே.

12.
முன் கூறிய சாதனங்கள் நிறைந்த ஒருவன் அதிதீவிர பக்குவத்தை கூறல்
{இனி ஆசிரியர் ஒரு சீடனுக்கு உபதேசம் செய்வது போன்ற நடையில் நூல் செல்கிறது}

இவனதி காரி யானோ னிந்திரி யங்க ளாலும்
புவனதெய் வங்க ளாலும் பூதபௌ திகங்களாலும்
தவனமுன் றடைந்து வெய்யிற் சகித்திடாப் புழுப்போல் வெம்பிப்
பவமறு ஞானதீர்த்தம் படிந்திடப் பதறி னானே

இவன் [இந்த சாதனம் நான்கும் உடையவன்] அதிகாரியானோன். (இந்த நூலுக்கு அதிகாரியாவான்) இந்திரியங்களாலும், (உடல் சம்பந்தப்பட்ட வயிற்று வலி, சிரங்கு, கண்வலி போன்ற துன்பங்கள் -ஆதியாத்மிகம்) புவன தெய்வங்களாலும் (பனி, மழை, காற்று முதலியவை, சுவர் இடிந்து விழுதல், மரம் முறிந்து விழுதல் போன்ற தெய்வச்செயல்களாலும் -ஆதி தெய்விகம்), பூத பௌதிகங்களாலும் (மற்ற மனிதர், விலங்குகள் போன்றவற்றாலும் -ஆதிபௌதிகம்) தவன (தாபம்) மூன்று அடைந்து, வெய்யில் சகித்திடா புழு போல் வெம்பி பவம்அறு (பிறவி நீக்கும்) ஞான தீர்த்தம் படிந்திட (மூழ்க) பதறினானே (விரைந்தானே).

மதியம் செவ்வாய், ஜனவரி 13, 2009

குருவை சரணடைதல்

13.தீவிரமுற்ற பக்குவன் என் செய்தான்?

ஆனவிம் மனைவி மக்க ளர்த்தவே டணைகண் மூன்றில்
கானவர் வலையிற் பட்டுக் கைதப்பி யோடு மான்போற்
போனவன் வெறுங் கையோடே போகாத வண்ணஞ் சென்று
ஞானசற் குருவைக் கண்டு நன்றாக வணங்கி னானே.

இம் மனைவி, மக்கள், அர்த்தம் (செல்வம்) ஆன [ஆகிய] ஏடணைகள் (ஆசைகள்) மூன்றில் (ஈஷணாத் திரயம்) கானவர் (வேடர்) வலையில் பட்டு (சிக்கி) கைதப்பி (பின் கைவசமாகாமல்) ஓடும் மான் போல் போனவன் வெறும் கையோடே போகாத வண்ணஞ் சென்று ஞான சற்குருவைக் கண்டு நன்றாக வணங்கினானே.

--

ஞான வழிலே குரு முக்கியம். நாமா என்னதான் யோசனை செய்தாலும் ஓரளவுக்கு மேலே சிந்திக்க முடியாது. நாம யோசிச்சு யோசிச்சு "கண்டு பிடிச்சதெல்லாம்" சரிதானா இல்லையா ன்னு சொல்லக்கூடியவர் அவர்தான். மேலே சரியான வழியை காட்டக்கூடியவரும் அவர்தான். (குருன்னு இல்லாம சரியான நேரத்துக்கு "மார்கதர்சி - வழிகாட்டி" கூட பகவான் அனுப்பி வைக்கலாம். நல்ல குருன்னு எல்லாம் ஒண்ணும் இல்லை. சரியான குருவான்னு தான் பாக்கணும். ஒவ்வொத்தருக்கு குரு ஒவ்வொத்தர் இருப்பார். ஒத்தருக்கு குருவா இருக்கிறவரே இன்னொருத்தருக்கும் இருக்கணும்ன்னு அவசியம் இல்லே.

தெய்வம், ராஜா, குரு, குழந்தை தினசரி ஹோமம் செய்கிறவர்கள் முதலானோரை வெறும் கையோடு பார்க்க போகக்கூடாது என்பது சாத்திரம்.. அவர்களுக்கு பயன் படுவதாக ஏதேனும் கொண்டு செல்ல வேண்டும். கோவில்னா பூ, ராஜான்னா பழங்கள்; குழந்தைக்கு சாப்பிடக்கூடியது ஏதேனும், ஹோமம் செய்கிறவருக்கு சமித்து இப்படி....

ஈஷணா - ஆசைகள் மூணு- முன்னேயே பாத்து இருக்கோம், இல்லையா?
வேடன் வலையிலேந்து தப்பி ஓடற மானைப்போலன்னு உவமை சொல்கிறார்!
உலக வாழ்க்கை மேலே இப்படி வெறுப்பு வரணும். அப்ப தேடல் தீவிரமா இருக்கும்!

14.

வணங்கிநின் றழுதுசொல்வான் மாயவாழ் வெனுஞ்சோகத்தால்
உணங்கினே னையனேயென் னுள்ளமே குளிரும் வண்ணம்
பிணங்கிய கோசபாசப் பின்னலைச் சின்னமாக்கி
இணங்கிய குருவே யென்னை யிரட்சித்தல் வேண்டு மென்றான்.

வணங்கி நின்று அழுது சொல்வான்: மாய வாழ்வெனும் சோகத்தால் உணங்கினேன் (வாடினேன்) ஐயனே, என் உள்ளமே குளிரும் வண்ணம் பிணங்கிய (ஒன்றினில் ஒன்றாய் நெருங்கிய) [பஞ்ச]கோச பாசப் பின்னலை சின்னமாக்கி (சிதைத்து) இணங்கிய குருவே என்னை இரட்சித்தல் வேண்டும் என்றான்.

--

ஆசாமி நிறையவே படிச்சு இருக்காரு இல்லே? பஞ்சகோசம் எல்லாம் படிச்சு கொண்டு அலசி, ஆராய்ஞ்சு, ஒண்ணும் உதவாதுன்னு இப்ப குருவை தேடி வந்து கால்ல விழுந்துட்டார்! இந்த பஞ்ச கோசம்ன்னா என்னன்னு கேட்டா -கொஞ்சம் பொறுங்க. பின் பதிவு ஒண்ணுல இதெல்லாம் வரும். வணங்கினவருக்கு உணர்ச்சி பெருக்கு. ஒரு வழியா சரியான குருவை பிடிச்சுட்டோம் போல இருக்கேன்னு பெரிய ஆறுதல். அழுகை தானா வருது.
(கலைச்சொல்) பஞ்சகோசம்: ஐந்து உறைகள். அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய,

ஆநந்தமய கோசங்கள். மனிதன் இவ்வைந்து கோசங்கள் உள்ளவனாக சொல்லப்படுகிறான்.

மதியம் புதன், ஜனவரி 14, 2009

குருவிடம் சரண்

இப்படி வந்து விழுந்த ஆசாமியை பாத்து பெரியவருக்கு ரொம்ப கருணை பொங்கிடுது. ஒரு அம்மா குழந்தையை பாக்கிற மாதிரி வாத்ஸல்யத்தோட பாக்கிறார்.

சில சமயம் சாப்பிடறப்ப புரையேறிடும். அம்மா தலைல தட்டிக்கொடுத்து யாரோ உன்னை நினைச்சுக்கிறாங்க என்பாங்க. நாமே சில சமயம் யாரையோ சந்திக்கணும்ன்னு நினைச்சு கொண்டே இருப்போம். அப்புறம் அவரை பாக்க வெளியே கிளம்புவோம். அவரே எதிரே வருவார். என்னன்னு கேட்டா இல்லை, சும்மா. உன்னை பாக்க தோணித்து என்பார்.

சில சமயம் ஏதோ ஒரு கூட்டத்திலே அமர்ந்து இருக்கிறோம். ஏதோ குறு குறுங்குது. யாரோ நம்மை கவனிக்கிறா மாதிரி ஒரு உணர்வு. திரும்பி பாத்தா நிஜமாவே ஒத்தர் நம்மை பாத்துகிட்டே இருப்பார். அது எப்படி தெரிஞ்சது? அது ஒரு உள்ளுணர்வு.

அதே போல தொடுதல் என்கிறதும் ஒரு சக்தி உள்ள செய்கை. ராமனை காட்டுக்கு அனுப்ப என்ன என்னவோ கூனி கைகேயிகிட்ட சொல்லி பாத்தாளாம். "அட! என் மகனுக்கு இல்லே பட்டம் கட்டப்போறாங்க" ன்னு சொல்லிட்டாள் கைகேயி. கடேசிலே அவளை தொட்டு பேசினாளாம் கூனி. கைகேயி மனசு மாறிட்டது.
மருத்துவர்கள் "கவலைப்படாதே உடம்பு சரியாயிடும்" ன்னு தட்டிக்கொடுக்கிறது, கைகுலுக்கறது எல்லாம் இந்த அடிப்படையிலே வந்தவைதான். ஓ! கட்டுப்பிடி வைத்தியம்ன்னு ஒண்ணு இருக்கு இல்லே? :-))

கடல் ஆமை முட்டையை கரையிலே போட்டுவிட்டு கடலுக்குள்ள போயிடும். அப்புறம் ஆமை முட்டையிலே இருக்கிற தன் குஞ்சையே நினைக்குமாம். இதனாலேயே அது வளர்ந்து அசைந்து முட்டையை உடைச்சுகொண்டு வெளிவருமாம். மீன் முட்டைகள் இட்டுவிட்டு அதையே பாத்துக்கொண்டு இருக்கும். பாதுகாப்பா சுத்தி சுத்திவரும். கொஞ்ச நாள்ள அது எல்லாம் பொரிஞ்சு மீன் குஞ்சுகள் வெளியே வரும். பறவைகள் எடுக்கும் நடவடிக்கை இன்னும் கொஞ்சம் அதிகம். அவை முட்டைகள் மேலேயே உக்காந்து அடை காக்கும். முட்டை உடைஞ்சு குஞ்சு வெளிவரும்.

இப்படி உயிரினங்கள் தன் அடுத்த வாரிசு வெளிவர செய்கிறது போல இந்த ஞான ஆசிரியர் வந்த சிஷ்யனை கருணையோட நினைத்து, பார்த்து, தடவிக்கொடுத்து பக்கத்திலே உக்காத்தி வெச்சுக்கிறார். "மீண்டும் மீண்டும் பிறப்பு என்கிற இந்த துன்பம் போக ஒரு வழி இருக்குப்பா. அதை கேட்டு வழி நடந்தா உனக்கு எப்பவும் கூடவே வர சம்சாரம் என்கிற கஷ்டம் போயிடும்" என்கிறார். வந்த சிஷ்யனுக்கு இதை கேட்டதுமே மான்சரோவர்ல முழுகி எழுந்தாப்பலே உடலும் உள்ளமும் குளிர்ந்து போச்சு! திருப்பியும் ஆசிரியரை வணங்கி, "நீங்க சொல்லபோகிறது எனக்கு புரியுமோ புரியாதோ; செய்ய முடியுமோ முடியாதோ எப்படி இருந்தாலும் என்னை நீங்கதான் கருணை வெச்சு கடைத்தேத்தணும். உபாயம் இருக்குன்னு சொன்னீங்களே அது என்ன?" அப்படின்னு கேக்கிறான்.

15.
அன்னைதன் சிசுவையைய னாமைமீன் பறவை போலத்
தன்னகங் கருதி நோக்கித் தடவிச்சந் நிதி யிருத்தி
உன்னது பிறவி மாற்று முபாயமொன் றுண்டு சொல்வேன்
சொன்னது கேட்பாயாகிற்றொடர் பவந்தொலையு மென்றார்.

அன்னை (யை ஒத்த) ஐயன் தன் சிசுவை (சீடனை) ஆமை போலத் தன்னகம் தன்னுள்ளத்தில்) கருதி (சிந்தித்து), மீன் போல நோக்கி, பறவை போல தடவி சந்நிதி (எதிரில்) இருத்தி, உனது

பிறவி [துன்பத்தை] மாற்றும் உபாயம் ஒன்றுண்டு சொல்வேன். சொன்னது கேட்பாயாகில் தொடர் பவம் (அனாதியாக தொடர்ந்து வரும் சம்சார துன்பம்) தொலையும் என்றார்.

16.
தொடர்பவந் தொலையுமென்று சொன்னதைக் கேட்டபோதே
தடமடு மூழ்கி னான்போற் சரீரங் குளிர்ந்துள் ளாறி
அடருமன் பொழுகு மாபோ லானந்த பாஷ்பங் காட்டி
மடன்மலர்ப் பாத மீண்டும் வணங்கிநின் றீதுசொல்வான்.

தொடர் பவம் தொலையும் என்று சொன்னதைக் கேட்ட போதே, தட (விசாலமான) மடு மூழ்கினான் போல் சரீரம் குளிர்ந்து, உள்ளாறி அடரும் அன்பொழுகுமா போல் (நிறைந்த அன்பானது பொங்கி வழிவது போல) ஆனந்த பாஷ்பங் காட்டி, மடல் (இதழ்)[உள்ள தாமரை போன்ற] மலர்ப்பாதம் மீண்டும் வணங்கி நின்று ஈது (இதனை) சொல்வான்.

17.
சொன்னது கேட்கமாட்டாத் தொண்டனானாலுஞ் சுவாமி
நின்னது கருணையாலே நீரென்னை யாளலாமே
உன்னது பிறவிமாற்று முபாயமொன்றுண் டென்றீரே
இன்ன தென்றதைநீர் காட்டியீடேற்றல் வேண்டுமென்றான்.

சொன்னது கேட்க மாட்டா (உபதேசித்ததை அப்பியாசிக்காத) தொண்டன் ஆனாலுஞ் சுவாமி, நின்னது கருணையாலே நீர் என்னை (இரட்சித்து) ஆளலாமே. உன்னது பிறவி மாற்றும் உபாயம் ஒன்று உண்டு என்றீரே. இன்னது என்றதை நீர் காட்டி ஈடேற்றல் வேண்டுமென்றான்.

---

மதியம் வியாழன், ஜனவரி 15, 2009

உபதேசம் ஆரம்பம்

சீடர்களுக்கு இருக்கிற மட்டத்துக்கு தகுந்த உபதேசம்தானே செய்யணும்? எடுத்த எடுப்பிலே ஞான மார்க்கத்தை காட்ட முடியுமா? அதுக்கு தேவையான வளர்ச்சி இல்லைனா குழம்பி இல்லே போயிடுவாங்க? அதனாலே அவங்களை ஸ்டடி செய்ய கொஞ்ச நாள் ஏதாவது வேலை செய்து கொண்டு தன்னோட இருக்க வைத்து அப்புறம்தான் உபதேசம் நடக்கும்.

வந்து சேர்ந்த சிஷ்யனை முதலில் எந்த மட்டத்திலே இருக்கான்னு சோதித்து பார்க்கிறார். "பரவாயில்லை. வைராக்கியம் வந்துவிட்டது. ஆசை முதல் எல்லாத்தையும் கண்ட்ரோல்ல வெச்சு இருக்கான். ஞானத்துக்கு தீவிர நாட்டம் வந்துவிட்டது." இப்படி கண்டுகொள்கிறார்.

முன்னே மீன், ஆமை, பறவை பற்றி சொன்னது போல இன்னும் ஒண்ணு குளவி. அதோட கூட்டுக்குள்ளே இருக்கிற அதன் லார்வா குளவியாக அது அடிக்கடி கூட்டின் பக்கத்திலே வந்து ஹெலிகாப்டர் போல் பறக்கும். அதன் அதிர்வு குளவிக்குஞ்சை முதிர்ச்சியாக்கும். அதுபோல குருவும் சிஷ்யனை இனம் பார்த்துக்கொண்டு உபதேசம் செய்கிறார். உடம்புதான் கூடு. உபதேசம் உள்ளே இருக்கிற ஜீவாத்மாவுக்குத்தான். குருவின் ரீங்காரத்தை கேட்டு கேட்டு அது முதிரணும்.

"வா குழந்த. யார் தன்னோட உண்மையான சொரூபம் எதுன்னு மறந்து போயிட்டாங்களோ அவங்கதான் திருப்பி திருப்பி பிறந்து கஷ்டப்படுவாங்க. எப்போ தான் யார்ன்னு ஞானத்தால புரிஞ்சுக்கிறாங்களோ அதுவரைக்கும்தான் இந்த கஷ்டம்." அப்படிங்கிறார்.
18.
அடங்கிய விருத்தியானென் றறிந்தபின் செறிந்த மண்ணின்
குடம்பையுட் புழுமுன்னூங் குளவியின் கொள்கை போலத்
தொடங்கிய குருவுமான்ம சொரூபமே மருவவேண்டி
உடம்பினுட் சீவனைப்பார்த் துபதேச மோதுவாரே

---

அடங்கிய விருத்தியான் (இராகம் முதலான விருத்திகள் ஒடுங்கியவன்) என்று [சோதித்து] அறிந்த பின் செறிந்த (நெருங்கிய) மண்ணின் குடம்பையுள் (கூட்டுள்) புழு முன் ஊதும் (சப்திக்கும்) குளவியின் கொள்கை (தன்மை) போலத் தொடங்கிய குருவும் ஆன்ம சொரூபமே மருவவேண்டி (அடையும் படி) உடம்பினுள் சீவனைப் பார்த்து உபதேசம் ஓதுவாரே.

19.
வாராயென்மகனே தன்னை மறந்தவன் பிறந்திறந்து
தீராதசுழற்காற் றுற்றசெத்தை போற்சுற்றிச் சுற்றி
பேராத காலநேமிப் பிரமையிற் றிவன்போதம்
ஆராயுந் தன்னைத்தா னென்றறியுமவ் வளவுதானே

வாராய் என் மகனே! தன்னை [உண்மைசொரூபத்தை] மறந்தவன் பிறந்து இறந்து, தீராத சுழற் காற்று உற்ற (அகப்பட்ட) செத்தை போல் சுற்றிச்சுற்றி பேராத (பெயராத) காலநேமி (காலச்சக்கரம்) பிரமையில் திரிவன். போதம் ஆராயும் (ஞானத்தால் அறியும்) தன்னை, தான் என்று அறியுமவ்வளவுதானே (அறியும் வரைக்கும்தானே).

---

மதியம் வெள்ளி, ஜனவரி 16, 2009

ரொம்ப சுலபம்....

மேலும் உபதேசம் தொடருது.
¨ரொம்ப சுலபம் அப்பா! தன்னையும் தனக்கு யார் தலைவன் அப்படின்னும் உண்மையா பாத்துட்டா, அட! நானேதான்டா அந்த தலைவனும் ன்னு புரிஞ்சு கொண்டு பிரமமா ஆகிடுவான். அவ்ளோதான். நீ யார்ன்னு உண்மையா நீ புரிஞ்சுகொண்டால் உனக்கு ஒரு கேடும் கிடையாது. உபதேசம் பண்ணுன்னு கேட்டுக்கொண்டதாலே செய்துட்டேன்.¨ என்கிறார்.

20.
தன்னையுந் தனக்காதாரத் தலைவனையுங் கண்டானேல்
பின்னையத் தலைவன்றானாய்ப் பிரமமாய் பிறப்புதீர்வன்
உன்னைநீ யறிவாயாகில் லுனக்கொரு கேடுமில்லை
என்னைநீ கேட்கையாலே யீதுபதேசித்தேனே.

தன்னையும் (சீவனையும்) தனக்காதார தலைவனையும் (கூடஸ்தனையும்) கண்டானேல் (தரிசிக்கில்), பின்னை அத் தலைவன் தானாய் பிரமமாய் [உணர்ந்து] பிறப்பு தீர்வன். உன்னை நீ அறிவாயாகில் உனக்கொரு கேடுமில்லை. என்னை நீ கேட்கையாலே ஈது உபதேசித்தேனே.

உபதேசம் கேட்டு சீடனுக்கு கொஞ்சம் நம்பிக்கை போயிடுது. ¨ஞானம் கிடைக்கும்ன்னு உங்களையே நம்பி இல்லே வந்தேன்? நான் முட்டாள்ன்னு நினைச்சா இப்படி சொல்லறீங்க? தான் யார்ன்னு தெரியாத ஆசாமி இந்த உலகத்திலே இருக்காங்களான்ன? அவங்க திருப்பி திருப்பி பிறந்து கஷ்டப்படலையா? முடிவா சொல்லுங்க¨ ன்னு கேட்கிறான்.

21.
என்னைத்தான் சடனாவுள்ளத் தெண்ணியோ சொன்னீரையா
தன்னைத் தானறியா மாந்தர் தரணியி லொருவருண்டோ
பின்னைத் தானவர்களெல்லாம் பிறந்திறந் துழலுவானேன்
நின்னைத் தானம்பினோற்கு நிண்ணய மருளுவீரே

என்னைத்தான் சடனாய் (மூடனாக) உள்ளத்து எண்ணியோ சொன்னீரையா? தன்னை தான் அறியா மாந்தர் தரணியில் (பூமியில்) ஒருவர் உண்டோ? பின்னை அவர்களெல்லாம் பிறந்து இறந்து உழலுவானேன்? நின்னை நம்பினோற்கு நிண்ணயம் அருளுவீரே.

---

மதியம் திங்கள், ஜனவரி 19, 2009

22. ¨அப்படி இல்லைப்பா. இதுதான் உடம்பு. இவன் உடம்புக்குள்ளே இருக்கிறவன் அப்படின்னு யார் தெளிவா தெரிஞ்சு கொண்டு இருக்காங்களோ அவங்கதான் தன்னை உண்மையா அறிஞ்சவங்க¨ ன்னு சொல்கிறார் குரு.
அதுக்கு சீடன். ¨அட என்னங்க இப்படி சொல்கிறீங்க? இந்த உடம்புதானே இருக்கு? உடம்புக்குள்ளே இருக்கிறவன்னு ஒத்தன் யார் இருக்கான்? ¨ என்கிறான். இதை கேட்டு குரு வருத்தத்தோட சிரிக்கிறார்.

இன்னது தேகந்தேகி யிவனெனவுணர்வன் யாவன்
அன்னவன் றன்னைத்தா னென்றறிந்தவனாகு மென்றார்
சொன்னபின் றேகியாரித் தூலமல்லாம லென்றான்
பின்னது கேட்டவையர் பீடையும் நகையுங்கொண்டார்.

இன்னது (ஸ்தூலமான= பருப்பொருளான) தேகம், [இவற்றுக்கு விலட்சணமாக இவற்றை அறியும்] தேகி இவன் என உணர்வன் யாவன்? அன்னவன் (அப்படிப்பட்டவனே) தன்னை தானென்று அறிந்தவன் ஆகும் என்றார். சொன்ன பின் இத் தூலமல்லாமல் தேகி [வேறு] யார் என்றான். பின்னது கேட்ட ஐயர் (ஆசிரியர்) பீடையும் (வருத்தமும்) நகையும் கொண்டார்.

தூங்கப்போயிடறோம். உடம்பு கட்டையாட்டம் படுக்கையிலே இருக்கு. அப்ப கனவு காண்கிறோம். அதிலே நாம் இருக்கிறோம். இன்னும் பல பேர் இருக்காங்க. ஏதேதோ நடக்குது. அப்புறம் நாம் முழிச்சிக்கிறோம். இப்படி இப்படி எல்லாம் பாத்தேன் அப்படின்னு சொல்கிறோம். அட உடம்புதானே நாம்ன்னு நினைச்சோம். அது செயலத்து கிடக்க இப்ப இதெல்லாம் பாத்தது யார்?

எல்லாருமே கனவு காண்கிறோம். ஜீவா மாதிரி சிலர்தான் அதை ஞாபகம் வெச்சுக்கிறாங்க. பெரும்பாலும் தூக்கம் கலையும்போதே அதையும் மறந்துடுவோம். கனவு காணும்போதே முழிப்பு வந்தா அதைதான் ஞாபகம் வைக்க முடியும். அதையும் உடனே செய்யலைனா அதுவும் கூட மறந்துடும். சரி, அது கிடக்கட்டும். கனவு காணலைன்னே வெச்சுப்போம். அப்பா, சொகமா நல்ல தூக்கம் தூங்கினேன்; ஒரு கனவு கூட கிடையாதுன்னு சொல்கிறோம்.

விஞ்ஞானமும் இப்படி தூங்கறோம்ன்னு ஒத்துக்கொள்ளுது. சாதாரணமா ஒத்தர் தூங்கும்போது கனவு காணறார்ன்னா அவர் கண்களை பாத்தே சொல்லிடலாம். கண்கள் இப்படியும் அப்படியும் நகரும். இமை வழியா கண் அசைவு தெரியும். இதை rem தூக்கம் என்கிறாங்க. இப்படி இல்லாம தூங்குகிறது non -rem தூக்கம். இதிலே நாம் சொல்லக்கூடிய எதையும் பாக்கிறதில்லே.

இப்படி சொல்லக்கூடியது ஒண்ணும் பாக்கலைனாலும் சுகமா கனவு கூட இல்லாம தூங்கினேன் ன்னு சொல்கிறோமே? அப்படி தூங்கினதை அறிஞ்சு கொண்டது யார்?

இப்படி உடல் தான் இல்லைனா முழிப்பு இருக்கிறப்ப நான் ன்னு நினைக்கிறது யாரை?

¨ஓஹோ, உடம்புதான் இருக்கா? அதுக்கு வேறா ஒண்ணுமே இல்லையா? ¨
23.
தேகமல் லாமல் வேறே தேகியார் காணே னென்றாய்
மோகமாங் கனவில் வந்து முளைத்திடு மவனார் சொல்வாய்
சோகமாங் கனவு தோன்றாச் சுழுத்தி கண்டவனார் சொல்வாய்
ஆகநீ நனவி லெண்ணு மறிவுதா னேது சொல்வாய்.

தேகமல்லாமல் (அனுபவத்தில் தேகமே தான் என்பதற்கு பொருள் அல்லாமல்) வேறே (அன்னியமாக) தேகி யார் காணேன் என்றாய். [அப்படியானால் சரீரம் சேட்டை அற்று கிடக்க] மோகமாம் (நித்திரா மயக்க அறிவினால்) கனவில் (மாறுபட்டு) வந்து முளைத்திடும் (இருப்பு முதலியவற்றை அறியும்) அவன் யார் சொல்வாய். [இந்த] சோகமாம் கனவு தோன்றாச் சுழுத்தி (கனவில்லா ஆழ் துயில்) [சூன்யமாக] கண்டவன் யார் சொல்வாய். [ஸ்வப்ன, சுசுப்தியில் பிரேதம் போல கிடந்த இந்த உடலை] நீ ஆக நனவில் (ஜாக்ரத்தில்) எண்ணும் அறிவுதான் (பிரக்ஞைதான்) ஏது சொல்வாய்.

இந்த கனவு, கனவில்லா ஆழ் துயில், நனவு (ஸ்வப்னம், சுசுப்தி, ஜாக்ரத்) ஆகியன அவஸ்தா த்ரயம் எனப்படும்.

---

மதியம் செவ்வாய், ஜனவரி 20, 2009

தெரிந்த ஒன்றை தொடர்ந்து போய் தெரியாத ஒன்று.....

இப்ப சீடனுக்கு கொஞ்சம் அடக்கம் வந்துடுச்சு. நனவில என்ன பாக்கிறேன் தெரியும்; தினமும் கனவு காண்கிறேன், அதுவும் தெரியும். தூக்கத்திலே கனவு கூட இல்லாம ஆனந்தமா இருந்து இருக்கேனே? அதுவும் தெரியும். அட அது ஆனந்தமா இருந்ததே அதிலேயே இருந்துட்டா என்னன்னு நினைச்சா அப்படி இருக்க முடியலியே! நனவிலே அதே ஆனந்தத்திலே இருக்கவும் முடியலியே? உடம்புதான் நாம்னா அப்படி முடியணுமே? சில சமயம் அந்த ஆனந்தம் வந்து, அப்படியே இருக்க முயற்சி பண்ணும்போதே மறைஞ்சும் போயிடுதே?

இப்படி சொல்லி மேலே நான் யார்ன்னு உபதேசம் பண்ணுங்கன்னு கேட்கிறான்.

24.
நனவுகண்டது நான்கண்ட நனவுள நினைவுநீங்கிக்
கனவுகண்டதுஞ் சுழுத்தி கண்டதும் வேறொன்றேபோல்
தினமனுபவித்த தொக்கு தெரியவுமில்லை சற்றே
மனதினி லுதிக்கும் பின்னை மறைக்கும தருளுவீரே

[சாக்கிரத்தில்] நனவு கண்டதும், நான் கண்ட நனவுள (சாக்கிரத்தின்) நினைவு நீங்கி கனவு கண்டதும், சுழுத்தி கண்டதும் வேறு ஒன்றே போல் தினம் அனுபவித்தது ஒக்கும். (தினமும் அநுபவிப்பதால் பொருந்தும்) [ஆனால் அந்த அநுபவத்தில் இரு எனில், அது நன்றாக எப்போதும்] தெரியவுமில்லை. [உபதேசத்தின் பொழுது] சற்றே மனதினில் உதிக்கும். பின்னை (அஞ்ஞானம்) மறைக்கும். அது அருளுவீரே! (தேகியின் சொரூபம் எப்போதும் விளங்கும்படி உபதேசிப்பீராக)

வெளியூர்லே வீட்டுக்கு வெளியே இருக்கோம். பக்கத்தில இருக்கிறவர் ¨ஓ, இன்னிக்கு மூணாவது திதியா? அதோ சந்திரன்!¨ அப்படிங்கிறார். சாதாரணமா இந்த மூன்றாம் பிறை நல்லா தெரியாது. அதுவும் ரெண்டாம் திதி பகல்ல முடிஞ்சு மூணாவது வந்துட்டா துர்லபம்தான். சூரியன் மறைஞ்சு அதிக நேரம் ஆகி இருக்காது; வெளிச்சம் இன்னும் இருக்கும். அதனால சந்திரன் அந்த நேரத்திலே எங்கே இருக்குன்னு தெரிஞ்சாலே ஒழிய பார்க்கிறது கஷ்டம். உள்ளூர்னா அனேகமா அது எங்கே இருக்கும்ன்னு தெரிய வாய்ப்பு இருக்கு. வெளியூர்னா யாரான காட்டினாதானே முடியும்? அப்ப ¨எங்கே இருக்கு?¨ ன்னு பக்கத்திலே இருக்கிறவரை கேக்கிறோம். மெலிசா தெரியற இதை எப்படி காட்டறது? அவர் சொல்கிறார். ¨அதோ ஆல மரம் இருக்கு இல்லே? அதன் கிளை வலதுபக்கமா பெரிசா இருக்கே; அதுல மேல் பக்கமா ஒரு கிளை போறதே; அதன் நுனில பாருங்க.¨ என்கிறார். நாமும் அப்படியே பாத்து ¨அட இதோ இருக்கு¨ ன்னு சொல்லி ஆயிரம் பிறையில ஒண்ணாவது பாத்தோம்ன்னு மகிழ்ந்து போறோம்.

திருமணம் ஆகிறது. இரவு அருந்ததி தரிசனம் செய்யணும். அதுக்கு சினிமா நக்ஷத்திரத்தை மட்டும் பாத்து பழக்கமானவங்களுக்கு எப்படி உண்மையான நக்ஷத்திரத்தை காட்டறது? காட்டுகிறவர் நல்லா தெளிவா பிரகாசத்தோட இருக்கிற ஒரு நக்ஷத்திரத்தை அடையாளம் காட்டி அப்புறமா அதிலேந்து வழி காட்டுவார். (நாலு நாள் திருமணம் இப்ப 4 மணி நேரத்திலே நடக்கிறதாலே இதை -பேருக்கு- பகலிலேயே செய்து வைக்கறதால ப்ளாக்கிலே கேலிக்கு இலக்கா போச்சு!)

இப்படி அடையாளம் காட்டுவது போல அதாவது தெரிந்த ஒன்றை தொடர்ந்து போய் தெரியாத ஒன்றை பிடித்துக்கொள்வது போல தெரிந்த விஷயங்களை சொல்லி அதன் மூலமா உபதேசம் செய்ய ஆரம்பிக்கிறார் குரு. முதல்லே கண்ணுக்கு தெரியற ஸ்தூலமான இந்த உலகத்தை காட்டறார்.

25.
தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டுவார்போல்
ஆலத்தினுடுக்கள் காட்டி யருந்ததி காட்டுவார்போல்
தூலத்தை முன்புகாட்டிச் சூக்கும சொரூபமான
மூலத்தைப் பின்புகாட்ட முனிவரர் தொடங்கினாரே

தாலத்தின் (பூமியில்) மரங்கள் (மரங்களின் கிளை நுனியை) காட்டி தனி பிறை (சரியாக தெரியாத மூன்றாம் பிறை நிலவை) காட்டுவார் போல்; ஆலத்தின் (ஆகாயத்தின்) உடுக்கள் (நக்ஷத்திரங்கள்) காட்டி, [அதன் மூலமாக சரியாக தெரியாத நக்ஷத்திரமான] அருந்ததி காட்டுவார் போல்; தூலத்தை (கண்ணுக்கு தெரியும் சீவ ஈஸ்வர ஜகத்தை) முன்பு காட்டி சூக்கும சொரூபமான மூலத்தை (அனைத்துக்கும் மூலமான பிரமத்தை) பின்பு காட்ட முனிவரர் (மகா மௌனம் உடையவர்) தொடங்கினாரே.

---

மதியம் புதன், ஜனவரி 21, 2009

அத்தியாரோபம், அபவாதம்

இனி கொஞ்சம் கவனமா படிக்கணும். சாதாரணமா புழங்காத வார்த்தைகள் எல்லாம் வரப்போகுது.

அத்தியாரோபம் = ஆரோபம். இது என்ன? இது இல்லூஷன் (illusion).

ஒரு பொருள் இருக்கு. ஆனா அதை நாம் வேறன்னு நினைக்கிறோம். இதான் ஆரோபம். இசை புரிஞ்சவங்களுக்கு புரியும்- மேலே ஏற்றுவது, இறக்குவது. ஒரு பொருளின் மேலே இன்னும் ஒண்ணை ஏற்றிப்பார்க்கிறது ஆரோபம். இருட்டிலே வழி நடக்கிறோம். வழில ஏதோ உருண்டையா திரட்சியா இருக்கு. நகர்ராப்பல கூட தோணித்தே? இது பாம்பா இருக்கும்ன்னு நினைக்கிறோம். டார்ச் விளக்கை உபயோகித்து அட இது வெறும் கயிறுதான் ன்னு தெரிஞ்சுக்கிறோம். அதே போல தூரத்திலே ஏதோ மங்கலா ஆள் இருக்கப்பல தோணுது. அட இதோ யாரோ இருக்காங்க. கேட்டு வழி தெரிஞ்சுப்போம் ன்னு நினைக்கறோம். கிட்டே போய் பாத்தா அது மனுஷன் இல்லை அது மாதிரி உருவம் இருக்கிற மரக்கட்டைதான் ன்னு தெரியுது. கார்லே நல்ல வெய்யில்ல ஏசி போட்டுகிட்டு தார் ரோடிலே போகிறோம். ரோட்டிலே கொஞ்ச தூரத்திலே தண்ணி இருக்கிற மாதிரி தோணும். இதை இப்ப எல்லாம் எல்லாருக்கும் தெரிஞ்சு இருக்கு. இதான் கானல் நீர். இது போல பாலைவனத்திலே தெரியறதை பாத்து தண்ணின்னு ஏமாறறது முன்னே எல்லாம் சகஜம்.

முன்னதை இப்ப எல்லாருக்கும் தெரிஞ்சு இருக்குன்னா தினமும் பார்த்தும் இன்னும் சரியா புரிஞ்சுக்காத ஒண்ணு இருக்கு! மேலே வானத்தை பாருங்க. நீலமா இருக்கு இல்லே? அதை பாக்கிறதாலே நமக்கு வானம் அதுக்கு கீழே நாம்ன்னு ஒரு உணர்வு இருக்கு. உண்மையிலே அங்கே எதுவுமே இல்லையே!

---

இதெல்லாம்தான் ஆரோபம்.

இதை புரிஞ்சு கொண்டு இது எல்லாம் உண்மை இல்லைன்னு உறுதியா தெரிகிறது அபவாதம். நமக்கு இங்கே முக்கியமானது ஆரோபத்தால நாம் கட்டுப்படுகிறோம். அபவாதத்தால நாம் விடுலை அடையறோம் என்கிறதுதான்.

26.
அத்தியாரோபமென்று மபவாதமென்றுஞ் சொல்லும்
உத்தியாற்பந்தம் வீடென்றுரைக்கும் வேதாந்தமெல்லாம்
மித்தையாமா ரோபத்தாற் பந்தமாம பவாதத்தான்
முத்தியா மிவ்விரண்டின் முந்தியா ரோபங்கேளாய்

அத்தியாரோபம் என்றும் அபவாதம் என்றும் சொல்லும் உத்தியால் பந்தம், வீடு என்று உரைக்கும் வேதாந்தமெல்லாம். மித்தையாம் (இல்லாத) ஆரோபத்தால் பந்தமாம். அபவாதத்தால் முத்தியாம். இவ்விரண்டில் முந்தி ஆரோபம் கேளாய்.

27.
ஆரோப மத்தியாசங் கற்பனையாவ வெல்லாம்
ஓரோர்வத்துவினில் வேறேயோர் வத்துவினை யோர்தல்
நாரூடுபணியாத் தோன்ற னரனாகித்தறியிற் றோன்றல்
நீரூடுகானற் றோன்ற னிறந்தலம் வெளியிற் றோன்றல்

ஆரோபம் அத்தியாசம் கற்பனை ஆவவெல்லாம் (ஆகியவை எல்லாம்), ஓரோர் வத்துவினில் வேறே ஓர் வத்துவினை ஓர்தல் (உணர்தல்). நார் ஊடு (கயிறில்) பணியாய் (பாம்பாய்) தோன்றல். நரனாகி (மனிதனாக) தறியில் (கட்டையில்) தோன்றல். கானல் ஊடு நீர் தோன்றல், வெளியில் (ஆகாயத்தில்) நிறம் தலம் கரு/நீலநிறம், கூடாரம் போன்ற இடம்) தோன்றல்.

---

மதியம் திங்கள், பிப்ரவரி 16, 2009

மூலப்ரக்ருதி மீள் பார்வை

முதலிலே ஒரு நிலையை எடுத்துப்போம்.

எல்லாமே ஒரே குழம்பா இருக்கு. – மேட்டர் எனர்ஜி காம்ப்லெக்ஸ் (matter energy complex)-ன்னு சொல்லலாமா?
க்வான்டம் பிஸிக்ஸ் போனா அப்படித்தான் சொல்லாட்சி இருக்கு.
இது சக்தின்னும் சொல்ல முடியாம, இது பருப்பொருள்ன்னும் சொல்ல முடியாம.

ரொம்ப நாள் முன்னே ஒளியை ஆராய்ஞ்சப்பவும் இப்படித்தான் சொன்னாங்க. அதை சக்தின்னு நினைச்சு சோதனைபண்ணா சக்தி மாதிரியும் இருக்கும். இல்லை பருப்பொருள்ன்னு சோதனைப்பண்ண அதுக்கும் ஆதாரம் இருக்கும். குழம்பிப்போனாங்க.
பின்னால க்வாண்டம் பிசிக்ஸ் வந்தது. பல விஷயங்கள் மாறிப் போச்சு.
முதல்லே ப்ரோடான், நியூட்ரான், எலக்ட்ரான்னு சொன்னாங்க. பிறகு அதுக்கும் உள்ளே போய் க்வார்க் ன்னு பாத்து அதெல்லாம் இப்படி இருந்தா அது ந்யூட்ரான், இப்படி இருந்தா ப்ரோட்டான் ன்னு சொல்ல ஆரம்பிச்சாங்க. அப்போ தனித்தனியா இருந்தது உண்மையிலே ஒண்ணே; வெளிப்பாடு வேறேன்னு ஆச்சு. இதுக்குள்ளே போகப்போக ஆச்சரியங்கள்தான் அதிகமாச்சு. இதோட தர்க்கரீதியா மேலே என்னன்னு யோசிச்சு பாத்தா எல்லாம் ஒண்ணே என்கிற நம்ம பிரம்ம கோட்பாடு வந்துடும். எல்லாம் சக்தி மயம். கிடக்கட்டும்.

இங்க சொல்ல வந்தது ஒரே விஷயம் - சக்தியா இல்லை பொருளான்னு தெரியாத ஒரு குழம்பா இருந்தது. எல்லாமே ஒண்ணா லயமாகி இருந்தது. இதுக்கு மூல ப்ரக்ருதி ன்னு பேர்.
இதிலேந்து சீவர்கள் தோன்றி இந்த உலகம் தோன்றி காரியங்கள் நடந்து...

---

அஹா! காரியம் நடந்துன்னு சொன்னா அது கர்மா ஆயிடுத்து.
அப்ப அதுக்கு எதிர்வினை இருக்கும், பலன் இருக்கும். அதை அனுபவிச்சு தீர்க்கணும் என்கிறது இயற்கை விதி. அப்படி தீர்க்காட்டா?

தீர்க்காட்டா திருப்பி பிறப்போம். அப்படி பிறக்கும்போது மேலும் பல காரியங்களை பண்ணுவோம்; திருப்பி பிறப்போம்.
இப்படி திருப்பி திருப்பி பிறக்கிறதை விடணும் என்கிறதுதான் நம்ம குறிக்கோள். அப்பதான் கஷ்டமில்லாம ஆனந்தமா இருக்கலாம். ஏன்னா பிறப்பில்லத நிலை பூரணமான நிலை. அங்கே இருப்போம்; எல்லாமே அறிஞ்சு இருப்போம்; ஆனந்தமாயும் இருப்போம். இதைத்தவிர வேற ஒண்ணுமில்லை.
சரி அப்படி ஆகலை, திருப்பி திருப்பி பிறந்தா இப்படியே முடிவில்லாம போய் கொண்டு இருக்குமா?

---

மதியம் செவ்வாய், பிப்ரவரி 17, 2009

மூலப்ரக்ருதி மீள் பார்வை-2

அஹா! காரியம் நடந்துன்னு சொன்னா அது கர்மா ஆயிடுத்து.
அப்ப அதுக்கு எதிர்வினை இருக்கும், பலன் இருக்கும். அதை அனுபவிச்சு தீர்க்கணும் என்கிறது இயற்கை விதி. அப்படி தீர்க்காட்டா?

தீர்க்காட்டா திருப்பி பிறப்போம். அப்படி பிறக்கும்போது மேலும் பல காரியங்களை பண்ணுவோம்; திருப்பி பிறப்போம்.
இப்படி திருப்பி திருப்பி பிறக்கிறதை விடணும் என்கிறதுதான் நம்ம குறிக்கோள். அப்பதான் கஷ்டமில்லாம ஆனந்தமா இருக்கலாம். ஏன்னா பிறப்பில்லாத நிலை பூரணமான நிலை. அங்கே இருப்போம்; எல்லாமே அறிஞ்சு இருப்போம்; ஆனந்தமாயும் இருப்போம். இதைத்தவிர வேற ஒண்ணுமில்லை.
சரி அப்படி ஆகலை, திருப்பி திருப்பி பிறந்தா இப்படியே முடிவில்லாம போய் கொண்டு இருக்குமா?
-----
இல்லை, படைப்புக்கடவுளான பிரம்மாவுக்கு ஒரு பகல் பொழுது ஆனதும் தூங்க போயிடுவாராம்! அப்போ சிருஷ்டி எல்லாம் நின்னு போயிடும். பிறப்பு எல்லாம் இடை நிறுத்தம் ஆகிடும். பூ,புவ, சுவர் லோகங்கள்லே இருக்கிற அத்தனையும் ஒண்ணா போயிடும். பிரம்மா விழிச்சுக்கொண்டு திருப்பி படைக்க ஆரம்பித்தால் திருப்பி சீவர்கள் தோன்றி தோன்றி... இப்படி ஒரு பகல் என்கிறது ஒண்ணும் அதிகமில்லை ஜென்டில்மென்! நம்ம கணக்கிலே 4,320,000,000 வருஷங்கள்தான்! இரவு அதே நேரம். இந்த நேரத்திலே சிருஷ்டி இருக்காது. இப்படி 360 நாட்கள் ப்ரம்மாவுக்கு ஒரு வருஷம். இப்படி 100 வருஷம் அவரோட ஆயுசு!

அப்புறம் பிரம்மாவோட காலமும் முடிஞ்சு போயிடும். எல்லா சீவர்களும் திருப்பியும் ஒடுங்கிடுவாங்க. இப்படி ஆனது முடிஞ்சு சிருஷ்டி திருப்பி ஆரம்பிக்க அடுத்த பிரம்மா தோன்றணும்.

முன்னே சொன்னதுக்கு அவாந்தர பிரலயம் ன்னும் பின்னாலே சொன்னதுக்கு மகா ப்ரலயம்ன்னும் சொல்கிறாங்க. இப்ப இந்த 2 போதும்!

அவாந்தரத்திலே இந்த 3 லோகங்கள்லே இருக்கிற சீவர்கள் எல்லாம் பிரம்மத்தோட ஐக்கியமாகிடும். அதே போல மகா ப்ரலயத்திலே 14 லோகங்களில் உள்ளதும் லயமாயிடும்.

லயம்ன்னா ஒரு தனித்தன்மையும் இல்லாமன்னு இல்லை. ஒரு செயலும் இல்லாம.

மெழுகு உருண்டையிலே பொன் துகள் போல லயமான பொருளிலே சீவர்களோட ஒரு

தன்மை இருக்கும். அது அந்த சீவனோட கர்மாவை பொறுத்தது. அது திருப்பியும் சீவன் பிறப்பெடுக்கும்போது தனி சீவனா பிறக்க காரணமாகும். காரணம்... ஆமாம், பிறவிக்கு காரணம்தான். அதனால இதுக்கு காரண சரீரம்ன்னு பேர். இது என்னன்னு அப்புறம் பாக்கலாம்.

முதல் முதல்லே கர்மா இல்லாம எப்படி சீவர்கள் பிறந்தாங்க?
இதுக்கு விடை கிடையாது.

மேலை விஞ்ஞானத்திலே ஆந்த்ரபோமார்பிக் பிரின்சிபிள்ன்னு ஒரு விஷயம். இந்த உலகம் இருக்க ஒரு சின்ன வாய்ப்புதான் இருக்கு. அது இருக்கிறதாலேதான் இந்த உலகமும் இருக்கு; இதைப்பத்தி பேசிகிட்டு நாமளும் இருக்கோம். இது எப்படி வந்ததுன்னு ஆராய்ச்சி பண்ணா விடை இல்லை.
அப்ப இதை ஒத்துக்க முடியாதுன்னா சொல்ல முடியும்? எப்படியோ நடந்து இருக்கிறதாலதானே இதைப்பத்தி பேசறோம்?
அதனால எப்படி நடந்ததுன்னு தெரியலைனா அது நடக்கவே இல்லைன்னு சொல்ல முடியாது. நடந்ததோட அத்தாட்சிதான் - ரிசல்ட் தான் எதிரிலியே இருக்கே!

சரி சரி, லயத்திலேந்து பிறப்புன்னா அது எப்படி நடந்ததுன்னு கேட்கலாம்.
ஆ! அதுக்கு விடை இருக்கு.

---

மதியம் புதன், பிப்ரவரி 18, 2009

## மீள் பார்வை - மூன்று குணங்கள்

சரி சரி, லயத்திலேந்து பிறப்புன்னா அது எப்படி நடந்ததுன்னு கேட்கலாம்.
ஆ! அதுக்கு விடை இருக்கு. இப்படி நடந்ததுன்னு வேதத்திலே, புராணங்களிலே, பாகவதத்திலே எல்லாம் சொல்லி வெச்சு இருக்காங்க. சில வேறுபாடுகள் இருந்தாலும் பொதுவா சில வழிகளை அறிஞர்கள் ஒத்துக்கிறாங்க.

மூல ப்ரக்ருதியிலேந்து ஒரு கால கட்டத்திலே ஈஸ்வரனோட உள் நோக்கிய பார்வையாலே மூன்று குணங்கள் தனித்தனியா வெளிப்படும்.
இது முன் பதிவுகளிலே கொஞ்சம் குழப்பி இருக்க வாய்ப்பு இருக்கு. இங்கே சொல்கிற ஈசன் பின்னாலே வருகிற சத்துவ குண பாகமான ஈசன் இல்லை. குழம்பாம இருக்க இதை ப்ரம்மம் னே கூட வெச்சுக்கலாம். ஆனா அப்ப ப்ரம்மத்துக்குன்னு சங்கல்பம் உண்டான்னு எல்லாம் வாதம் பிறக்கும் என்கிறதாலே ஈஸ்வரன்னு சொல்கிறோம்.

இந்த 3 குணங்களைப்பத்தி முன்னேயே பாத்து இருக்கிறோம். சத்வம், ரஜஸ், தமஸ். இதை வெளுப்பு, சிவப்பு, கருப்புன்னு உருவகப்படுத்தி இருக்காங்க! வேற விதமா சுத்தம், அழுக்கு, இருட்டு என்கிறார்கள். தெளிஞ்ச தண்ணீர், கலங்கலான தண்ணீர், அழுக்கு தண்ணீர் மாதிரியும் சொல்கிறதுண்டு.
சத்துவம் சில விஷயங்களோட சம்பந்தப்பட்டது. சுத்தம், சாந்தம், ஜீவ காருண்யம், ஈஸ்வர பக்தி, மோக்ஷ நாட்டம், தெய்வ சிந்தனை. நுட்பம் - subtle- என்கிறது இதை குறிக்கும்ன்னு வெச்சுக்கலாம்.
ரஜஸ் - ஒரே வார்த்தை சொல்லனும்னா action. எல்லா உலக விஷயங்களிலும் அனுபவிப்பதிலும் நாட்டம் இருக்கும். துவேஷம், ரோஷம், சாதாரண கோபம், ஆசை இப்படி அடுக்கலாம். இதெல்லாமே ராஜஸ குணங்கள்.
தாமஸம்- தூங்கு மூஞ்சி,heavy, dull, lethargy, தன்னை மறந்த கோபம், அதிகமான ஊண் சாப்பிடறது, அதிக தூக்கம், கனம், அழுக்கு... புரியுதில்லை?

தியானம் செய்கிற ஆசாமி சத்வம்;
சுறு சுறுப்பா ஆக்ரோஷமா விளையாடுகிற ஆசாமி ராஜஸம்;
நல்லா சாப்பிட்டு தூங்கற ஆசாமி தாமசம்.

---

நண்பரை ¨என்னடா, இன்னிக்கு டல்லா இருக்கே¨ன்னு சில சமயம் கேக்கிறோம். இல்லை ¨என்ன அவ்வளோ சுறு சுறுப்பு இன்னிக்கு¨ என்கிறோம். நாமே சில நாள் சாந்தமா இருக்கிறோம்; சில சமயம் கோபமா இருக்கிறோம். சில சமயம் அழுது வடிகிறோம். ஒரே ஆசாமிதான்!
அதே போல
எல்லாருக்கும், எல்லாத்திலேயும் இந்த 3 குணங்களும் உண்டு. எந்த ஒரு நேரத்திலேயும் ஒவ்வொண்ணு அதிகமா இருக்கும்; குறைவா இருக்கும். அவ்வளவுதான். அதிகமா இருக்கிற விஷயத்தை வெச்சு அதை பேர் சொல்கிறோம்.

29.அதுதானெப்படி என்றக்கா லநாதியாஞ் சீவரெல்லாம்
பொதுவான சுழுத்திபோல பொருந்து மவ்வியந்தன்னில்
இதுகால தத்துவப் பேரீசனுட் பார்வையாலே
முதுமூல சுபாவம்விட்டு முக்குணம் வியத்தமாமே

அதுதான் (அக்கற்பனை) எப்படி [உண்டாயிற்று] என்றக்கால் (என கேட்பாயானால்) அநாதியாஞ் (ஆதியில்லாத) சீவர் எல்லாம் பொதுவான சுழுத்தி [அவஸ்தை] போல அவ்வியந்தன்னில் (மூலப்பிரகிருதியில்) பொருந்தும் (கருமவாசனையுடன்அடங்கியிருக்கும்). இது காலதத்துவப் பேர் [அடைந்து] ஈசன் உட்பார்வையாலே முது மூல (முன்னுள்ள பிரகிருதி) சுபாவம் விட்டு (தன்மை விட்டு) முக்குணம் வியத்தமாமே. (முக்குணங்களாய் வெளிப்படும்)

30.
அந்த முக்குணங்களின் பெயர் முதலியன:
உத்தம வெளுப்புச் செம்மை யுரைத்திடு கறுப்பு மாகும்
சத்துவ குணத்தி னோடு ரசோகுணந் தமோகு ணந்தான்
சுத்தமோ டழுக் கிருட்டாச் சொல்லுமுக் குணமு மூன்றாய்
ஒத்துள வேனுந் தம்மு ளொருகுண மதிகமாமே

உத்தம (முதலாவதாக) வெளுப்பு, செம்மை, [அதமமாக] உரைத்திடும் கறுப்பும் ஆகும். [முறையே] சத்துவ குணத்தினோடு, ரசோகுணம், தமோ குணந்தான் [அவற்றின் பெயர்]. சுத்தமோடும், அழுக்கு (உடனும்), இருட்டாக[வும்] சொல்லும் [இந்த] முக் குணமும் மூன்றாகி ஒத்துளவேனும் (ஒத்து இருப்பினும்) தம்முள் (அவற்றுள்) ஒரு குணம் அதிகமாமே. (மேலானது)

---

மதியம் வியாழன், பிப்ரவரி 19, 2009

உலகம் எப்படி வந்தது?

சில நூல்களிலே இதே உற்பத்தி வேற விதமாயும் சொல்லப்படுது. சீவர்கள்கிட்டே இருக்கிற பிரிக்க முடியாதது எதுவோ அதை மக தத்துவம் (மஹத்) என்கிறாங்க. இதேதான் அகங்காரம் ஆகும். இந்த உலகம் தோன்ற காரணமா இருக்கிறதை அகங்காரத்தில் இருந்து வருகிற வைகரி, தைசதன், பூதாதி தத்துவங்களாக சொல்கிறங்க. இதை மேலே விசாரிக்க வேண்டுமானால் இங்கேயும் இங்கேயும் போய் பாத்து படிச்சு மெய்கண்ட சித்தியார் சுபக்கத்திலே என்ன சொல்கிறார்ன்னு புரிஞ்சதை இங்கே சொல்லலாம்.

ஜகத் உற்பத்தி வேறு வழியாக சொல்லப்படுவது:

31. ஒருவழி யிதுவா மித்தை யொருவழி வேறாச் சொல்வர்
மருவுமவ் வியத்தந் தானே மகதத்துவ மாகு மந்த
அருண்மக தத்துவந்தா னகங்கார மாகு மென்றும்
கருவகங் காரமூன்றாக் காட்டிய குணமா மென்றும்

---

(சிருஷ்டி கிரமங்களில்) ஒரு வழி இதுவாம். இதை ஒரு வழி வேறாய் [உம் பெரியோர்] சொல்வர். [சீவர்களிடம்] மருவும் (அடங்கியுள்ள) அவ்வியத்தந்தானே மக தத்துவமாகும் [என்றும்] அந்த அருண் மக தத்துவந்தான் அகங்காரமாகும் என்றும், கருவ (செகத்துக்கு காரணமான அகங்கார தத்துவம்) அகங்கார மூன்றாக காட்டிய குணமாம் (வைகரி, தைசத, பூதாதி என மூன்று அகங்காரங்களாகும்) என்றும் [சொல்வர்]

முதலிலே இருக்கிறது சத் சித் ஆனந்தமான பரம்பொருள் மட்டுமே. சத் ன்னா இருப்பு. existence. சித் அறிவு- knowledge. ஆனந்தம் எல்லாருக்கும் தெரிஞ்சதுதான்.

பிரம்மம் எப்போதுமே அப்படியே இருக்கத்தான் இருக்கும். மாறவே மாறாது.

பின்னே இந்த உலகங்கள் எல்லாம் எப்படி வந்ததுன்னா ஒரு சினிமா படம் போல. இருக்கு, ஆனா உண்மையில்லை. உண்மை இல்லைனாலும் அதுல ஒரு லாஜிக் இருக்கு. சில விஷயங்கள் எதிர் பார்த்தபடி நடக்குது. அதால சில பாதிப்பு இருக்கு.
சினிமா பாத்துட்டு வந்த ஆசாமியை என்னப்பா சினிமான்னு கேக்கிறோம். அவரும் கதை சொல்லறார். எப்படி சொல்லறார்?

ஒரு பையன் இருந்தான். இங்கே போனான், இப்படி பண்ணான்னு சொல்கிறார். நாமும் அது அத்தனையும் நடக்கலைன்னு தெரிஞ்சாலும் ஆர்வமா கேக்கிறோம். சொல்கிற கதை கொஞ்சம் உருப்படியா இருந்தா அதுல ஒரு லாஜிக் இருக்கும். சொன்ன விதம் நம்மை பாதிக்கும். முன் காலத்திலே எல்லாம் சினிமா பாத்து பெண்கள் அழவே அழுதுடுவாங்க!

அது போலவே பிரம்மம் எப்போதுமே இருக்கு, இருக்கும் ன்னு தியரில தெரிஞ்சாலும் சினிமா கதை கேட்கிறா மாதிரி இதையும் விசாரிக்கலாம் - உலகம் எப்படி வந்ததுன்னு!
இந்த ப்ரம்மத்திலேந்து மூன்று குணங்கள் வரும்ன்னு பாத்தோம். இந்த குணங்களில சித் - இருப்போட நிழல் - சாயல் படியும். இந்த சாயலை குணத்திலேந்து நம்மால தனியா பிரிக்க முடியாது; குணத்திலே முழுமையா பரவி இருக்கும்; பாக்க முடியாதபடி சூக்குமமா இருக்கும்.

முதல்லே பாக்கபோறது சத்துவ குணத்திலே படிகிற சாயை என்ன ஆகிறது ன்னு.

---

மதியம் வெள்ளி, பிப்ரவரி 20, 2009

கேள்வியும் பதிலும்

வாசகர் கடிதம் ஒன்று வந்தது. அருமையான கேள்வி எழுப்பட்டு உள்ளது. கேள்வியும் பதிலும் இதோ:

கேள்வியும்

பொறிதுயில் ஆழ்த்துனருக்கு ஒரு கேள்வி -

தூங்கும்போது 'நான்' இல்லை, ஆனா 'நல்லாத் தூங்கினேன்' ன்னு சொல்றதுக்கு ஏதோ ஒண்ணு இருக்கு, அதுதான் consciousness -னு சொல்றோமே -

அப்படின்னா, நீங்க ஒருத்தரை பொறிதுயில்ல ஆழ்த்தும்போது அந்த consciousness கூட இல்லாம போயிடுதே. அப்ப அது எங்கே போகுது? என்ன ஆகுது? தூங்கும்போதும் ஐம்புலன்களும் விழிப்பாதானே இருக்கு? அதாவது வலியையோ வாசனையையோ அப்பவும் உணர முடியுமே. ஆனா அனஸ்தீஸியாவில் இருக்கும்போது ஒண்ணுமே தெரியறதில்லையே.

விளக்குங்களேன்...

பதிலும்

அருமையான கேள்வி!
பொதுவாகவே பதில் போட்டுட்டலாமா?
ஜாக்ரத், சொப்னம், சுசுப்தி - இது ஒரு மாதிரி வகைப்படுத்தல்தான். இதுக்கும் மேலே துரியம், துரியாதீதம்ன்னு எல்லாம் உண்டு. பின்னால அஞ்ஞான பூமி ஏழும் ஞான பூமி ஏழும் வரப்போறது. அப்பவும் இந்த மாதிரி சிலது சரியா பொருந்தாது.

ஒத்தர் மயக்கம் போட்டு விழுந்துட்டா இது என்ன நிலை?
ப்ரம்ஹ சூத்திரத்துல என்ன சொல்றாங்கன்னா இது ஒரு "பாதி சுசுப்தி-ஆழ்துயில்" நிலை. இதோட தாத்பர்யம் என்னன்னா இது ஒரு ஸ்பெக்ட்ரம். நிச்சயமா இவ்வளவுதான்னு சரியா பிரிக்க முடியாது.
ஆழ்துயில்- சுசுப்தி நிலையிலே அந்தக்கரணமும் (அகங்காரமாய்), பிராணனும் மட்டுமே இயங்கும். மத்ததெல்லாம் இயங்காது. அதனால வலி தெரியாது. ரிப்லெக்ஸ் இருக்காது. அனெஸ்தீசியா ஆழ்துயில் போலத்தான். சாதாரணமா அதிலேந்து வெளி தூண்டுதலை அதிகமாக்கி எழுப்ப முடியும். இங்கே மருந்தோட விளைவால எழுப்ப முடியாது என்பதே வித்தியாசம்.
சிந்தனையை தூண்டியதுக்கு நன்றி!

---

மதியம் சனி, பிப்ரவரி 21, 2009
சத்துவ குணத்திலே படிகிற ப்ரம்ம சாயை
முதல்லே பாக்கபோறது சத்துவ குணத்திலே படிகிற சாயை என்ன ஆகிறது ன்னு.

நல்லா தெளிஞ்ச தண்ணீர் போல இது தோன்றும்.
சத்துவ குணத்தோடே விரவி கலந்து இருந்தாலும் குணங்களோடேயும் மாயையுடனும் ஒட்டாது. ஒரு க்ரிஸ்டல் துண்டு இருக்கு. அதுக்குன்னு ஒரு நிறமும் கிடையாது. பக்கத்திலே இருக்கிற பொருளோட வண்ணம் அதிலே தெரியும். அது போல இந்த நிழலும். தெரியும்; ஆனா ஒட்டாது.

இதுக்கு அந்தர்யாமி ன்னு பெயர். இது எல்லா சரீரங்கள் உள்ளேயும் இருக்கும். அதனாலதான் அந்தர்யாமின்னு பேர். ஜடமா இருக்கிற உடம்புக்கு உயிரோட்டம் கொடுத்து ஆட்டுகிறவன் இவனே. இவனை முன்னிட்டுதான் எல்லா செயல்களும் நடக்குது. இவனுக்கு பெயர் ஈசன் (ஈஸ்வரன்.)

இந்த ஈஸ்வரன் சிவன் இல்லை. அப்படி இங்கே தமிழ் நாட்டிலேதான் ஒரு மாயை இருக்கு. மத்த எல்லா இடத்திலேயும் இப்படி சொன்னா கடவுள் அப்படின்னுதான் புரிஞ்சுப்பாங்க.

32. முக்குணங்களால் ஜகஜீவ பரன் உற்பத்தி. முதலில் பரன் உற்பத்தி:

இக்குணங்களிலே விண்போன் றிருக்குஞ் சிற்சாயை தோன்றும்
முக்குணங்களி னுந்தூயதா முதற்குண மாயையாகும்
அக்குணப் பிரமச் சாயை யந்தரி யாமி மாயை
எக்குணங்களும்பற் றாதோ னிமித்தகா ரணனா மீசன்.

இக்குணங்களிலே (இந்த சத்துவம் முதலான குணங்களிலே) விண் போன்று (ஆகாயம் போல பிரியாமலும், எங்கும் நிறைந்தும், அதிசூக்குமமாயும், பற்றறும்) இருக்கும் சிற்சாயை (சித்தின் பிம்பம்) தோன்றும். முக்குணங்களினும் தூயதான முதற் குணம் மாயையாகும் [சத்துவம் மாயை எனப்படும்]. அக்குண (அந்த சத்துவத்தில்) பிரமச்சாயை (பிரதிபலிக்கும் பிரம சைதன்யத்தின் சொரூபம்) அந்தரியாமி [எனப்படும்]. {இந்த அந்தரியாமி காரண சரீரத்தை அபிமானித்துக் கொண்டு சகல சரீர உள்ளீடாக இருந்துகொண்டு ஆட்டுகிறவன்.} மாயை(யிலும்) எக்குணங்களும் (களிலும்) பற்றாதோன் (சம்பந்தப்படாதவன்) நிமித்த காரணனாம்; (யாருடைய சக்தியால் நடக்கிறதோ அவன் நிமித்த காரணன்) இவன் பெயர் ஈசன்.

கீழே ப்ரமத்திலேந்து மூல ப்ரக்ருதியும் அதிலேந்து 3 குணங்கள் வரது, சத்வ குணத்திலேந்து

---

மூன்று விதமா ஈசனின் வெளிப்பாடும் பரிசோதனையா போட்டு இருக்கேன். எப்படி வருமோ பாக்கலாம்.

---

மதியம் திங்கள், பிப்ரவரி 23, 2009

சூக்ஷ்ம சரீரம்.

சாதாரணமா நாம முழிச்சிட்டுதான் இருக்கோம். வாத்தியார் கணக்கு போட சொல்கிரப்பவும், டாமேஜர் வேலையை முடிச்சுட்ட இல்லன்னு கேட்கிரப்பவும் முழிக்கிற முழிப்பு இல்லே! நனவு! விழிப்பு. நம்ம சுத்தி என்ன நடக்குதுன்னு தெரிகிறது. ஆபத்து வராம ஜாக்கிரதையா இருக்கோம். அஹா! அதான் ஜாக்ரத் என்கிறது.

அப்புறம் வாத்தியார் பாடம் நடத்தறப்ப போர் அடிச்சுதுன்னாலும் ஆபீஸ்லேயும் சொகமா தூங்கறோம். அப்ப நம்ம அபிமான தேவதைகள் எல்லாம் வந்து டான்ஸ் ஆடறாங்க. இப்படி கனவு காண்றோம்! பின்ன நனவுலேயா வந்து ஆடுவாங்க? அம்பி, யாருப்பா நீ ன்னு கேப்பாங்க. இது கனவு நிலை.

நாலு நாள் முழிச்சி கோட் எழுதி ப்ராஜக்ட் முடிச்சு கொடுத்திட்டு ஒரு வழியா அப்பாடான்னு போய் தூங்கறோம். செம தூக்கம். ஒரு வழியா முழிச்ச பிறகு ரூம் மேட் என்னடா எப்படி இருக்கேன்னு கேக்கிறான். அடடா! செம தூக்கம். சொகமா தூங்கினேன் ஒரு கனா கூட கிடையாதுங்கிறோம். ம்ம்ம்ம்...விஞ்ஞானிகள் சொல்கிறாங்க; கனா காணாம யாருமே இருக்க மாட்டாங்க. அதை மறந்து போயிடுவாங்க. நம்ம ஜீவா மாதிரி முழுச்சுகிட்ட உடனே என்ன கனவு கண்டோம்ன்னு எழுதி வைக்கலைனா அது RAM ல இருந்த தரவு ஷட் டவுன் பண்ண கணினியிலே மறைஞ்சு போற மாதிரி மறந்து போயிடும்.
கனவு காணாமலும் பல நேரம் இருப்போம். இது ஆழ் துயில். இதுக்கு புரியாத மாதிரி பேர் வைக்கணும்நு சுசுப்தி என்கிறாங்க. சுழுத்தின்னும் சொல்வாங்க.

ஜாக்கிரதையோட இருக்கிற சமயம் நாம எதிரே ஆளை பாக்கிறோம். ஆளா? சாப்பாடால வளந்த உடம்புதான் முக்கியமா கண்ணுல படுது. அது என்ன? பாக்கிற ஆள் ராமன் நு வெச்சுப்போம். அந்த கை ராமனா? இல்லை. அந்த கால்? இல்லை. பின்னே? அந்த உடம்பை முழுக்க விவரிச்சாலும் அது ராமன் இல்லை. பின்னே? அது ராமனோட உடம்பு. அதாவது நாம பாக்கிரது சாப்பாட்டால வளர்ந்த ராமனோட உடம்பு. அன்ன மய கோசம். அன்னம் னா உணவு. ஆந்திரால இன்னும் சமைத்த அரிசி அன்னம்தான். தமிழ் வார்த்தையானாலும் நாம பயன்படுத்தறதில்லே! கோசம் ன்னா உறை. Cover.
இந்த பார்க்கக்கூடிய தொடக்கூடிய கண பரிமாணம் இருக்கிற உடம்பை தூல (ஸ்தூல) சரீரம் அப்படின்னும் சொல்கிறாங்க.

ஒருவர் இறந்து போனால் இந்த உடம்பு அப்படியேதான் இருக்கு, கொஞ்ச நேரமாவது. அப்புறம் கொஞ்சம் கொஞ்சமா அழுகி சிதைந்துபோகும். அதுக்கு முன்னாலே அதை கொண்டு எரிச்சுடுவோம் அல்லது புதைச்சுடுவோம். டாக்டர் வந்து பரிசோதனை பண்ணி பாத்துட்டு சினிமால வர மாதிரி கண்ணாடியை கழட்டிட்டு ஐ ஆம் சாரி ன்னுட்டு போயிடுவார். ஏன் நாம அழறோம்? ராமனோட உடல் அங்கேயே இருக்கே?
உடல் அங்கதான் இருக்கு. ஆனா இந்த உடல் பாக்க முடியாது, மூச்சுவிடாது, கை கால்கள் அசையாது. இந்த உடலால சிந்தனை பண்ண முடியாது.
அப்ப ஏதோ காணாம போச்சு! என்ன அது?
இப்ப செத்து போனா தூய தமிழ்லே டெத் ஆயிடிச்சுங்கிறோம். முன்னேயெல்லாம் ப்ராணன் போயிடுத்து ம்பாங்க. இந்த ப்ராணன் என்கிறது நம்ம உடம்பிலே சில வேலைகள் நடக்க தூண்டுதலா இருக்கிற சக்தி. அது செய்கிற வேலையை பொறுத்து அதுக்கு 5 அல்லது 10 பேர் உண்டு. பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் ன்னு 5. இதையே பிராண மய கோசம் - ஐந்து பிராணங்கள் உலவுகிற உறை என்கிறோம்.

---

இந்த ப்ராணன் போகு முன்னே கூட கை கால்கள் எல்லாம் செயலிழந்து போயிடும். இப்படி செயல் செய்கிரதெல்லாம் கர்ம இந்திரியங்கள் என்கிறாங்க. செத்துப்போனது என்ன சூப்பர் படமா இருந்தாலும் பாக்க முடியாது; ஓல்ட் ஸ்பைஸ் சென்டா இருந்தாலும் வாசனை நுகர முடியாது, டேய் ராமா ராமான்னு கரடியா கத்தினாலும் கேட்க முடியாது. அதாவது உணர்கிற -தெரிஞ்சுகிற சக்தி போச்சு. இப்படி உணர்கிறது ஞான புலன்கள். ஞான இந்திரியங்கள்.
செத்து போனது எதுவோ அது யோசிக்க முடியுமா? செத்து போயிட்டோம்ன்னு அழுமா? அடுத்த பிறவி எடுப்போம்ன்னு நிச்சயமா இருக்குமா? என்னென்ன இந்த வாழ்க்கையிலே சாதிச்சோம்ன்னு எண்ணுமா? நான் ன்னு ஒரு நினைப்பு அதுக்கு இருக்குமா?
ஏதும் இராது. இந்த விஷயங்களை அந்தக்கரணம் என்கிறோம். இந்த அந்தக்கரணம் காணாமல் போயிடும்.
இப்படி இருக்கிற உணர் கருவிகள், செயல் கருவிகள், வேலை செய்கிற சக்தி, அந்தக்கரணம் இதை எல்லாம் பாக்க முடியாதே! ஆனா ஆது எல்லாமே இருந்தது, செத்து போன பிறகு காணோம்ன்னு நமக்கு தெரியும். இப்படி பாக்க முடியாம இருக்கிறதை சூக்ஷுமமா இருக்கு என்பாங்க. இவை எல்லாமா சேர்ந்து ஒரு பேர். சூக்ஷ்ம சரீரம்.

---

மதியம் செவ்வாய், பிப்ரவரி 24, 2009

மீள் பதிவு -ஈசன்

உணர் கருவிகள், செயல் கருவிகள், வேலை செய்கிற சக்தி, அந்தக்கரணம் இதை எல்லாம் பாக்க முடியாதே! ஆனா ஆது எல்லாமே இருந்தது, செத்து போன பிறகு காணோம்ன்னு நமக்கு தெரியும். இப்படி பாக்க முடியாம இருக்கிறதை சூக்ஷுமமா இருக்கு என்பாங்க. இவை எல்லாமா சேர்ந்து ஒரு பேர். சூக்ஷ்ம சரீரம்.
---
இந்த சூக்ஷ்ம உடம்பு நாம் விழிச்சுகிட்டு இருக்கிறப்ப இருக்கும். செத்து போன பிறகு இருக்காது.
நடுவிலே தூங்கி கனவு காணும்போதும் இருக்கும். கனவு காணும்போது நம்ம எங்கோ போகிறோம், வரோம், ஆனா உடம்பு இங்கேயேதான் இருக்கு. அப்ப அன்ன மய உறை- தூல உடம்பு சும்மாதான் கட்டை மாதிரி கிடக்கு. ஆனா உணர் கருவிகள், செயல் கருவிகள், வேலை செய்கிற சக்தி, அந்தக்கரணம் எல்லாம் சேத்து- என்ன பேர் சொல்லுங்க? ஆங்! சூக்ஷ்ம சரீரம், அது இருக்கும். கனவிலே எங்கோ போகிறோம். கை கால்கள் வேலை செய்வதா உணர்கிறோம். நான் என்கிற நினைப்பும் இருக்கு. மூச்சு விட்டுகிட்டுதான் இருக்கோம்.
இந்த கனவு நிலையிலே - அவஸ்தையிலே- சூக்ஷ்ம - சூக்கும சரீரம் இருக்கும்.

தூங்கி கனவு கூட இல்லாத நிலையிலே நாம ஆனந்தமா இருப்போம். கனவிலே அப்படி சொல்ல முடியாது. பயங்கர கனவு வந்து கஷ்டப்பட்டாலும் படுவோம். சுகமான கனவுகளும் வரலாம். ஆனா ஆழ் துயிலுக்கு பின்னே முழுச்சுகிட்டு அருமையான தூக்கம் சொகம் என்போம். இதுவே ஆனந்த மய கோசம்..
=============
பரப்பிரம்மத்திலேந்து பிரிஞ்ச சத்துவம் ஈசன் ன்னு பாத்தோம். இது ஆழ்துயில் போல- சுசுப்தி நிலை. இந்த உலகம் தோன்ற காரணமா இருக்கிறதால காரண சரீரம். வெளியே ஈசனா இருந்து கொண்டு உள்ளே தான் பிரம்மத்திலேயே லயிச்சு ஆனந்தமா இருக்கிறதால ஆனந்த மய கோசம்.
அது எப்படி வெளியே ஈசன், உள்ளே பிரம்மம்ன்னா...

சினிமா பாக்கிறோம். இது உண்மையில்லை சினிமாதான் ன்னு தெரிஞ்சு கொண்டு அப்போவும் அதை ரசிச்சு பாக்கலாம். இல்லை அதோட ஒன்றிப்போய் அதிலே வர சுக துக்கங்களோட நாமும் சுகப்பட்டு துக்கப்பட்டு... புரியுது இல்லையா? ஈசனுக்கு உள்ளுக்குள்ளே - தான் பிரம்மம்ன்னு தெரியும். சினிமாதான் பாக்கிறோம், இது உண்மையில்லை என்கிறது போல. நமக்கு அப்படி தெரியாது, சினிமாலேயே ஒடுங்கி போனது போல.

இனிப்பிலேயே சர்க்கரை இனிப்பு, மாம்பழத்தின் இனிப்பு, மாவு பண்டங்களோட அசட்டு இனிப்பு ன்னு பலவிதமா இருக்கே! முதலாவது திகட்டிடும். இரண்டாவது நிறையவே சாப்பிடலாம். திகட்டாது. மூணாவது இனிப்பிலே சேத்தியாங்கிற அளவு கம்மியாவே இனிப்பு.

அது போல இந்த சத்துவத்திலேயே இன்னும் அதிக பிரிவா சத்துவம் ராஜசம் தாமசம் ன்னு பிரியும்.
முன்னேயே ஒரு வாக்கியம் பாத்தோம். முக்குணங்கள் இருந்தாலும் ஒவ்வொரு சமயம் ஒவ்வொண்ணு தலைதூக்கும்.
ஈஸ்வரனா இருக்கிற பிரம்மம் ஒண்ணேதான். இருந்தாலும் ஈஸ்வரன் நேரம் செயல்களுக்கு தகுந்தாப்போலே பலதா இருப்பான்.

ராஜசம் அதிகமாகும் போது பிரம்மனா இருந்து படைக்கிறான்.
சத்துவம் அதிகமாகும் போது விஷ்ணுவா இருந்து காக்கும் தொழில் செய்யறான்.
தாமசம் அதிகமாகும் போது சிவனா இருந்து அழிக்கும் தொழில் செய்கிறான்.

[சைவர்கள் சிவனுக்கே 5 தொழில்ன்னு சொல்லி இதை எல்லாமே சேத்துடுவாங்க. அப்படி சொல்கிறபோது அவங்க சிவன் என்கிற பேரிலே பரம்பொருளைத்தான் சொல்கிறாங்க. அதே போல சாக்தர்களும், வைணவர்களும். அழைக்கிற பொருள் ஒண்ணே; பெயர்தான் வேற வேற. விநாயக புராணம் பாத்தா அவரே முழுமுதற் கடவுள்ன்னு சொல்லும். சிவ புராணம் பாத்தா சிவன்தான் முதல்லே. இப்படியே மத்தது எல்லாமும். படிக்கிறவங்களுக்கு புரியணும், குழம்பக்கூடாதுன்னு இப்படி சொல்லி இருக்கு. ஆனா நாமோ எல்லாத்தையுமே படிச்சுட்டு குழம்பறோம்! பல வழிகளிலே ஒரே நேரத்துக்கு போகப்பாக்கிற மாதிரி இது!]

{பரப்பிரம்மத்தின் சத்துவ பாகத்தில் இருந்து ஈஸ்வரன் என்கிற கடவுள் தோன்றினார். அவரே மூன்று விதமாக செயல்படுகிறார். அப்போது அவருக்கு பெயரும் மாறுகிறது.}

---

மதியம் புதன், பிப்ரவரி 25, 2009

மீள் பதிவு -பரப்பிரம்மத்திலேந்து வருகிற ராஜச குணம்

அடுத்து பரப்பிரம்மத்திலேந்து வருகிறது ராஜச குணம். இதுக்கு அவித்தை, அசுத்த மாயை, அஞ்ஞானம் அப்படி எல்லாம் பேர் உண்டு. இதுல பிரதி பலிக்கிற பிரம்மத்தின் சாயை எப்படி பரிணாம மாற்றம் ஆகுதுன்னா இந்த கணக்கில்லாத சீவர்களா ஆகும். இந்த சீவர்களுக்கு பிரஞ்ஞானன் ன்னு பெயர்.
சிவனே ன்னு கிடக்கிற சத்வம் இறைவனாகவும், எப்பவும் ஏதாவது செஞ்சுகிட்டே இருக்கிற ராஜசம் இந்த இயல்புடைய மனிதர் (ஜீவன்கள்) ஆகவும் ஆகிறது புரிஞ்சுக்க முடியுதுதானே?

33.
ஈசனுக் கிது சுழுத்தி யிதுவே காரண சரீரம்
கோசமா னந்தமாகுங் குணமிரா சதம வித்தை
தேசறு மவித்தை தோறுஞ் சிற்சாயை சீவகோடி
நாசமா முயிர்க்கப் போது நாமமும் பிராஞ்ஞனாமே

ஈசனுக்கு இது (இந்த சுத்த மாயையே) சுழுத்தி. இதுவே காரண சரீரம்; ஆனந்த மய கோசம் ஆகும்.

இரண்டாம் குணம் இராசதம் (ராஜஸம்). [அவித்தை, அசுத்த மாயை, அஞ்ஞானம் எனவும் பெயர்கள் உண்டு]. தேசறு (விளக்கமில்லாத) அவித்தை தோறும் (பிரதிபலித்த) சிற்சாயை (சித்தின் நிழல்) சீவகோடி(சீவன்). நாசமாகும் இந்த சீவ உயிர்க்கு அப்போது நாமமும் (பெயரும்) பிராஞ்ஞனாமே. (பிரஞ்ஞானன் ஆகும்).

இப்படி உண்டாகிற சீவர்களுக்கு அந்த ராஜஸ குணமே ஆநந்த கோசம்; சுழுத்தி; காரண

சரீரம். அதாவது சீவர்கள்தான் ராஜசம்; ராஜசம்தான் சீவர்கள்.

வித் என்பது ஞானம். அவித்தை ஞானமல்லாதது, அதாவது அஞ்ஞானம். இந்த அஞ்ஞானத்திலேயே இருக்கிறதுதானே சீவர்களாகிய நம்மோட இயல்பு? அவித்தை கணக்கில்லாம இருக்கிறது. உண்மை ஒண்ணுதான். பொய் பலவாகவும் இருக்குமில்லையா? அது போல. இப்படி கணக்கில்லாம இருக்கறதால கணக்கில்லாத வகை சீவர்களையும் நாம் பாக்கலாம்.

ஈசன் சத்வத்திலே விஷ்ணு, ப்ரம்மா, ருத்திரன் ஆக சத்வ, ராஜச, தாமசம் வெளிப்பட்டாப்போல சீவர்களிலேயும் இதே போல பிரிவுகளை பாக்கலாம்.
சத்துவம் அதிகமாகும் போது ஞானத்திலே நாட்டம் இருக்கிறவங்களா இருப்பாங்க. ஆன்மீக பதிவுகள் எழுதுவாங்க; ஆன்மீகம் பார் டம்மீஸ் படிப்பாங்க. :-)
ராஜசம் அதிகமாகும் போது சீவர்கள் எப்பவும் வேலை செய்கிறவங்களா இருப்பாங்க. உலகமே இவங்களாலதான் இயங்குது!
தாமசம் அதிகமாகும் போது சோம்பி திரிஞ்சு மயக்கத்தோட காலம் போக்கறவங்களா இருப்பாங்க.

முன்னம் சொன்னது போல எல்லாருக்குமே ஒரு குணம் அதிகமானாலும் மற்ற 2 குணங்களும் கொஞ்சம் கொஞ்சமாவது இருக்கத்தான் செய்யும்.

34
அழுக்கொடு பற்றுஞ்சீவர்க் கதுவேயா நந்தகோசம்
சுழுத்திகா ரணசரீரஞ் சொன்னதிம் மட்டுமோக
முழுக்குணத் திரண்டால் வந்த மூலவாரோபஞ் சொன்னோம்
வழுத்துசூக் குமவாரோப வழியுநீ மொழியக்கேளாய்

அழுக்கொடு (அவித்தையுடன்) பற்றும் (அவித்தையில் பொருந்தும்) சீவர்க்கு அதுவே (அந்த அவித்தையே) ஆநந்த கோசம்; சுழுத்தி; காரண சரீரம். சொன்னது இம் மட்டும் (இவ்வளவும்) மோக (மயக்கமாக தோன்றிய பிரக்கிருதியின்) முழுக்குணத்து இரண்டால் (சத்துவ, ரஜோ குணங்கள்) வந்த மூல ஆரோபம் (காரண அத்தியாசம்) சொன்னோம். வழுத்து (கூறாத) சூக்கும ஆரோப வழியும் மொழிய நீ கேளாய்.

{ஸ்படிகம் அடுத்த வண்ணம் ஆவது போல அவித்தை. அவித்யா காரியங்களில் பொருந்துதலால் அது சீவனின் இயல்பும் ஆனதால் "அழுக்கொடுபற்றும்". சுழுத்தி சுகத்தையும் ஜாக்ரத் ஸ்வப்ன அவஸ்தைகளில் பிரியம், மோதம், பிரமோதம் முதலான சகத்தை அனுபவிப்பதால் "ஆனந்த மய கோசம்". ஜக்ரத் ஸ்வப்ன அவத்தை அடங்கியிருத்தலால் "சுழுத்தி". சீவன் தோன்றினதற்கும் ஸ்தூல சூட்சும சரீரம் உண்டாவதற்கும் மூலம் ஆகையால் "காரண சரீரம்".}

---

மதியம் வியாழன், பிப்ரவரி 26, 2009

மீள் பார்வை- தாமச குணத்திலே படிகிற ப்ரம்ம சாயை

சரி அடுத்து தாமசம் என்கிற தமஸ்.

[மூல புத்தகத்திலே கொஞ்ச தூய தமிழா இருக்கு. ராசதம் ன்னு சொன்னா ராஜசம். மூலத்தை மாத்துக்கூடாது என்கிற கொள்கையாலே அப்படியே போடறேன். குழம்ப வேண்டாம்.]

சத்வ ஈசன் ஜீவர்களை படைச்சுட்டான். இந்த ஜீவர்களுக்கு புழங்கவும் வேலை செய்யவும் அனுபவிக்கவும் ஏதோ ஒரு களம் (field) வேணுமே! அந்த களம் இந்த தமஸாலதான் உருவாகும்.
ஆமாம் தமஸோமா ஜ்யோதிர் கமய ´தமஸ்´ தான்.

இந்த தமோ குணத்திலே பிரதி பலிக்கிற பிரம்மத்தின் சாயை இரண்டா பிரியும். ஒண்ணு ஆவரணம். இரண்டாவது விட்சேபம். (விக்ஷேபம்)
ஆவரணம் என்கிறது மறைப்பு. விட்சேபம் என்கிறது பல வகையா தோன்றுகிற விஷயம்.

ஆவரணம்ன்னா மறைப்பு. எந்த சக்தி நாம நம்மை சரியா, உண்மையா பாக்க முடியாம மறைக்கிறதோ அதுதான் ஆவரண சக்தி. இதோட சேட்டையாலதான் நாம ப்ரம்மம்ன்னு தோணாம வேற மாதிரி தோணுது. என்னதான் முயற்சி பண்ணாலும் அந்த நினைப்பை நீக்க முடியலியே! அது அவ்வளோ பவர்புல்! அனுபவத்திலே நம்ம மனசிலே இருக்கிற ஆசாபாசங்களுக்கும், உணர்ச்சிகளுக்கும் இதுவே காரணம்,
இந்த ஆவரணம் போச்சுனாலே ஞானம் வந்துடும். ஆனா அவ்வளோ சுலபமில்லையே!

இரண்டாவதான விட்சேபம் சுவாரசியமானது!
ஆங்கிலத்துல multiplicity of phenomenon.
இந்த உலகம் பலவிதமா இருக்கு. மனிதர்களையே எடுத்துக்கலாம். ஒத்தர் மாதிரி ஒத்தர் இல்லே. தோற்றத்துல அப்படி இருந்தாக்கூட குணத்தில அப்படி இல்லே. இரட்டையர்கள் கூட கொஞ்சமாவது வித்தியாசமானவர்கள்தாம்.
அப்புறம் எத்தனை எத்தனை மிருகங்கள், தாவரங்கள்... தெரிந்தது, தெரியாதது. உலகம் பலவிதமா இருக்கு. அதோட...

இந்த உலகம் மாறிட்டே இருக்கு. ஒரு கணத்திலே இருந்தது அடுத்த கணம் இல்லை. மாலை சூரியன் அஸ்தமிக்கிறப்ப பாருங்க. வண்ணக்கோலங்களை மாறிட்டே இருக்கிறதை!
நாமும் ஒரு செகண்ட் இருக்கிறாப்பல அடுத்த செகண்ட் இல்லை. உடம்பில பல செல்கள் செத்து பலது புதுசா உருவாகிகிட்டு இருக்கு!
இன்னிக்கி பாத்த வானம் நாளை அதே போல இல்லை. தாவரம் அதே போல இல்லை.

உலகம் பலவிதமா தோணுகிறதும் இப்படி எல்லாமே புதுசு புதுசா விதவிதமா மாறிகிட்டே இருக்கிறதும் விட்சேப சக்தியாலதான்.
ரெண்டுமே தாமசத்திலேந்து வந்தாலும் ஆவரணம் பொல்லாது விட்சேபம் நல்லது. ஏன்னு அப்புறம் பாக்கலாம்.

35.
சீவ ஈஸ்வரர்களுக்கு சூட்சும சரீராதி உண்டான முறைமை கூறத்துவங்கி முதலில் சக்திகளின் தோற்றம் சொல்லல்:

ஏமமா யாவினோ தவீசனா ரருளி னாலே
பூமலி யுயிர்கட் கெல்லாம் போகசா தனமுண் டாகத்
தாமத குணமி ரண்டு சத்தியாய்ப் பிரிந்து தோன்றும்
வீமமா மூட லென்றும் விவிதமாந் தோற்ற மென்றும்.

ஏம மாயா வினோத ஈசனார் அருளினாலே, பூமலி (பொலிவு மிகுந்த) உயிர்கட்கு எல்லாம் போக சாதனம் (ஆன சூக்கும தேகம்) உண்டாக தாமத குணம் இரண்டு சக்தியாய் பிரிந்து தோன்றும். வீமமா (பயங்கரமான) மூடல் (ஆவரணம்) என்றும் விவிதமாம் தோற்றம் (விட்சேபம்) என்றும்.
தாத்பர்யம்: சித்தின் நிழல்தங்கிய தமோ குணமானது அறிவு விளங்காததாகிய ஆவரண சக்தியாகவும் அறிவு விளங்குவதாகிய விட்சேப சக்தியாகவும் தோன்றியது.

சரி, சீவன் வந்தாச்சு. அவனுக்கு வேலை செய்ய சக்திகளும் சாதனங்களும், விஷயங்களை உணர ஞான புலன்களும் வந்தாச்சு. ஆனா எதை உணர முடியும்? எதில எப்படி எதுக்கு வேலை செய்யணும். அதுக்கு ஏதோ சமாசாரம் வேணுமே? அதுக்குத்தான் விட்சேப சக்தி இருக்கு.

அப்படி என்ன படைச்சு இருக்கு? நம்மோட உடம்பு (சுவரை வெச்சுதானே சித்திரம் எழுத?) அந்தக்கரணங்கள் (இது வழியாதான் மோட்சத்துக்கு வழியை தேடணும்) புவனங்கள் - அதாங்க உலகங்கள் (இல்லாட்டா எங்கே வாழறது?) போகங்கள் (உடல்லே உயிர் தங்கணுமே?) இந்த விட்சேப சக்தியால சீவர்கள் அஞ்ஞானம் ஒழிஞ்சு மோக்ஷம் அடைய எது தேவையோ அதை எல்லாம் பகவான் படைச்சு இருக்கான். இதனால்தான் ஆவரணம் மோசம்; விட்சேபம் நல்லதுன்னு சொல்கிறது.

சரி. இப்ப இதெல்லாம் எப்படி தோன்றியது? இதுக்கு ப்ரம்மத்தோட சங்கல்ப மாத்திரத்திலேயே எல்லாமே பட்டுனு வந்துடுத்து என்கிறவங்கலும் இருக்காங்க. சிலர் வெவ்வேறு விதமா பதில் சொன்னாலும் இப்ப பாக்க போகிறது பரவலா ஒத்துகிட்டது.
முதல்லே பகவான் விட்சேப சக்தி மூலமா ஆகாயத்தை படைத்தான். அதிலேந்து வாயு. வாயுலேந்து அக்னி. அக்னிலேந்து நீர். நீரிலேந்து மண்.
இதெல்லாம் நாம இப்ப பாக்கிற மாதிரி இல்லை. அதெல்லாம் அப்புறமா வரும். இப்ப இதெல்லாம் சூக்ஷமமா இருக்கு. பாக்க முடியாம... அதாவது பருப்பொருள் (solid) உருவாகாம அதுக்கான சக்தி தன்மை உருவாயிட்டது.

--

மதியம் வெள்ளி, பிப்ரவரி 27, 2009

மீள் பார்வை - பஞ்ச பூதங்கள்

முதல்லே பகவான் விட்சேப சக்தி மூலமா ஆகாயத்தை படைத்தான்.
அதிலேந்து வாயு.
வாயுலேந்து அக்னி.
அக்னிலேந்து நீர்.
நீரிலேந்து மண்.

இதெல்லாம் நாம இப்ப பாக்கிற மாதிரி இல்லை. அதெல்லாம் அப்புறமா வரும். இப்ப இதெல்லாம் சூக்ஷமமா இருக்கு. பாக்க முடியாம... அதாவது பருப்பொருள் (solid) உருவாகாம அதுக்கான சக்தி தன்மை உருவாயிட்டது.
இதுக்கெல்லாம் இப்ப பேர் சூக்கும பஞ்ச பூதங்கள் அல்லது தன் மாத்திரைகள்.

மாத்திரைகள்? இல்லை இல்லை நம்ம சாப்பிடற மாத்திரை இல்லை. குழப்பமா இருந்தா இந்த தன்மாத்திரையை விட்டுடலாம். பஞ்ச பூதங்கள் நமக்கு ஏற்கெனெவே தெரிஞ்சதால அதையே வெச்சுக்கலாம். இவை சூக்கும பஞ்சபூதம் நாம பாக்கிற பஞ்சபூதம் இல்லைன்னு நினைவிருந்தா போதும்.
ஆனா
ஒண்ணுக்குள்ள ஒண்ணா இவை இருக்கும்.
ஆகாசத்திலே வாயு முதலான மத்தது நாலும் இருக்கும். வாயுவிலே அக்னி முதலா மத்தது மூணும் இருக்கும்...இப்படியே...
இப்படி ஒண்ணுலேந்து ஒண்ணு வந்ததாலே ஒவ்வொன்னும் அது வந்து இருக்கிற கிரமப்படி மத்த தன்மாத்திரைகளோட குணமும் கொண்டு இருக்கும்.
குழப்பிட்டேனா?

ஆகாசத்தின் குணம் எல்லாத்துக்கும் இடம் தருவது.
வாயுவுக்கு இந்த குணமும் உண்டு. மேலும் அதோட இயற்கையான சலன குணமும் உண்டு.
அக்னிக்கு மேலே கண்ட இடம் தருதல், சலித்தல் கூட அதோட குணமான உருவமும் உண்டு.
நீருக்கு மேலே கண்ட இடம் தருதல், சலித்தல், உருவம் கூட அதோட குணமான ருசியும் உண்டு.
மண்ணுக்கு மேலே கண்ட இடம் தருதல், சலித்தல், உருவம் ருசி, கூட அதோட குணமான மணம் உண்டு.

இவற்றினால அனுபவிக்கிற சாதனமான தநு - சூட்சும உடல்கள் உண்டாகும்.

36.
விட்சேப சக்தியில் தன் மாத்திரையான சூட்சும பூத உற்பத்தி கூறல்.

தோற்றமாஞ் சத்திதன்னிற் சொல்லிய விண்ணாம் விண்ணிற்
காற்றதாங் காற்றிற்றீயாங் கனலினீர் நீரின்மண்ணாம்
போற்றுமிவ் வைந்துநொய்ய பூதங்களென்று பேராம்
சாற்றுமற் றிவற்றிற்போக சாதனதநு வுண்டாகும்

[முன்] சொல்லிய தோற்றமாம் சத்திதன்னில் (விட்சேபசக்தியில்) (சத்தத்தின் மாத்திரையான) விண்ணாம்; விண்ணிற் (ஸ்பரிசத்தின் மாத்திரையான) காற்றதாம்; காற்றின் (ரூபத்தின் மாத்திரையான) தீயாம்; கனலின் (ரஸத்தின் மாத்திரையான) நீர்; நீரின் (வாசனையின் மாத்திரையான) மண்ணாம். போற்றும் இவ்வைந்தும் (இந்த 5 தன் மாத்திரைகளும்) நொய்ய (சூட்சுமமான) பூதங்கள் என்று பேராம். சாற்றும் இவற்றில் போக சாதன[மான] தநு (சூட்சும தேகங்கள்) உண்டாகும்.

[விட்சேப சக்தியில் இருந்து பஞ்ச பூதங்களின் தன்மைகள் உண்டாகும்]
--
தன் மாத்திரைகளுக்கு காரணமான சத் ரஜஸ் தமஸ் முதலான 3 குணங்களும் இந்த சூக்கும பஞ்ச பூதங்கள் (அதாவது இந்த தன்மாத்திரைகள்) ஐந்திலும் தொடர்ந்து கூடி நிற்கும்.

அதாவது சத்வம் ரஜஸ் தமஸ் சேர்ந்து இருந்து வித்தியாசப்படுத்தும்.

முன்னே சத்வத்திலே சத்வம் விஷ்ணு, சத்வத்திலே ராஜசம் ப்ரம்மா, சத்வத்திலே தாமசம் ருத்திரன் ன்னு சொன்னது போல..

இப்ப தாமசத்தின் ஒரு பகுதியான விட்சேபத்திலேயும் இதே போல வித்தியாசம். ஒவ்வொரு தன்மாத்திரையுடனும் இந்த சத்வ, ரஜ, தமஸ் குணங்கள் சேர்ந்து இருந்து வித்தியாசப்படுத்தும்.

அதோட இல்லாம 5 தன் மாத்திரைகளும் தனியாகவும் கூட்டாகவும் இருந்து வெவ்வேறு விதமா வெளிப்படும்.
தனியா நிக்கிறதை வியக்தி ன்னும் கூட்டு போட்டு இருக்கிறதை சமஷ்டி ன்னும் சொல்வாங்க.
அதாவது வியக்தி தனி மரம் போல; சமஷ்டி தோப்பு போல.

---

மதியம் திங்கள், மார்ச் 2, 2009

மீள் பார்வை -சத்வ குணத்திலே 5 தன்மாத்திரைகள் ஞான இந்திரியங்கள்

5 தன் மாத்திரைகளும் தனியாகவும் கூட்டாகவும் இருந்து வெவ்வேறு விதமா வெளிப்படும்.
தனியா நிக்கிறதை வியக்தி ன்னும் கூட்டு போட்டு இருக்கிறதை சமஷ்டி ன்னும் சொல்வாங்க.
அதாவது வியக்தி தனி மரம் போல; சமஷ்டி தோப்பு போல.

சரியா?
சத்வ குணத்திலே 5 தன்மாத்திரைகளும் கூடி இருந்து அந்தக்கரணம் உருவாகும்.
சத்வ குணத்திலே 5 தன்மாத்திரைகளும் பிரிந்து இருந்து ஞான இந்திரியங்கள் - புலன்கள் உருவாகும்.

அந்தக்கரணம் பத்தி இங்கே பாத்தோம். இது ஒண்ணே ஆனாலும் செய்கிற வேலையின் தன்மை படி ஐந்தா இருக்குன்னு பாத்தோம். அதான் சமஷ்டி சமாசாரம்!

ஞான இந்திரியங்கள் அஞ்சு.
காதின் கேட்டல் ஆகாய சத்வ குணம்.
தோலின் தொடுணர்ச்சி வாயுவின் சத்வ குணம்.
கண்களோட பார்த்தல் அக்னியின் சத்வ குணம்.
நாக்கோட ருசித்தல் நீரோட சத்வ குணம்.
மூக்கின் நுகர்தல் மண்ணின் சத்வ குணம்.

நாம நினைவு வைக்க வேண்டியது இதெல்லாம் நாம் பார்க்கிர கண் காது மூக்கு இல்லை.
கண் இருந்தாலும் பாக்கமுடியாம இருக்கலாம். காது இருந்தாலும் கேட்க முடியாம இருக்கலாம்.
அதே போல வாசனை தெரிய முடியாம இருக்கலாம். இது பிறவிலேந்தும் இப்படி குறை இருக்கலாம். அல்லது பிற்காலத்திலும் ஏற்படலாம்.
பின்னே கண் காது மூக்கு இருந்தும் எப்படி அதெல்லாம் இயங்கலை?

நம் நாட்டு தத்துவப்படி கண் சும்மா பாக்காது. காது சும்மா கேட்காது. அந்தந்த புலன்கள்லேந்து ஒரு சக்தி கிளம்பி பொருளை தொடணும். தொட்டு திரும்பி அதே புலனுக்கு வரணும்.
அப்பதான் அந்த செயல் பூர்த்தி ஆகும்.
இந்த ஏதோ ஒரு சக்திதான் மேலே பார்த்தல் கேட்டல் ன்னு பாத்த சத்வ குண சக்தி.
ஞான புலன்கள் இந்த சக்திகள்தான்.

இந்த அந்தக்கரணங்களும் ஞான இந்திரியங்களும் சத்வ குணத்திலேந்து வந்ததாலே ஞானத்துக்கு சாதனமா - ஞானம் அடைய உதவுகிற கருவிகளா- ஆகும்.

37.
தன் மாத்திரையின் சத்துவ குணத்தில் அந்தக்கரண ஞானேந்திரிய உற்பத்தி:

ஆதிமுக் குணமிப் பூத மடங்கலுந் தொடர்ந்து நிற்கும்
கோதில்வெண் குணத்தி லைந்து கூறுணர் கருவியாகும்
ஓதிய பின்னை யைந்து முளம்புத்தி யிரண்டா ஞான
சாதன மாமிவ் வேழுஞ் சற்குணப் பிரிவி னாலே

ஆதிமுக்குணம் (தன் மாத்திரைகளுக்கு காரணமான சத் ரஜஸ் தமஸ் முதலான 3 குணங்களும்) இப்பூத மடங்கலும் (இத் தன்மாத்திரைகள் ஐந்திலும்) தொடர்ந்து (கூடி) நிற்கும். கோதில் (குற்றமில்லாத) வெண் குணத்தில் (சத்துவத்தில்) ஐந்து கூறு உணர் கருவியாகும். (ஞானேந்திரியங்கள்). ஓதிய (சொல்லப்பட்ட) பின்னை ஐந்தும் உளம் புத்தி இரண்டாம் (மனம் புத்தி எனும் இரு பரிணாமம் உடைய அந்தக்கரணமாம்). இவ்வேழும் சற்குணப் பிரிவினாலே (சத்துவ குண அம்சமானதால்) ஞான சாதனமாம் (ஞானேந்திரியங்கள், அறி கருவிகள்).
--
நினைவுறுத்தல்: தன்மாத்திரைகள் ஐந்து- ஆகாயம், வாயு, அக்னி, நீர், மண். ஞானேந்திரியங்கள் ஐந்து- காது, மூக்கு, கண், நாக்கு, தோல்

---

மதியம் செவ்வாய், மார்ச் 3, 2009

மீள் பார்வை - தன் மாத்திரையின் ரஜோ குணம்

சரி, அப்ப தன் மாத்திரையின் ரஜோ குணம்?
ரஜோ குணத்திலே 5 தன்மாத்திரைகளும் கூடி இருந்து ப்ராணன் முதலான 5 வாயுக்களும் உண்டாகும்.
ரஜோ குணத்திலே 5 தன்மாத்திரைகளும் பிரிந்து இருந்து கர்ம இந்திரியங்கள் உருவாகும்.

ரஜோ குணம்னாலே செயல்தான் நினைவு வரணும்.
செயலுக்கு மூச்சு அவசியம் இல்லையா? அதாவது ப்ராண வாயு அவசியம். அதான் பஞ்ச

ப்ராணன்கள்.
அதே போல செயலுக்கு கருவிகள் அவசியம். அதான் கர்ம இந்திரியங்கள்.
சரியா போச்சா?

பஞ்ச ப்ராணன்கள்.
பிராணன் முதலான வாயுக்கள் 5.
கூட்டால உண்டானாலும் அந்த அந்த தன் மாத்திரையோட குணம் இருக்கும்ன்னு பாத்தோம் இல்லையா?
1.வியானன் - ஆகாயத்தின் ரஜோ குணத்தில பிறந்த இது ஆகாயம் எல்லா இடத்திலேயும் வியாபித்து இருக்கிறது போல உடம்பு முழுக்க வியாபித்து, ரத்தத்தை பரவ செய்து உடம்பை தாங்கி நிற்கும்.
2.பிராணன் - வாயுவோட ரஜோ குணத்தில உற்பத்தியானது. அதனால எப்போதும் உள்ளும் வெளியும் போய் வந்து கொண்டே இருக்கும். ஹ்ருதயத்திலே தங்கி எப்பவும் நகர்ந்து கொண்டு பசி, தாகம் இதையெல்லாம் உண்டாக்கும். இன்னும் சாப்பிடவே இல்லை; பசி பிராணன் போகிறது ன்னு கேட்டு இருக்கோம் இல்லையா? வெளியேந்து காற்றை உள் வாங்குகிறதும் இதுவே. மொத்தத்திலே மெடபாலிஸம் கவனிக்கறது முக்கியமா இதே.
3.அபானன் - நெருப்பின் ரஜோ குணம். அதோட ஒரு குணம் எதானாலும் சுத்தப்படுத்தறது இல்லையா? அதே போல இது மல ஜலாதிகளை வெளியே தள்ளி சுத்தப்படுத்திடும். மலச்சிக்கல் வராம இருக்க இது சரியா வேலை செய்யணும்.
4.சமானன் - நீர் தத்துவம். இதோட இடம் நாபி (தொப்புள்). நாம சாப்பிட்ட உணவு, குடிச்ச நீர் இதை எல்லாம் உள்வாங்கி செரிக்க வைக்கும். இது சரியா இல்லைனா அஜீரணம்தான், உடம்பு சரியா வளரவும் வளராது.
5.உதானன் மண்ணோட ரஜோ குணத்திலேந்து வந்தது. கண்டம் (தொண்டை) யிலே இருந்து காத்து உள்ளே வெளியே போவதை கட்டுப்படுத்தும். அதுதான் பேச்சுக்கு முக்கியம் இல்லையா?

இந்த அஞ்சு தவிர இன்னும் அஞ்சு உபவாயு இருக்குன்னு ஒரு பார்வை.
நாகன் - உடம்பை முறுக்கி ஆவ் ன்னு கொட்டாவி விடறப்ப இது வேலை செய்யுதுன்னு தெரிஞ்சுக்கலாம்.
கூர்மன் -விக்கலும் ஏப்பமும் வந்தா இதோட வேலைன்னு அறிவோம்.
கிரிகரன் - ஹச் (இல்லைங்க, செல் போன் கம்பெனி இல்லை, தும்மல்) உண்டாக்கறது இது.
தேவதத்தன் - சிரிக்கிறப்பவும், சோகப்படறப்பவும் சினிமாவிலே கதாநாயகி அழுது மூக்கை சிந்தி போடறப்பவும் - இது சுறுசுறுப்பா இருக்கு.
தனஞ்செயன்- நம்ம பிராணன் போன பிறகு உடம்பிலே தங்கி இருந்து 5 ஆவது நாள்ல அதை வீங்கி வெடிக்கப்பண்ணுவது.
இந்த 5 உபவாயுக்களும் பிராண வாயுவோடா வெவ்வேற நிலைதான், அதனால வாயுக்கள் அஞ்சுதான் ன்னும் சொல்கிறாங்க.

தனித்தனியா நின்னு வேலை செய்கிற தன் மாத்திரைகளோட ரஜோ குணம் என்ன ஆகுது? கர்ம இந்திரியங்களா.
தனித்தனியா என்கிறதால வெவ்வேற இடங்கள்ல இருந்து கொண்டு வேலை செய்யும்.

கர்ம இந்திரியங்கள் ஐந்து:
1.வாக் - ஆகாய ரஜோ குணம். ஆதனால ஆகாயத்திலே பேச்சு பரவும்.
2.கை - வாயுவோட ரஜோ குணம். சலித்துகிட்டே இருக்கணும். ஏண்டா கை வெச்சுகிட்டு சும்ம இருக்க முடியாதுன்னா, ஆமாம்! அதோட இயபான குணம் அது!
3.கால் - அக்னியோட ரஜோ குணம்.
4.பாயுரு - ஜல மலம் கழிக்கிற வேலை. நீரோட குணம். ஓடிகிட்டே இருக்கணும். அதே போல கழிவுப்பொருள் வெளீயே போய்கிட்டே இருக்கணும். இல்லாட்டா பிரச்சினைதான்!

5.உபஸ்தம் - ஆண் குறி/ பெண் குறி : மண்ணோட ரஜோ குணம். ஆனந்தத்தை உண்டாக்கும்.

இந்த பதினேழும் அதாவது ஐந்து ஞானேந்திரியங்கள் + மனம் + புத்தி + ஐந்து வாயுக்கள், ஐந்து கர்மேந்திரியங்கள் = பதினேழு தத்துவங்களும், சுரர் அசுரர் நரர் விலங்குன்னு தோன்றி இருக்கிற உயிர்களுக்கு எல்லாம் (சீவர்க்கெல்லாம்) சூட்சும சரீரங்கள்.

முன்ன சொன்ன மாதிரியே இதெல்லாம் நாம பாக்கிற கை கால் இல்லை. அவற்றை இயக்கற சக்திகள்.

38.
இராசத குணத்தில் வேறிட் டெடுத்தகூ றைந்து மைந்தும்
பிராணவா யுக்களென்றும் பெருந்தொழிற் கருவியென்றும்
பராவிய பெயரா மிந்தப் பதினேழு மிலிங்க தேகம்
சுராசுரர்நரர் விலங்காய்த் தோன்றியவுயிர் கட்கெல்லாம்.

இராசத (ரஜோ) குணத்தில் எடுத்த (எடுத்து ஒன்றாக்கிய) கூறு ஐந்தும் பிராண வாயுக்கள் என்றும், வேறிட்டு எடுத்த (தனித்தனியே எடுத்து வைத்த) ஐந்தும் பெருந் தொழிற் கருவி (கர்மேந்திரியங்கள்) என்றும் பராவிய (பரவிய) பெயராம். இந்த பதினேழும் (ஞானேந்திரியங்கள் ஐந்து + மனம் + புத்தி + ஐந்து வாயுக்கள் + ஐந்து கர்மேந்திரியங்கள் = பதினேழு தத்துவங்களும்) சுரர் அசுரர் நரர் விலங்காய் தோன்றிய உயிர்கட்கு எல்லாம் (சீவர்க்கெல்லாம்) இலிங்கதேகம். (சூட்சும சரீரங்கள்)

---

மதியம் வியாழன், மார்ச் 5, 2009

சூக்ஷ்ம சரீரம்.

அடுத்து போலாமா?
சீவனோட சூக்ஷ்ம சரீரத்துக்கு ஒரு பேர்: தைசதன் (ஸம்ஸ்க்ருதம்: தைஜஸன்)
ஈசனோட சூக்ஷ்ம சரீரத்துக்கு ஒரு பேர்: ஹிரண்ய கர்ப்பன். (அப்பாடா கொஞ்சம் தெரிஞ்ச பேரா இருக்கு!)
ஒரு பூர்த்திக்காக பாடலையும் புத்தகத்தில கொடுத்த பொருளையும் கொடுக்கிறேன். புரிஞ்சா நல்லது, புரியலைனா ரொம்ப கஷ்டப்பட வேண்டாம். கருத்து எப்படியும் பதிவிலே வந்துடும்.

39.
சூட்சும தேகத்தால் சீவ ஈஸ்வரர்களுக்கு உண்டாகும் பெயர்கள்:

இவ்வுடன் மருவுஞ் சீவனிலங்குதை சதனென் றாவன்
இவ்வுடன் மருவுமீசனிரணிய கர்ப்பனாவன்
இவ்வுட லிரண்டு பேர்க்கு மிலிங்கசூக்குமச ரீரம்
இவ்வுடற்கோச மூன்றாமிது கனாவவத் தையாமே

இவ்வுடல் [உடன்] மருவும் (சேரும்) சீவன் இலங்கு தைசதன் (ஸம்: தைஜஸன்) என்றாவன். இவ்வுடல் மருவும் ஈசன் இரணிய கர்ப்பன் ஆவன். இவ்வுடல் இரண்டு பேர்க்கும் இலிங்க சூக்கும சரீரம். இவ்வுடல் கோச மூன்றாம் (பிராணமய, மனோமய, விஞ்ஞானமய கோசங்கள்) இது கனா அவத்தையாமே.

வியட்டி (வியஷ்டி) சூட்சும சரீரத்தை அபிமானித்துக்கொண்டு பிரகாசமாக உள்ள அந்தக்கரணத்துடன் சம்பந்தப்பட்டவன் -தைசதன்; சமட்டி (சமஷ்டி) சூட்சும சரீரத்தை அபிமானித்துக்கொண்டு ஞான சக்தியுடன் கூடி சகல அந்தக்கரணத்தையும் பிரகாசிபிக்கிறவன் - ஹிரண்யகர்பன்;

---

இந்த சூக்ஷ்ம சரீரம் காரண சரீரம் போல தெரியாது இருக்காது, ஸ்தூல சரீரம் போல பிரத்தியட்சமாகவும் தெரியாது.

ஒரு கை தேர்ந்த சித்திரக்காரர் துணியில் ஒரு படம் வரையுமுன்னே என்ன செய்வார்? இங்கேயும் அங்கேயும் சில கோடுகளை கிழிப்பார். நாம அத பாத்து அட ஒரு ஆனை படம் போடப்போறார் ன்னு கண்டுபிடிச்சுடுவோம். கிழிக்கும் கோடுகள் வரையவிருக்கும் படத்தை அனுமானிக்க உதவுவது போல (-லாஞ்சன படம்): சூக்கும சரீரம் தெளிவா இருக்காது, ஆனா அது இருக்கணும் ன்னு அநுமானத்தால் அறியப்படுது.

நான் செயலாற்றுபவன், இச்சை உள்ளவன், பலமானவன், ஞானம் உள்ளவன், சங்கற்பம் செய்பவன், மதிமான் என பலவிதமாக சீவன் தன் யதார்த்த ஸ்வரூபம் தெரியாது சீவனிடத்தும், ஈஸ்வரன் இத்தகையவன் என சீவன் அறியாதவாறு ஈஸ்வரனிடத்தும் உள்ள பிராண, மனோ, விஞ்ஞான மறைப்பை 3 கோசங்களாக சொல்லப்பட்டது.

நான் செயல் செய்பவன்னு நினைச்சாலும் இந்த வெத்து உடம்பால -ஸ்தூல சரீரத்தால- அது நடக்காது; அதுல வேற ஏதோ சக்தி இருந்துதான் அதை செய்விக்கிறதுன்னு நமக்கு தெரியும். இது அனுமானம். இந்த சக்திகள் எங்கே இருக்கு? அதான் சூக்கும சரீரம். இந்த சூக்கும சரீரத்தில இருக்கிற மனசு செயலை செய்ய நினைக்கனும்; ப்ராணன் அதுக்கு ஒத்துழைச்சு சக்தி தரனும்; கை கால்கள் மனசு நினைச்ச வேலையை செய்யனும். இருந்தாலும் இதெல்லாம் ஈஸ்வரனால நடக்குது நம்மால இல்லைன்னு நமக்கு தெரியறது இல்லை. இதான் மறைப்பு.

வாசனா ரூபமாய் சூட்சுமமாயிருந்து மனோ ராஜ்யம் செய்தல் ஜீவ ஈஸ்வரர்களுக்கு ஸ்வப்னம் என்பதால் கனா அவத்தை எனப்பட்டது.

நினைவுறுத்தல்: சரீரங்கள் மூன்று: ஸ்தூல சரீரம் - நாம் பார்க்கக்கூடியது. சூக்சும சரீரம் = பார்க்க முடியாதது ஆனால் அநுமானிக்கூடியது. காரண சரீரம் = இவற்றுக்கு காரணமாக உள்ளது; ஆணவம், கன்மம், மாயை சேர்ந்தது.

இன்னும் தமோ குணம் பாக்கி இருக்கு. கொஞ்சம் நிதானமா பாத்தா இதுவும் புரிஞ்சுடும்.

---

மதியம் வியாழன், மார்ச் 5, 2009

மீள் பார்வை - தன் மாத்திரையின் தமோ குணம்

சத்வம் ன்னாலே அறிவு. ராஜஸம்னாலே செயல். அது போல தாமசம்னாலே மந்தம்.

சத்வம்னா சூக்ஷ்மம். ராஜசமும் அப்படிதான். ஆனா வெளிப்பாடு இருக்கும். தாமசம்ன்னா கண்ணுக்கே தெரியும்.

கண்ணுக்கு தெரியறது அன்னத்தாலே வளர்ந்த அன்ன மய கோசம். அதனாலே இது தாமசமாதானே இருக்கணும்?

செயலா இருக்கிறது 1. ப்ராண வாயு உலாத்தற ப்ராணமய கோசமும் 2. செயல்கள் நடக்கிற விக்ஞான மய கோசமும் 3. அல்லல் படும் மனசு இயங்கற மனோ மய கோசமும். சரிதானே? அதனால இது அத்தனையும் ராஜசம்.

ஞானத்தோட ஆனந்தமா எப்பவுமிருக்கிறது ஆனந்த மய கோசம். இது சத்வம். சரியா?

இப்ப இந்த சரீரங்கள், கோசங்கள், தன் மாத்திரைகள் - இதுக்கெல்லாம் ஒரு தொடர்பு தெரியுது இல்லையா?

---

சத்வம்- ஆனந்த மய கோசம்- காரண சரீரம்
ரஜஸ் - பிராண, மனோ, விஞ்ஞான மய கோசங்கள் - சூக்ஷ்ம சரீரம்.
இப்ப வரது தமஸ் - அன்ன மய கோசம் - ஸ்தூல சரீரம்.

ஒரே விஷயங்கள் வெவ்வேற மாதிரி- வார்த்தைகள்ளே சொல்லப்படுது. அவ்வ்ளோதான். இதை சரியா புரிஞ்சுகிட்டா இனிமே குழப்பம் இருக்காது.

தமோ குணத்து சமாசாரம் என்னன்னா ஈஸ்வரன் அதை ஒரு வடிவம் கொடுத்து நாம் பாக்கிறாப்பல செய்யறான். சூக்குமமா இருந்த அத்தனையும் இப்ப நாம பாக்கிறாப்போல ஸ்தூலமா இருக்கு.

என்னவா பாக்கிற மாதிரி ஆயிடுது?
ஆகாயம், வாயு, அக்னி, நீர், மண்.
அட இதையே முன்னால சொல்லல்லை?
அப்ப சொன்னது இதே பெயர்கள்தான். ஆனா அதெல்லாமே வெறும் தத்துவமா இருந்தது- சூக்ஷுமமா. பாக்கிறாப்பல இல்லை.
இப்ப தமோ குணத்திலேந்து பாக்கிறாப்பல வருது. ஆனா அதே பெயர்கள்தான்.

இது நடக்கிறது ஒரு ப்ராஸஸ்ஸாலே. அதுக்கு பஞ்சீகரணம் ன்னு பேர்.

40.
சூக்குமசகமிம் மட்டுஞ் சொல்லினோ மிப்பாற்றூலம்
ஆக்குமா ரோபந்தானு மடைவினின் மொழியக்கேளாய்
தாக்குமிவ் வுயிர்க்குத்தூல தநுவும்போகமு முண்டாகக்
காக்குமவ் வீசன்பஞ்சீ கரணங்கள் செய்தான்றானே

சூக்கும சகம் இம்மட்டும் (இது வரை) சொல்லினோம். இப்பால் தூலம் ஆக்கும் (தூல தேகம் முதலான பிரபஞ்சம் உண்டாகும்) ஆரோபந்தானும் (அத்தியாசத்தையும்) அடைவினில் (கிரமமாக) மொழிய கேளாய். [சூட்சும தேகத்தில்] தாக்கும் (சம்பந்தமான) இவ்வுயிர்க்கு (இந்த சீவர்களுக்கு) [கர்மத்துக்கு தக்க] தூல தநுவும் (தேகமும்) [விஷய] போகமும் உண்டாக, காக்கும் அவ்வீசன் (தமோ குண அம்சம் ஐந்தினையும்) பஞ்சீகரணங்கள் (ஐந்தாக பிரித்தல்) செய்தான்.

---

மதியம் வெள்ளி, மார்ச் 6, 2009

மீள் பார்வை - பஞ்சீகரணம்.

கொஞ்சம் கவனமா பாத்துகிட்டே வாங்க.
பஞ்ச பூதம் 10 ஆச்சு. அதாவது எல்லாம் பாதி பாதியா பிரிஞ்சது. 50% -50%
இதில ஒரு பாதி நாலா பிரிஞ்சது. ஒவ்வொண்ணும் 12.5 %. 12.5 *4 =50% சரிதானே!
இப்ப ஒவ்வொரு பூதமும் தன்னோட 50% + மத்த நாலிலே ஒவ்வொண்ணிலேந்தும் 12.5% சேத்துகிட்டு ஸ்தூல பூதமாகும். ரிசல்ட் டுக்கு எது 50% இருக்கோ அதோட பேர் வரும்.
ரிசல்ட் என்னன்னு பாக்கலாமா?
ஸ்தூல பூதத்திலே இருக்கிற தமோ குண சூக்ஷ்ம பூதம்:

From 5

கணக்கு சரியா போச்சா? ஒவ்வொண்ணுத்திலேயும் 100% சரியா இருக்கு.
ஐந்தும் மத்ததோட சேந்து சமஷ்டியா இருக்கு.

---

பட்டியலிலே தலைப்பை பாருங்க. முதல் வரி முதல் பத்தியிலே (column) இருக்கிற ஸ்தூல பூதம் என்கிறது மேலிருந்து கீழே உள்ள எல்லாத்துக்கும் தலைப்பு. முதல் வரில (row) இருக்கிற மீதி அதே போல ஒவ்வொரு பத்தியிலேயும் (column) இருக்கிற சூக்கும பூத பாகத்துக்கான தலைப்பு.

உதாரணமா ஆகாச ஸ்தூல பூதத்தை எடுத்துக்கலாம். அதாவது நம்ம கண்ணுக்கு தெரியற ஆகாசம். அதிலே என்ன இருக்கு? அது 100% ஆகாச சூக்ஷ்ம பூதம் இல்லை. 50% தான். மீதி 50% வாயு, அக்னி, நீர், நிலம் நாலும் சமமா இருக்கும். இதைதான் அட்டவணையிலே இரண்டாவது வரி சுட்டிக்காட்டுது.

உதாரணமா சூக்ஷ்ம பூதமான மண் எப்படி எல்லாம் பிரிஞ்சு விரவி இருக்கு?
அது ஸ்தூல (அதாவது நாம பாக்கக்கூடிய) மண்ணிலே 50% உம், ஸ்தூலமா இருக்கிற மத்த நாலிலே (ஆகாசம், வாயு, அக்னி, நீர்) மீதி சமமாயும் பிரிஞ்சு இருக்கு. இதைதான் கடைசி பத்தி காட்டுது.

இந்த பஞ்ச பூதங்கள்தான் சாதாரணமா நம்ம வாழ்க்கையிலே அடிபடறவை. அதாவது நாம கண்ணாலப்பாக்கிற ஆகாயம், வீசி அடிக்கிற வாயு, சுடுகிற அக்னி, குடிக்கிற தண்ணீர், பயிர் செய்கிற மண், இப்படி.
(இதை ரொம்ப ஸ்டிரிக்ட்டா எடுத்துக்கக்கூடாது. நீர் ன்னா தண்ணீர் மட்டுமில்லே. எல்லா திரவங்களும்தான். மண்ணுனா மண் மட்டுமில்லே. கல், மணல் போல எல்லாமும்தான். அக்னி சமைக்கிற நெருப்பு மட்டுமில்லே மின்னலும்தான்.)

இவற்றிலேந்து நாலு வகை யோனி - பிறப்பிடம், ஏழு வகை தோற்றமா தூல (solid) உடம்புகள் வந்தன.
நாலு வகை யோனி?
1. சராயுஜம். ஒரு கர்பப்பை. அதில இருந்து வளர்ந்து உரிய காலத்திலே பிறக்கிறது. பாலூட்டிகள்.
2. அண்டஜம். முட்டையிலேந்து பிறக்கிறது. பறவைகள், மீன்கள் போல
3. ஸ்வேதஜம் வேர்வையிலேந்து பிறக்கிறது. இது கொஞ்சம் புதிராதான் இருக்கு. விஞ்ஞான ரீதியா பாத்தா வியர்வை சுரப்பிகள்ள இருக்கிற சில பாக்டீரியாதான் சொல்லலாம். பேன் போன்றதுன்னு நான் பாக்கிற உசாதுணை நூல்லே இருக்கு. சில உயிரினங்கள் இருந்து காலப்போக்கிலே மறைந்து போயிடுத்தோ என்னவோ!
4. உத்பிஜம் - விதையிலேந்து வருபவை. தாவரங்கள்.

ஏழு வகை பிறப்பு?
1.தேவர்
2.மனிதர்
3.விலங்குகள்
4.பறவைகள்
5.ஊர்வன
6.நீர் வாழ்வன
7.தாவரங்கள்

இவை அனைத்தும் உத்தம ஜாதி, (1,2) மத்திம ஜாதி (3,4,5) மற்றும் அதம ஜாதி(7) ன்னு பிரியும்.

இவை எல்லாம் எங்கே நிலை பெறும்? அதாவது இருக்கும்? ஈரேழு பதினாலு லோகம்ன்னு நாம் கேள்விப்பட்ட 14 உலகங்களிலே. இவற்றை மேல் லோகங்கள் - பூ, புவ, சுவ, சன, தபோ, மகா, சத்திய லோகம்) + அதல, விதல, சுதல, தராதல, இரசாதல, மகாதல, பாதால ஆகிய 7 கீழ்

உலகங்கள் ன்னு வகைப்படுத்தி இருக்காங்க. இந்த 14 உலகங்களும் இதே பஞ்ச பூதங்களிலிருந்துதான் வரும்.

அது சரி வந்தாச்சு. இவை எப்படி உயிர் வாழும்? இதே பஞ்ச பூதங்களிலிருந்து உருவாகிற அன்னம் முதலான பல அனுபவிக்கிற பொருட்களால உயிர் வாழும்.

41.
ஐந்து பூதமும் பத்தாக்கி யவைபாதி நன்னான் காக்கி
நந்துதம் பாதிவிட்டு நான்கொடு நான்குங்கூட்ட
வந்தன தூலபூத மகாபூத மிவற்றினின்றுந்
தந்தன நான்காந்தூல தநுவண்ட புவனபோகம்.

ஐந்து பூதமும் பத்தாக்கி (ஒவ்வொன்றையும் இரண்டாக்கி) அவை பாதி நன்னான்காக்கி (அவற்றின் ஒரு பாதியை வைத்து மற்ற பாதியை ஒவ்வொன்றையும் நான்கு ஆக்கி) நந்து தம் பாதி விட்டு (பெரிய அரைப்பாகங்களில் தத்தம் பாகத்தை விட்டு ) நான்கொடு நான்கும் கூட்ட (மற்ற 4 பூதங்களின் அரைக்கால் பாகத்துடன் கூட்ட) வந்தன தூல பூதம். மகாபூதம் இவற்றினின்றும் தந்தன (சிருட்டிக்கப்பட்டன) நான்காம் (சராயுசம், அண்டசம், சுவேதசம், உற்பீசம் ஆகிய 4 யோனிகளில் பிறக்கும்) தூல தநு (பரு உடல்) அண்ட (பிரமாண்டங்கள்) புவன (பூ, புவ, சுவ, சன, தபோ, மகா, சத்திய ஆகிய 7 மேல் உலகங்கள் + அதல, விதல, சுதல, தராதல, இரசாதல, மகாதல, பாதால ஆகிய 7 கீழ் உலகங்கள்) போகம் (அன்னம் முதலானவை).

---

மதியம் ஞாயிறு, மார்ச் 8, 2009

பிரமத்தின் ஒவ்வொரு பாகமும் என்ன ஆகிறது என்று ஒரு பொது பார்வை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சத்துவம் | சமஷ்டி | அந்தர்யாமி (ஈசன்) | | | I | | |
| | வியக்தி | பிராஞ்ஞன் | | | | | |
| ரஜஸ் | | ஜீவன் | ரஜஸில் சத்வம் | ஞான நாட்டம் உடையோர் | | | |
| | | | ரஜஸில் ரஜஸ் | காமிகள், கர்மிகள் | | | |
| | | | ரஜஸில் தமஸ் | தூக்கம், சோம்பல் உடையோர் | | | |
| தமஸ் | ஆவரணம் | | | அனைத்து சீவர்களின் ஞான திருஷ்டியையும் மறைத்தல் | | | |
| | விட்சேபம் | பஞ்ச சூக்கும பூதங்கள் (ஆகாயம், வாயு, அக்னி, நீர், மண்) | சத்வம் | அந்தக்கரணம் (உள்ளம், மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்) | இந்த 17 உள்ள சமஷ்டி (ஈசன்)= இரண்யகர்பன்<br>இந்த 17 உள்ள வியக்தி(சீவன்) = தைசதன் | | |
| | | | சத்வம் | ஞானேந்திரியங்கள் (கேட்டல், தொடுணர்ச்சி, பார்த்தல், ருசித்தல், நுகர்தல் ) | | | |
| | | | ரஜஸ் | பஞ்ச வாயுக்கள் | | | |
| | | | ரஜஸ் | கர்மேந்திரியங்கள் (வாக், கை, கால், பாயுரு, உபஸ்தம் - ஆண் குறி/ பெண் குறி) | | | |
| | | | தமஸ் | பஞ்சீகரணம் ->5 ஸ்தூல பூதங்கள் | ஆ 1/2 + வா ¼ +அக் ¼ +நீர் ¼ +மண் ¼ =ஆகாயம் | ஆ ¼ + வா 1/2 +அக் ¼ +நீர் ¼ +மண் ¼ =வாயு | ஆ ¼ + வா ¼ +அக் 1/2 +நீர் ¼ +மண் ¼ = அக்னி |
| | | | | | ஆ ¼ + வா ¼ +அக் ¼ +நீர் 1/2 +மண் ¼ =நீர் | ஆ ¼ + வா ¼ +அக் ¼ +நீர் ¼ +மண் 1/2 =மண் | தமஸின் சமஷ்டி விராட் புருஷன்; வியஷ்டி விஸ்வஜன் |

---

மதியம் புதன், மார்ச் 11, 2009

பிஜி பாய்ன்ட்ஸ்!

அப்பாடா! இதுக்கு மேலே பிஜி பாய்ன்ட் தான். வேணான்னா விட்டுடலாம்.
5 ஸ்தூல பூதங்கள் - நாம பாக்கக்கூடிய ஆகாயம், வாயு, அக்னி, நீர், நிலம் - லேந்து 25 தத்துவங்கள் வந்தன. எப்படி? ஒவ்வொண்ணும் மத்த நாலோடேயும் சம்பந்தப்பட்டதால. ஆகாயத்தில் ஆகாயம் ன்னு ஆரம்பிச்சு இப்படியே அஞ்சும் முடிச்சு அடுத்து வாயுவில் ஆகாயம்ன்னு ஆரம்பிச்சு.... பெர்முடேஷன் காம்பினேஷன் புரியுது இல்லையா?

50% இருக்கிற ஆகாயம். இதில உண்டானாது மோகம்.
50% இருக்கிற ஆகாயம். இதோட 12.5% வாயு கூடி உண்டானது வெட்கம்.
50% இருக்கிற ஆகாயம். இதோட 12.5% அக்னி கூடி உண்டானது பயம்.
50% இருக்கிற ஆகாயம். இதோட 12.5% நீர் கூடி உண்டானது த்வேஷம்.
50% இருக்கிற ஆகாயம். இதோட 12.5% நிலம் கூடி உண்டானது ஆசை.

இதே போல மீதி பாக்கலாமா?
வாயு + ஆகாயம் = தத்தல்
வாயு = ஓடல்
வாயு + அக்னி = இருத்தல்
வாயு + நீர் = நடத்தல்
வாயு + நிலம் = கிடத்தல்

அக்னி + ஆகாயம் = சங்கமம்
அக்னி + வாயு = ஆலஸ்யம்
அக்னி = நித்திரை
அக்னி + நீர் = தாகம்
அக்னி + நிலம் =பசி

நீர் + ஆகாயம் = சுக்கிலம்
நீர் + வாயு = ரத்தம்
நீர் + அக்னி = வியர்வை
நீர் = சிறுநீர்
நீர் + நிலம் = உமிழ்நீர்

நிலம் + ஆகாயம் = உரோமம்
நிலம் + வாயு = நரம்பு
நிலம் + அக்னி = தோல்
நிலம் + நீர் = மாமிசம்
நிலம் எலும்பு

அப்பாடா! இதெல்லாம் எங்கேயிருந்து உரை ஆசிரியர் குப்புசாமி முதலியார் பிடிச்சாரோ தெரியலை.

இப்ப அவஸ்தைகள் மூணுன்னு நமக்கு தெரியும். ஜாக்ரத், ஸ்வப்னம், சுஷுப்தி.
நனவு, கனா, சுழுத்தின்னு தமிழ்ல.

இது வரை நாம படிச்சதை இதுக்கு தொடர்பு படுத்தி பாக்கலாமா?
ஸ்தூல உடம்பிலே ஜாக்ரத் இருக்கும். சூக்கும உடம்பிலே ஸ்வப்னம். காரண உடம்பிலே சுஷுப்தி.

பஞ்ச கோசங்களை கொஞ்சம் ரிவைஸ் பண்ணலாம்.

அன்ன மயம் - சுக்கில/ சுரோணிதங்களால ஆன இந்த – என்ன புரியலையா? விந்து, கரு முட்டையால ஆன- தோல், ரத்தம், மாமிசம், நரம்பு, எலும்பு, மூளை, சுக்கிலம் என்கிற ஏழு தாதுக்களால ஆக்கப்பட்டு அன்னத்தால வளர்ந்து, கடைசியிலே பூமியில் அழிகிற இந்த பருப்பொருளான உடம்பே அன்ன மய கோசம்.

கர்ம இந்திரியங்களோடு கூடின ப்ராணன்களே ப்ராணமய கோசம்.
ஞான இந்திரியங்களோடு கூடின மனமே மனோ மய கோசம்.
ஞான இந்திரியங்களோடு கூடின புத்தியே விஞ்ஞான மய கோசம்.

காரண தேகமே (அஞ்ஞானம்) ஆனந்த மய கோசம்.

---

மதியம் புதன், மார்ச் 11, 2009

ஈசனும் சீவனும்

இனிமே சுலபம்தான். கிடு கிடுன்னு போகலாம்.

தமஸிலே கூட்டு (சமஷ்டி) தனி (வியஷ்டி) யார்?
தமஸின் சமஷ்டி விராட் புருஷன்; வியஷ்டி விஸ்வஜன்.

42.
தூலதேகத்தில் சீவேஸ்வரருக்கு அபிமான நாமாதிகள்:
தூலமே மருவுஞ்சீவன் சொல்லிய விசுவனாகும்
தூலமே மருவுமீசன் சொலும்விராட் புருடனாகும்
தூலமே யன்னகோசந் துன்னுஞ்சாக் கிரவவத்தை
தூலகற் பனையீதென்று தொகுத்தது மனதிற்கொள்வாய்

[முன்] சொல்லிய தூலமே (ஸ்தூலதேகத்தில்) மருவும் (பொருந்தும்) சீவன் விசுவனாகும். தூலமே மருவும் ஈசன் சொலும் விராட் புருடனாகும். [அன்ன வீரியத்தால் உண்டாகி அன்னத்தால் விருத்தியாவதால்] தூலமே அன்னகோசம்; துன்னுஞ் சாக்கிர அவத்தை; தூல கற்பனை (தூலப் பிரபஞ்சத்தின் அத்தியாசம்) ஈது என்று தொகுத்தது (சுருக்கமாக கூறியதை) மனதில் கொள்வாய்.

அட, அப்ப ஈசனும் சீவனும் ஒண்ணா?
இருப்பு ஒண்ணுதான். ஆனா உபாதியால வேற வேற. உபாதி? போட்டு இருக்கிற வேஷம்ன்னு சொல்லமோ என்னவோ! Role.
யார் சில விஷயங்கள் தோன்ற காரணமோ அவர் காரண உபாதி. அது ஈசன்.
யார் தோன்றினாரோ அவர் காரிய உபாதி. அது சீவன்.

43.
சீரிய வீசனார்க்குஞ் சீவர்க்கு முபாதியொன்றேல்
ஆரிய குருவேபேத மறிவதெப்படி யென்றக்கால்
காரிய வுபாதிசீவன் காரணவுபாதி யீசன்
வீரியமிகு சமட்டி வியட்டியாற் பேதமாமே

சீரிய (சிறந்த) ஈசனார்க்கும் சீவர்க்கும் உபாதியொன்றேல் (உபாதி ஒன்றாக இருக்குமானால்) ஆரிய குருவே, பேதம் அறிவது எப்படி என்றக்கால் (என கேட்பாயானால்) [ஸ்தூல சூட்சும] காரிய உபாதி [உடையவன்] சீவன்; [ஸ்தூல சூட்சும] காரண உபாதி [உடையவன்] ஈசன். வீரிய மிகு சமட்டி வியட்டியால் பேதமாமே.

---

மதியம் புதன், மார்ச் 11, 2009

அபவாதம்

சீவன் வியக்தி. ஈசன் சமஷ்டி.
கடல் அலையும் கடலும் போல. ரெண்டுக்குமே கடலோட தன்மை- உப்பு கரிக்கிற தண்ணீர் ன்னு இருந்தாலும் கடல் அலை கடலா ஆகாது இல்லையா?

44.
மரங்கள்போல் வியட்டிபேதம் வனமெனல் சமட்டிபேதம்
சரங்கடா வரங்கள்பேதத் தனியுடல் வியட்டியென்பார்
பரம்பிய வெல்லாங்கூட்டிப் பார்ப்பதே சமட்டியாகும்
இரங்கிய பல சீவர்க்கு மீசர்க்கும் பேதமீதே

மரங்கள் போல் (கருதுவது) வியட்டி (வியஷ்டி) பேதம். வனமெனல் சமட்டி பேதம். சரங்கள் தாவரங்கள் பேதத் தனியுடல் வியட்டி என்பார். பரம்பிய (விரிந்துள்ள) எல்லாம் (சகல தேகங்களையும்) கூட்டிப் பார்ப்பதே சமட்டியாகும். இரங்கிய (வருந்துகின்ற) பல சீவர்க்கும் ஈசர்க்கும் பேதம் ஈதே.

இப்பதான் இவ்வளோ பேசினதுக்கு பாய்ன்டுக்கு வரோம்.

இந்த பஞ்ச கோசங்களும் உண்மையிலே நாம் இல்லைன்னு புரிஞ்சு உணர்ந்து வெளியே வந்தா ஆத்மாவை உணரலாம். ஞானம் வந்துடும்.

யார் இந்த பரந்து விரிந்த உலகத்தை எல்லாம் கனவு போல நிலையற்றது - மாயை ன்னு புரிஞ்சுக்கிறாங்களோ அவங்க ஞானியா ஆவாங்க.
இதற்கான உத்தி அபவாதம் எனப்படும்.

45.
அத்தியாரோப உத்தியினால் தன்னிடத்து ஆரோபமாகத் தோன்றிய சகசீவ பரங்கள் மித்தை என உணர மித்தையா திருஷ்டியைக்கூறி, அதத்துவா விருத்தி இலக்கணையால் அவை உண்டான கிரமப்படி லயிக்கும் அபவாத உத்தியை சுருக்கமாக கூறல்:

கற்பனை வந்தவாறு காட்டினோங் காண்ப வெல்லாஞ்
சொற்பனம் போலுமென்றே துணிந்தவன் ஞானியாவன்
செற்புதை மழைக்காலம் போய்த் தெளிந்தவா காசம் போல
வற்புத முத்திசேரு மபவாத வழியுங்கேளாய்

கற்பனை (அத்தியாரோபம்) வந்தவாறு (வந்த வழியை) காட்டினோம். காண்ப எல்லாம் (காணும் சீவேஸ்வர ஜகத் முழுதும்) சொற்பனம் (கனவு) போலும் என்றே துணிந்தவன் (நிச்சயித்தவன்) ஞானியாவன். செற்புதை (மேகம் நெருங்கிய) மழைக்காலம் போய்த் தெளிந்த ஆகாசம் போல அற்புத முத்தி (நிரதிசய ஆநந்த மோட்சம்) சேரும் (அடைய காரணமாகும்) அபவாத வழியும் கேளாய்.

அப வாதம் என்ன? முடக்கு வாதம், கீல் வாதம் மாதிரின்னா.....
மாயையை நீக்குகிறதுதான் அபவாதம்.

கயிறுதான் இது; பாம்பா பாத்தது நம்மோட பிரமை.
இது மரம்தான். அரைகுறை வெளிச்சத்துலே பாத்து ஆளுன்னு தப்பா நினைச்சுட்டோம்.

இப்படி தெளிவா ஆகிறாப்போல

இந்த உலகங்கள் எல்லாம் இல்லை; ப்ரம்மம் ஒண்ணுதான் இருக்கு ன்னு தெளிவதே அபவாதம். இதுக்கு சாதனமா இருக்கிறது குருவோட உபதேசமும் சாத்திர நூல்களும். சொல்லறது ரொம்ப சுலபமா சொல்லியாச்சு! அனுபவத்துக்கு வரணுமே!

மதியம் புதன், மார்ச் 11, 2009
அபவாதம்
இப்படியாகத்தானே பரபிரம்மத்தோட சாயை பலவிதமா பரிணமித்து நாம காண்கிற இந்த உலகங்களாயும் ஜீவர்களாயும் ஆயிடுத்து!
இப்படி பார்க்கிற எல்லாத்தையும் மாயைதான் ன்னு புரிஞ்சவன் ஞானியா ஆவான். சும்மா தியரில இல்லை. அப்படி இருந்தா எத்தனையோ பேர் ஞானிகள் ஆகி இருப்பாங்க.
அனுபவத்துக்கு வரணும்.

அப வாதம் என்னன்னா மாயையை நீக்குகிறது.

அரைகுறை இருட்டிலே போய் கொண்டு இருக்கிறோம். முன்னே ஆர்காட் உதவி இல்லாமலே அப்படி எல்லாம் இருந்தது. போகிற வழியிலே ஏதோ நீளமா உருண்டையா கிடக்கு. பாம்புன்னு நினைச்சு பயந்துக்கிறோம். நம்மிலே யாரோ ஒத்தர் கொஞ்சம் தைரியசாலி. அவர் கிட்டே போய் பாத்துட்டு "அட! இது பாம்பு இல்லைப்பா வெறும் கயிறு" என்கிறார்.
அவர் அப்படி சொன்ன பிறகு நமக்கும் "அட! ஆமாம்; கயிறுதான்" ன்னு தெரியறது.

அதே போல போய் கொண்டு இருக்கிறப்போ ஊருக்கு வழி சந்தேகமா இருக்கு. அதோ ஒரு ஆசாமி நிக்கிறானே அவனை வழி கேட்கலாம் ன்னு "ஓய், ஊருக்கு வழி எங்கே?" ன்னு கேக்கிறோம். அவரோ பதில் சொல்கிறாப்பல இல்லை. ஓ, செவிடு போல இருக்கு ன்னு நினைக்கிறோம். ஆனா இன்னும் கொஞ்சம் கிட்டே போன பிறகு "அட! இது மரம். யாரோ மேல் மரத்தை வெட்டி போட்டு அடி மரத்தை மட்டும் விட்டு வெச்சு இருக்காங்க" ன்னு புரிஞ்சுக்கிறோம்.
பல சமயம் மயக்கம் நம்மகிட்டேதான் இருக்கு. தெளிவா பாக்க முடியும் போது விஷயம் சரியா புரியுது.

கனவு காண்கிறோம். திடுக்குன்னு எழுந்துக்கிறோம்.
அட இவ்வளோ நேரம் கண்டது எல்லாம் கனவா? அப்படின்னு இப்ப தோணுது. ஆனா கனவு காண்கிற வரை இது கனவுன்னு புரியலை.
இப்படி தெளிவா ஆகிறாப்போல

இந்த உலகங்கள் எல்லாம் இல்லை; ப்ரம்மம் ஒண்ணுதான் இருக்கு ன்னு தெளிவதே அபவாதம். இதுக்கு சாதனமா இருக்கிறது குருவோட உபதேசமும் சாத்திர நூல்களும்.

ஆசாரியன் சொல்லைக்கேட்டு அவர் உபதேசப்படி எல்லாம் செய்து வந்து அவர் உபதேசம் செய்த மந்திரத்தை உருப்போட்டு சிந்தனை பண்ணி, விளைகிற சந்தேகங்களை சாத்திர நூல்களைபடிச்சும் தேவையானா ஆசாரியன் கிட்டே விளக்கம் கேட்டும் -

"அட! இந்த உலகங்கள் எல்லாம் இல்லை; பஞ்ச பூதங்களும் இல்லை. எல்லாம் எப்பவும் இருக்கக்கூடிய பிரமம் ஒண்ணே!" ன்னு தெளிவதுதான் அபவாதம்.

46.
அதிட்டானத்தை தவிர ஆரோபமில்லை என அபவாத இலக்கணம் கூறல்:

அரவன்று கயிரென்றாற் போலாளன்றுதறி யென்றாற்போல்
குரவன்சொல் லுபதேசத்தாற் கூறுநூலொளி யைக்கொண்டு
புரமன்று புவனமன்று பூதங்களன்று ஞானத்
திரமென்னும் பிரமமென்று தெளிவதே யபவாதங்காண்

அரவு (பாம்பு) அன்று, கயிறு என்றால் போல்; ஆளன்று தறி (மரம்) என்றாற் போல், குரவன் சொல்லும் உபதேசத்தால் கூறு நூல் ஒளியைக் கொண்டும் (ஆசாரியன் வாக்கியத்தையும் உறுதி செய்யும் ஞான சாஸ்திர நூல்கள் வலிமையை கொண்டும்) புரமன்று (சரீரம் அன்று)

புவனமன்று (உலகங்கள் அன்று) பூதங்களன்று (பஞ்ச பூதங்கள் அன்று) ஞான ஸ்திரம் என்னும் பிரமம் என்று தெளிவதே அபவாதம் காண்.

---

மதியம் வியாழன், மார்ச் 12, 2009
அபவாதம் - 3
ஒரு சிலர் இப்ப ஒரு லாபகரமான தொழில் செய்யறாங்க. அதுவும் வீட்டிலேயே செய்யலாம். பழைய துணி வாங்க வேண்டியது. டெய்லர் வெட்டி போட்ட துணி துண்டுகள் கூட போதும். ஒரு மிஷின் இருக்கு. அதில துணியை கொடுத்தா அது நூல் நூலா பிரிச்சு கொடுத்திடும். எடை போட்டு பாலிதீன் பாகிலே அடைச்சு கார் ஸ்கூட்டர் துடைக்கிற வேஸ்ட் ன்னு விக்கலாம்.

ஒரு துணியை துணியாவும் பாக்கலாம்; நூலாவும் பாக்கலாம். ரெண்டுமே சரிதான். பேர் வேற; உருவமும் வேற. அவ்ளோதான்.
இதிலே முதல்ல இருந்ததும் கடைசியா இருக்கிறதும் நூல்தான்! இதை காரணம் என்கிறங்க. துணி உருவாகி வந்தது, அப்புறமா அழிஞ்சும் போயிடும். இதை காரியம் என்கிறாங்க.

இதே போலத்தான் தங்கமும். அம்பி மாதிரி தங்க நகையா வாங்காம கடையிலே தங்கக்கட்டியா கூட வாங்கிக்கலாம். அது எப்பவுமே இருக்கும். நகையா செய்துக்கலாம். ஒரு செய்ன் செய்துக்கிறோம்; கொஞ்ச நாள்லே நாகரீகம் மாறிப்போயிடும். அட இந்த செய்ன் பழங்காலத்துது. புது டிசைன்லே செஞ்சுக்கலாம் ன்னு அதை பொற்கொல்லர்கிட்டே கொடுக்கிறோம். அவரும் அதை உருக்கி கொஞ்சம் தனியா எடுத்து வித்துட்டு அப்புறம் நாம் கேட்ட புது டிசைன் நகை பண்ணுவார். நம்மகிட்டே கொடுக்கிறப்ப சேதாரம் இவ்வளோன்னு கணக்கு காட்டுவார்.

உண்மையிலே ஒரு குந்துமணி அளவு கூட சேதாரம் ஆகாது. தங்கம் உருக்கின நெருப்பு அணைஞ்சதும் சாம்பலை கரைச்சு சிதறிப்போய் இருக்கக்கூடிய தங்கத்தையும் எடுத்துடுவார். அதெல்லாம் பணம் சம்பாதிக்க ஒரு கணக்கு! சயன்ஸ்லே படிச்சோமே energy can neither be created nor destroyed ன்னு! முனாலேயே பாத்தோம்- matter - energy ஒண்ணுதான்; வேற வேற உருவம். உரு மாத்தலாம்; புதுசா பண்ண முடியாது.

கிடக்கட்டும். இப்ப கவனிக்க வேண்டியது முன்னே இருந்தது தங்கம். இப்ப நகை என்கிற பேரிலேயும் வேற உருவத்திலேயும் இருக்கிறது தங்கம். அதை அழிச்சாலும் வரப்போகிறது தங்கம்தான். தங்கமே தங்கம்!

தங்கம் அழியாது. ரூபமும் பேரும் மாறும். அவ்வளோதான்.
அதே போல களி மண்ணிலே குயவன் ஒரு பானை பண்ணினால் நடுவிலே அதுக்கு பானை ன்னு ஒரு பேரும் ரூபமும் வரும். காலப்போக்கிலே மாமியார் அதை உடைச்ச பிறகு அது திருப்பி மண்ணோட மண்ணாகும்.

குடத்தை மண்ணா பாக்கிறா மாதிரி, நகையை தங்கமா பாக்கிற மாதிரி-

இந்த உலகத்தையும் சீவர்களையும் எங்கேந்து வந்ததுன்னு ஆராய்ச்சி பண்ணி பிடிச்சுகிட்டே போனா அதோட உண்மையான சொரூபத்தை கண்டு பிடிக்கலாம். அதுக்குத்தான் இவ்வளோ நாள் மண்டையை உடைச்சுகிட்டு பிரமத்தின் நிழல் என்ன ஆச்சுன்னு பாத்துகிட்டு இருந்தோம்.

உதிச்ச வழியே பின்னாலே போய் ஒண்ணுத்திலே ஒண்ணை அடக்கி உண்மையை பாக்கிறதே அபவாதம்.

47.
படமுநூ லும்போற் செய்த பணியும் பொன்னும் போற்பார்க்கில்
கடமுமன் னும்போ லொன்றாங் காரிய கார ணங்கள்
உடன்முதற் சுபாவமீறா வொன்றிலொன் றுதித்த வாறே

---

அடைவினி லொடுக்கிக் காணப தபவாத வுபாயமாமே

காரிய காரணங்கள் பார்க்கில் (காரியமான சகசீவ பரத்தையும், காரணமாகிய பிரமத்தையும், உத்தியால் விசாரிக்குமிடத்து) படமும் (காரியமான துணியும்) [காரணமாகிய] நூலும் போல், செய்த பணியும் (காரியமான ஆபரணமும்) [காரணமாகிய] பொன்னும் போல், கடமும் (காரியமான குடமும்) [காரணமாகிய] மண்ணும் போல் ஒன்றாம். உடன் முதல் சுபாவம் ஈறாக (தூல தேகம் முதல் பிரகிருதி முடிய) ஒன்றில் ஒன்று உதித்தவாறே அடைவினில் (முறையே) ஒடுக்கிக் காண்பது அபவாத உபாயமாமே. (உத்தியாமே)

---

மதியம் சனி, மார்ச் 14, 2009
ஆவரணம்
¨அது கொஞ்சம் அப்படியே இருக்கட்டும் ஸ்வாமி! இன்னும் ஆவரணம் பத்தி சொல்லையே!¨
¨சொல்றேன், சொல்றேன்!
தமஸிலே வந்த விக்ஷேபம் பத்தி இதுவரை பாத்தோம். அதுதான் நாம பாக்கிற ஏராளமான தோற்றங்களுக்கும் காரணம்.
அதே தமஸிலேந்து இதுக்கு எதிர்மறையா மறைப்பு சக்தியும் இருக்கு.¨
¨அட, போகட்டுங்க என்ன இப்போ! அதான் நிறைய விஷயம் பாக்க இருக்கே! ஒண்ணு ரெண்டு குறைஞ்சா என்ன?¨
¨பிரச்சினையே நாம யாரு என்கிற உண்மையான தோற்றத்தை இது மறைக்குது! அதான்.¨

48.
தூடண தமத்தில் வந்த தோற்றமாஞ் சத்தி செய்யும்
ஏடணை விகாரஞ் சொன்னீ ரிரண்டுசத் திகளென் றீரே
மூடலாஞ் சத்தி செய்யு மோகமுஞ் சொல்லு மையா
கேடறக்குருவே யென்னக் கிருபையோ டருளிச் செய்வார்

தூடண (தூற்றத்தக்க) தமத்தில் (தம மூல பிரக்கிருதியில்) வந்த தோற்றமாஞ் சத்தி (விட்சேப சக்தி) செய்யும் ஏடணை (இச்சா ரூபமான பிரபஞ்ச) விகாரம் சொன்னீர். இரண்டு சத்திகள் என்றீரே, மூடலாஞ் சத்தி (ஆவரண சக்தி) செய்யும் மோகமும் (மயக்கத்தையும்) சொல்லும் ஐயா, கேடறக்குருவே! என்ன (என்று சொல்ல) கிருபையோடு அருளிச் செய்வார்.

நான் சின்ன பையனா இருந்தப்ப மழைக்காலம்ன்னா பேஜாருதான். இருட்டிகிட்டு வந்தா ஒண்ணுமே பாக்க முடியாது. காத்து சுழண்டு சுழண்டு அடிக்கும். ஒரு விளக்கும் இதுக்கு எதிரே எரிய முடியாது. பகல்லேயே இருட்டிகிட்டு வந்துடும். சோ ன்னு மழை பிடிச்சா ஒரு வாரம் பத்து நாள் கூட பெஞ்சுகிட்டே இருக்கும். அந்த மாதிரி மழைக்காலத்துலே வடக்கா தெற்கா, வானமா பூமியா ன்னு ஒண்ணுமே தெரியாது. இரவிலே ஒரே இருட்டுதான், ஒரு விஷயமும் வௌங்காது.

அந்த மாதிரி இருட்டு நம் சுய ரூபத்தை மறைக்குது என்கிறார் கைவல்லிய நவநீதம் எழுதின ஆசிரியர்.

இந்த இருட்டுக்குத்தான் ஆவரணம் என்று பேர் சொல்றாங்க.
இதுக்கு தப்பி பிழைச்சவங்க வெகு சிலர்தான்.
ஒண்ணு, யாருக்கு நிகரா அவரைத்தவிர வேறு யாரும் இல்லையோ அந்த ஈசன்.
ரெண்டாவது ப்ரம்மத்தை கண்டுகொண்ட ஞானிகள்.
இவங்களைத்தவிர எல்லாருக்கும் சுய ரூபம் மறந்து போயிடும்.

49.
தானிகர் தனக்கா மீசன் றனையுந்தங் களைத்தாங் கண்ட
ஞானிக டமையு மன்றி நாஸ்திநபாதி யென்னும்
ஊனிடை யுயிர்களுக்குள்ளத் துணர்விழி குருடாம் வண்ணம்
வானிலந் திசைகண் மூடு மழைநிசி யிருள்போன் மூடும்.

---

[பரி பூரண ஞானம், சர்வஞ்ஞத்வாதி குணங்களில்] தான் நிகர் தனக்காம் [எனும்படியான] ஈசன்தனையும், [உண்மையான] தங்களைத் (பிரமத்தை) தான் கண்ட ஞானிகள் தமையும் அன்றி, நாஸ்தி (பிரமமில்லை) நபாதி (பாநமாகவில்லை) என்னும் ஊனிடை உயிர்களுக்கு (உடலில் உடலே நாம் என்கின்ற சீவர்களுக்கு) உள்ளத்து உணர் விழி (அந்தக்கரணத்தின் ஞானவிழி) குருடாகும் வண்ணம் வான் நிலம் திசை கண் (ஆகாயம், பூமி அனைத்து திசைகளிலும்) மூடும் மழை[க்கால] நிசி (இரவு) இருள் போல் மூடும். [இதுவே ஆவரண சக்தியாம்]

{தாத்பர்யம்: ஆவரண சக்தியானது ஈஸ்வரனையும் தத்துவ ஞானிகளையும் தவிர மற்ற அனைத்து சீவர்களின் ஞான திருஷ்டியையும் மறைக்கும்.}

பிரம்மம் கூடஸ்தன். எங்கேயோ கேட்டோமோ? இன்னும் இல்லையா? சரி.
பிரம்மம் ஏற்கெனெவே பாத்ததுதான்.
கூடஸ்தன்னா இந்த பாக்கக்கூடிய உடம்புக்குள்ளே லிமிட் ஆகி இருகிற ப்ரம்மத்தோட துணுக்கு. இது பத்தி விரிவா அப்புறமா வரும்.

ஆவரண சக்தி என்ன செய்யுதுன்னா நாம ப்ரம்மத்தோட துணுக்கு; எனக்கு இருப்பு இல்லாமல் இருக்கவே இருக்காது; நான் ஜடமில்லை, சுத்த அறிவு மயன்; எனக்கு துக்கமில்லை, எப்போதும் ஆனந்தமா இருக்கிறவன். - இப்படி இருக்கிற உண்மையை மறைக்குது. அதனால் நாம் செத்து போயிடுவோமோ ன்னு பயப்படுகிறோம். ஒண்ணுமே புரியலையே ன்னு நினைக்கிறோம். துக்கம் வந்து போகுது. எப்பவும் சத்-சித் -ஆனந்தமா இருக்கிற வஸ்து மேலே அசத்-ஜட-துக்கத்தை ஏற்றி காட்டுகிறதே இந்த ஆவரண சக்தியோட வேலை. அதாவது நாம் பாக்கிறதுக்கும் உண்மைக்கும் இருக்கிற பேதம் - வித்தியாசத்தை தெரியவிடாமல் தடுக்குது. அதனால் எவ்வளோ பவர்புல் ன்னு ஊகிக்கலாம்.

இதோட விளைவாகதான் நாம் ஏதாவது வேலையை செய்து கர்மாவை மூட்டை கட்டிகிட்டு திருப்பி திருப்பி பிறக்கிறோம்.

50.
பூன்றமாம் பிரமத்துக்கும் புறத்துள விகாரங்கட்கும்
ஆன்ற கூடஸ்தனுக்கு மகத்துள விகாரங்கட்கும்
தோன்றிய பேதஞ்சற்றுந் தோன்றாமன் மறைத்துமூடும்
ஊன்றிய பவவியாதி யுண்டாகு முபாதியீதே

பூன்றமாம் (பரி பூரணமான) பிரமத்துக்கும் புறத்து உள (வெளியில் உள்ள) விகாரங்கட்கும் (35 தத்துவங்களுக்கும்), ஆன்ற (அறிவுருவமான) கூடஸ்தனுக்கும் அகத்து (உள்ளே) உள விகாரங்கட்கும் (28 தத்துவங்களுக்கும்) தோன்றிய பேதம் (சுபாவமாக காணப்பட்ட சச்சிதானந்த - அசத்து சட துக்கங்களை) சற்றும் (கொஞ்சமும்) தோன்றாமல் (உணர் விழிக்கு தோன்றாமல் ஒன்றின் இலட்சணத்தை ஒன்றின் மேலேற்றி) மறைத்து மூடும். ஊன்றிய (கெடாத) பவ (பிறப்பு) வியாதி உண்டாகும் உபாதி ஈதே. (இந்த ஆவரண சக்தியே)

{தாத்பர்யம்: அதிஷ்டான ஆரோபங்களின் பேதம் தெரியாமல் ஒருமைப்பாடாக மறைப்பது ஆவரண சக்தியின் தன்மை.}

---

மதியம் செவ்வாய், மார்ச் 17, 2009

ஆரோபம் (ஆவரணம்- 2)

இப்படி ஆவரணத்தைப்பத்தி சொன்னதும் சீடனுக்கு ஒரு சந்தேகம் வருது.
ஆரோபம் எப்போ வரும்?

ஒரு விஷயம் முதல்ல இருக்கணும். இது ஆதாரம்.
இது மேலே இதோட உண்மை சொரூபம் தெரியாம ஒரு மறைப்பு இருக்கணும். இது ஆரோபம்.

ஆதாரமே இல்லைனா ஆரோபம் வர வாய்ப்பு இல்லையே! ஆதாரம் இல்லாம வேற எது மேலே வரும்?
ஆதாரம் அப்படியே இருக்குன்னா ஆரோபம் இல்லையே? ஏன்னா அதான் ஆதாரத்தை பாக்கிறோமே!
கயிறு இல்லைனா பாம்புன்னு நினைக்க என்ன அங்கே இருக்கு? கயிறு இருக்குன்னா பாம்புன்னு தோணாதே?
சீடன் கேட்கிறான் "எப்படி பாத்தாலும் உதைக்கிறதே? ஆதாரம் மறைபடும்போதும் மறைபடாதபோதும் ஆரோபம் தோன்ற வகையில்லையே?"

நல்லாதானே யோசிக்கிறார்!
ம்ம்ம்ம்! குரு சாமான்யப்பட்டவரா? அதுக்கும் பதில் வெச்சு இருக்கார்.

ஆதாரம் ரெண்டு வகைப்பா. சமம், விசேடம் ன்னு.

எல்லா இடத்திலேயும் எப்பவும் இருக்கிறது சாமான்ய ஆதாரம்.
குறைந்த காலம் சில இடங்களிலே இருக்கிறது விசேஷ ஆதாரம்.

உருண்டு திரண்டு நெளி நெளியா ஏதோ இருக்கறது உண்மை. அரை குறை இருட்டோ/ வெளிச்சமோ இதை பாக்கிறோம். இது சாமான்ய ஆதாரம். இதை கயிறுன்னு நாம சொல்கிறோமே இது விசேஷ ஆதாரம். உருண்டு திரண்டு நெளி நெளியா இருக்கிறதும் இல்லாம கூடுதலா இருக்கிற சில விஷயத்தை வெச்சு - இது நகரலை, தேங்காநார்ல செஞ்ச மாதிரி இருக்கு இப்படி- இது கயிறுன்னு முடிவு செய்யறோம் இல்லையா? இது விசேஷ பாகம்.

அரை குறை வெளிச்சத்திலே நாம அதை நகருது போல இருக்கே, ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ் ன்னு சத்தம் கேட்டாப்பல இருக்கே ன்னு சில கூடுதல் விஷயங்களை ஏத்தி இது பாம்பு ன்னு நினைக்கிறோம்.
ஆக விசேஷமா ஏத்தி பாத்ததுதான் மாறித்தே தவிர சாமான்ய பாகம் மாறலை! அதனால ஆதாரம் மறையாது. வேறா பார்க்கப்படும்.

51.
பேதத்தை மறைக்குமென்றதை சீடன் ஆதாரத்தை மறைக்கும் எனக்கருதி வினாவுதல்:

ஆதார மறைந்து போனா லாரோப மெங்கே தோன்றும்
ஆதார மறையா தாகி லாரோப மிலையே யென்றால்
ஆதாரஞ் சமம் விசேட மாமென விரண்டு கூறாம்
ஆதாரஞ் சமமா மெங்கு மாரோபம் விசேடமாமே

[காட்டு இருளில் கயிறு போன்ற பிரமமான] ஆதாரம் மறைந்து போனால் [பிராதி பாசிகமான பாம்பு போன்ற சீவேஸ்வர ஜகத்தின்] ஆரோபம் எங்கே தோன்றும்? [வெய்யிலில் கயிறு போன்ற பிரமமான] ஆதாரம் மறையாதாகில் [பிராதி பாசிகமான பாம்பு போன்ற சீவேஸ்வர ஜகத்தின்] ஆரோபம் இலையே? என்றால், ஆதாரம் சமம் (சாமான்யம்), விசேடமாம் என இரண்டு கூறாம். ஆதாரம் சமமாம் எங்கும் (அதிக காலம் அதிக இடங்களில் உள்ள ஆதாரம் சாமான்யமாம்.) ஆரோபம் விசேடமாமே. (குறைந்த காலம் குறைந்த இடங்களில் உள்ள) ஆரோபம் என்ற பெயர் கொண்ட ஆதாரம் விசேடம்.

கயிறாக தோன்றும் பிரமம் சாமான்ய ஆதாரம். பாம்பாக தோன்றும் கயிறு விசேட ஆதாரம்.

{தாத்பர்யம்: ஆதாரம் மறைபடும்போதும் மறைபடாதபோதும் ஆரோபம் தோன்ற

வகையில்லையே என்ற சீடனை நோக்கி அந்த ஆதாரத்தை ஆதார அதிட்டானமாக பிரித்து ஆதாரம் சமம் எனவும் அதிட்டானத்தை விசேடம் என்றும் கூறினார்.}

---

மதியம் செவ்வாய், மார்ச் 17, 2009

மேலும் ஆவரணம் பற்றி

52.
இப்ப மேட்டருக்கு வரார் குரு.

அப்பனே உருண்டு திரண்டு இருக்கிறது தெரியுது ஆனா தேங்கா நாரால பண்ண கயிறா இல்லை, உயிர் இருக்கற பாம்பான்னு தெரியாதது போல "நான் இருக்கேன்" ன்னு தெரியும். அது எல்லாருக்குமே சர்வ சாதாரணமா தெரியும். ஆனா அந்த நான் யார்? தான் பிரம்மம் என்கிறது தெரியாம தன்னை வேறயா - சீவன் ன்னு நினைச்சுக்கிறது ஆவரணத்தாலே என்கிறார்!

ஆதார அதிட்டானத்தில் ஆவரண சக்தி ஆதாரத்தை தெரிய ஒட்டாது மறைக்குமே தவிர ஆதாரத்தையே மறைக்காது என திருஷ்டாந்தம் மூலம் தெரிவித்தல்:

சகமதி லிதுவென் சுட்டாஞ் சமானந்தான் மறைந்தி டாது
மிகவிது கயிறா மென்னும் விசேடந்தான் மறைந்து போகும்
அகமெனுஞ் சமானந் தன்னை யஞ்ஞான மறைத்திடாது
பகர்விசே டமதாஞ் சீவன் பரமெனு மதனை மூடும்.

சகமதில் (உலகில்) இதுவென்று சுட்டால் ( [இருட்டில் கயிறை பாம்பு என] காட்டும்போது) சமானந்தான் மறைந்திடாது (சாமானிய ரூபம் இல்லாது போகாது). இது கயிறாம் என்னும் விசேடந்தான் (விசேட ரூபமே) மறைந்து போகும். அகம் எனும் (நான் இருக்கிறேன் என்ற சத்தான) சமானந் தன்னை (சாமான்யமான ஆதாரமான பிரமத்தை) [ஆவரண சக்தியான] அஞ்ஞானம் மறைத்திடாது. பகர் (வெளி) விசேடமதாம் சீவன் பரம் எனும் அதனை (அதிட்டானத்தை) மூடும்.

சீடன் விடாம யோசிக்கிறது குருவுக்கு தெரியுது. சீடன் மனசில ஓடறதை உணர்ந்து மேலே சொல்கிறார்:

திட்டினா விட்சேப சக்தியை தானே திட்டணும்? அதுதானே சும்மா கிடந்த பிரம்மத்தின் தமஸ் பகுதியை நாம் பாக்கிற இத்தனை விஷயங்களா காட்டி இது வேற ன்னு தோண வெச்சது? பிரம்ம நிலை மட்டுமே இருந்து வேறு ஒண்ணும் இல்லைனா இப்படி குழப்பம் வந்து இருக்காதே? நீங்க பாட்டுக்கு ஆவரணம்தான் மறைச்சதுன்னு குத்தம் சொல்லறீங்களே! விட்சேப சக்தி பிரச்சினை பண்ணலியா? இப்படி நினைக்கிறாய் இல்லையா? கேளு!

53.
ஆத்ம ஞானத்தை விட்சேப சக்தியானது அன்னமய கோசம் முதலியனவாகத் தோன்றி மறைத்ததே அன்றி ஆவரணமெங்கே மறைத்தது?
கேவல நிலைதோன் றாமற் கெடுத்தது பஞ்ச கோசம்
சீவனுஞ் சகத்து மாகிச் செனித்தவிட்சேப மன்றோ
ஆவர ணந்தா னேபா ழனர்தமென் றுரைத்த தேதோ
மேவருங் குருவேயென்று வினாவிடின் மகனே கேளாய்

பஞ்சகோசம் சீவனும் சகத்தும் ஆகி செனித்த (உண்டாகிய) விட்சேபம் [சக்தி] அன்றோ கேவல நிலை (பிரம ஆன்ம ஐக்கிய நிலை) தோன்றாமல் கெடுத்தது.
ஆவரணந்தானே (ஆவரண சக்திதானே) பாழ் [என்றும்] அனர்தம் [என்றும்] உரைத்தது

(செய்தது) ஏதோ? (என்ன காரணத்தாலோ?) மேவரும் (கிடைத்தற்கரிய) குருவே என்று வினாவிடின், மகனே கேளாய்.

---

மதியம் புதன், மார்ச் 18, 2009

ஆவரணம் விட்சேபத்தை விட ஏன் மோசம்?

விட்சேப சக்தி நம்மை மாதிரி மக்களுக்கு வேற மாதிரி உலகத்தை காட்டி பிரச்சினை பண்ணுகிறது உண்மைதான். வித விதமா தெரிகிற உலகத்தை பாத்து மயங்கி போய் அது மேல ஆசை வந்து வலுப்பட்டு....... ஆனா அதே சமயம் இதே விட்சேப சக்திதான் நல்லவங்கண்ணு காட்டி அவங்களோட சத்சங்கத்தை ஏற்படுத்தி வாழ்க்கையை சீரமைச்சுக்க ஒரு வழியும் காட்டுது.சாத்திர நூல்களை காட்டுது. குருவை காட்டுது. இந்த உலகத்தில சாரம் இல்லை. இது நீ இல்லை. உன்னை புரிஞ்சுக்கன்னு சொல்லி புரிஞ்சுக்க வழிகளையும் காட்டுறது இதே விட்சேப சக்தி தான்.
இப்படி ஆன்மீக நாட்டம் வந்தவங்களுக்கு விட்சேப சக்தி நல்லதே செய்யும். மத்தவங்களுக்கு கெடுதல் செய்யும்.
ஆனா ஆவரணமோ எல்லாருக்குமே கெடுதல்தான் பண்ணும்.

54.
விட்சேப சக்தி ஆவரண சக்திகளின் நன்மை தீமை கூறல்:
தோற்றமாஞ் சத்திதானுந் துன்பமாம் பவமானாலும்
ஆற்றலான் முத்திசேர்வார்க் கநுகூல மாகுங்காணீ
ஊற்றமாம் பகற் காலம்போ லுபகார நிசியினுண்டோ
மாற்றமென் றுரைப்பேன் மைந்தா மறைப்பது மிகப்பொல்லாதே

தோற்றமாம் சத்திதானும் (விட்சேப சக்தியும்) [அஞ்ஞானிகளுக்கு] துன்பமாம் பவமானாலும் (சம்சாரத்தை கொடுப்பதானாலும்) ஆற்றலான் [சிரவணாதி முயற்சியால்] முத்திசேர்வார்க்கு (முத்தியடைய விரும்பு முமுட்சுகளுக்கு) அநுகூலமாகும் காண் நீ. ஊற்றமாம் பகற் காலம் போல் (அஞ்ஞானிகள், முமுட்சுகள் இருவருக்கும் நித்திரை சோம்பல் முதலியவற்றைப் போக்கும் பகல் வேளை போல்) உபகாரம் நிசியில் (இரவில்) உண்டோ? மாற்றம் (வேறு பதில்) என் உரைப்பேன் மைந்தா? மறைப்பது (மறைக்கும் ஆவரண சக்தி) மிகப்பொல்லாதே.

தாத்பர்யம்: விட்சேப சக்தி அஞ்ஞானிகளுக்கு துன்பமும் முமுட்சுகளுக்கு மோட்ச இன்பமும், ஆவரண சக்தி இருவருக்கும் துன்பத்தையும் தரும்.

தினமும் தூங்குக்கிறோம். சாப்பிடாம கூட இருந்துடலாம். ஆனா மனுஷனால தூங்காம இருக்க முடியாது. இப்படி தூங்குகிறப்ப நாம் பாக்கிற இந்த உலகம் எல்லாமே காணாமத்தான் போகுது. சுழுத்தில கனவு கூட இல்லை. அதாவது விட்சேப சக்தியோட விளைவு அத்தனையும் காணாம போயிடும்.
ஆனா இதனாலா யாருக்கான முக்தி கிடைச்சு இருக்கா என்ன?
போதிய அளவு தூங்கினதும் நம் வாசனைகள் நம்மை எழுப்ப திருப்பி இந்த உலகத்துக்கு வரோம்.
ஆக விட்சேபம் ஒழியறதுனால நமக்கு ஒரு பிரயோசனமும் இல்லை- மனசு ரிஃப்ரெஷ் ஆகிறதை தவிர.
மாறா இந்த ஆவரண சக்தி இருக்கிற வரை மோட்சம் கிட்டவே கிட்டாது. ஆவரணம் போனா உடனே மோட்சம்தான்!

55.
அநுபவத்தால் ஆவரணத்தின் கொடுமை காட்டல்:
சுழுத்தியிற் பிரளயத்திற் றோற்றமாஞ் சகங்கண்மாண்டும்
அழுத்திய பவம் போய்முத்தி யடைவரொரு வருண்டோ
முழுத்தவிட் சேபமெல்லா முத்தியிற் கூட்டுகிற்கும்

கொழுத்த வாவரணமுத்தி கூடாமற் கெடுத்தகேடே

சுழுத்தியில் (தினப்பிரளயத்தில்) பிரளயத்தில் (பிரமப் பிரளயத்தில்) தோற்றமாம் சகங்கள் மாண்டும் (விட்சேபமான சகங்கள் நசிந்து) [துன்பத்தில்] அழுத்திய பவம் (பிறவி) போய் முத்தி அடைவர் ஒருவர் உண்டோ? (எவருமில்லை) [ஆகவே,] முழுத்த விட்சேபம் எல்லாம் (உடல் முதலான விட்சேப சக்தியின் விளைவெல்லாம்) முத்தியிற் கூட்டுகிற்கும். (பரம சுகம் தர வல்லது). கொழுத்த (பலமான) ஆவரணம் முத்தி கூடாமற் கெடுத்தகேடே (முக்தி அடையாமல் கெடுதல் மட்டும் செய்யும்)

தாத்பர்யம்: அறிவு விளங்கும் விட்சேபம் முத்தியின்பத்துக்கு சாதனமாகும். அறிவு விளங்காத ஆவரணம் பிறவி துன்பத்துக்கு காரணமாகும். இது அநுபவம்.

---

மதியம் வியாழன், மார்ச் 19, 2009

மாயையில் இருந்து வருவது மாயை இல்லையா?

சந்தேகத்துக்கு மேலே சந்தேகம் எழுகிறது சீடனுக்கு. அதுதானே நல்ல சீடன் லட்சணம்? சந்தேகமே இல்லைனா ஒண்ணுமே புரியலையோன்னு சொல்கிறவருக்கு சந்தேகம் வந்துடும். :-))
குரு புத்திசாலி! அதனாலே சீடனுக்கு வர சந்தேகத்தை அவன் வாய்விட்டு கேக்கிறதுக்கு முன்னாலேயே தானே சொல்லி விடையும் சொல்கிறார். கேள்வி கேக்க கூச்சப்படுவான்னு சந்தேகமோ என்னமோ!

எதுலேந்து ஒண்ணு வந்ததோ அதோட குணம்தானே புதுசா தோன்றினதுக்கும் அடிப்படையிலே இருக்கணும்? கசப்பு பாகல் காயிலேந்து இனிப்பா ஒண்ணும் செய்ய முடியாதே? சர்க்கரை போட்டு காரமா ஒண்ணும் செய்ய முடியாதே?
சிப்பில வெள்ளியை பாக்கிறது ஆரோபம், அது மித்தை (மாயை) என்கிறீங்க! சரி. அது போல பிரம்மத்தில விட்சேப சக்தியால ஆரோபமாகி இந்த உலகம் எல்லாம் இருக்கு. இது மித்தைன்னு சொல்கிறீங்க; ஒத்துக்கிறேன். ஆனா அப்படினா அதே விட்சேப சக்தியால வந்த குரு, சாத்திரம் இதன் உதவியால கிடக்கிற மோட்சம் எல்லாமே மாயையாதானே இருக்கணும்?

செம லாஜிக்!

குரு சொல்கிறார்: அப்பனே அப்படி நீ நினைச்சா, இப்படி யோசிச்சு பாரு. ஒரு கனவு காண்கிறாய். அது மாயைதான் ன்னு கனவு கலைஞ்சதுமே நமக்கே தெரியுது.
கனவுல ஒரு சிங்கம் வந்தது. அது பாஞ்சு வந்து உன்னை தாக்கறா மாதிரி கனவு காண்கிறாய். அப்ப என்ன ஆகும்? கனவு கலைஞ்சுடும். திடுக்குன்னு முழிச்சுகிட்டு ¨ அப்பாடா, கண்டது கனவுதானா¨ அப்படின்னு நினைப்பாய். கண்டது கனவுதான். கனவில பாத்த சிங்கம் மாயைதான். ஆனா விளைவு என்ன ஆச்சுன்னு பாத்தியா? விழிப்பு வந்துடுத்து. கனவான சின்ன மாயை விழிப்பை கொடுத்தது.
அதே போல குரு, சாத்திரங்கள் போல  ஞான சாதனமா இருக்கிற விஷயங்கள் உண்மையிலே மாயைதான் ஆனாலும் அவை நல்லதே பண்ணும். அவற்றோட உதவியால கிடைக்கிற முத்தி - நிர்வாண நிலை மாயை இல்லை; உண்மையே!

56.
மித்தையான விட்சேபத்தால் வெளிப்படும் முத்தியும் மித்தையாம் எனில்:

> சுத்தியில் வெள்ளிபோலத் தோன்றிய தோற்றமான
> சத்தியும் பொய்யேயென்றாற் சத்திசா தனமாவந்த
> முத்தியும் பொய்யேமென்னின் மோகநித்திரை விலங்கால்
> நித்திரை தெளியுமாபோ லிருவாண நிலைமெய்யாமே

சுத்தியில் (சிப்பியில் ஆரோபமான) வெள்ளி போல, தோன்றிய தோற்றமான சத்தியும் (பிரமத்தில் ஆரோபமான விட்சேப சக்தியும்) பொய்யே என்றால் சத்தி சாதனமாக வந்த முத்தியும் (விட்சேப சக்தியால் தோன்றிய குரு, சாஸ்திரம் முதலான சாதனங்களால் கிடைத்த மோட்சமும்) பொய்யே என்னின், மோக நித்திரை விலங்கால் (சிங்கத்தால்) நித்திரை தெளியுமா போல் (தூக்கம் நீங்கி விழிப்பு ஏற்படுவது போல) நிருவாண நிலை மெய்யாமே.
+++++++++++++++

அப்பப்ப ஆஸ்பத்திரிக்கு விஷம் குடிச்சுட்டு கேஸ் வரும் இல்லையா? பூச்சி மருந்து, குவளைக்காயை அரைச்சு குடிக்கிறது... நிறைய இருக்கு. அதுக்கு என்னடா மாத்து மருந்துன்னு பாத்தா அதுவே ஒரு விஷமா இருக்கும். ஏற்கெனவே விஷம் இருக்கிறதால இதனால் விஷ விளைவு வராது. அதயே தனியா சாப்பிட்டா ஆள் காலி!

அதே போல இரும்பு துண்டை இன்னொரு இரும்பு துண்டால்தான் வெட்டுவாங்க; இல்லை அறுப்பாங்க. சோப்பு இல்லாத முன் காலத்திலே துணில இருக்கிற அழுக்கை உவர் மண் ன்னு ஒரு மண்ணை போட்டு தேச்சு எடுப்பாங்க.

*இதே போல மாயையை மாயையாலேயே நீக்கலாம்.*

சுடு காட்டுக்கு போய் பாத்தா சவத்தை எரிக்கிறப்ப ஒரு தடி வெச்சு இருப்பாங்க. நெருப்பு சுடுறப்ப தசைகள் எல்லாம் ப்ரோடீன் இறுகி பட் பட்டுன்னு வளையும். அப்ப கை கால் உதறுகிற மாதிரி இருக்கும். இதனால்தான் திரும்பி பாக்காம போங்கன்னு விரட்டி விடுவாங்க. அறியாமையிலே உசிர் இன்னும் போகலையோன்னு நினைக்க வாய்ப்பு இருக்கு இல்லையா? இந்த மாதிரி கை கால் உதறுகிற போது சிதை அடுக்கி அங்கேயே மீதம் இருக்கிற ஒரு சவுக்கு கட்டையை எடுத்து பட் பட்ன்னு உதறுகிற கை கால் மேலே போட்டு சிதையிலேயே தள்ளுவாங்க. நெருப்பு அணைகிற மாதிரி இருந்தா இந்த கட்டையாலேயே கிளறிவிடுவாங்க. ஒவ்வொரு முறை கிளறுகிற போதும் அதுவும் கொஞ்சம் எரியும் இல்லையா? கடைசியிலே எரியாம மீதி இருக்கிறதையும் எறியாம சிதையிலே போட்டுடுவாங்க. அதுவும் முழுக்க எரிஞ்சு போகும்.

மாயையிலும் நல்ல மாயை (நல்லது செய்கிற மாயை) கெட்ட மாயைன்னு வகைப்படுத்தி பாக்கலாம். இந்த நல்ல மாயை மோக்ஷத்துக்கு சாதனமானது. மோக்ஷத்துக்கு இழுத்து போய் ஞானம் வருகிற போதும் இதுவும் "சவம் சுடு தடி போல" மறைஞ்சு போகும்!

57.
இம்பரி னஞ்சைநஞ்சா லிரும்பினை யிரும்பா லெய்யும்
அம்பினை அம்பாற்பற்று மழுக்கினையழுக்கான் மாய்ப்பர்
வம்பியன் மாயைதன்னை மாயையான் மாய்ப்பர் பின்னைத்
தம்பமா மதுவுங்கூடச் சவஞ்சுடுதடி போற்போமே

இம்பரில் (இவ்வுலகில்) நஞ்சை நஞ்சால் (அதன் பிரதி கூலமான நச்சாலும்) இரும்பினை இரும்பால், (அதன் பிரதி கூலமான இரும்பு அரத்தாலும்), எய்யும் அம்பினை அம்பால், [துணியில்] பற்றும் அழுக்கினை அழுக்கால் (உவர் மண்ணாலும்) மாய்ப்பர். வம்பியல் (நழுவும் சுபாவமுள்ள) மாயைதன்னை மாயையால் மாய்ப்பர். பின்னை தம்பமாம் அதுவும் கூடச் சவஞ் சுடு தடி போல் போமே.

தாத்பர்யம்: தினமும் குறைந்து வருகின்ற படியால் நழுவுதல் சுபாவமான அஞ்ஞானமும் மறைப்பாயும், பெண்ணாதி, பொன்னாதி, மண்ணாதி, அன்னாதியாயும் இருக்கும் அசுத்த மாயையைச் சிரவணாதி சுத்த மாயை கெடுத்து பின் சவத்தை சுட பயன்படுத்திய தடியை

முடிவில் அத்தீயிலேயே போட்டு எரிப்பது போல தானும் நீங்கும்.

---

மதியம் வெள்ளி, மார்ச் 20, 2009

ஏழு அவஸ்தைகள்

இப்ப மாயையால சீவன்களுக்கு ஏற்படக்கூடிய இருப்பு நிலைகளை வரிசையா சொல்கிறார்.

ஏழு அவஸ்தைகள் உண்டாகுமாம். என்ன அவஸ்தைப்பா இது?
அதான் இருப்பு நிலைன்னு முன்னாலேயே சொன்னேன். படிக்க படிக்க புரியும்.

அந்த ஏழு அவத்தை:
1. அஞ்ஞானம்,
2.மூடல் (ஆவரணம்),
3.முளைத்தல் (விட்சேபம்), இது வரை இதெல்லாம் பாத்தாச்சு.
4.காணாத (பரோட்ச) ஞானம். ஞானம் இருக்கு; ஆனா தெளிவா இல்லை.
5.சந்ததம் கண்ட ஞானம் - தெளிவான ஞானம்.
6.தழல் கெடல் (துக்க நிவர்த்தி), தழல் கெடல். ஆஹா! என்ன வார்த்தை பிரயோகம் பாருங்க!
துக்கத்தை தழல் - நெருப்பு என்கிறார்.
7.குளிர்மையாதல் (தடையற்ற ஆநந்தம்) நெருப்பு குளிர்ந்து போச்சு. அதாவது நீங்கிவிட்டது.
துக்கம் போனால் நம்மோட இயல்பான நிலையான அனந்தம் வெளிப்படும்.

58.
ஜீவாத்மாக்களுக்கு இவ்விரு விதமான மாயையால் சப்தாவத்தைகள் வரும் வழி, அவற்றின் பெயர்கள்:

இந்தமா யையினாற் சீவர்க் கேழவத்தைக ளுண்டாகும்
அந்தவே ழவத்தை தம்மையடைவினின் மொழியக்கேளாய்
முந்தவஞ் ஞானமூடன் முளைத்தல் காணாதஞானம்
சந்ததங் கண்டஞானந் தழல்கெடல் குளிர்மையாதல்.

இந்த மாயையினால் சீவர்க்கு ஏழு அவத்தைகள் உண்டாகும். அந்த ஏழு அவத்தை தம்மை அடைவினில் (கிரமமாக) மொழியக் கேளாய். முந்த (முதலில்) அஞ்ஞானம், மூடல் (ஆவரணம்), முளைத்தல் (விட்சேபம்), காணாத (பரோட்ச) ஞானம், சந்ததம் கண்ட ஞானம், தழல் கெடல் (துக்க நிவர்த்தி), குளிர்மையாதல் (தடையற்ற ஆநந்தம்)

நீங்க பாட்டுக்கு லிஸ்ட் போட்டா? என்ன அதெல்லாம்ன்னு சொல்லுங்கன்னா:

1.பிரமமாம் தனை மறந்த பேதமையே அஞ்ஞானம்.
2.பரன் (பிரம்மம்) இல்லை, காணோம் என்று பகர்தல் ஆவரண மூடல்.
3.நரன், ஒரு கருத்தால் சீவன் நான் என முளைத்தல் (நான் மானுடன், கர்மா செய்பவன், பலன்களை புசிப்பவன் என்ற எண்ணத்தால் சீவன் என உண்டாதல்) தோற்றம் (விட்சேபமாம்).
4.குரவன் (குரு) வாக்கியத்தால் [பரமாத்மாவான] தன்னை [உண்டு என] குறிக்கொளல் (அறிதல்) [பிரமமில்லை எனும் அசத்தான ஆவரணத்தை நீக்கும்] பரோட்ச ஞானம்.

59. அந்த அவத்தைகளின் தன்மை:

பிரமமாந் தனைமறந்த பேதமையே யஞ்ஞானம்
பரனிலை காணோமென்று பகர்தலா வரணமூடல்
நரனொரு கருத்தாற்சீவ னானென முளைத்தறோற்றம்
குரவன்வாக் கியத்தாற்றன்னைக் குறிக்கொளல் பரோட்ச ஞானம்.

மேலே?
5.தத்துவ விசாரம் செய்து சகல சந்தேகமும் போய் அத்துவிதம் (அத்வைத, ஐக்கிய சொரூபம்) தான் ஆதல் அபரோட்ச ஞானமாகும். பிரமம் இல்லை என்னும் ஆவரணத்தை நீக்கும் பிரத்தியட்ச ஞானமாகும்.
6.கர்த்தனாம் சீவ பேதம் (கூடஸ்தனிடம் ஆரோபித்த நான் செய்பவன் என்ற சீவ பாவனை) கழிவதே துக்கம் போகல்.
7.முத்தனாய் எல்லாம் செய்து முடித்தது (சகல பந்தங்களில் இருந்தும் விடுபட்டது) ஆனந்தமாமே. (தடையற்ற ஆனந்தமாம்.)

---

மதியம் திங்கள், மார்ச் 23, 2009

பத்தாவது ஆள் - கதை

60.
தத்துவ விசாரஞ் செய்து சகலசந் தேகமும் போய்
அத்துவி தந்தா னாதலப ரோட்ச ஞானமாகும்
கர்த்தனாஞ் சீவ பேதங் கழிவதே துக்கம் போகல்
முத்தனா யெல்லாஞ் செய்து முடித்தா னந்தமாமே

இதை விளக்க ஒரு கதை வருது.

பத்து பேர் ஒண்ணா ஜாலியா பேசிகிட்டு போறாங்க. வழில ஒரு ஆறு வருது. அதை கடக்க வழியில்லை. ஆத்திலேயோ தண்ணி வேகமா நிறைய போகுது. கடந்து போக கொஞ்சம் பயமானாலும் வேற வழியில்லை. சரின்னு மெதுவா தண்ணில இறங்கி ஆறை தாண்டறாங்க. அக்கரைக்கு போனதும் அத்தனை பேரும் பத்திரமா கடந்தாச்சான்னு சந்தேகம். அவர்கள்ள ஒத்தன் எவ்வளோ பேர் இருக்கோம் ன்னு எண்ணிப்பாக்கிறான். "அட! ஒன்பதுதானே இருக்கு? ஒரு ஆளை காணோம்" ன்னு பயம் வந்தாச்சு. "அட! உனக்கு எண்ணவே தெரியாதேடா! நாண் எண்ணறேன்" ன்னு இன்னொருத்தன் எண்ணிப்பாக்கிறான். அவனுக்கும் ஒன்பதுதான் எண்ணிக்கை வருது. "யாருடா காணோம்?" ன்னு கேட்டா எல்லாரும் முழிக்கறாங்க. எல்லாரும் அழ ஆரம்பிச்சுடறாங்க.

அப்ப அங்க ஒரு வழிப்போக்கன் வரான். "என்னப்பா எல்லாரும் அழறிங்க? என்ன விஷயம்?" ன்னு கேட்டான். "ஐயா நாங்க பத்து பேர் ஆத்தை கடந்தோம். ஒத்தனை காணோம். யாருன்னும் தெரியலை" ன்னாங்க.

வழிப்போக்கன் எண்ணிப்பாத்தான். பத்து பேர் இருக்காங்கன்னு தெரிஞ்சது. என்ன விஷயம்ன்னு புரிஞ்சுடுத்து. "நீங்க பத்து பேர் இருக்கீங்கடா"ன்னான். பசங்களுக்கும் இவர் சொல்கிறது சரியாதான் இருக்கும்ன்னு தோணித்து. "ஏண்டா! அவங்க அவங்க எண்ணினீங்க. தன்னை எண்ணாம மத்தவங்களை எண்ணினா எப்படிடா பத்து வரும்?" ன்னு கேட்டுட்டு போயிட்டான். "அட ஆமா! நம்பளையே எண்ணிக்காம விட்டுட்டோமே" ன்னு எல்லாரும் அ.வ.சி பண்ணிட்டு போய் சேந்தாங்க.

61.
இதுநினக் கறியும்வண்ண மிப்படி யொருதிட்டாந்தம்
புதுமையாங் கதைகேள் பத்துப்புருடரோ ராற்றை நீந்தி
உதகதீ ரத்திலேறி யொருவனொன் பதுபே ரெண்ணி
அதனொடு தசமன்றானென் றறியாமன் மயங்கி நின்றான்

இது நினக்கு (உனக்கு) அறியும் வண்ணம் இப்படி ஒரு திட்டாந்தம் புதுமையாம் கதைகேள். பத்து புருடர் ஓர் ஆற்றை நீந்தி உதக (நீர் அதாவது நதி) தீரத்தில் ஏறி, [அவற்றில்] ஒருவன் ஒன்பது பேர் எண்ணி அதனொடு தசமன் (பத்தாவது நபர்) தான் என்று அறியாமல் மயங்கி

நின்றான்.

ஆத்தை தாண்டினதும் ஆளுங்களை எண்ணின ஆசாமி ஒன்பது பேரை எண்ணிட்டு பத்தாவதா தன்னை எண்ணாதது அஞ்ஞானம்.
பத்தாவது ஆசாமி காணோம் ன்னு தீர்மானிச்சது பிறியாத (அபரோட்ச ஞானம் வரும் வரை நீங்காத) ஆவரணமாகும்.
காணோமேன்னு துக்கத்தில அழுகிறது விட்சேபம்.
வழிப்போக்கன் பத்தாவது நபர் உண்டு, நிற்கின்றான் ன்னு சொன்னதை உண்மையா இருக்கும்னு எண்ணுவது பரோட்ச ஞானம்.
வழிப்போக்கன் "திருப்பி எண்ணிப்பாருப்பா ஆளுங்க ஒன்பது பேர் இருக்கீங்க. நீதான் பத்தாவது ஆள்" ன்னு சொல்லவே, எண்ணிப்பாத்து தன்னைக் காணல் கண்ணினில் கண்ட ஞானம். (அபரோட்ச ஞானம்).
ஒத்தன் இறந்துட்டான்னு இருந்த பயம் போகிறது - அழுதல் போவது நோய் போதல்.
மனசுல சந்தேகம் போய் எல்லாரும் இருக்கோம் என்கிற திடமான நிம்மதி - தெளிதல் - ஆநந்தமாமே.

62.
அறியாத மயலஞ் ஞான மவனில்லை காணோ மென்றல்
பிறியாவா வரணமாகும் பீழைகொண் டழல்விட் சேபம்
நெறியாளன் றசம னுடு நிற்கின்றா னென்ற சொல்லைக்
குறியாக வெண்ணிநெஞ்சிற் கொள்வது பரோட்ச ஞானம்

அறியாத மயல் (9 பேரை கண்டும் பிராந்தியினால் தன்னை பத்தாவதாக அறியாத மயக்கம்) அஞ்ஞானம். அவனில்லை காணோம் என்றல் பிறியாத (அபரோட்ச ஞானம் வரும் வரை நீங்காத) ஆவரணமாகும். பீழை (துக்கம்) கொண்டு அழல் விட்சேபம். நெறியாளன் (வழிப்போக்கன்) தசமன் (பத்தாவது நபர்) உண்டு, நிற்கின்றான் என்ற சொல்லை குறியாக (உண்மையாக) எண்ணி நெஞ்சில் கொள்வது பரோட்ச ஞானம்.

63.
புண்ணிய பதிகன் பின்னும் புருடரொன் பதின்மர் தம்மை
எண்ணுநீ தசமனாவை யென்னவே தன்னைக் காணல்
கண்ணினிற் கண்டஞானங் கரைதல்போ வதுநோய்போதல்
திண்ணிய மனதி லையந் தெளிதலா நந்த மாமே

புண்ணிய பதிகன் பின்னும் (மீண்டும்) புருடர் ஒன்பதின்மர் தம்மை எண்ணு; நீ தசமன் ஆவை என்னவே தன்னைக் காணல் கண்ணினில் கண்ட ஞானம். (அபரோட்ச ஞானம்) கரைதல் (அழுதல்) போவது நோய் போதல். திண்ணிய (திடமான) மனதில் ஐயம் தெளிதல் ஆநந்தமாமே.

---

மதியம் செவ்வாய், மார்ச் 24, 2009

ஞானம் -மறதி போதல்

63.
புண்ணிய பதிகன் பின்னும் புருடரொன் பதின்மர் தம்மை
எண்ணுநீ தசமனாவை யென்னவே தன்னைக் காணல்
கண்ணினிற் கண்டஞானங் கரைதல்போ வதுநோய்போதல்
திண்ணிய மனதி லையந் தெளிதலா நந்த மாமே

புண்ணிய பதிகன் பின்னும் (மீண்டும்) புருடர் ஒன்பதின்மர் தம்மை எண்ணு; நீ தசமன் ஆவை என்னவே தன்னைக் காணல் கண்ணினில் கண்ட ஞானம். (அபரோட்ச ஞானம்) கரைதல் (அழுதல்) போவது நோய் போதல். திண்ணிய (திடமான) மனதில் ஐயம் தெளிதல் ஆநந்தமாமே.

இதுல கவனிக்க வேண்டியது இவனுக்கு புதுசா ஒண்ணும் கிடைக்கலை. அவனோட அறியாமைதான் பிரச்சினை. உண்டான அனர்த்தமெல்லாம் மூடத்தனமான மறதியால வந்தது.

ஒத்தர் கணினியிலே நிறைய படங்கள் சேத்து வெச்சு இருந்தார். ப்ளாக்ல போட ஆசை ஆசையா சேத்தது. ஒரு நாள் குறிப்பிட்ட ஆனை படத்தை தேடினா காணோம். எங்கே சேமிச்சோம்னு நினைவுக்கு வரலை. செர்ச்சில் *.ஜேபெக், *.பிஎம்பி ன்னு தேடித்தேடி பாத்து கிடைக்கலை. கடைசியா பார்மாட் செய்தப்ப போயிடுச்சோன்னு வருத்தப்பட்டார். சில நாட்கள் கழிச்சு வேற எதோ தேடறப்ப எதேச்சையா இது கிடைக்குது. அட! அத பத்திரமா இருக்கனும்ன்னு தனியா ஒரு அடைவில டிஃப் பார்மேட் ல சேமிச்சோம். மறந்தே போயிடுத்து இப்ப கிடைச்சதேன்னு ஒரே சந்தோஷம்!

அது கணினியிலேதான் இருந்தது. காணாம போகலை. ஆனா மறதியால இல்லைன்னு நினைச்சார். மறதி போனதும் மகிழ்ச்சி வந்தது.

இதே போலத்தான் நாமும் நாம் உண்மையில யார் என்கிறதை மறந்து போகிறோம். ஞானம் அடைகிறவங்க புதுசா ஒண்ணையும் அடையலை. அஞ்ஞானம் போனதால நாம் யாருன்னு விளங்கிடும்.

¨ஹிஹிஹி! படத்தை நானேதான் அங்க சேமிச்சேன். மறந்துட்டேன்!¨ னு அவசி க்கிற மாதிரி ஞானம் வந்தவங்க ¨அட! இதான் நான். இல்லைன்னு நினைச்சது அறியாமைன்னு சிரிப்பாங்க. மேலும் நம்மோட மன மயக்கத்தாலேதானே இந்த நிலையாத பொருளை எல்லாம் - நித்தியமில்லா உலக தொல்லைகளை எல்லாம் நிஜம்ன்னு நம்பினேன்; படாத பாடுபட்டேன். ஆகா! அதே போல இப்பவும் எத்தனைப்பேர் நாம் இத்தனைக்காலம் இருந்தது போல அதே மயக்கத்திலே சிக்கி கஷ்டப்படுறாங்க! இது பெரிய வேடிக்கையே¨ ன்னு நினைப்பாங்க.

தூங்கி, கெட்ட கனவு கண்டவன் அலறி எழுந்து ¨ச்சே! கனவுதானா¨ ன்னு அ.வ.சிரிச்சுப்பானோ அதே போல ஞானியும் உலகை பொய் தோற்றம் ன்னு புரிஞ்சு அதனால் பாதிப்பு இல்லாம இருப்பார்.

ம்ம்ம்ம்..அங்கே சிலர் ஒரு கேள்வி கேக்கிறது புரியுது!

கனவு கண்டபோது ரொம்பவே உண்மை போல இருந்தது ஒத்துக்கறேன். ஆனா தூக்கத்திலேந்து எழுந்த பிறகு அது கனவு புரிஞ்சுடும். அப்ப அந்த கனவுக்காட்சிகள் தென் படாதே! ஆனா உலகம் அப்படி இல்லையே! கனவு போல் உலகம்ன்னு புரிஞ்சாக்கூட அந்த உலகம் தென்படாம இருக்காதே. அப்படித்தானே சொல்கிறாங்க? இல்லைனா எந்த ஞானியும் இந்த உலகத்திலே நடமாட முடியாதே?
அருமையான கேள்விங்க. எப்படி பாராட்டறதுன்னே புரியலை! :-))

நல்ல வெயில் காலம் வந்தாச்சு. ரோட்டிலே போறோம். அட ரோட்டிலே தண்ணி ன்னு நினைக்கறோம். அட இல்லை இதுதான் கானல் நீர் ன்னு தெளிகிறோம். அப்ப அந்த பொய்யான கானல்நீர் தெரியுதா இல்லையா? தெரியும். ஆனாலும் அதே நேரம் அது பொய் ன்னும் தெரியும்!
அப்படி ஞானிக்கு இந்த உலகங்களும் தெரியும். அதே நேரம் அதெல்லாம் பொய் ன்னும் தெரியும்! அதனால நடக்கிற விஷயங்களேந்து விலகி நின்னு பாக்க முடியும்.
---

சீடன் இப்ப டக்குன்னு பிடிச்சுகிட்டான்.
¨சாமி! பத்தாவது ஆளை பாருன்னு வழிப்போக்கன் காட்டி துக்கம் நிவிருத்தி பண்ணினா மாதிரி என்னை - என் நிஜ ரூபத்த - எனக்கு காட்டி என் துக்கத்த போக்குங்களேன்!¨ அப்படிங்கறான்.

பையன் ரெடியாயிட்டான்னு உணர்ந்து குரு அவனுக்கு மகா வாக்கிய உபதேசம் செய்யப்போறார்.
ஸாம வேத மஹா வாக்கியமான தத் துவம் அஸி என்பதை உபதேசிக்கிறார்.
தத் என்பது பிரம்மத்தை குறிக்கிறது.
த்வம் என்கிறது நீ. இந்த இடத்திலே கூடஸ்தனை குறிக்குது.
இந்த ரெண்டுத்தையும் அஸி என்கிறது ஒண்ணா சேக்குது.
அது நீயாக இருக்கிறாய்!

64.
தன்னை தரிசிப்பிக்க வேண்டுமென்று சீடன் வினவியதற்கு விடை:

தசபுமான் றனைக்கண்டாற்போற் சற்குரு மூர்த்தியேயென்
நிசவடிவினை யான்காண நீர்காட்டல் வேண்டுமென்றான்
சுசிபெறு மிலட்சியார்த்தந் துவம்பதந் தற்பதங்கட்
கசிபத வைக்கியஞ் செய்யுமது செயுமுண்மை கேளாய்

தசபுமான்தனை கண்டால் போல், சற்குரு மூர்த்தியே, என் நிச வடிவினை யான் காண நீர் காட்டல் வேண்டுமென்றான். "துவம்" பதம் "தத்" பதம் (ஸாம வேத மஹா வாக்கியமான த்வம் (நீ) தத் (அது) பதங்களின்) சுசி பெறும் இலட்சியார்த்தங்கட்கு (சுத்தம் பொருந்திய இலட்சிய அர்த்தங்களான கூடஸ்த பிரமங்கட்கு) அசி பதம் (இருக்கிறாய் என்ற சொல்) ஐக்கியம் செய்யும். (ஐக்கிய சொரூபத்தை இலட்சணையால் போதிக்கும்) அது செயும் உண்மை (அவ்வாக்கியம் அப்படி போதிக்கும் உண்மையை) கேளாய்.

---

மதியம் புதன், மார்ச் 25, 2009

பிரம்மத்தின் 4 சைதன்ய வெளிப்பாடுகள்.

விண் என்கிற ஆகாயம் இருக்கு. இங்கே சொல்கிறது ஸ்கை ஆகாயம் இல்லை. ஸ்பேஸ் ஆகாயம்.
இதை பல விதமா சொல்லலாம்.
ஸ்பேஸ் ன்னு நமக்கு அறிவியல் மூலமா தெரிஞ்சது மஹா ஆகாசம்.
அண்ணாந்து பாக்கிறப்ப தெரியறது மேக ஆகாசம். ஒரு நீல கலரிலே குடை மாதிரி ஒரு தோற்றம் இருந்துகிட்டு இதுதான் ஆகாயம்ன்னு ஒரு அடையாளம் காட்டுது. முன்ன சொன்ன மகா ஆகாசம்தான் இதுக்கு இடம் கொடுத்து இருக்கு.

நம்ம முன்னாலே ஒரு குடம் இருக்கு. அந்த குடத்துக்குள்ளே இடம் இருக்கு. அதான் குடத்தில இருக்கிற ஸ்பேஸ்- குட ஆகாசம்.
பக்கத்திலே ஒரு குடத்திலே தண்ணீர் இருக்கு. இதிலே வானம் பிரதி பலிக்குது. நாம அண்ணாந்து பாத்தது இப்ப இங்க நிழலா தெரியுது. குட ஆகாசமும் இந்த நிழலான ஆகாசமும் சேந்து - இது ஜல ஆகாசம்.

இதே போல எங்கேயும் இருக்கிற பிரம்மம், ஈசன், கூடஸ்தன், சீவன் அப்படின்னு நாலு பிரிவா - சைதன்யமா- உணரலாம்.

65.
விண்ணொன்றை மகாவிண்ணென்று மேகவிண்ணென்றும் பாரின்
மண்ணொன்று கடவிண்ணென்று மருவிய சல விண்ணென்றும்
எண்ணுகற்பனைபோ லொன்றே யெங்குமாம் பிரமமீசன்
நண்ணுங் கூடஸ்தன்சீவ னான்குசைதன் னியமாமே

விண் (ஆகாயம்) ஒன்றை மகா விண் என்றும் மேக விண் என்றும் பாரின் (உலகில்) மண் ஒன்றும் (மண்ணால் ஆகிய) கட விண் (குடத்தால் பிரிக்கப்பட்ட ஆகாயம்) என்றும் மருவிய சல விண் (குடத்தில் உள்ள ஜலத்தில் ஆகாயம்) என்றும் எண்ணும் கற்பனை போல், ஒன்றே எங்குமாம் பிரமம் (என்றும்), ஈசன் (என்றும்), நண்ணும் கூடஸ்தன் (சரீரத்தில் வளைபட்டுள்ள பிரத்திய ஆத்மா என்றும்) சீவன் [என்றும்] நான்கு [வகை] சைதன்னியமாமே.

பிரம்மம்: மகா ஆகாசம் ப்ரம்மாண்டத்திலே உள்ளும் புறமும் எங்கும் வியாபித்து இருக்கிறது போல எங்கும் வியாபித்து இருக்கிறது பிரம்மம்.

ஈசன்: மேகத்துக்கு இடம் கொடுத்த ஆகாசமும் மேக ஜலத்திலே பிரதி பலிக்கிற ஆகாசமும் போல;
இடம் கொடுக்கிற பிரம்மமும் சுத்த, சத்வ மாயையிலே பிரபலிக்கிற பிரம்மத்தோட நிழலே ஈசன்.

எங்கும் நிறைந்து இருக்கிறது பிரமம்தான். ஈசன் இல்லை. ஆனா பல முறை விவகாரிகத்திலே ஈசன் எங்கும் நிறைந்தவன்னு சொல்கிறப்ப பிரம்மத்தைதான் சொல்கிறாங்க.

கூடஸ்தன் - இந்த வார்த்தையை முதல்லேயே பாத்தோம். கூடஸ்தன் ன்னாலும் ஜீவ சாட்சினாலும் ஒண்ணே. அந்தக்கரணம் ஸ்வச்சம் - அதான் க்ளியர் - ஆனது. அதனால ப்ரம்மத்தோட சாயை- நிழல் அதிலே பிரதிபலிக்கும்.

எப்படி மகா ஆகாசத்தில மாயையா ஒரு மேக ஆகாசம் தோன்றுமோ அது போல இந்த அந்தகரணத்தால பிரம்மத்தோட நிழல் ஜீவ சாட்சியா பிரிச்சு காட்டப்படும். பிரிச்சு காட்டின ஜீவசாட்சி மட்டுமே கூடஸ்தன். கட ஆகாசம் உதாரணத்தை பாருங்க. குடம் தனி. அது பிரிச்சு காட்டுகிற ஆகாசம் தனி. இந்த கட ஆகாசம் போல கூடஸ்தன்.

கூடஸ்தனை விட்டு அந்தக்கரணம் தனியா இருக்கு. ஒரு வேளை கூடஸ்தனில அந்தக்கரணம் சேந்துபோச்சுனா? அப்ப அதுக்கு ஜீவன் ன்னு பெயர். சேந்துபோச்சுனா ன்னு எந்த அர்த்தத்தில சொல்கிறோம்?

காகிதம் இருக்கு. இதுல நீலக்காகிதம். இருக்கலாம். இந்த நீலத்தன்மை காகிதத்துக்கு உள்ளே புகுந்தாச்சு. அந்த காகிதத்தை கருப்பு காகிதம் சிவப்பு காகிதத்திலிருந்து தனியா காட்டுது. இந்த நீலத்தன்மையையும் காகிதத்தையும் பிரிக்கிறது கஷ்டம்.

கூடஸ்தன் + அந்தக்கரணம் = ஜீவன்.

இன்னொரு உதாரணம் பாக்கலாமா?

காகிதம் என்கிற சைதன்யத்தில அந்தக்கரணம் லேமினேட் பண்ணா அது கூடஸ்தன்.

காகிதம் என்கிற சைதன்யத்தில அந்தக்கரணம் நீல வண்ணம் மாதிரி இரண்டறக்கலந்தா அது ஜீவன்.

**PG** சொரூபத்தில பிரவேசம் செய்யாம தனியா நின்னு பிரிச்சு காட்டினா அப்படி காட்டப்பட்டது உபகிதம். காட்டுவது உபாதி.
கூடஸ்தன் உபகிதம். அந்தக்கரணம் உபாதி.
சொரூபத்தில பிரவேசம் செய்து சேந்து நின்னா பிரிச்சு காட்டினா அப்படி காட்டப்பட்டது விசிட்டம். காட்டுவது விசேஷனம்.
ஜீவன் விசிட்டம். அந்தக்கரணம் விசேஷனம்.

---

ம்ம்ம்ம்.... இப்ப யோசிச்சா ஒண்ணு புரியும். ஜீவனுக்கும் ஜீவ சாட்சியான கூடஸ்தனுக்கும் இருக்கிற ஒரே பாகுபாடு அந்தக்கரணம் விலகி இருக்கா இல்லை சேர்ந்து இருக்கா என்பதுதான். அந்தகரணம்தான் முக்கியமா மனதுன்னு தெரியுமே! மாயைதான் மனசை உண்டாக்குகிறதும். இந்த மனசு நின்னு போச்சுனா மாயை விலகும். ஜீவனுக்கும் ஜீவ சாட்சியான கூடஸ்தனுக்கும் வேறுபாடு ஒழியும். நிலையான ஜீவ சாட்சியா கூடஸ்தன் மட்டுமே நிக்கும்.

கூடஸ்தன்: சீவன்
இலக்கோண ஆராய்ச்சி இப்ப கொஞ்சம் பாக்கோணோம்.
வாச்சியம்: literal
இலட்சியம் : implied
தத் த்வம் அஸி என்கிறதுலே தத் - ஈசன், த்வம் - நீ = ஜீவன். இது வாச்சிய அர்த்தம். அதான் லிடரல்.
பிரமம், கூடஸ்தன் இது இலட்சிய அர்த்தம். அதாவது சொல்லப்பட்ட சொல் ஒண்ணா இருந்தாலும் உத்தேசிச்சு சொன்னது இதைதான்.

ஈசனுக்கும் சீவனுக்கும் வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் இருக்கிறது போல. எட்டிப்பிடிக்க முடியாது.

ஆனால் கூடஸ்தனுக்கும் பிரம்மத்துக்கும் இருக்கிற தொடர்பு பாலிலே மறைஞ்சு இருக்கிற நெய் போல. அது பால் என்கிற தன்மையை விட்டு நெய்யாக பிரிச்சு பாக்க முடியும். பிரம்மம் என்கிற பாலிலே இருந்து நெய்யை ஒரு ப்ராஸஸால கொண்டு வருவது போல சீவனாகிய நீ கூடஸ்தன் என்று புரிஞ்சு கொண்டு பிரமத்தோட ஐக்கியமாகலாம்.

எது இதை நடக்க விடாம தடுக்குது? அதான் கர்மா. கர்மா என்கிற தளைக்கட்டு- கர்ம பந்தம். எதால நடத்த முடியும்? முன்னேயே பாத்த கேட்டல் முதலான ப்ராஸஸால.

---

மதியம் வியாழன், மார்ச் 26, 2009
ஞான விசாரணை
கையினால் பிரிக்க முடியாத நெய்யை மத்தால் கடைந்து எடுப்பது போல, வாச்சியார்தத்தில் (சீவனில்) கலந்து கர்ம பந்தத்தினால் பிரிக்க முடியாது உள்ள இலட்சியார்த்த சொரூபத்தை (ஆத்மா) சிரவணம் (கேட்டல்) முதலானவற்றால் பிரித்து அறிய வேண்டும்.

வியாக்கியானம்:

| | வாச்சிய அர்த்தம் | இலட்சிய அர்த்தம் |
|---|---|---|
| தத் பதம் | ஈசன் | பிரமம். |
| த்வம் பதம் | சீவன் | கூடஸ்தன் |

தத்
வாச்சிய அர்த்தம் : மாயை, மாயைக்கு அதிஷ்டான சேதனத்துடன் உள்ள ஆபாச ரூபமான ஈசன்

---

இலட்சிய அர்த்தம் : அதிஷ்டான சேதனமான பிரமம்.

த்வம்
வாச்சிய அர்த்தம் : அவித்தை, அவித்தைக்கு அதிஷ்டான சேதனத்துடன் உள்ள ஆபாச ரூபமான சீவன்
இலட்சிய அர்த்தம் : அதிஷ்டான சேதனமான கூடஸ்தன்.

தாத்பர்யம்: தத்பத த்வம் பத வாச்சியார்த்தம் பர சீவர்கள், இலட்சியார்த்தம் பிரம கூடஸ்தர்கள். அத்தியாசத்தால் (மயக்கத்தால்) இரண்டு வாச்சியார்த்தங்களும் இரண்டு லட்சியார்த்தத்தில் கலந்து இருக்கும். இதில் வாச்சியார்த்தத்தை நீக்கி இலட்சியார்த்தத்தை அறிய வேண்டும்.

சீவனாகிய நீ கூடஸ்தன் என்று புரிஞ்சு கொண்டு பிரமத்தோட ஐக்கியமாகலாம். இப்படி முதல்லேயே பாத்தோம். இப்ப விவரமா பாக்கலாம்.
ஞான விசாரணையாலதான் இது நடக்கும்.

ப்ருகு ன்னு ஒத்தர் இருந்தார். (இவர்தான் பிருகு மகரிஷியான்னு கேட்டக்கூடாது. ஒரே பேரிலே பலர் இருந்திருப்பாங்க இல்லையா?) அவர் வருணன் என்பவரோட புத்திரன். (அதே. வருணன் தேவர்கள்ல ஒத்தரா இருக்கிறவரா இல்லாம இருக்கலாம்.)

அவர் அப்பாகிட்டே போய் ப்ரம்மம் னா என்ன உபதேசம் பண்ணுங்க ன்னார்.

வருணன் சொன்னார். அப்பா நல்ல கேள்வி கேட்டே! ரொம்ப சந்தோஷம். அன்னம், பிராணன், கண், காது, மனசு, பேச்சு இதெல்லாமே பிரம்மம் ன்னார். ப்ருகுவுக்கு ஒண்ணும் புரியலை. குழம்பி போயிட்டார்.

சரின்னு வருணன் சொன்னார். குழந்தாய், எதுலேந்து உயிரினங்கள் எல்லாம் தோன்றித்தோ, எதனால எல்லாம் வாழ்ந்து கொண்டு இருக்கோ, எதில எல்லாம் லயமாகி முடிவடையுமோ அது எதுன்னு கண்டு பிடி. அதுவே ப்ரம்மம். போய் தபஸ் பண்ணு ப்ரம்மன்னா என்னன்னு புரியும் னார்.

ப்ருகுவும் போய் தபஸ் பண்ணார். தபஸ்னா? மனசையும் புலன்களையும் கட்டுப்படுத்தி விசாரணை பண்ணார். வெகு காலம் பண்ணிவிட்டு ¨அட நான் அன்னத்தாலதான் நான் உருவானேன், வளந்தேன், ஜீவித்து இருக்கேன். செத்துப்போனா உடம்பை நிலத்திலே புதைக்கவோ எரிச்சு சாம்பலை நிலத்திலேயே போட்டு விடவோ செய்வாங்க. அது திருப்பியும் அன்னமா விளையும். அதனால அன்னம்தான் பிரம்மம்.

போய் அப்பாகிட்டே சொன்னார். வருணன் தப்பு சரின்னு ஒண்ணுமே சொல்லலை. தபஸே பிரம்மம். போய் இன்னும் தபஸ் பண்ணுனார்.

வருணன் திருப்பி தபஸ் பண்ணி இன்னுமொன்னை கண்டு பிடிச்சார்.
ப்ராணன்தான் பிரம்மம். அதுலேந்தே எல்லாம் தோன்றி வளர்ந்து, ஒடுங்கும்.

குழந்தை பிறந்து ப்ராணனை உள்ளே இழுத்தாத்தான் ஆஹா குழந்தை பிறந்தாச்சு என்கிறோம். மூச்சு உள்ளவரை நாம இருக்கோம். எப்ப ப்ராணன் போயிடுத்தோ அப்ப நாம இல்லை. அதனால ப்ராணனே பிரம்மம்.

போய் அப்பாகிட்டே சொன்னார். வருணன் தப்பு சரின்னு ஒண்ணுமே சொல்லலை. தபஸே பிரம்மம். போய் இன்னும் தபஸ் பண்ணுனார்.
வருணன் திருப்பி தபஸ் பண்ணி இன்னுமொன்னை கண்டு பிடிச்சார்.
மனசே பிரம்மம். அதுலேந்தே எல்லாம் தோன்றி வளர்ந்து, ஒடுங்கும்.

மனசு இருக்கறதால்தான் நாம் இருக்கோம். மனசு நாம சாப்பிடுற உணவை வைச்சு வளருது. ஏதாவது நினைச்சு கொண்டேதானே இருக்கோம். கொஞ்ச நேரமாவது ஏதேனும் எண்ணம் இல்லாம இருக்கோமா? எப்ப மனசு நிக்கிறதோ அப்போ நாம் போயிடுவோம்.
அதனால மனசே பிரம்மம்.
போய் அப்பாகிட்டே சொன்னார். "ப்ரம்மம் னா என்ன? உபதேசம் பண்ணுங்க!" வருணன் சொன்னார்: தபஸே பிரம்மம். போய் இன்னும் தபஸ் பண்ணுனார்.

வருணன் திருப்பி தபஸ் பண்ணி இன்னுமொன்னை கண்டு பிடிச்சார்.
புத்திதான் பிரம்மம். அதுலேந்தே எல்லாம் தோன்றி வளர்ந்து, ஒடுங்கும்.

அறிவே உசந்தது. அறிவுன்னு ஒண்ணாலதான் இந்த உலகத்தை என்னன்னு தெரிஞ்சுக்கிறோம். அதாலதான் நம்ம வாழ்க்கையை சுகமா அமைச்சுக்கிறோம்; வாழ்கிறோம். கடைசில அறிவிலேயே - எல்லாத்தைவிட பெரிய புத்தியிலேயே ஒடுங்கிடுவோம்.

அதனால புத்தியே பிரம்மம்.
போய் அப்பாகிட்டே சொன்னார். "ப்ரம்மம் னா என்ன? உபதேசம் பண்ணுங்க!" வருணன் சொன்னார்: தபஸே பிரம்மம். போய் இன்னும் தபஸ் பண்ணுனார்.
வருணன் திருப்பி தபஸ் பண்ணி இன்னுமொன்னை கண்டு பிடிச்சார்.

ஆனந்தமே பிரம்மம். அதுலேந்தே எல்லாம் தோன்றி வளர்ந்து, ஒடுங்கும்.

பிறக்கிறப்பவே ஆனந்தத்தோட பிறக்கிறோம். குழந்தை பிறந்தாச்சுன்னா எவ்வளோ பேர் சந்தோஷப்படறாங்க. சம்பந்தம் இருக்கோ இல்லையோ எந்த குழந்தை பிறப்பை கேட்டாலும் யாரும் சந்தோடப்படுவாங்க இல்லையா? இப்பதான் பிறந்த குழந்தையை பாருங்க. எவ்வளோ சந்தோஷமா தூங்குது! ஆதுக்கு என்ன உலக அனுபவம் இருக்கு ஆனந்தப்பட? சந்தோஷத்தையே தேடிதான் வாழ்கிறோம். யாரான சந்தோஷமா இருக்க வேண்டாம்ன்னு நினைக்கிறாங்களா? சிலருக்கு என்ன இருக்கோ இல்லையோ சந்தோஷம் இருந்தா போதும் ன்னு புரிஞ்சு நிறைவா வாழறாங்களே! வாழ்க்கையிலே ஆனந்தம் இல்லைனா சீ என்ன வாழ்க்கை இது என்கிறோம். கடைசியிலே போகும்போது அப்பாடா இந்த தொல்லை பிடிச்ச வாழ்க்கை முடிஞ்சதுன்னு ஆனந்தமா போறோம்!
அப்ப ஆனந்தமே பிரம்மம்!

இப்படி ஒவ்வொண்ணா விசாரிச்சு இதுவே பிரம்மம்ன்னு முடிவுக்கு வருவதற்கு பார்கவீ வாருணீ வித்யைன்னு பெயர்.
இது தைத்திரீய உபநிஷத்திலே வருகிறது. [கொஞ்சம் சொந்த சரக்கும் இருக்கு இதிலே!]

இங்கே கூட விசாரம் பூர்த்தி ஆகலை.

---

மதியம் வெள்ளி, மார்ச் 27, 2009
ஈசன் - ஜீவன்
அப்ப ஆனந்தமே பிரம்மம்!
இப்படி ஒவ்வொண்ணா விசாரிச்சு இதுவே பிரம்மம்ன்னு முடிவுக்கு வருவதற்கு பார்கவீ வாருணீ வித்யைன்னு பெயர்.
இது தைத்திரீய உபநிஷத்திலே வருகிறது.
.....
இங்கே கூட விசாரம் பூர்த்தி ஆகலை.
பிரம்மத்தை அறியறதுல இது ஒரு படிதான். ப்ரம்மத்தை இதுதான்னு அறுதியிட்டு சொல்ல முடியாது. அது மனசையும் வாக்கையும் கடந்தது! "யதோ வாசோ நிவர்த்தந்தே; அப்ராப்ய மனசா சஹ" என்கிறது இதே உபநிஷத்.மனசும் வார்த்தைகளும் பிரம்மத்தை எட்டப்போய் முடியாமல் திரும்பிடறதாம்!

சரி நம்ம கேசுக்கு வரலாம்.
பிரம்மம் எதுன்னு தெரியாட்டாலும் எது இல்லைன்னு புரிஞ்சுக்கலாம்.

ஜீவனும் ஈசனும் மாய சம்பந்தமுடையவர்கள்.
ஈசன் சத்வ குண மாயை.
ஜீவன் ரஜோ குண மாயை. அதாவது அசுத்த மாயை.
ஈசன் மாயையை தன் வசப்படுத்தினவன். ஜீவன் மாயை வசப்பட்டவன். இரண்டு பேரும் மாயா சம்பந்தம் உடையவர்களே! ஈசனுக்கும் ஜீவனுக்கும் என்ன ஏணி வெச்சாலும் எட்ட முடியாது! அதாவது என்ன ஆன்ம முன்னேற்றம் கண்டாலும் ஈசனுக்கு ஜீவன் சமமா ஆக முடியாது. ஒப்பிடவே முடியாது! ஈசனுடைய சர்வத்துவம் கிட்ட அணுகக்கூட ஜீவனால் முடியாது!
ஜீவன் பிண்டத்திலே இருக்கன். ஈசன் அண்டத்திலே!
ஜீவன் காரிய உபாதி ஈசன் காரண உபாதி! (அதாவது ஈசன்தான் பிறப்பிக்கிறான்; உண்டாக்குபவன். சீவன் பிறக்கிறான்; உண்டாகிறவன்.)
ஜீவன் வியக்தி தேகம் உள்ளவன். ஈசன் சமஷ்டி தேகம் உள்ளவன்.
ஜீவன் அற்ப ஞானம் உள்ளவன். ஈசன் சர்வஞ்ஞன். எல்லாம் தெரியும்!

ஆனால் கூடஸ்தனும் பிரம்மமும் மாயா சம்பந்தமில்லாதவை. பாலில் இருக்கிற நெய் போல கலந்தே இருக்கும்.
நாம் அஞ்ஞானிகளாக இருப்பதால ஜீவனும் ஜீவ சாட்சியான கூடஸ்தனும் ஒண்ணேன்னு நினைக்கிறோம். அதனாலதான் மத்தால கடைஞ்சு நெய்யை தனியா எடுக்கிறாப் போல விவேகமாகிய மத்தால கடைஞ்சு உன்னை சீவ சாட்சியேன்னு அறிஞ்சு கொள்ன்னு ஆசிரியர் சொன்னார்.

திருமுறை 5. பதிகம் : 090 பொது: பாடல் எண் : 10

விறகிற் றீயினன் பாலிற் படுநெய்போல்

மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்

உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்

முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே

பொழிப்புரை:

விறகில் தீப்போலவும். பாலிற்பொருந்திய நெய்போலவும், மாமணிச் சோதியானாகிய இறைவன் மறைய நின்றுளன் ; உறவு என்னுங்கோலை நட்டு உணர்வு என்ற கயிற்றினால் முறுகவாங்கிக் கடைந்தால் முன்னின்று அருள் வழங்குவான்.
அப்பர் சொன்னது!

மாயையான மனசோட இருக்கிறோம். ஆதனால சீவனா இருக்கோம். அது நம்மோட உண்மையா நிலை இல்லை. மனசை எப்போ அழிச்சு அல்லது பிரிஞ்சு மனசோட சேட்டைகளை பாக்கிறோமோ அப்ப கூடஸ்தனா இருப்போம். அதுவே நம்மோட உண்மையா சொரூபம். இதை பார்க்க கத்துக்கொண்டா நமக்குள்ள மறைஞ்சு இருக்கிற பரமாத்ம சொரூபம் தெரியும். அதை உணர முடியும்.

இது என்னவோ ரொம்ப கஷ்டம்ன்னு தோணினாலும் உண்மையில் அவ்வளவு கஷ்டமில்லை. ஒரு இடத்தில சௌகரியம் போல உக்காருங்க. ஆழந்த மூச்சு எடுத்து விடுங்க - நாலஞ்சு தரம். இப்ப மனசை கவனியுங்க! அது என்ன நினைக்குது? எங்கே போகுது? எங்கிருந்து வந்தது?

வேடிக்கை பாருங்க.
மனசு கொஞ்ச கொஞ்சமா நின்னுடும்!

அட! இவ்வளோ சுலபம்னா ஏன் நிறைய ஞானிகள் இல்லை?
ஏன்னா நம்மாலே இதை அப்படியே நிறுத்த முடியாது. மனசு கொஞ்ச கொஞ்சமா நின்னுடும்- அப்படி சொன்னேன் இல்லையா? இப்ப ¨அட! மனசு நின்னுடுச்சு¨ன்னு ஒரு எண்ணம் வரும்! நம்மையே அறியாம இன்னொரு எண்ணம் கிளர்ந்து மனசை ஆக்கிரமிச்சுடும்! இல்லை, எந்த எண்ணத்தை பாத்தோமோ அதை தொடர்ந்தே இன்னொன்னு வந்துடும். வேடிக்கை பாக்கிறதே இன்னொரு எண்ணத்தை தோற்றுவிக்கும். அதான் வாசனைகளோட சக்தி! விலகி நின்னு நெடு நேரம் மனசை பாக்கிறதை ரொம்ப நாள் பயிற்சிக்கு அப்புறம் செய்ய முடியுமோ என்னவோ! ஆனா ஒண்ணு. இதை பண்ணிப்பாத்தா மனசு வேற நாம் வேறன்னு புரிஞ்சுடும்!

இந்த தத்வமஸி என்கிற மஹா வாக்கியத்தை சரியா புரிஞ்சுக்கணும்.
இது நீயே கடவுள் ன்னு சொல்லலை. (சமீப சினிமா ஒண்ணுக்கு பெயரிலே அப்படி அர்த்தம் பண்ணி போட்டு இருக்காங்க; அஹம் பிரம்மாஸ்மி- நான் கடவுள்).

சரியான பொருள் என்ன?

¨நீ பிரம்மத்தின் ஒரு அம்சமே. பிரம்மத்தைப்போல சத் சித் ஆனந்தம் உள்ளவனே! அதாவது ஒரே இனமே. ஆகயால் நான் பிரம்மமே என்ர திடமான சித்த்தோட அந்த பரம் பொருளிலே கலந்து நான் என்கிற நினைப்பை நீக்கினால் அந்த அகண்டமான சொரூபம் உன்னை தன் வயப்படுத்திக்கும். அதாவது தானாக்கிக்கும். நீயும் பிரம்மமா ஆவாய்.¨

இந்த ¨நான்¨ ஒழிந்து எப்போ நான் பிரம்மம் ன்னு திடசித்தம் வருமோ அது வரை முக்தி இல்லை.
PG:
தானே சிவன்சிவனை நானென்று நாடி வெறுந்
தானாகி நின்றநிலை தானன்றோ- வானாப்
பவசலதி நீந்திவரும் பண்புடைய மாணா
சிவலோக மென்றே தெளி
(உபதேச மாலை- சிவயோகம்)

சிவத்தோ மசியுண்ணி னைந்துசிவ யோகநிட்டை
சவுக்கியதா னத்தேறித் தான் (சித்தாந்த தரிசனம்- சிவ யோகவியல்)
சிவம் தோம் அசி (நீ சிவமாய் இருக்கிறாய்) உள் நினைந்து சிவ யோகநிட்டை....

சீவனத்தால் சீவனென்னல் சீலகிறந்தாலிந்தச் சீவனே யந்த சிவம்
அந்த சிவநம்மை யன்றியிலை யென்றேர்தலுந்துஞ் சிவயோக மோர் (சித்தாந்த தரிசனம்- பாப விமோசனவியல்)

சிவன் வேறு, சீவன் வேறு என்று இரண்டாய்ச் செப்பும்
அவன் சிவனை என்றும் அறியாதான் -தவமில்லா
உள்ளத்தார்க்கு எய்துமோ ஊர்குருவி ஆகாசம்
எள்ளப் பறந்து அறியுமே. (சிந்தனை வெண்பா -தக்ஷிணா மூர்த்தி துதி)

அதுவே நீயாம் என்று அரு மறைகள் சொல்லும்.
எதிர் சிவனே நீயானாய் என்னும் முது சைவம்.
வேறோ வேறன்றோ சொல் வேதியனே! விண் விசும்பும்
வேறோ வேறன்றோ விளம்பு (சிந்தனை வெண்பா)

முதலிலே "இந்த உடம்பு (அன்ன மய கோசம்) நானா?"ன்னு கேக்கணும்.

இல்லை அது ப்ரம்மத்தின் நிழலில் உள்ள வெறும் பஞ்சீகிருதம் செஞ்ச தமோ குண ஐம்பூதங்களால ஆனது ன்னு புரியும். (அப்பாடா! சுலபமா ஸ்தூல பஞ்ச பூதங்களால ன்னு சொல்லி இருக்கலாமோ?) அப்ப நான் அது இல்லை. இந்த உடம்பு பிணமாகி ஒரு நாள் அழிஞ்சு போயிடும்.

சரி, பிராண சக்திகள் இந்த உடம்பில ஓடுகிறதாலதானே நான் இருக்கேன்? (ப்ராண மய கோசம்) அப்ப அதான் நானா? இல்லை. அது ப்ரம்மத்தின் நிழலில் உள்ள ராஜச குண சமஷ்டியா இருக்கிறது. அதனால அதுவும் நான் இல்லை.

மனசே நான். நான் நினைக்கிறேன். அதனால நான் இருக்கிறேன் ன்னு ஒருத்தர் சொன்னார். ஆனால் ஆராய்ஞ்சு பாத்தா நமக்கு தெரியும்- மனசு, புத்தி இப்படி இருக்கிறதெல்லாம் (மனோ மய கோசம், விஞ்ஞான மய கோசம்) அந்தக்கரணம்தான். அது ப்ரம்மத்தின் நிழலில் உள்ள சூக்ஷ்ம பூத சத்வ குண சமஷ்டி.

ஆஹா! புரிஞ்சு போச்சு! மீதி இருக்கிறது ஆனந்த மய கோசம் ஒண்ணுதான். அதான் நான்! இல்லை, அதுவும் இல்லை!

அது அவித்தை அல்லது அஞ்ஞானமாகிய தமோ குணம்.
என்னப்பா இது எல்லாத்தையுமே இல்லை  இல்லைனா என்ன பண்ணறது?

67.

வாச்சியார்த்தத்தை நீக்குவது எப்படி:

பிறிவதெப்படியென்றக்காற் பிணமாகுமுடனானென்னும்

அறிவினைக் கொல்லல் வேண்டு மைம்பூத விகாரமன்றோ

வெறியதோர் துருத்தி மூக்கின் விடுவது போலுன் மூக்கால்

எறிபிரா ணனுநீ யல்லை யிராசதகுணவி காரம்.

பிறிவதெப்படி என்றக்கால் (வாச்சியார்த்தத்தில் நின்று நான் வேறுபடுவது எப்படி என்றால்) பிணமாகும் உடல் (அன்னமய கோசத்தை) நான் என்னும் (பிராந்தி) அறிவினைக் கொல்லல் வேண்டும். [ஏனென்னில் அது] ஐம் பூத விகாரம் (பஞ்சீ கிருதம் செய்யப்பட்ட பஞ்ச பூதங்களால் ஆனது) அன்றோ. வெறியது (வெறுமையான) ஓர் துருத்தி மூக்கின் விடுவது போல் உன் மூக்கால் எறி[யும்] பிராணனும் (பிராணமய கோசம்) நீ அல்ல. [அது பஞ்சீ கிருதம் செய்யப்படாத பூதங்களின்] இராசத குண விகாரம். (காரியம்)

68

கரணமா மனது புத்தி கருத்தாவா மவையான் மாவோ

தரமுள விரண்டு கோசஞ் சத்துவ குணவி காரம்

வரமறு துயிலா னந்த மயனையு நானென் னாதே

விரவிய தமவஞ் ஞான விருத்தியின் விகார மாமே

கரணமா[கிய] மனது, கருத்தாவாம் (கர்த்தா = செய்பவன் ஆகிய) புத்தி அவை ஆன்மாவோ? தரமுள இரண்டு கோசம் (சங்கற்ப ரூபம், நிச்சய ரூபம் என தாரதம்மியம் உள்ள மனோமய, விஞ்ஞானமய கோசங்கள்) சத்துவ குண விகாரம்.

வரமறு (உயர்வில்லாத) துயில் ஆனந்த மயனையும் (சுழுத்தியில் உள்ள ஆனந்த மயனையும்) நான் என்னாதே. விரவிய (பொருந்திய) தம (தமோ ரூபமான) அஞ்ஞான விருத்தியின் விகாரமாமே.

(ஆக 5 கோசங்களையும் ஆன்மா அல்ல என நிராகரித்தார்.)

ஆன்மா அழியாதது; அறிவே வடிவமானது; எப்பவும் ஆனந்தமா இருக்கிறது.

ஆனா இந்த ஸ்தூல உடம்பு பஞ்சீகிருதம் பண்ண பஞ்ச மகா பூதங்களிலேந்து வந்தது. என்னிக்காவது ஒரு நாள் அழிஞ்சே தீரும். அதனால அநித்தியம். மேலும் சடம். அதுக்கா ஒண்ணும் தெரியாது. ஆன்மா இருந்தாதான் அதால எதுவும் செய்ய முடியும். செத்து போன பிறகு ஆன்மா அந்த உடம்பை விட்டு போயிடும். அப்ப அதுக்கு ஒண்ணும் தெரியலை இல்லையா? ஒத்தர் இறந்த பிறகு "அப்பா எங்களை விட்டு போயிட்டியே" ன்னு அழலை? உடம்பு அங்கேயேதானே இருக்கு? அப்ப போய்விட்டது நாம், உடம்பு இல்லை. அதனால நாம் உடம்பு இல்லை. இந்த நாம் உடம்பை விட்டு போய் வேற உடம்பு எடுப்போம். ஒரு நாள் அதுவும் போய் இன்னொரு உடம்பு. இப்படி உடம்புகள் போகப்போக வேற உடம்பு கணக்கில்லாத வந்துண்டே இருக்கும்!

இதை என் உடம்பு ன்னு சொல்கிறப்பவே உடம்பு நானில்லைன்னு புரிஞ்சுடுத்து. குடத்தை பார்க்கிறவன் இருக்கும்போது அவன் குடம் ஆகமாட்டான் என்பது போலே தேகத்தை காண்கிறவன் தேகமாக ஆகமாட்டான்.

ஆனா உடம்பு என்னுதுதானா? :-))

அப்படி சொல்கிறது வியவகார சத்தியம்.
மண்ணிலேந்து வந்தது மண்ணுக்கே என்கிறபடி....
உடம்புக்கு சாத்திரங்கள் படி அக்னியோ பூமியோதான் சொந்தக்காரன். கொஞ்ச நாளுக்கு நம்ம இச்சையிலே விட்டு வெச்சு இருக்கு. உயிர் பிரிந்ததும் குல வழக்கப்படி புதைக்க அல்லது பெரும்பாலும் அக்னியில் எரிக்கத்தான் வேண்டும். இதனாலேயே உடல் உறுப்புகளை தானம் செய்கிறது சாத்திர சம்மதமில்லை.

தயானந்த சரஸ்வதிகள் சிரிச்சுண்டே தமாஷ் பண்ணுவார். இந்த உடம்பு என்னுதுன்னு நினைக்கிறோம். ஆனா இதிலே நாம மட்டும் இல்லையே? கோடானு கோடி பாக்டீரியாக்கள் இருக்கு. குடல் புழுக்கள், அமீபா.... அமீபாக்கள் சொல்கிறனவாம், "எத்தனை தலை முறை தலை முறையா நாங்க இங்கேயே இருக்கோம்! இந்த உடம்பு எங்களுக்கு சொந்தம்! " :-))

மீதி 4 கோசங்களிலே பிராண, மனோ, விஞ்ஞான கோசங்கள் ஆன்மா அவ்வப்போது பிராணங்கள், அந்தக்கரணங்களோட கூடி நிற்கிற நிலைமைதான்.
அந்தக்கரணமோ சூக்ஷ்ம பூத சத்வ குண சமஷ்டி. அது நம் தினசரி வாழ்க்கையிலே தூங்குகிற போது இல்லாமலும் போகும். அப்ப அநித்தியம்தானே? பூரண அறிவோட பிரகாசம் இல்லாம இவற்றுக்கு ஒண்ணும் தெரியாது. அதனால இவை சடமே! மனதோட செயல்களும் புத்தியோட செயல்களும் பல சமயம் துக்கத்தை கொடுக்கின்றன.

ஆக இவையும் ஆன்மா ஆகாது.

ஆன்மாவால அறியப்படுகிற எதுவும் ஆன்மா ஆகாது.

கண்டனவல்ல வன்றே கழித்திடும் இறுதிக்கண்ணே

கொண்டது பரமானந்தக் கோதிலா முத்தியதால்....

உள்ளது மில்லது மாய்முன் - உற்ற
உணர்வது வாயுன் னுளங்கண்ட தெல்லாந்
தள்ளெனச் சொல்லிஎன் ஐயன் - என்னைத்
தானாக்கிக் கொண்ட சமர்த்தைப்பார் தோழி - சங்கர 8.

பாராதி பூதநீ யல்லை-உன்னிப்
பாரிந் திரியங் கரணநீ யல்லை

ஆராய் உணர்வுநீ என்றான் -ஐயன்
அன்பாய் உரைத்த சொல் லானந்தந் தோழி - சங்கர 9.

(தாயுமானவர்: 56. ஆனந்தக்களிப்பு)

இந்த அந்தக்கரணத்தை நாம அறிஞ்சு நீக்கணும். என் மனம் என் புத்தி என் சித்தம் ன்னு சொல்கிறதாலே இவை வேறதானே?

அந்தக் கரண மறிந்து துறப்பார்க்குப்

பந்த மிறந்ததென் றுந்தீபற

பாழ்வெளி யுள்ளதென் றுந்தீபற

மீதி இருக்கிறது ஆனந்த சரீரம். அது காரண சரீரம். அனுபவத்தில அது தூக்கம். ஆழ் தூக்கத்திலே கருவி கரணங்கள் எல்லாம் அடங்கி ஆன்மா அவித்தையான அந்தகாரத்திலே அமிழ்ந்து கிடக்கும். (ignorence is bliss?) எப்படி ஆன்மா ஸ்தூல சூக்ஷ்ம உடல்களோட சம்பந்தப்பட்டு ஜாக்ரத், ஸ்வப்பன (கனவு) நிலைகளை அனுபவிக்கிறதோ அப்படி காரண உடலோட சம்பந்தப்பட்டு சுசுப்தி யை அனுபவிக்கும். இந்த சுசுப்தியே ஆனந்த கோசம். ஆக இதுவும் நாமில்லை.

--

பின்ன? பஞ்ச கோசங்கள் நான் இல்லையானால் நான் யார்? இந்த அஞ்சு உறையையும் விட்டு வெளியே வாப்பா! யார் நீன்னு உனக்கே புரியும். சொல்லி தெரிகிற சமாசாரம் இல்லை இது!

எப்பவும் இருக்கிறது, அறிவாக இருக்கிறது, ஆனந்தமா இருக்கிறது. விருப்பு வெறுப்பு போல ரெட்டைகளை கடந்து எப்பவும் சமமா இருக்கிறது, யாரும் எதுவும் அசைக்க முடியாம ஸ்திரமா இருக்கிறது, நடக்கிறதா மத்தவங்க சொல்கிற விஷயங்களுக்கு வெறும் சாட்சியா இருக்கிறது, உன்னைத்தவிர வேறு யாரும் இல்லாம நீ மட்டுமே இருக்கிறது, அழிவே இல்லாம இருக்கிறது - இப்படிப்பட்ட ஆன்மாதான்பா நீ! சடமாயும் அறிவில்லாமலும் துக்கம் நிறைந்ததுமா இருக்கிற இந்த அஞ்சு உறைகளையும் விட்டு நீ வெளியே வந்த உனக்கு இது புரியும்.

69.

சத்தொடு சித்தாநந்தஞ் சமந்திரஞ் சாட்சியேகம்

நித்தியம் வியாபியான்மா நீயதுவா வறிந்து

பொத்தொடு சடந்துக்காதி பொருந்து பேதங்களான

குத்திர பஞ்ச கோசக் குகைவிட்டு வெளியிலாவாய்.

சத்தொடு சித்தாநந்தம் (சச்சிதானந்தமாய்) சமமாய், திரமாய், சாட்சியாய், ஏகமாய், நித்தியமாய் வியாபி[க்கும்] ஆன்மா நீ அதுவாக அறிந்து பொத்தொடு (பொய்யான) சட துக்காதி (துக்க முதலியதாய்) பொருந்து[கின்ற] பேதங்களான (ஆன்ம சுபாவத்துக்கு அன்னிய சுபாவங்களை உடையனவான) குத்திர (வஞ்சகமான) பஞ்ச கோசக் குகை விட்டு (பஞ்ச கோசங்களாகிய குகைகளில் ஆன்ம புத்தியை ஒழித்து) வெளியிலாவாய்.

வந்தெனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை
வசமெனவே அத்துவா மார்க்க நோக்கி
ஐந்துபுலன் ஐம்பூதங் கரண மாதி
அடுத்தகுணம் அத்தனையும் அல்லை அல்லை
இந்தவுடல் அறிவறியா மையுநீ யல்லை

தாயுமானவர் -14. ஆகாரபுவனம் - சிதம்பர ரகசியம் -18

மூலவுடல் நீயல்ல என்று போனால் முரண் மேவும் அறிவு அறியாமைகள்தான் ஏது

மூலவுடல் நீயல்ல என்று போனால் முரண் பிரிய மோத பிரமோதமேது

மூலவுடல் நீயல்ல என்று போனால் முரண் மூட சட சூனியந்தாம் ஏது

மூலவுடல் நீயல்ல என்று போனால் முரண் ஆதிக்கு உயர் சாக்ஷி நீயாம் காணே - பரமானந்த தீபம்

கோசம் ஐந்தும் ஒவ்வொன்றாய்ப் பிரித்து வேறாய்

குறித்தறியில் அன்னியமாய் இருக்கையாலே

கோசம் ஐந்தும் ஒவ்வொன்றாய்ப் பிரித்து வேறாய்

குறித்தறியில் விக்ஷேபம் ஈன்றதாகும்

கோசம் ஐந்தும் ஒவ்வொன்றாய்ப் பிரித்து வேறாய்

குறித்தறியில் நீ அறிவாய் அது நீ அல்ல

கோசம் ஐந்தும் ஒவ்வொன்றாய்ப் பிரித்து வேறாய்

குறித்தறியும் உயர் சாக்ஷி நீயாம் காணே --பரமானந்த தீபம்

பஞ்ச கோசத்தை பகுத்தறிந்தோருக்கு

நெஞ்ச மிறந்ததென் றுந்தீ பற

நிட்டைய தாகு மென் றுந்தீ பற – திருவுந்தியார்.

சீடனும் ஆசாரியர் சொன்னபடி யோசிச்சு ஒவ்வொண்ணா ஒவ்வொரு உறையும் விலக்குகிறான். (நமக்கு இதுக்கு எல்லாம் எவ்வளோ ஜன்மா ஆகுமோ தெரியாது. இருந்தாலும் இறைவன் விளையாட்டு யாருக்கு தெரியும்? பட்டுன்னு யாருக்கான நடந்தாலும் நடக்கலாம்! யார் கண்டாங்க!)

இப்படி விலக்கிய சீடன் பாக்கிறது இருட்டைதான்!

என்னடா இது! குரு எங்கேயான நம்பளை வஞ்சிப்பாரா? மாட்டாரேன்னு திட சிரத்தை இருக்கு சீடன்கிட்டே! அதனால ¨வஞ்சனை பண்ணாத குருவே, எனக்கு இப்ப தெரியறது வெறும் இருட்டுதான். இதையா நான் ன்னு அனுபவிக்கிறது?¨ என்கிறான்.

70.

ஆசாரியர் உபதேசித்தப்படி அநுஷ்டித்து அதற்கு பின் சீடன் வினாதலைக்கூறல்:

பஞ்ச கோசமும் விட்டப்பாற் பார்க்கின்ற பொழுது பாழே

விஞ்சியத துவல்லாமல் வேறொன்றும் தெரியக் காணேன்

அஞ்சன விருளையோ நானகமென வநுபவிப்பேன்

வஞ்சமில் குருவேயென்ற மகன் மதிதெளியச் சொல்வார்.

பஞ்ச கோசமும் விட்டு அப்பாற் பார்க்கின்ற பொழுது பாழே (சூன்யமே) விஞ்சியது. (மீதியாக இருந்தது). அது அல்லாமல் வேறொன்றும் தெரியக் காணேன். அஞ்சன (மை போல கருத்த) இருளையோ நான் அகமென (நானென) அநுபவிப்பேன்? வஞ்சமில்[லாத] குருவே என்ற மகன் மதி தெளியச் சொல்வார்.

குரு சொல்கிறார். ¨குழந்தாய்! முன்ன உனக்கு கதை சொன்னேனே நினைவு இருக்கா? பத்து பேர் ஆத்தை கடந்தாங்கன்னு? தன்னையே எண்ணிப்பாக்காத அந்த ஆசாமி மாதிரிதான் நீ இருக்கே! பருப்பொருளா வெளியே தெரிஞ்ச எல்லாம் இப்ப இல்லைன்னு ஆகிவிட்ட பிறகு மீதி இருக்கிறது என்னன்னு பாக்கிறது யாரோ - அந்த உன்னையே பாத்துக்க¨ என்கிறார்.

71.

முன்புகறசமன் புத்திமோகத்தா லெண்ணியெண்ணி

ஒன்பது பேரைக்கண்ட வொருவனாந் தனைகாணாத

பின்பவ னிடையிற்கண்ட பெரியபாழவனோ பாராய்

அன்புள மகனேகாண்ப தடங்கலுங் காண்பானீயே

முன்புகல் தசமன் புத்தி மோகத்தால் (அஞ்ஞானத்தால்) எண்ணி எண்ணி ஒன்பது பேரைக் கண்ட ஒருவனாம் (பத்தாவதாக) தனைக் காணாத பின்பு, அவனிடையில் (அவனிடத்து) கண்ட பெரிய பாழ் அவனோ பாராய். அன்புள மகனே காண்பது அடங்கலும் (உன்னால் கண்ட

ஸ்தூலமும் அவை நீங்கியபின் கண்ட சூன்யமும்) காண்பான் (காண்பவன்) நீயே.

பஞ்ச கோசங்களையும் நீக்கின பின்னாலே தெரிகிறது மனசை நீக்கின பிறகு எது தெரியுமோ அதேதான்! மனம் ஒடுங்கின பின்னாலே மனதை அன்னியமாக கண்டு ஒடுக்கிய தன்னையே பார்க்காம, அனுத்துவமாக அந்த நிலையிலேந்து எதிரிட்டு தோன்றுவதே இந்த பாழ் ஆகும். இங்கே மிகவும் நுண்ணிய அரிவால சாட்சியா நிக்கிற தன்னை பார்க்கணும். கொஞ்சம் மறந்து போய் முன்னாலே பார்த்தாலும் ஒன்னு எல்லாமே தெரியும் அல்லது பாழ் தெரியும். இந்த பாழ் தான் அவித்தை, காரண உடம்பு. இதை தாண்டினாதான் எமனை ஜெயிக்கலாம். இந்த அந்தகாரம்தான் எமன். கரிய நீல வண்ணமா இதை சொல்கிறாங்க. இந்த இடத்தை கடக்கணும்னா ஈஸ்வரனோட அருள் அவசியம் என்கிறாங்க. இதற்கே பக்தி வேணும் என்கிறது. ¨மாயை எனும் திரையை நீக்கி¨ ன்னு சொல்வதும் இதையே!

விரிவு அகங்காரம் ஆதி விகாரம் அற்றதன் அபாவம்
இருமையாம் இவற்றை எல்லாம் இங்கு யாது உணரும் இதை
ஒரு பொருள் உணராது அந்த உணர்வு உருவான சாட்சிப்
பொருளினை மிகவு நுண்மை புந்தியால் உணர்தி மைந்தா - விவேக சூடாமணி.
--

கடலோரத்திலே நிக்கிற போது ஒரு அலை வருது ... சுவாரசியமா பாக்கிறோம். அது மெதுவா ஒரு சின்ன அலைப்பா ஆரம்பிச்சு, பெரிசாகி, சீறிப்பாஞ்சு விழுந்து எழுந்து ஆர்பரிச்சு கரையை தொட்டு அடங்கிடும். பின் இன்னொரு அலை ஏற்கெனவே உண்டாகி வந்துகிட்டு இருக்கும். அது மேலே நம் கவனம். அதுவும் கடைசியிலே அடங்கும். ஆனா கடல் அலைகள் வந்துகிட்டேதான் இருக்கும்!

அது போல நாமும் பிறந்து ஆரவாரத்தோட வாழ்ந்து சர்வ நிச்சயமா அடங்கிப்போறோம்! இப்படி போகிற ஜன்மங்கள் எத்தனை எத்தனை!

அது போல ஸ்தூலம். சூக்ஷ்மம், காரணம் என்று மூன்று உடல்களும், சாக்கிரத், சொப்னம், சுசுப்தி ன்னு மூன்று அவஸ்தைகளும், இறந்த/நிகழ்/எதிர் ன்னு மூன்று காலங்களும் கடல் அலை போல வந்து வந்து போய்கொண்டே இருக்கும் அதுக்கு முடிவே கிடையாது.

அனுபவம் பெற்ற சீடனே இத்தனையும் சாட்சியா பாருப்பா!

72.

தூலசூக்கும வஞ்ஞானந் தோன்றுமூன்ற வத்தைதாமும்

காலமோர் மூன்றுஞ் சன்மக் கடலெழுங் கல்லோலங்கள்

போலவே வந்துவந்து போனவெத்தனை யென்பேனான்

ஆலமர் கடவுளாணை யவைக்கெலாஞ் சாட்சி நீயே

தூல சூக்கும அஞ்ஞானம் (ஸ்தூல சூஷ்ம காரண தேகங்களென மூன்று தேகங்களும்) தோன்றும் (தோன்றுகின்ற) [ஜாக்ரத், ஸ்வப்னம், சுசுப்தி ஆகிய] மூன்று அவத்தை தாமும், காலம் ஓர் மூன்றும் (இறந்த, நிகழ், எதிர் காலங்கள் ஆகிய மூன்றும்) சன்மக் கடல் (ஜன்மமாகிய கடலில்) எழுங் கல்லோலங்கள் (எழுகின்ற அலைகள்) போலவே வந்து வந்து போன நான் எத்தனை என்பேன். ஆல் அமர் கடவுள் (தக்ஷிணாமூர்த்தி) ஆணை, அவைக்கு எல்லாம் சாட்சி நீயே.

PG

செடி கொடி போன்ற தாவரங்களுக்கு ஸ்பரிச அறிவு மட்டுமே உண்டு. வேற ஏதும் அவற்றுக்கு புலனாகலை. இவைகளுக்கு சுழுத்தி ஒண்ணு மட்டுமே உண்டு.
நத்தை போன்ற சிலதுக்கு ஸ்பரிசம், ரசம் (ருசி) அறிவு ரெண்டும் உண்டு.
எறும்பு போல சிலதுக்கு ஸ்பரிசம், ரசம், கந்தம் (வாசனை) அறிவு மூணும் உண்டு.
வண்டு போல சிலதுக்கு ஸ்பரிசம், ரசம், கந்தம், ரூபம் (உருவம்) அறிவு நாலும் உண்டு.

ஏனைய மிருகங்கள் பட்சிகள் போலவற்றுக்கு ஸ்பரிசம், ரசம், கந்தம், ரூபம், சப்தம் அறிவு ஐந்தும் உண்டு.
இவைகளுக்கு எல்லாம் கனவு போலவே எல்லாம் நடக்கிறதாம். ஜாக்ரத் இல்லை. அதனால ஸ்வப்ன, சுசுப்தி ரெண்டு அவஸ்தைகளே உண்டு.
மனுஷர்களான நமக்கு ஜாக்ரத் சொப்ன சுசுப்தி மூணும் உண்டு.

தேவர்களுக்கு தூக்கம் இல்லை. நினைப்பே உண்டு. மறப்பு இல்லை.
மனிதர்கள் தவிர்த்து மேலே பாத்த மற்ற உயிரினங்களுக்கோ மறப்பே உண்டு. நினைப்பு இல்லை.
மனிதர்களுக்கு மட்டுமே மறப்பு நினைப்பு இரண்டும் கொடுத்து அவற்றை நீக்க உபாயமும் கொடுத்து இருக்கிறான் இறைவன். இப்படி நீக்கினாதான் முக்தி.
அப்ப மனிதர்கள் மட்டுமே முக்தி அடைய முடியும்.
தேவர்களும் முக்தி அடையனும்ன்னா செய்த புண்ணியம் போய் திருப்பி மனித ஜன்மம் எடுக்கணும்.
மற்ற சீவ ராசிகள் பரிணாம வளர்ச்சி அடைஞ்சு மனிதனாகணும்.

ஜாக்ரத் லேயும் சொப்பனத்திலேயும் நாம் வியவகாரம் செய்கிறோம். அது நமக்கே தெரியும். சுசுப்திலே அப்படி தெரியலையே? அதே போல தெரியலைதான். ஆனா கனவில்லாம தூங்கி எழுந்து அப்பாடா அருமையான ஆனந்தமான தூக்கம் ன்னு சொல்கிறோமே! அதை அனுபவிச்சு இருந்தாத்தானே அது தெரியும்?

ஒரு தங்க சங்கிலியை காணோம். வீடு முழுக்க தேடியாச்சு. கிணத்திலே விழுந்துடுத்தோன்னு சந்தேகம்.
ஒத்தரை கூப்பிட்டு கொஞ்சம் முழுகி தங்க சங்கிலி கிணதுல இருக்கான்னு பாருங்க என்கிறோம்.
அவரும் முழுகறார். கிணத்தில் தண்ணிக்குள்ளே இருக்கும் போது தங்க சங்கிலி இருக்கு இல்லைன்னு அவரால சொல்ல முடியலை. மேலே வந்த பிறகே சொல்கிறார். தங்க சங்கிலி கிடைச்சுடுத்துண்ணு. ஏன்யா இவ்வளோ பதட்டத்திலே இருந்தேனே! கிடைச்ச உடனே சொல்லையேன்னு கேட்கவா முடியும்? தண்ணிக்குள்ளேந்து பேச முடியாதுன்னு நமக்கே தெரியும். அப்படி சொல்ல கருவி இல்லை. மூச்சு எடுக்கவும் முடியாது பேச்சா அதை வெளியே விடவும் முடியாது.
அதே போல சுசுப்திலே இருக்கிறப்ப அதை சொல்ல முடியாது. அப்ப ஆன்மாவுக்கு கரணங்களோட உதவி இல்லை.

--

குரு சொல்கிறார். ¨எல்லாத்தையும் பார்க்கிற நான் என்னை எதால பார்ப்பேன்? அப்படின்னு கேட்காதேப்பா! சடமா இருக்கிற வேற வஸ்துவைதான் நீ விளக்கை வெச்சு பாக்கணும். விளக்கை பாக்க வேற வெளிச்சம் வேணுமா என்ன? அதை அப்படியே பாக்கலாமே! தன்னைத்தானே பார்கிறதுல பிரச்சினை இல்லை. பத்தாவது ஆசாமி எதை வெச்சு தன்னைப்பாத்தான்? தன்னாலேயேதானே!

73.

எல்லாம் அறிந்த தன்னை எதால் அறிவது?

எல்லாங்கண்டறியுமென்னை யேதுகொண்டறிவேனென்று

சொல்லாதே சுயமாஞ்சோதிச் சுடருக்கு சுடர்வே றுண்டோ

பல்லார்முன் றசமன்றன்னைப் பார்ப்பதுந் தனைகொண்டேதான்

அல்லாமற் பதினொன்றானு மவனிடத்துண்டோ பாராய்

[சூன்யம் முதலாக] எல்லாம் [சாட்சியாக] கண்டறியும் என்னை ஏது (எதை) கொண்டு அறிவேன் என்று சொல்லாதே. சுயமாம் சோதி சுடருக்கு சுடர் வேறுண்டோ? பல்லார் (பலர் =9 பேருக்கு)

முன் தசமன் (பத்தாமவன்) தன்னைப் பார்ப்பதும் தனை கொண்டேதான். அல்லாமல் (அன்னியமாக) பதினொன்றானும் (பதினொன்றாவது நபரும்) அவனிடத்து (பத்தாமவனிடத்து) உண்டோ பாராய்.

தாத்பர்யம்: சடமான அனைத்தையும் அறிய வேறு அறிவு தேவையானாலும் சித் ரூபமான தன்னை அறிய ஓர் சித் தேவையில்லை. தன்னைத் தானே அறிய வேண்டும்.

ஞான சொரூபியா இருக்கிற நீ எதால பார்க்கன்னா கேட்கிறது? அதுக்கு இன்னொரு ஞானம் வேணும்னா அந்த ஞானத்தை எதால பாக்கிறது? அதுக்கு இன்னொரு ஞானம் வேணும்னு இப்படியே முடிவில்லாம போய்கிட்டே இருக்கும். நீ வேற எதாலேயும் அறியப்படுகிறவன் இல்லை.

எரிகிற விளக்கை பார்க்க இன்னுமொரு விளக்கு தேவையில்லை என்கிறது போல ஆன்மா ஸ்வயம் ஜோதியானதால அதை பாக்க இன்னொரு சக்தி தேவையில்லை.

74.

அறிவுக்கு மறிவு செய்யு மறிவுவே றுண்டென்றெண்ணும்

அறிவற்ற குதர்க்க மூடர்க் கனவஸ்தை பலமாய்த் தீரும்

அறிபடும் பொருணீ யல்லை யறிபடாப் பொருணீ யல்லை

அறிபொரு ளாகு முன்னை யநுபவித் தறிவாய் நீயே

அறிவுக்கும் அறிவு செய்யும் அறிவு வேறுண்டு என்று எண்ணும் அறிவற்ற குதர்க்க மூடர்க்கு (ஆத்மா சுயம் பிரகாசமுடையது எனும் அறிவில்லாத மூடர்களுக்கு) அனவஸ்தை (வரையரை அற்ற தன்மையே) பலமாய்த் தீரும். (நிலைக்கும்). அறிபடும் பொருள் நீ அல்லை; அறிபடாப் பொருள் நீ அல்லை. அறிபொருளாகும் உன்னை அநுபவித்து அறிவாய் நீயே.

ஸ்ரீ ராம நவமி வந்தது. பானகம் செஞ்சாங்க. மத்த இனிப்புகளும் செஞ்சாங்க. அதுக்கு வெல்லம் பயன்படுத்தினாங்க. எல்லாமே இனிப்பா இருந்தது. அதை எல்லாத்தையும் இனிப்பா செஞ்சது வெல்லம்தான். இந்த வெல்லத்தை எப்படி இனிப்பாக்கிறதுன்னு கேட்டா நம்மை மேலே கீழே பாப்பாங்க இல்லையா? என்ன பைத்தியம் பிடிச்சு இருக்கா? வெல்லமே இனிப்புதான் அதை ஏன் இனிப்பாக்க வேற என்ன வேணும்?
அதுபோல ஆன்மாதானே எல்லாத்தையும் வெளிச்சம் போட்டு காட்டுகிறது? அறிகிறது? அப்படி இருக்கிறப்ப தன்னைத்தானே அறிய அதுக்கு வேற ஏஜென்சி தேவை இல்லை.
இப்படிப்பட்ட ஆன்மாதான் த்வம் அல்லது அஹம் என்ற சொல்லுக்கு இலட்சிய அர்த்தமாகும்.
--

இந்திரியங்களால ஜடப்பொருளை யாரும் பார்க்கலாம். இப்படி பாக்கிற உடம்பையே நான் இல்லைனு அறிய கொஞ்சமாவது சூக்ஷ்ம அறிவு வேணும். அதுக்கும் மேலே இந்திரியங்கள் முதலா மத்ததையும் நான் இல்லை-னு உணர நல்ல சூக்ஷ்ம அறிவே வேணும். அப்படிப்பட்ட அறிவாளி ஒரு வழியா அந்த முயற்சியில வெற்றி அடைஞ்சா - அதாவது மனசை ஒடுக்கியாச்சுன்னா எதிரே அவித்தை, காரண சரீரம் ஆவரணம் என்ற சூன்யத்தைதான் பார்க்கிறான். அதாவது ஒண்ணுமேயில்லை. தான் இருக்கிறபடியால் தன்னைத்தவிர வேறு ஒண்ணுமில்லைன்னு பாக்கிற தான்தான் ஆன்மா. ஆனை தன்னைத்தானே தொட்டுகிறப்ப தொடுகிறதும், தொடப்படுறதும் ஒண்ணே என்கிறது போல அது. ஆன்மாவால அறியப்படுகிறது ஆன்மாவே அல்லாமல் வேறு இல்லை. முன்னாலே எதையும் அன்னியமா உணராமல் தன் நிஜ ரூபத்தை மட்டும் உணரணும். இந்த நிலையே தான். இதுவே த்வம் ன்னு சொல்லப்பட்டது. முன்னாலே ஒன்றை அறியும்வரை தன்னை அறிய முடியாது.

முன்னிலைச்சுட்டு ஒழிதி எனப் பலகாலும் நெஞ்சே நான் மொழிந்தேனே நின்
தன்னிலையைக் காட்டாதே என்னை ஒன்றாச் சூட்டாதே சரண் நான் போந்த
அந்நிலையே நிலை அந்த நிலையிலே சித்தி முத்தி அனைத்துந் தோன்றும்
நன்னிலை ஈதன்றி இலை சுகமென்றே சுகர் முதலோர் நாடினாரே. 8.

-தாயுமானவர்- 24. ஆசையெனும்

75.

ஆத்மாவாகிய தான் ஞான சொரூபம் என்பதெப்படி:

மதுரமாங் கட்டி சுட்ட மாப்பணி யாரமெல்லாம்

மதுரமாக் கியவ தற்கு மதுரந்தான் சுபாவ மன்றோ

அதுவிது வெனுஞ் சடங்க ளறிவாக வறிவைத் தந்தே

அதுவிது விரண்டுமாகா வகம் பொருளறிவாய் நீயே.

மதுரமாம் (இனிப்பான) [வெல்ல] கட்டி [சேர்த்து] சுட்ட மாப் பணியாரம் (பலகாரம்) எல்லாம் மதுரம் ஆக்கியவதற்கு (தன் சுபாவமான இனிப்பாக ஆக்கிய வெல்லத்துக்கு) மதுரந்தான் சுபாவம் அன்றோ? அதுவிது எனும் சடங்கள் (தேகம் இந்திரியம் முதலானவை) அறிவாக (அறிவையுடையனவாக) அறிவை தந்தே (ஞானத்தை கொடுத்து) அதுவிது இரண்டுமாகா (தேகம் இந்திரியம் முதலானவற்றின் விகாரத்தை அடையாத [பிரத்யேக ஆத்மாவையே]) அகம் பொருள் (அகம் என்பதற்கு பொருளாக) அறிவாய் நீயே.

--

த்வம் என்கிறது என்னன்னு சொல்லிட்டார், இப்ப ´தத்´ உம் ´த்வம்´ உம் ஒண்ணா ஆகிறதை சொல்கிறார்.

சீடனே, மேலே சொன்னது போல ஸ்தூல, சூக்கும், காரண தேகங்களுக்கு அன்னியமாகவும்; சாக்கிரத், சொப்பன, சுழுத்தி என்கிற 3 அவஸ்தைகளுக்கு சாக்ஷி மாத்திரமாகவும்; அஞ்சு உறைகளில் இருந்து விடுபட்டவனாகவும் இருக்கிற கூடஸ்தனே தவ்ம் என்கிறதுக்கு இலட்சியார்த்தம்.

எப்பவும் பந்தமே இல்லாத பிரம்மமே தத் என்கிற சொல்லுக்கு இலட்சியார்த்தம். கூடஸ்தனும் பிரம்மமும் ஒரே மாதிரி. அதனால இவர்களுக்குள்ளே ஐக்கியம் ஏற்படும்.

சீவனும் ஈஸ்வரனுமே த்வம் தத் க்கு வாச்சியார்த்தம். (literal meaning) இவங்களுக்கு இடையே எக்கச்சக்க வேறுபாடு இருக்கிறதால அவர்களுக்குள்ளே அபேதம் என்கிற ஐக்கியம் ஏற்பட முடியாது. அவங்க எப்பவுமே தனித்தனிதான்.

76.

ஆரோபமான வாச்சியார்த்தங்களுக்கு ஐக்கியமின்றெனக்கூறல்.

இந்தநீ த்வம் பதத்தி னிலட்சியப் பொருளா மென்றும்

பந்தமில் பிரம மேதத் பதந்தனி லிலட்சியார்த்தம்

அந்தமாஞ் சீவ னீசனவர்களே வாச்சியார்த்தம்

சந்ததம் பேத மாவார் தமக்கயிக் கியங்கூடாதே

இந்த (ஞானமே சுபாவமான சொரூபமாக உள்ள) நீ த்வம் பதத்தின் இலட்சியப் பொருளாம். (இலட்சியார்த்தம் ஆகும்). என்றும் பந்தமில்[லாத] பிரமமே தத் பதந்தனில் இலட்சியார்த்தம். அந்தமாம் (தள்ளப்படுவதாகிய) சீவன் ஈசன் அவர்களே வாச்சியார்த்தம். சந்ததம் (எப்போதும்) பேதமாவார்தமக்கு (பேதமுடையவாராக உள்ள சீவ ஈஸ்வரர்களுக்கு) ஐக்கியம் (அபேதம்) கூடாதே (சித்திக்காது).

தாத்பர்யம்: மகா வாக்கியத்தின் இலட்சியார்த்தமான கூடஸ்த பிரமம் அபேதம் ஆதலால் அவர்கட்கு ஐக்கியம் கூடும்.

சீடன் அதெப்படின்னு கேக்கிறான்.
முன்னேயே பாத்ததுதான்:
முதல்ல பேரே வேறே!

சீவனும் ஈசனும் மாய சம்பந்தமுடையவர்கள்.

ஈசன் சத்வ குண மாயை.

ஜீவன் ரஜோ குண மாயை. அதாவது அசுத்த மாயை.

ஈசன் மாயையை தன் வசப்படுத்தினவன். ஜீவன் மாயை வசப்பட்டவன். இரண்டு பேரும் மாயா சம்பந்தம் உடையவர்களே!ஈசனுக்கும் ஜீவனுக்கும் என்ன ஏணி வெச்சாலும் எட்ட முடியாது! அதாவது என்ன ஆன்ம முன்னேற்றம் கண்டாலும் ஈசனுக்கு ஜீவன் சமமா ஆக முடியாது. ஒப்பிடவே முடியாது! ஈசனுடைய சர்வத்துவம் கிட்ட அணுகக்கூட ஜீவனால் முடியாது!

ஜீவன் பிண்டத்திலே இருக்கன். ஈசன் அண்டத்திலே!

ஜீவன் காரிய உபாதி ஈசன் காரண உபாதி! (அதாவது ஈசன்தான் பிறப்பிக்கிறான்; உண்டாக்குபவன். சீவன் பிறக்கிறான்; உண்டாகிறவன்.)

ஜீவன் வியக்தி தேகம் உள்ளவன். ஈசன் சமஷ்டி தேகம் உள்ளவன்.

ஜீவன் அற்ப ஞானம் உள்ளவன். ஈசன் சர்வஞ்ஞன். எல்லாம் தெரியும்!

அதனால பாதாலத்துக்கும் விண்ணுக்கும் இருக்கிற வேறுபாடு போல இந்த சீவனுக்கு ஈசனுக்கும் எப்பவுமே ஐக்கியம் சித்திக்காது.

77.

ஜீவ ஈஸ்வர பேதத்தை கூறல்:

பேதமா னதுவுங் கேளாய் பெயராலு மிடங்க ளாலும்

ஓதரு முபாதி யாலு முடலாலு முணர்வி னாலும்

பாதலம் விசும்பு போலப் பலதூர மகன்று நிற்பர்

ஆதலாலிவர்க் கெந்நாளு மைக்கிய மென்பது கூடாதே

[சீவ ஈஸ்வரர்கள்] பேதமானதுவும் (வித்தியாசமானதுவும்) கேளாய். பெயராலும் (சீவன் ஈசன்) இடங்களாலும் (பிண்டம், அண்டம்), ஓதரும் உபாதியாலும் ([ஒன்பது விதங்களாலும் நிச்சயித்து சொல்ல முடியாத] அவித்தை மாயை என்னும் உபாதிகளாலும்) உடலாலும் (வியஷ்டி, சமஷ்டி), உணர்வினாலும் (சிற்றறிவு பேரறிவு) பாதலம் விசும்பு (விண்ணுலகம்) போலப் பலதூரம் அகன்று (வேறுபட்டு) நிற்பர். ஆதலால் இவர்க்கு எந்நாளும் ஐக்கியம் என்பது கூடாதே (அபேதம் சித்திக்காது).

தாத்பர்யம்: வாச்சியார்த்த ஜீவ ஈஸ்வரர்களுக்கு பெயர் முதலான பேதம் உள்ளதால் அபேதம் சித்தியாது.

மகா வாக்கியம்:
இதுக்கு சித்தார்த்த போதக வாக்கியம் என்பாங்க.
அதாவது பிரம்ம ஆன்ம ஐக்கியத்தை மட்டும் போதிக்கிற வாக்கியங்கள்.
ஒவ்வொரு வேத பிரிவிலும் ஒண்ணு இருக்கு. அதனால நாலு இருக்கு.

1.ப்ரக்ஞானம் ப்ரம்ஹா
2.அஹம் ப்ரம்ஹாஸ்மி.
3.தத்வமஸி
4.அயமான்மா ப்ரம்ஹா

ரிக் வேத ஐத்ரேய உபநிஷத்திலே இருக்கிறது ப்ரக்ஞானம் ப்ரம்ஹா. ஞான வடிவாக இருப்பதே பிரம்மம் என்பது பொருள். இது மனனம், தியானம், அப்பியாசம் செய்ய தகுந்த வாக்கியமாக சொல்கிறங்க.

யஜுர் வேத ப்ருகதாரண்ய உபநிஷ்த்திலே இருப்பது அஹம் ப்ரம்ஹாஸ்மி. உள்ளமே பிரம்மமாக இருக்கிறது. இது அனுபூதி அதாவது சமாதி அனுபவ வாக்கியம்.

சாம வேத வாக்கியம் சாந்தோக்கிய உபநிஷ்த்திலெ இருக்கு. அதே இதுவரை பாத்த தத்வமஸி. அது நீயாக இருக்கிறாய். இது உபதேச வாக்கியம்.
அதர்வண மாண்டுக்கிய உபநிஷத்திலே இருக்கிறது அயம் ஆன்மா பிரம்ஹா. இந்த ஆன்மா பிரம்மம். இது நிதித்தியாசன வாக்கியம்.

சுயமதுவாம் தத்வமசி என்னும் வாக்கியம்
சொல்லும் உபதேச மகா வாக்யமாகும்
இயலும் அகம்பிரம்மாஸ்மி என்னும் வாக்யம்
இலகு அநுபூதி மகா வாக்யமாகும்
மயன் மருவாப் பிரஞ்ஞானம் பிரம் வாக்யம்
மனனத்தின் அப்பியாச வாக்யமாகும்
அய்மான்மாப் பிரமமென அறையும் வாக்யம்
அதற்கெல்லாம் சம்மதமாம் வாக்கியந்தானே - ரிபு கீதை

இந்த நாலிலே தத்வமஸி என்கிறதிலே இருக்கிற ஆன்ம பரமானம ஐக்கியமே மத்ததில் இருப்பதாலும், இது குருவோட உபதேசமா இருக்கிறதாலும் இதையே சிறந்ததாக கொண்டாடுகிறாங்க.

சாந்தோக்கியத்திலே உத்தாலகர் தன் பிள்ளையான ஸ்வேத கேதுவுக்கு உலகத்தை சிருஷ்டி செய்கிற ஈசனைக்காட்டி தத் த்வமஸி என்கிறார்.
பையருக்கு புரியலை! நிறைய உபாயம், விளக்கங்கள் தரார். அது ஒரு பக்கம் இருக்கட்டும். இங்கே நமக்கு வேண்டியது ஒண்ணுதான்.
ஒரு சீவனுக்கு ஈசனை காட்டி ¨அது நீயாக இருக்கிறாய்¨ ன்னா-
என்னடா இது ஈசனுக்கும் நமக்கும் எத்தனை வித்தியாசம்? ஆன்மீகத்திலே ரொம்ப முன்னேறினவங்களா சொல்கிறவங்களைக்கூட ஈசனுக்கு ஒப்பா சொல்ல முடியுமா? அவர்களே ஈசனோட சக்தியை அதிகம்ன்னு ஒப்புக்கிறாங்களே!
இப்படி சந்தேகம் வந்தா இலக்கண ஆராய்ச்சி செய்யணும். அதுதான் மகரிஷிகள் என்ன சொல்ல வந்தாங்க என்கிற சரியான அர்த்தத்தை காட்டும்.
இலட்சணா வாக்கியம் என்கிறதாலே பொருள் கொள்ளணும். அது மூணு வகை. விட்டது, விடவிலாது, விட்டு விடாது. (விடாது கருப்பு இல்லை!)

78.

கூடஸ்தனுக்கும் பிரமத்துக்கும் இலக்கணையால் ஐக்கியம் செய்ய சாஸ்திரங்களில் கூறும் 3 வித இலக்கணையை கூறுதல்:

வடநூல் வல்லவர்கள் சொல்லும் வாசகப்பொருள் சேராமல்

இடராகிற் பொருளாம் வண்ண மிலக்கணை யுரையாற் கொள்வார்

திடமான வதுவுமூன்றாச் செப்புவார் விட்டதென்றும்

விடவிலா தென்றும்விட்டு விடாதென் றும்பேராமே

வடநூல் வல்லவர்கள் சொல்லும் வாசகப்பொருள் (வாச்சியார்த்தம்) சேராமல் (பொருந்தாமல்) இடராகில் (விரோதமானால்) பொருளாம் வண்ணம் (பொருளாகும்படி) இலக்கணை உரையால் (இலட்சணா வாக்கியத்தால் [பொருள்]) கொள்வார். திடமான அதுவும் (அந்த இலட்சணையையும்) மூன்றாய் செப்புவார்; விட்டதென்றும், விடவிலாது என்றும் விட்டு விடாது என்றும் பேராமே.

எந்த சொல் தன் வாக்கிய அர்த்தத்தை (literal meaning) முழுவதும் விட்டு அதன் சம்பந்தமானதை உணர்த்துகிறதோ அது விட்ட லட்சணை.

உங்க வீடு எங்கேப்பா இருக்குன்னு கேட்டா "ஓ அதுவா, டாக்டர் நாயர் தெருலே இருக்கு" ன்னு பதில் சொல்கிறாங்கன்னு வெச்சுக்கலாம். அட! தெருவிலேயா வீடு இருக்கு? இல்லை. அதை ஒட்டித்தான் இருக்கு. இருந்தாலும் இன்ன தெருவிலே இருக்கிறதாதான் நாம எல்லாரும் சொல்லறோம். அதை யாரும் தப்பா எடுத்துக்கிறதில்லை. தெரு என்கிறது அதோட பொருளானா சாலை என்கிறதை முழுவதும் விட்டுவிட்டு அதன் வாச்சியார்த்த சம்பந்தமான தெரு ஓரத்தை குறிக்குது.

எந்த சொல் தன் வாக்கிய அர்த்தத்தை (literal meaning) விடாமல் அதன் கூட சம்பந்தமானதையும் உணர்த்துகிறதோ அது விடாத லட்சணை. "காக்கி அடிக்க கறுப்பு ஓடுது" ன்னா காக்கி கறுப்பு என்ற நிறங்களின் பதங்களுடன் அவற்றின் சம்பந்தமான காவல் துறையையும் வக்கீல்களையும் உணர்த்துவதாக பொருள் கொள்ள வேண்டும். அப்போது அதன் உண்மைப்பொருள் விளங்கும்.

எந்த சொல் தன் வாக்கிய அர்த்தத்தில் (literal meaning) ஒருபாகத்தை விட்டுவிட்டு ஒருபாகத்தை ஏற்கிறதோ அது விட்டு விடாத லட்சணை. கீதா அக்கா ரொம்ப நாள் கழிச்சு பரோடா போறாங்க. முன்னாலே அவங்க இருந்த பேட்டையிலே தள்ளுவண்டி வியாபாரம் செய்தவரை பாக்கிறாங்க. இப்ப பெரீஈஈஈய்ய கடை வெச்சுகிட்டு செயலா இருக்காரு. சாம்பு மாமாவுக்கோ அவரை அடையாளம் தெரியலை. கீதா அக்கா இவனை யாருன்னு தெரியலியா? நல்லா இருக்கு! இவன்தான் அந்த க்ருஷ்ணன் அப்படிங்கிறாங்க.

உண்மையில் அவரேதானா? இல்லை. அவருக்கு 20 வயது கூட ஆகிவிட்டது. முன் போல சுறுசுறுப்பாக இல்லை. ஆனால் இன்னும் புத்திசாலி ஆகிவிட்டார். பணக்காரர் ஆகிட்டார். இருந்தாலும் அவரே இவர் என்பதை ஏற்கிறோம். அதனால காலம் இடம் ஆகியவற்றை தள்ளிவிட்டு க்ருஷ்ணன் என்கிற குறிப்பிட்ட உடம்பை இந்த பதங்கள் உணர்த்தும்.

79

கங்கையில் கோஷமென்றுங் கறுப்புச்சேப் போடுதென்றும்

தங்கிய சோயந்தேவ தத்தனென்றுஞ் சொல்வார்கள்

இங்குதா ரணங்களாக்கி யிந்தமூன் றுரைகளாலே

துங்கநூல் விரோதமான சொல்லெல்லாம் பொருளாந்தானே

கங்கையில் கோஷம் (கிராமம்) [உள்ளது] என்றும், கறுப்பு தங்கிய சேப்பு ஓடுது என்றும் ஸஹ அயம் (அந்த இந்த) தேவதத்தன் என்றும் சொல்வார்கள். இங்கு (பொருள் விளங்காத இடத்தில்) [இந்த மூன்றையும்] உதாரணங்களாக்கி இந்த மூன்று உரைகளாலே (இலட்சணா வாக்கியங்களால்) துங்கநூல் (பெருமை பொருந்திய சாஸ்திரங்களில்) விரோதமான சொல் (வாக்கியங்கள்) எல்லாம் பொருளாந்தானே (தானே அர்த்தமாகும்).

எந்த பதம் தன் வாக்கிய அர்த்தத்தை (literal meaning) முழுவதும் விட்டு அதன் சம்பந்தமானதை உணர்த்துகிறதோ அது விட்ட லட்சணை. கங்கையில் கிராமம் உள்ளது என்பதன் நேரடிப்பொருள் கங்கையின் பிரவாகத்தில் கிராமம் உள்ளது என்பது. ஆனால் அது அல்ல நாம் சொல்ல நினைப்பது. அது நடக்கக்கூடியதும் இல்லை. இங்கு கங்கை என்பதன் பொருள் தன் பொருளாகிய நதி என்பதை முழுவதும் விட்டுவிட்டு அதன் வாச்சியார்த்த சம்பந்தமான நதி தீரத்தை குறிக்கிறது.

எந்த பதம் தன் வாக்கிய அர்த்தத்தை (literal meaning) விடாமல் அதன் கூட சம்பந்தமானதையும் உணர்த்துகிறதோ அது விடாத லட்சணை. "கறுப்பு தங்கிய சேப்பு ஓடுது"

என்பதன் வாக்கிய அர்த்தம் (literal meaning) கறுப்பு நிறம் தங்கி இருக்க சிவப்பு நிறம் ஓடுகிறது என்பது. இது தகாது. கறுப்பு சிவப்பு என்ற நிறங்களின் பதங்களுடன் அவற்றின் சம்பந்தமான பசுவையும் குதிரையையும் உணர்த்துவதாக பொருள் கொள்ள வேண்டும். அப்போது அதன் உண்மைப்பொருள் விளங்கும்.

எந்த பதம் தன் வாக்கிய அர்த்தத்தில் (literal meaning) ஒருபாகத்தை விட்டுவிட்டு ஒருபாகத்தை ஏற்கிறதோ அது விட்டு விடாத லட்சணை. ஸஹ அயம் (அந்த இந்த) தேவதத்தன் என்பதில் முன் ஒரு முறை வேறு இடத்தில் வேறு காலத்தில் பார்த்த தேவ தத்தன் இப்போது இங்கு பார்க்கும் தேவதத்தன் என்பது பொருந்தாது. {நான்கு வருஷங்களுக்கு முன் கல்கத்தாவில் தேவத்தனை பார்த்தோம். இப்போது தேவதத்தனை சென்னையில் பார்க்கிறோம். அவரேதான் இவர் என்கிறோம். உண்மையில் அவரேதானா? இல்லை. அவருக்கு 4 வயது கூட ஆகிவிட்டது. முன் போல சுறுசுறுப்பாக இல்லை. ஆனால் இன்னும் புத்திசாலி ஆகிவிட்டார். இருந்தாலும் அவரே இவர் என்பதை ஏற்கிறோம்.} ஆகவே காலம் இடம் ஆகியவற்றை தள்ளிவிட்டு தேவதத்தன் என்னும் தேகத்தை இரண்டு பதங்களும் உணர்த்துகின்றன.

நமக்கு இங்கே முக்கியமா வேண்டியது சஹ அயம் தேவதத்தன்தான்.
அது எப்படி வாச்சியார்த்தமான வேற நாடு, காலம் எல்லாத்தையும் தாண்டி ஆனால் ஒரு பெயரை உடைய உடம்பை காட்டித்தோ அது போல...

80.

மூவித இலக்கணையில் இங்கு தேவையான விட்டுவிட்டாத இலக்கணைபடி திருஷ்டாந்தத்துக்கு பொருள் கொள்வதை கூறல்:

பன்னிய சோயமென்னும் பதங்களின் வாச்சியார்த்தம்

அன்னிய தேசங்கால மவனிவ னென்ப வெல்லாம்

சொன்னவிவ் விரோதம்விட்டுத் தொடரிலக் கியம்விடாமல்

உன்னிடிற் றேவதத்த னொருவனை வெளியாக் காட்டும்.

பன்னிய (முன் கூறிய) சோ அயம் என்னும் பதங்களின் வாச்சியார்த்தம் அன்னிய தேசம் காலம் (தூர தேசம், சமீப தேசம், கடந்த காலம், நிகழ்காலம் ஆகிய) அவன் இவன் என்பன எல்லாம் (அந்த தேவதத்தன் இந்த தேவதத்தன் என்பன எல்லாம்) சொன்ன இவ்விரோதம் (விரோதமான வாச்சியார்த்தத்தை) விட்டுத் தொடர் இலக்கியம் (அவற்றை அநுசரித்த இலட்சிய அர்த்தமான தேகம் என்பதை) விடாமல், உன்னிடில் (ஆலோசிக்கில்) தேவதத்தன் ஒருவனை (என்ற புருஷனை) வெளியாக் காட்டும். (தெளிவாக காட்டும்).

81.

தத்துவ மெனும் பதங்கள் பிரமமாய்ச் சாட்சியான

வத்துவை விடாமற் பேத வாச்சியார்த் தத்தை விட்டு

நித்தமு மதுநீ யாகு நீயது வாகு மென்னும்

அர்த்தமும கண்டமென்றேயசி பதவைக்கியங் காட்டும்.

தத், துவம் எனும் (ஸாம வேத மகா வாக்கியத்தில் உள்ள அது, நீ) பதங்கள் பிரமமாய் சாட்சியான வத்துவை விடாமல் பேத வாச்சியார்த்தத்தை (பேத தர்மங்களை உடைய வாச்சிய பாகங்களை) விட்டு நித்தமும் (எக்காலமும்) அது நீ ஆகும் (பிரமமே நீயாம்), நீ அதுவாகும் (நீயே பிரமமாம்) என்னும் (என்று சொல்லும்). அசி பத அர்த்தமும் அகண்டம் (கண்டம்= துண்டு அகண்டம் துண்டாகாதது, ஒன்று) என்றே ஐக்கியங்காட்டும். (ஐக்கியத்தைப் போதிக்கும்).

மாயை, மாயையில் பிரதிபலித்த ஆபாசம், மாயைக்கு இயங்குதளம் ஆகிய மூணும் கூடி

ஈஸ்வரன் ஆச்சு. ஈஸ்வரனோட சர்வ சக்தி முதலிய குணங்கள் மாயா காரியமாகும். இந்த ஈஸ்வரனையே தத் பதத்தின் வாச்சியார்த்தமாய் கொள்ளணும்.

வியட்டி அவஸ்தை, அதில பிரதிபலித்த ஆபாசம், அதன் இயங்குதளம் மூன்றும் சேர்ந்து சீவனாகும். இதற்குள்ள அற்ப சக்தி முதலிய குணங்கள் அவித்யா காரியம். இந்த சீவனை த்வம் பதத்தின் பொருளாய் கொள்ளணும்.

ஆனால் இந்த இருவருக்கும் ஏகத்துவம் -ஒண்ணாதல் நடக்காது. ஆகவே ஆபாசத்தோட கூடின மாயை, மாயா காரிய அனைத்தும் அறியும் அறிவு முதலான குணம் ஆகிய இவ்வளவு தத்பத வாச்சிய பாகங்களை விடுத்து இயங்கு சக்தியா இருக்கிற பாகத்தில மாத்திரம்;

அப்படியே ஆபாசத்தோட கூடின அவித்தை, அவித்தையால் செய்யப்பட்ட அற்பஞ்ஞுத்துவாதி (சிறிதே அறியும் அறிவு முதலான) குணம் ஆகிய இவ்வளவும் -

த்வம் பத வாச்சிய பாகங்களை விடுத்து இயங்கு சக்தி பாகத்தை மட்டும் விட்டுவிடாத இலட்சணையால எடுத்துக்கிட்டு, கேட்டல் முதலிய ஞான வழிக்கான செயல்களுக்கு முன்னும் அவை முடிந்த பின்னும் ஏகம் என ஸாம வேத மகா வாக்கியம் தெரிவிக்கிறது.

ரொம்ப சுருக்கமா சொல்லனும்னா இயங்கு சக்தி எல்லாத்திலேயும் ஒண்ணேதான். வெளிப்பாடு வேற வேற இருக்கலாம். அந்த இயங்கு சக்தி பிரம்மம்தான்.

தாத்பர்யம்: ஆசாரியார் தானுபதேசித்தப்படி ஆவரண நிச்சயம் இருப்பது தோன்ற, அதன் முடிவான மகா வாக்கியத்தின் இலக்கியார்த்தமான கூடஸ்த பிரமத்தின் ஒருமையை உணர்த்தியதாம். மேலும் அது நீ ஆகும், நீ அதுவாகும் என்று ஓதப்புரோத (துணியில் ஊடும் பாவுமான) பாவமாய் அபேதம் சொன்னது முறையே பரோட்ச (மறைந்த) பிராந்தியும் பரிச்சின்ன (வரையறுக்கப்பட்ட) பிராந்தியும் நிவர்த்தியாகும் பொருட்டுக் கூறியதாம்.

வெட்ட வெளியிலே ஒரு இடத்திலே ஒரு குடத்தை வைத்து இருக்கு! இந்த குடத்திலே ஒரு ஆகாசத்தைப்பார்க்கிறோம். அது வெறும் பிரதிபலிப்புதான் உண்மையில்லைன்னு நிச்சயமா நமக்குத்தெரியும். கொஞ்சம் அறிவியல் தெரிஞ்சவங்களுக்கும் பகல்லே பாக்கிற ஆகாசம் என்கிற வானம் பொய்தான்னு தெரியும்.

கொஞ்சம் யோசிச்சுப்பாத்தா குடத்திலே இருக்கிற வெளியும் எங்கும் பரந்து இருக்கிற வெளியும் ஒண்ணேன்னு புரியும். அதாவது எங்கும் பரந்து இருக்கிற வெளியிலேந்து குடம் ன்னு ஒரு பொருள் செயற்கையா ஒரு வெளியை பிரிச்சுகாட்டுது. குடம் இல்லைனா அந்த வெளியும் தனியா இல்லை.
அது போல கூடஸ்தனும் பிரம்மமும் வேறு வேறு இல்லை. ஒண்ணே!
சிவோஹம் ன்னு சொல்கிறவங்க இதைத்தான் சொல்கிறாங்க.
சிவமே நான் நானே சிவம் ன்னு எல்லா காலத்திலேயும் பாவனை செய்யணும். இதுவே பிரம்ம அனுபூதியில் இருக்கிறது ஆகும்.

அகண்ட அறிவான பரசிவமே நானென்று
அனவரதம் இடையறவே செய்யுந் தியானம்
புகன்ற உபாசனையாகும் அதனால் உண்மை
பொருந்தியநல் புந்தியினால் பர சிவத்தை
நிகழ்ந்திடவே அறிந்திடலாம் மற்று ஒன்றாலும்
நிருமலமாய் அறியவொணாது ஆதலாலே
பகர்ந்த குரு வசனத்தால் பரசிவத்தை
பக்தியுடன் என்றும் உபாசிக்க வேண்டும்.

சின்மயமாம் சிவத்தினிடை சித்தம் வைத்து
சிவமதுவே நாம் என்று இங்கறியாதோர்க்கு
சன்மயமாம் பரப்பிரமந் தானே ஆகி
சலியாமல் இருப்பதுவாம் விதேக முத்தத்
தன்மை ஒரு காலத்தும் சித்தியாது

தத்துவமாய் நவில்கின்றேன் இனிதாகவென்றே
நின்மலமாய் ரிபு முனிவன் விதேக முத்தன்
நிலை பெற்ற இவ்விலக்கணமே நிகழ்த்தினானால். -ரிபு கீதை

இதை திடமா அறியனும்னா எத்தனை வேதங்களை படிச்சு ஆராய்ஞ்சாலும் உதாரணங்களை சொன்னாலும் புத்தி விசாரத்தாலும் இயலாது. அவை ஒரு மட்டத்துக்குத்தான் கொண்டு விடும். அதுக்கு மேலே போக முடியாது.

திடமான அனுபவம்தான் இதை நிச்சயமா அறிய ஒரே வழி!

82.

அத்வைத சொரூபத்தை அநுபவத்தில் அறிதல்:

கடநீரின் மேக நீரிற் கண்டவா னிரண்டும் பொய்யே

குடவானும் பெரிய வானுங் கூடியொன்றா மெப்போதும்

இடமான பிரமஞ்சாட்சி யிரண்டுமெப் போது மேகம்

திடமாகச் சுவாநு பூதி சிவோகமென் றிருந்தி டாயே

கடநீரில் (குடத்தில் உள்ள நீர்) மேக நீரில் கண்ட வான் இரண்டும் பொய்யே. குடவானும் (குடத்தில் உள்ள வானும்) பெரிய வானும் கூடி ஒன்றாம் எப்போதும். [அது போல] இடமான (வியாபகமான) பிரமம் சாட்சி (கூடஸ்தன்) இரண்டும் எப்போதும் ஏகம் (ஒன்று). திடமாக (துணிவாக) சுவாநு பூதி (உன்னநுபவத்தில்) சிவோகம் (சிவனே நான், நானே சிவன்) என்று இருந்திடாயே.

--

சுருதியாலும் உத்தியினாலும் ஆத்மாவை அறிந்தாலும் அசம்பாவனை (நிகழாது என்ற நினைப்பு) நீங்காது. எனவே துணிவாக நான் பிரமம் என்பதை சுய அநுபவத்தால் அறிய வேண்டும்.

ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை உண்டு பண்ணும் ஞானமாகும் - தாயுமானவர்
மெய்ஞ்ஞான அனுபவம் த்வைத - இரட்டை- நிலையிலேதான் துவங்குது.
தேகம் முதல் அந்தக்கரணம் வரை ஒவ்வொரு தத்துவமா ஜாக்ரத், சொப்பன, சுழுத்தி அவஸ்தைகள் ரூபமாகவோ; அன்ன மயம் முதலான உறைகள் ரூபமாகவோ; நமக்கு முன்னாலே தோன்றுவனவாகவும், நம்மால அறியப்படுவதாகவும், ஒரு காலத்திலே இருந்து ஒரு காலத்தில் அழிகிறது என்றும், அதனால நித்தியமல்லாததா இருக்கிற இதுவெல்லாம் நாம் இல்லைன்னும் தள்ளிக்கழிக்கனும்.
அப்ப சூன்யம் மிஞ்சும். இதுவரை த்வைத பாவம் இருக்கு. இதுக்கு த்வைத விருத்தி என்றும் பெயர்.

இதுக்கு மேலே இருக்கீற கூடஸ்தன் என்கிற சாக்ஷி ரூபம். அது அணு ரூபமானது; அவ்வளவு சூக்குமமானது ன்னு சொல்கிறாங்க.
இந்த சாக்ஷி விருத்தியும் தள்ள வேண்டியதுதான்.
த்வைத விருத்திதான் அஞ்ஞானம்; பாசத்திலே பந்தப்படுத்தும். சாக்ஷியா இருக்கிறதுல அப்படி அஞ்ஞானம் இல்லையே, உண்மைதானே; ஏன் ஒழிக்கணும்ன்னா...
சாக்ஷி என்கிறப்ப கொஞ்சமாவது அகங்காரம் இருந்தே ஆகணுமே? அப்பதானே அதை நான் ன்னு சொல்லிக்கலாம்! அதனால இதுவும் கொஞ்சம் குறைபாடு உள்ளதே. அதனால்தான் அதையும் தள்ளணும்.
இங்கே அஹம் பிரம்மாஸ்மி அல்லது சிவோஹம் பாவனை வந்தால் இதுதான் அகண்டாகார விருத்தி. அதாவது இரண்டற்ற தன்மைக்கான முன்னேற்றம்.
[கண்ட துண்டமா வெட்டிப்போடுவேன் என்கிறாங்க. அதாவது பீஸ் பீஸ் ஆ ஆக்குவாங்களாம்! இதுதான் கண்டம் = துண்டு, வெட்டுப்பட்டது. துண்டாகாமல் ஒண்ணாவே இருக்கிறது அகண்டம். பிரம்மத்தைத்தவிர வேறு ஒண்ணுமே இல்லாததால் அது மட்டுமே அகண்டம்.]

இங்கேயும் நான் பிரம்மம் நான் சிவம் ன்னு நினைப்பு கொஞ்சம் இருந்தாலும் போகப்போக இது மறைஞ்சுடும்.
--
இதை எல்லாம் கேட்ட சீடன் குரு சொன்னபடி விசாரம் பண்ணி பஞ்ச கோசங்களையும் தான் இல்லைன்னு தள்ளறான். அப்புறம் முன்னே பார்த்த பாழையும் தள்ளறான். அது வரை காட்சியை பார்க்கிற நான் என்னையே பாக்கணும் - அப்படித்தானே குரு சொன்னார்?- அதையும் கவனிக்கபோய் அதுக்கு ஏதுவா இருந்த கொஞ்ச நஞ்ச அகங்காரமும் நழுவிப்போய் கூடஸ்தன் பிரம்மம்ன்னு ஒரு வேறுபாடும் இல்லாம போயிடுது.
குழந்தை தூங்குவதற்கு அழுகிறப்ப சமாதானம் செய்ய ஏதோ ஒரு பொருளை கையிலே கொடுக்கிறோம். அதை கெட்டியா பிடிச்சுகிட்டு இருக்கும். மெல்ல தூங்கினதும் பொருள் எப்ப கையை விட்டு போச்சு என்கிற விஷயம் அதோட கன்ட்ரோல்ல இல்லை என்பது போல இந்த கூடஸ்தன் பிரம்மம் என்கிற வேறுபாடும் போயிடுதாம். அப்புறம் அங்கே இருக்கிறது என்ன? பூரணம்.
இதுவே அகண்ட அத்வைத சாக்ஷாத்கார அனுபவம்.
தற்போதம் ஒழிந்த பேரின்ப நிலைன்னும் சொல்லுவாங்க. மேலும் ¨கண்டவர் விண்டதில்லை¨, ¨அதீத நிலை¨ , காணாமல் காணும் காட்சி¨, ¨ தூங்காத தூக்கம் தூக்கமது தூக்கும் பராபரமே¨ ன்னு எல்லாம் சொல்லப்பட்டது.

நினைத்துணை யன்றியே யில்லைநா னற்றபின்
பினைத்துணை காணேனென்றுந்தீ பற
பெரிய மௌனமீதுந்தீ பற – சொரூப உந்தியார்.

83.

குரு உபதேசப்படி சீடன் அத்வைத சொரூபத்தை தரிசித்ததை கூறல்:

தஞ்சமாங் குருவுஞ் சொன்ன தத்துவ வழிதப் பாமல்

பஞ்சகோ சமுங்க டந்து பாழையுந் தள்ளி யுள்ளில்

கொஞ்சமா மிருப்பும் விட்டுக் கூடஸ்தன் பிரம மென்னும்

நெஞ்சமு நழுவியொன்றாய் நின்றபூ ரணத்தைக் கண்டான்

தஞ்சமாம் (பெருந்துணையாகிய) குருவும் சொன்ன தத்துவ வழி தப்பாமல் [அன்னமய கோசம் முதலான] பஞ்ச (ஐந்து) கோசமும் கடந்து, ([பந்தமாதலால்] தானல்ல என தள்ளி) பாழையும் (அவற்றுக்கு அன்னியமாக கண்ட சூன்யமாகிய அவித்தையையும்) தள்ளி உள்ளில் (அந்தக்கரணத்தில்) கொஞ்சமாம் இருப்பும் விட்டு (இந்த த்வைதங்களை காணும் சாட்சியே நான் என்ற அற்ப சாட்சி விருத்தியான ஸ்திதியையும் [பந்தமில்லாவிடினும் புருஷார்த்த சாதனமான ஞானமாக இல்லாததால்] விட்டு) கூடஸ்தன் பிரமம் என்னும் நெஞ்சமும் நழுவி (கூடஸ்தனாகிய தானே பிரமம் என்ற அகண்டாகார விருத்தியும் நிதித்தியாசன பரிபாகத்தால் உறங்கினவன் கையில் உள்ள பொருள் போல நீங்கி) ஒன்றாய் நின்ற பூரணத்தைக் கண்டான்.

சீடன் என்னத்தை அனுபவிக்கிறானாம்?
ஆனந்தம். ஆனந்த வெள்ளம். தன்னைத்தவிர இரண்டாவதா ஒண்ணுமே இல்லை. இந்த உடம்பு கரணங்கள் ன்னு ஆரம்பிச்சு பட்டியல் போடுகிற 35 தத்துவங்களும் அவனைப்பொறுத்த வரை இல்லை.
இதை நனவில் சுழுத்தி என்கிறாங்க. பிரம்ம நிலையே அப்படின்னு இல்லை. சுழுத்தியிலே எல்லா கரணங்களும் போயிடும். இங்கே அப்படி இல்லை. இது ஒரு டிடாச்மெண்ட். தற்காலிகமா பற்று போயிடுது. கரணங்கள் செயலிலே இருந்தாலும் அவற்றோட விஷய அனுபவம் உள்ளே வரலை. கண் திறந்து இருந்தாலும் எதையும் பார்க்கலை. கிட்டே போய் பட்டாசு வெடிச்சாலும் காது கேட்கலை. வாயிலே கற்கண்டு போட்டாலும் உமிழ்நீர் கூட சுரக்கலை!

இந்த அனுபவத்தை அவனுக்கு தருவது சற்குருவே! அவர் வேற யாருமில்லை பிரம்மமே. நாம

சட்டை போடுவது போல அவர் ஒரு காரணத்துக்காக உடம்பை போட்டுகிட்டு இருக்கார்.
நம்ம ஆன்மீக பாதையிலே பலரும் நமக்கு உதவ வருவாங்க. சிலர் உதவுகிறோம்ன்னு தெரிஞ்சே உதவுவாங்க. சிலர் அப்படி தெரியாமலே உதவுவாங்க. மோசமா சமையல் செய்கிறவங்க நாக்கு ருசியை அடிச்சு போடுகிறோம்ன்னு தெரியாமலே அந்த உதவியை செஞ்சுகிட்டு இருப்பாங்க. :-))
சிலர் ஏதோ சொல்லிகிட்டே போகும்போது நமக்கு திடீர்ன்னு ஏதோ ஒரு விஷயம் பட்டுன்னு புலப்படும்.

இறைவன் சித்தத்தாலே சிலர் நமக்கு தேவையான சமயத்திலே தேவையான வழியை காட்டிட்டு போயிடுவாங்க. இவங்க வழி காட்டிகள். மார்க தரிசி.
இந்த பிரம்ம அனுபவத்தை ருசி காட்டுகிறவங்களே உண்மையிலே சற்குரு. அப்படி சற்குருவை அடையும் பாக்கியம் செஞ்சவங்களுக்கு அப்புறம் வேற ஒண்ணுமே வேணாம்.

84.

சீடன் அநுபவ ஸ்திதியை கூறல்:

அனுபவா நந்த வெள்ளத் தழுந்தியே யகண்ட மாகித்

தனுகர ணங்க ளாதி சகலமு மிறந்து சித்தாய்

மனதுபூ ரணமாய்த் தேக மானசற் குருவுங் காண

நனவினிற் சுழுத்தி யாகி நன்மகன் சுபாவ மானான்.

அனுபவ ஆநந்த வெள்ளத்து அழுந்தியே அகண்டமாகி தனு கரணங்கள் ஆதி (முதலான 35 தத்துவங்கள்) சகலமும் (அனைத்தும்) இறந்து (நீங்கி) சித்தாய் மனது பூரணமாய், [பரி பூரண சொரூபமே] தேகமான (தேகத்தை சட்டை போல ஏற்ற) சற்குருவும் காண (பார்த்தருள) நனவினில் சுழுத்தியாகி (சுழுத்தி உடையவனாய்) நன்மகன் (நல்ல சீடன்) [அகண்ட சொரூப] சுபாவமானான்.

தாத்பர்யம்: பிரமானந்தத்தில் அழுந்தி பிரபஞ்சத்தை நீக்கி பெரிதுக்கெல்லாம் பெரிதான சுபாவ நிலை பெற்று இருந்தான்.

--
நனவினில் சுழுத்தி: இந்திரியங்கள் தம் காரணமான அஞ்ஞானத்தில் சுழுத்தி போல லீனமாகாது, தம்தம் கொள்கையில் இருக்க அவற்றின் வியாபாரமான விஷயானுபவம் அற்று இருப்பவன் என்றவாறு..

இப்படியே பிரம்ம அனுபவத்திலேயே இருக்க முடியுமா?
அதுக்கு நேரம் வந்தாச்சுன்னா இருக்கலாம்.
ஆனா ஒத்தரோட வாசனைகள் அவ்வளோ சீக்கிரமா அதுக்கு விடாது. அதனால் வெளியே வருவாங்க. மனம் திருப்பி துளிர் விடும். வெளியே வந்ததும் அனுபவிச்சது ஒரு மாதிரி நினைவில் இருக்கும். அதே போல மீண்டும் அனுபவிக்க தவிப்பா இருக்கும்.
இந்த அனுபவம் கொடுத்தவர்கிட்டே அவனுக்கு என்ன மாதிரி உணர்வு இருக்கும்?
பூரண சரணாகதியா கால்லே விழ வேண்டியதுதான்.

85.

சுபாவ நிலை பெற்ற சீடன் பின்பு யாது செய்தான்?

அளிமக னெடும்போ திவ்வா றானபின் மனது மெள்ள

வெளியில்வந் திடவுணர்ந்தான் விமலதேசி கனைக்கண்டான்

துளிவிழி சொரியப்பா தந்தொழுது வீழ்ந்தெழுந்து சூழ்ந்தான்

குளிர்முகச் சுவாமிகேட்கக் கும்பிட்டு நின்றுசொல்வான்

அளிமகன் (பிரமாநந்தம் பெற்ற சீடன்) நெடும்போது (நெடு நேரம்) இவ்வாறான பின் (இப்படி சமாதியில் இருந்த பின்), மனது மெள்ள வெளியில் வந்திட, உணர்ந்தான்; விமல (அவித்தை, மாய ஆகிய அழுக்குகள் இல்லாத) தேசிகனை (ஆசிரியனை) கண்டான். [ஆநந்த கண்ணீர்] துளி விழி சொரிய, பாதம் தொழுது, வீழ்ந்து எழுந்து சூழ்ந்தான் (வலம் வந்தான்). குளிர் முக சுவாமி கேட்க, கும்பிட்டு நின்று சொல்வான்.

தாத்பர்யம்: சகசாநுபவம் வரும் பொருட்டு சமாதி அநுபவ ஸம்ஸ்காரத்துடன் வெளியாகி சற்குருவை தரிசித்து வணங்கினான்.

86.

சீடன் தனக்கு அநுபவம் வரும்படி அநுக்கிரகம் செய்த ஆச்சாரியனை தோத்திரம் செய்தல்.

ஐயனே யெனதுள் ளேநின் றனந்தசன் மங்க ளாண்ட

மெய்யனே யுபதேசிக்கவெளிவந்த குருவே போற்றி

உய்யவே முத்திநல்குமுதவிக்கோ ருதவி நாயேன்

செய்யுமா றொன்றுங் காணேன்றிருவடி போற்றி போற்றி

ஐயனே, எனதுள்ளே நின்று அனந்த சன்மங்கள் ஆண்ட மெய்யனே, உபதேசிக்க வெளி வந்த குருவே போற்றி; உய்யவே (சனன துன்பத்திலிருந்து ஈடேற) முத்தி நல்கும் உதவிக்கு ஓர் உதவி நாயேன் செய்யுமாறு ஒன்றும் காணேன். திருவடி போற்றி போற்றி.

தாத்பர்யம்: தர்மார்த்த காமங்களை கொடாது கருணையால் பர மோட்சத்தை கொடுத்ததற்கு கைம்மாறு காணேன் என துதித்ததாம்.

ம்ம்ம்....
என்ன கைம்மாறு செய்வேன்னு யாரானா கேட்க மாட்டங்களா? பதிலுக்கு ஒரு சின்ன 40 பக்க நோட்டிலே லிஸ்ட் போட்டு கொடுத்துடலாம்ன்னு நினைச்சு கொண்டு நிறைய பேர் நடமாடுற தேர்தல் காலம் இது!
ஆனா இவரைப்பாருங்க. தடைகள் ஒண்ணும் இல்லாம ஞான நிட்டையிலேயே இருப்பா அதுவே போதும் என்கிறார். பின்னே எல்லாமே தானாக தெரிகிறவங்களுக்கு வேற என்ன வேணும்? தானில்லாம ஒண்ணும் தெரிஞ்சாதானே கேட்க?

87.

குருவின் மறு மொழி:

சிட்டனிவ்வாறு கூறத் தேசிகர் மகிழ்ந்து நோக்கிக்

கிட்டவா வென விருத்திக் கிருபையோ டருளிச் செய்வார்

துட்டமாந்தடைகண்மூன்றுந் தொடராமற்சொரூபஞான

நிட்டனா யிருக்கினீதே நீசெய்யு முதவியாமே

சிட்டன் இவ்வாறு கூறத் தேசிகர் மகிழ்ந்து நோக்கி, கிட்ட வா என இருத்தி, கிருபையோடு அருளிச் செய்வார். துட்டமாம் (தீமையாம்) தடைகள் மூன்றும் (அபரோட்ச ஞானத்தையும் பேதிக்க வலிவுள்ள பிரதி பந்தங்கள் மூன்றும்) தொடராமல் (வந்து பொருந்தாமல்) சொரூப ஞான நிட்டனாய் இருக்கில் ஈதே நீ செய்யும் உதவியாமே.

தாத்பர்யம்: சமாதி அநுபவம் கிட்டிய சீடனை நோக்கி தான் என்ற அநுபவமான சுக போதத்தை தவிர அவன் வேறு ஏதும் கருதாமல் இருக்க "உன் அநுபவம் தடையில்லாது விளங்குமாயின்

அதுவே கைம்மாறு" எனல்.

--பிரதிபந்தங்கள் எவை? பின்னால் வரும்.

சீடனுக்கு இப்ப கொஞ்சம் சந்தேகம் வருது. அட? இப்பதானே நான் மட்டுமே இருக்கேன்னு அனுபவிச்சோம்? அந்த அனுபவம் திருப்பி வராம போகுமா என்ன! (இங்கே ஞானம் நீங்குமோன்னு விசாரம் செய்கிறதுல அர்த்தம் வரலை, இல்லையா? ஞானம் நீங்கினதால்தானே இப்ப வெளிவந்து குருன்னு ஒத்தரை பாக்கிறதும் பேசுகிரதும்? அவனோட வாசனைகள்தான் வெளியே கொண்டு வந்தது!)

இப்ப குரு எதிரே இருக்கார். அவரோட உபதேசத்தால, உதவியால பிரம்ம ஞானம் வந்தது. இப்படி இதை சுவை காட்டறதுதான் அவரோட முக்கிய வழிமுறை. இதே போல குரு கிருபையால வேத சாஸ்திர விசாரத்தாலும் வர இயலும். ஆனா அது ஸ்திரப்படணும்னா இன்னும் ஏதோ நடக்கணும். முக்கியமா தடைகள் வரக்கூடாது. அப்படி தடைகள் கூட வருமா? என்ன அதெல்லாம்?

88.

அத்வைத சொரூபத்தை அறிந்த ஞானம் பிரதி பந்தத்தால் நீங்குமோ?

நீநானென் றிரண்டிலாம னிறைந்தபூ ரணமா யெங்கும்

நானாகத் தெளிந்த ஞான நழுவுமோ குருவே யென்றான்

தானாகும் பிரம ரூபஞ் சற்குரு நூலாற் றோன்றும்

ஆனாலுந் தடைக ளுண்டே லநுபவ முறைத்திடாதே

நீ [பிரமம்] நான் [கூடஸ்தன்] என்று இரண்டிலாமல் நிறைந்த பூரணமாய் எங்கும் நானாகத் தெளிந்த ஞானம் நழுவுமோ குருவே? என்றான். தானாகும் பிரம ரூபம் சற்குரு[வின் உபதேசத்தாலும்] நூலால் (வேத சாஸ்திர விசாரத்தாலும்) தோன்றும். ஆனாலும் (அப்படி பிரம அநுபவம் உண்டானாலும்) தடைகள் உண்டேல் (இருக்குமானால்) அநுபவம் உறைத்திடாதே (ஸ்திரப்படாது).

சீடனுக்கு இப்ப ரொம்பவே வியப்பா போச்சு. கொஞ்சம் பயமும் வந்து இருக்கலாம். பிரம்ம அனுபவம் நிலைக்காம போயிடுமா? ஏன்? எவ்வளவு உயற்சிக்கு அப்புறமா இந்த கூடஸ்தன் பிரம்மம் என்கிற வேறுபாடு கூட போய் அத்வைதமா, எங்கும் ஒண்ணேயாய், பரிபூரணமாய் நம்மை அறிந்து கொண்டோம்! அந்த அனுபவம் போயிடுமா? அப்படி செய்யக்கூடிய தடை எதெல்லாம்? அதை எப்படி நீக்கறது? வேற யாரை கேக்கணும்? அதான் எதிரே குரு இருக்காரே!

ஐயா தடைகள் எவை, எப்படி அவற்றை ஒழிக்கறதுன்னு கேட்கிறான்.

குரு சொல்கிறார். ¨அப்பா, இந்த உசந்த ஞானத்துக்கு மூணு தடைகள் - அஞ்ஞானம், சந்தேகம், விபரீதம்ன்னு இருக்கு. இது மூணும் துன்பத்தை தரும். கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்கிற மூணு உபாயத்தாலே இதையெல்லாம் ஒழிக்கலாம்.¨

89.

பிரதி பந்தங்கள் யாவை? அவற்றை நீக்குதல் எப்படி?

தடைகளே தெனிலஞ்ஞான சந்தேக விபரீ தங்கள்

படர்செயுமிந்த மூன்றும் பலசன்மப் பழக்கத் தாலே

உடனுடன் வரும்வந் தக்கா லுயர்ஞானங் கெடுமி வற்றைத்

திடமுடன்கெடுப்பாய் கேட்டல் சிந்தித்தறெளிதலாலே

தடைகள் ஏது எனில் அஞ்ஞானம், சந்தேகம், விபரீதங்கள். படர் செயும் (துன்பம் தரும்) இந்த மூன்றும் பல சன்ம பழக்கத்தாலே (வாசனையால்) உடனுடன் (அடிக்கடி) வரும். வந்தக்கால் உயர் ஞானம் கெடும் (நஷ்டமாகும்). [ஆதலால்] இவற்றை திடமுடன் (தைரியத்துடன் முழுதும் நீங்கும் வரை நின்று) கெடுப்பாய் (நீக்குவாய்) [முறையே] கேட்டல், சிந்தித்தல், தெளிதலாலே. (சிரவண மனன நிதித்தியாசங்களாலே)

சில மந்திர சக்திகள் கைவந்தவர்களாலே அக்கினியைக்கூட கட்டுப்படுத்திடலாம். அப்படிப்பட்டவங்க கொழுந்துவிட்டு எரிகிற தீயிலே புகுந்து வெளியே வருவாங்க. கர்நாடகாலே அப்படி ஒத்தர் இருக்கிறதா கேள்வி பட்டு இருக்கேன். அதை அவர் தன்னை சுத்தப்படுத்திக்கிற ஒரு வழியா வைச்சு இருக்காராம். மணி மந்திரம், மருந்து இவற்றால அக்னியை தாங்கற சக்தி பெற்றவங்களை அக்னி எப்படி கொஞ்சமும் சுடாம இருக்குமோ அப்படி ஞானம் மக்கினதா இருந்தா - அதாவது அஞ்ஞானம், சந்நதேகம், விபரீதம் ஆகியவற்றால தடை செய்யப்பட்ட ஞான அக்னியா இருந்தா - சம்சாரம் பந்தம் கொஞ்சம் கூட நாசமாகாது. நெடுங்காலம் உறுதியோட கேட்டல், சிந்தித்தல், தெளிதல் இதையெல்லாம் பயிற்சி பண்ணி இடையூறுகளான மடம், சந்தேகம், விபரீதம் இவற்றை போக்கணும்.

90.

பிரதி பந்தத்தை நீக்காவிடினும் அந்த ஞானத்தால் பவம் நீங்காதோ? அந்த அசம்பாவனை முதலியவற்றை நீக்க கேட்டல் முதலானவற்றை கொஞ்சம் அப்பியாசித்தால் போதாதோ?

அக்கினி கட்டுப்பட்டா லற்பமுஞ் சுடமா ட்டாது

மக்கின ஞானத்தாலே வந்தபந்த மும்வேவாது

சிக்கெனப் பழகிக்கேட்டல் சிந்தித்த றெளிதலாலே

விக்கின மடஞ்சந்தேகம் விபரீதம் போக்குவாயே

அக்கினி கட்டுப்பட்டால் (மணி மந்திர ஔஷதங்களால் அடக்கப்பட்டால்) அற்பமும் (கொஞ்சம் கூட) சுட மாட்டாது. [அது போல்] மக்கின ஞானத்தாலே (பிரதி பந்தங்களுடன் கூடிய ஞானத்தாலே) {theoretical knowledge} வந்த (ஆரோபமாய் தோன்றிய) பந்தமும் (சம்சாரமும்) வேவாது (நாசமாகாது). சிக்கெனப் பழகி (நெடுங்காலம் உறுதியாக நேசத்துடன் பழகி) கேட்டல், சிந்தித்தல், தெளிதலாலே விக்கின (இடையூரான) மடம், சந்தேகம், விபரீதம் போக்குவாயே.

சிரவணம் அஞ்ஞானத்தை ஒழிக்கும்.
மனனம் சந்தேகத்தை ஒழிக்கும்.
நிதித்தியாசனம் என்கிற சிந்தித்து தெளிதல் விபரீதத்தை நீக்கும்.

அஞ்ஞானம் என்கிறது ¨நாம் கூடஸ்தன்; பிரம்மத்தின் அம்சம். அதனால நாம் எப்பவும் பிரம்மமே என்ற நினைப்பு விட்டு நாம் பிரம்மமல்ல என்று நினைக்கிறது.
சந்தேகம் என்கிறது தத்வமஸி ன்னு குரு சொல்லி இருந்தாலும் பிரம்ம நிலையை அனுபவிச்சு இருந்தாலும் அதில திட நம்பிக்கை இல்லாமல் இது ஏதும் மாயையோ? கண்கட்டு வித்தையோ? நாம் பிரம்மம் இல்லையோ? என்று நினைக்கிறது.
விபரீதம் என்பது ¨ஜகம் பொய், பிரம்மம் மட்டுமே சத்தியம்; நாம் அந்த பிரம்மம்¨ என்று திடமா நினைக்காமல் ¨ஜகம் உண்மை. நாம் திருப்பி திருப்பி பிறக்கிற ஜீவன்¨ ன்னு நம்புகிறது.

எத்தனையோ ஜன்மங்களா இந்த ஆத்மா ¨நான் சீவன். பாவ புண்ணியங்கள் நிரம்பிய கர்மங்களை செய்து கொண்டே இருக்கோம். அதனால் அவற்றோட பலனை அனுபவிக்க

திருப்பி திருப்பி பிறந்து உழல்கிறோம்.¨ ன்னு நினைக்கிறது. தான் பிரம்மத்தோட அம்சம்ன்னு நினைவே இல்லை. கடவுள்ன்னு ஒண்ணு நமக்கு அன்னியமா நம்மை அல்லாமல் இருக்கு என்று நினைக்கிறது. இப்படிப்பட்ட பிரிவினை மயக்கம் எவ்வளோ தூரம் அழுந்தி இருக்குன்னா கடவுள்ன்னு ஒத்தர் இருக்காரா என்கிற சந்தேகமும்; கடவுள் கூட இல்லவே இல்லை ன்னு தீர்மானிக்கறதா இருக்கு. {இது நானே பிரம்மம், அதனால கடவுள்ன்னு தனியா இல்லை என்ற அறிவால ஏற்பட்டது இல்லை.}

அதனால திடுதிப்புன்னு இது நாம் பிரம்மம்ன்னு நம்பிடாது. நான் சீவன் இல்லை. சீவ சாக்ஷி. பிரம்மத்தோட ஒரு பகுதி. பிரம்மத்தை தவிர வேறாக நான் என்பது இல்லை; எங்கும் எப்போதும் பிரம்மம் மட்டுமே நிறைஞ்சு இருக்கு. அதுவே சத்தியம். அதிலேயே இருக்கிறதே முக்தி ன்னு உடனடியா அனுபவத்துக்கு வராது. நான் என்பது இல்லை என்கிற ஒரு கான்செப்ட் கேட்டே நடுங்கற பேர்களை பாத்து இருக்கேன்! சுய அபிமானம் அவ்வளோ இருக்கு!

ஏன் பிரம்ம நிலையிலேந்து மீண்டு வருகிறாங்க?
பூர்வ ஜன்ம வாசனை அப்படி பிடிச்சு இழுத்து வருது. இதே வாசனைகள்தான் நாம திடமா இருக்க தடையாவும் இருக்கும். வாசனைகள் கிளைத்து திருப்பி புலப்பட்டு நிலைக்காம இருக்க நாம் ஜாக்கிரதை படுத்தணும். அதுதான் சிரவண மனன நிதித்யாசங்கள். இவற்றில சிரத்தை காட்டி பழகினா எப்படி நாம் சீவன்; பிரம்மம் இல்லைன்னு எப்பவும் தோணித்தோ அதே போல நாம் பிரம்மம்: சீவன் இல்லைன்னு தோணிடும். அதுவே நிலைத்திடும்.
--

91.

ஆத்ம ஞானத்துக்கு தடையான அசம்பாவனையாதிகளின் தன்மை:

பிரம பாவனையைமூடிப் பேதங்காட் டுவதஞ்ஞானம்

குரவன் வாக்கியநம்பாமற் குழம்புவதாஞ் சந்தேகம்

திரமறு சகமெய்யென்றுந் தேகநானென்று முள்ளே

விரவிய மோகந்தானே  விபரீதமென்பர் மேலோர்.

பிரம பாவனையை மூடி (மாற்றி) பேதம் காட்டுவது அஞ்ஞானம் (அசம்பாவனை எனப்படுவது); குரவன் வாக்கியம் நம்பாமல் (சிரத்தை இல்லாது) குழம்புவதாம் சந்தேகம்; திரமறு (இல்லாத) சகம் மெய் என்றும், தேகம் நான் என்றும், உள்ளே விரவிய (பொருந்திய) மோகந்தானே விபரீதம் என்பர் மேலோர்.

மேல் விளக்கம்: அசம்பாவனை: தான் பிரமம் என்ற சிந்தனையை மாற்றி சீவேஸ்வர சகத்து சிந்தனையை தோற்றுவிப்பது.

குழம்புதல்: ஆச்சாரியர் வாக்கியத்தில் (தத் த்வமஸி) நம்பிக்கை இல்லாது நான் கர்த்தாவோ சாட்சியோ, சாட்சி என்றாலும் கர்த்துவத்துவாதி உண்டோ, அப்படி கர்த்துவத்துவாதி இல்லாவிடினும் தனக்கு பூரணத்துவம் உண்டோ, உண்டானாலும் தன்னை அப்படி அறியலாமோ கூடாதோ என இது முதலாக வரும் சிந்தனைகளே குழப்பம்.

விபரீதம்: பழுதையிடம் தோன்றின பாம்பு இல்லாதது போல தன்னிடத்தில் விவர்த்தமாக தோன்றின சீவேஸ்வர சகத்து இல்லாது இருக்கவும் அதை சத்தியம் எனவும் நான் மனுடன், நான் இந்த சாதி, நான் இந்த ஆசிரமத்தை உடையவன், நான் உழவு யாகம் முதலானவற்றை செய்பவன், நான் அன்னம் முதலானவற்றை புசிப்பவன், நான் குடம் முதலானவற்றை அறிபவன் என இது முதல் வரும் சித்த விருத்திகளே விபரீதம்.

தாத்பர்யம்: ஆத்ம சிந்தனையை மறைப்பது அசம்பாவனை. தான் ஆத்மாவோ அனாத்மாவோ என மனம் கலங்குதல் சந்தேகம். தான் அனாத்மா பிரபஞ்சம் சத்தியம் என தோற்றுவது

விபரீதம்.

சிரவணம் என்கிறது ப்ரம்ம ஆன்ம ஐக்கியத்தை சொல்கிற வேத வாக்கியத்தோட தாத்பர்யத்தை குரு விளக்க விசாரித்து அறிஞ்சு கொள்கிறது.

மனனம் என்கிறது அப்படி அறிஞ்சு கொண்டதை - அந்த பொருளை திருப்பி திருப்பி புத்தியால சிந்திக்கிறது.

நிதித்யாசனம் என்கிறது மேலே சொன்னதை செய்து தெளிஞ்சு ஏகாந்தமான பிரம்ம அனுபவம் கிடைக்கும்போது அதிலேயே சித்தம் நிலைக்கும் படி செய்கிறது.

தினசரி இந்த மூணையும் வைராக்கியத்தோட செய்து வந்தா முத்தி கிடைச்சுடும் என்கிறார் குரு.

ஜன்ம ஜன்மமா இந்த உடம்பு வாசனைகளால் தோன்றிகிட்டே இருக்கு. அதனால தான் பிரம்மம் என்கிறது மறந்து போய் தான் உடம்பு ன்னு நினைக்குது. இது அஞ்ஞானம்.

அப்புறம் ஆன்மீகம் 4 டம்ப்மீஸ் படிக்கிறோம். அப்புறம் இன்னும் பல நல்ல (ஹிஹிஹி) வேதாந்த புத்தகங்கள் படிக்கிறோம். ஒத்தரை தேடிப்பிடிச்சு விளக்கங்கள் கேட்டுக்கிறோம். குருவை தேடிப்பிடிச்சு வேதாந்த உட்பொருளை அவர் சொல்ல கேட்டு தெரிஞ்சுக்கிறோம். இப்படி கேட்கிறது சிரவணம்.

¨குரு நான் சித் ன்னு சொல்கிறார். எல்லாம் கேக்க நல்லா இருக்குதான்! ஆனா இப்பவும் என் உடம்பு எனக்கு தெரியுது; மத்த ஜடப்பொருள் எல்லாம் தெரியுது. அப்ப நான் சித்தோ இல்லையோ?¨ ன்னு கலவரம் வருது. இதுதான் ஐயம்.

ஒரு முறை கண்டு ஆறிஞ்சு கொண்டோமே அந்த சித்து நாம் வேறு இல்லை ன்னு அடிக்கடி சிவோஹம் அல்லது அஹம் ப்ரம்ஹாஸ்மி ன்னு அடிக்கடி சிந்திக்க அது நீங்கும். இது மனனம்.

மனனம் செய்த படி தான் சித்துதான் ஆனாலும் பிரபஞ்சம் இன்னும் என் முன்னாலே தோன்றுதே? நான் ஏகமான ப்ரம்மம்ன்னா ஏன் இப்படி தோணனும்? அப்ப நான் ப்ரம்மமில்லை; ஜீவன் ன்னு தோன்றுகிறது விபரீதம்.

¨நாம் சித்தான ப்ரம்மமே; இங்கே நாலா விதமாயும் தோன்றுகிறது எல்லாம் நாமேதான்; வேறு இல்லை¨ ன்னு அனுபவத்திலே கண்டு கொண்டு தெளிகிறதே நிதித்யாசனம்.

வீட்டு வாசலிலே சாயந்திரம் விளக்கு ஏத்தி வைக்கிறோம். அங்கே இருட்டு போயிடுது. பிரகாசமா இருக்கு.

ஆனா இந்த சித்திரையிலேயே அப்பப்ப நல்ல காத்து வீச ஆரம்பிச்சுடுத்து. அந்த காத்திலே தீபம் அலை கழியும். அணைஞ்சாலும் அணைஞ்சுடும்.

அது போல சாஸ்திர ஆராய்ச்சியாலும் விசாரணையாலும் ஞான தீபம் ஏத்தி வைத்தாலும் (ஹிஹி ஒரு சினிமா பாட்டு இப்படி இருக்கோ?) சந்தேக காத்து வீசினால் அது அதிகம் பிரயோசனப்படாது. பொருளை அந்த விளக்கு நல்லா பிரகாசமா காட்டாது.

எப்படி விளக்குக்கு ஒரு தடுப்பை பாதுகாப்பா வைச்சு காத்து நேரடியா தாக்காம செய்கிறோமோ அது போல மனனத்தால காப்பாத்தணும். தீப திரியை தூண்டிவிட்டு பலமா எரிய செய்வது போல நிதித்யாசனத்தால ஏகத்திலேயே நிலைச்சு நின்னு ஞான தீபத்தை தூண்டிவிட்டு பிரகாசப்படுத்தணும்.

பிரமம் அலன் நான் என்கை அஞ்ஞானம். நான்
அப்பிரமமோ அலனோ என்றிடல் ஐயம். சுருதி
வரும் இனிய யுத்திகளால் நான் பரமாயினும் உன்
வயர் ஜீவ உதவமுண்டு என்குதல் விபரீதந்தான்
தரு முறையும் அஞ்ஞானாதிகட்கு முரணாகும்
சிரவணமொடு மனன நிதித்தியாசனங்கள் அன்றே
-வேதாந்த சூடாமணி

[நாலாவது வரி சரியா பிரிச்சு இருக்கேனான்னு தெரியலை. உன் வயர்ஜீவ உதவமுண்டென்குதல் - அர்த்தம் கொஞ்சம் விசாரிக்கணும். நேரமில்லை :-( ]

92.

அத்தடைகளை கெடுக்கும் கேட்டல் முதலானவற்றின் தன்மை:

தத்துவ வநுபோகந் தான் சாதித்தல் கேட்ட லென்பார்

ஒத்துள பொருளூ கத்தாலுசாவல்சிந் தித்த லென்பார்

சித்தமே காந்த மான தெரிசனந் தெளித லென்பார்

நித்தமிப்படிச்செய்தக்கா னிர்வாணம் பெறுவாய் நீயே

தத்துவ அநு போகந்தான் (தன் அந்தக்கரணத்தில் உள்ள நான் பிரமம் என்ற ஞானம்தான்) சாதித்தல் (வேதாந்த சாஸ்திரங்களை அடிக்கடி சிரத்தையுடன் அப்பியாசம் செய்தல்) கேட்டல் என்பார். ஒத்துள பொருள் (கேட்டலால் மனதுக்கு சம்மதமான அர்த்தத்தை) ஊகத்தால் உசாவல் (விசாரித்தல்) சிந்தித்தல் என்பார். சித்தம் ஏகாந்தமான தெரிசனம் (சித்தம் பிரமாகாரமாக இருத்தலே) தெளிதல் என்பார். நித்தம் (தினசரி) இப்படி செய்தக்கால் (செய்வாயானால்) நிர்வாணம் (பர மோட்சத்தை) பெறுவாய் நீயே.

--

குரு முகமாக ஆறு லிங்கத்தாலும் கூடஸ்த பிரம ஐக்கிய ஞானத்தை சொல்கிற வேதாந்த சாஸ்திரத்தை அடிக்கடி அவதி வரை அப்பியாசம் செய்தலே விசார ரூபமான சிரவணம்.

சிரவணத்தால் மனதுக்கு சம்மதமான அர்த்தத்தை சூட்சும புத்தியால் சாக்கிரதை முதலான அவத்தைகளும் சடமாயும் பலவாயும் ஒன்றினில் ஒன்று தோன்றி அழிகிறது எனவும் அவற்றை அறிகின்ற ஆதமா சச்சிதானந்தமாய், ஏகமாய், பூரணமாய், நித்தியமாய் உள்ளது எனவும் இது முதலாக நானா பிரகாரமான சையுத்தியினால் விசாரிப்பது மனனம்.

சுத்த சத்துவ விருத்தியால் அகண்ட பரிபூரண சச்சிதானந்த பிரமமே நான், நானே அந்த பிரமம் என விச்சின்னமில்லாது எப்போதும் த்யானித்து வாகியாந்தரத்தில் சப்தம் முதலான விடயம் தோற்றாது த்யானமும், த்யானம் செய்பவனும் இறந்து; பாலில் கலந்த நீர் போல அவ் வஸ்துவில் அவ் விருத்தி அடங்கி அவ்வாகாரமாக இருத்தலே நிதித்தியாசனம். (தெளிதல்)

--

இப்ப சீடனுக்கு ஒரு பலத்த சந்தேகம்! எவ்வளவு நாள் சாஸ்திரம் படிச்சு, உபதேசம் வாங்கி, ஞானம் ஒரு வழியா அடைஞ்சாலும் திருப்பி திருப்பி வெளியே வருவோம்னா எவ்வளோ

நாள்தான் இப்படி சிரவணம் மனனம்ன்னு செஞ்சுகிட்டே இருக்கிறது? சந்தேகம்ன்னு வந்துகிட்டேதான் இருக்குமோ? இதுக்கு ஒரு முடிவு உண்டா இல்லையா?

குரு சொல்கிறார்: இல்லைப்பா! எப்பவுமே செஞ்சு கொண்டு இருக்கணும்ன்னு ஒண்ணும் இல்லை. எவ்வளோ நாளுக்கு பார்க்கிறவன் பார்க்கப்படுவதுன்னு ஒரு வித்தியாசம் உனக்கு தெரிகிறதோ அவ்வளவு நாள் செய்ய வேணும். அப்புறம் தேவை இல்லை.

அந்தக்கரணம் என்கிற மனசு இருக்கிற வரைதானே சந்தேகம்? அது போயாச்சுன்னா சந்தேகமும் இல்லை; கலக்கமும் இல்லை; விபரீதமும் இல்லை. மனம்ன்னு ஒண்ணு இருந்தாதானே வேறு ஒரு பொருள்ன்னு ஒண்ணை பாக்க முடியும். அது ஒழிஞ்சா அதுக்கு அப்புறமா ஒரு அப்பியாசமும் தேவை இல்லை. (அந்த அப்பியாசம் செய்கிற கருவியும் இல்லாம போச்சே!)

முன்னே ஆரம்ப பதிவுகள்லே செய்த கலாட்டா இப்ப வருது. ஆனா இப்ப நீங்க இதை பாத்து கலங்க மாட்டீங்க!
பார்க்கிறவன், பார்க்கப்படுவது, பார்க்கிறது (செயல்). இது போல..
அறிகிறவன், அறியப்படுவது, அறிவு.
ஞாதுரு, ஞானம், ஞேயம் ன்னும் சொல்லுவாங்க.
இது ஒரு ட்ரினிடி.
ஒரு விஷயம் அறியப்பட இது மூணும் வேணும். பார்க்கிறவன் வேணும். பார்க்க ஒரு பொருள் வேணும். இரண்டையும் இணைக்கிறா பார்த்தல் என்கிற ப்ராஸஸ் வேணும்.
இதுதான் த்ரிபுடி!
நான் என்கிறது தற்போதம். பிரம்மமா இருக்கிறேன் என்கிறது ஒரு நினைப்பு- வாசனை.
நான் அறிகிறேன் என்கிற உணர்வு இருக்கும் வரை எல்லாம் அன்னியமா இருக்கு. இந்த நான் போயாச்சுன்னா அறிகிற ஆள் இல்லாமல் ப்ராஸஸ் போயிடும். அறிவு மட்டுமே நிக்கும்.
இது, இதான் முடிவான நிலை!
அப்படி முடித்தவர் சீவன் முத்தராக இருந்து பின் விதேக முத்தராக என்றும் இருப்பாங்க!

கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமறா வுற்பவநோய் மாறுமோ - நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர்கட்கு அன்றோதான்
பொய்யா பிறப்பிறப்புப் போம்
-தாயுமானவர் உடல் பொய்யுறவு-8

தன்னை யிழந்திடத்தே தானே சுகவடிவாய்
இன்னபடி என்றுணரா வெங்கோனுட்- பின்னமற
நின்றநிலை தானுந் தெரியாதே நின்றவர்கட்கு
அன்றோ பிறப்பறுக்கலாம்.
-சுகபோக சாரம்

எல்லாம் சிவமேயென் றெண்ணினு நின்போத
மல்லாலஃ துண்மையன் றுந்தீபற
ஆங்கது நீங்கிடென்றுந்தீ பற
(எல்லாம் சிவமே என்று எண்ணினும் நின்போதம்
அல்லால் அஃது உண்மை என்று உந்தீ பற
ஆங்கு அது நீங்கிடு என்று உந்தீ பற)
-அவிரோத உந்தியார்

93.
இந்த கேட்டல் முதலான அப்பியாசம் எதுவரை? இப்படி செய்து முடித்த ஞானி அடையும் முத்தி

யாது?

> எத்தனை நாண் ஞாதாவு ஞானமு மிருக்கு முன்பால்
> அத்தனை நாளும் வேண்டு மப்பாலோர் செயலும் வேண்டா
> நித்தமும் வெளிபோற்பற்றா ஞேயமாத் திரமாய்ச் சீவன்
> முத்தரா னவர்வி தேக முத்திபெற் றிருப்பா ரென்றும்.

எத்தனை நாள் ஞாதாவும் (அறிபவனும்) [என்ற விருத்தி] ஞானமும் உன்பால் இருக்கும், அத்தனை நாளும் [அப்பியாசம்] வேண்டும். அப்பால் ஓர் செயலும் வேண்டா. நித்தமும் (தினமும்) வெளி (ஆகாயம்) போல் பற்றா ஞேய மாத்திரமாய் (பந்தமிலாத ஞானமாய்) சீவன் முத்தரானவர் (சீவன் முத்தியடைந்தவர்கள்) [பிராரர்த்த உடல் வீழ்ந்தபின்] என்றும் (எல்லாக்காலங்களிலும்) விதேக முத்தி பெற்று இருப்பார்.

தாத்பர்யம்: மித்தை முதலான பார்வையை சத்தியமாக இது என சுட்டி அறியும் உணர்வும் அதை அபிமானிக்கிற சீவனும் உள்ள வரை கேட்டல் முதலான அப்பியாசங்களை செய்ய வேண்டும். அப்படி முடித்தவர் சீவன் முத்தராக இருந்து பின் விதேக முத்தராக என்றும் இருப்பார்கள்.
--
மதியம் திங்கள், ஏப்ரல் 27, 2009
சீவன் முத்தர்

சீவன் முத்தர்: பிரபஞ்ச விவகாரம் செய்யும் போதும் நிரவயமாய் சூட்சுமமாய் வியாபகமாய் இருக்கின்ற சின்மாத்திரமே தான் என இருப்பவர்.

முன்னே சொன்னாங்க இல்லையா, எது வரைக்கும் இப்படி சாதனை வேணும்ன்னு? அது முடிஞ்சா சாதகர் கதி என்ன? உடனே இந்த உலகை விட்டு போயிடுவாங்களா?
இல்லை அப்படி இல்லை. ஏன் என்கிறதுக்கு விளக்கம் அப்புறமா பாக்கலாம்.

சாதகர் சீவன் முக்தரா இருப்பார். அதாவது இந்த உலக காரியங்கள் எல்லாம் செய்து கொண்டே அதே சமயம் பிரம்மநிலையிலும் இருப்பார். ஒரு சினிமா பார்க்கிற ஆசாமி சினிமா பார்க்கிறோம்ன்னு தெரிஞ்சுகொண்டே பார்க்கிற மாதிரி. ஒரு நடிகர் நாடகம்தான் நடிக்கிறோம்ன்னு தெரிஞ்சு கொண்டே நாடகமாடுகிற மாதிரி இவங்களும் அவங்களோட பங்கு இந்த உலகத்தில என்னவோ அதை செய்துகொண்டே இருப்பாங்க.

இந்த சீவன் முத்தர்களுக்குள்ளேயே நாலு வகை இருக்கு. அவங்களுக்கு பிரம வித்து; பிரம வரன்; பிரம வரியான்; பிரம வரிட்டன் ன்னு பெயர்.
அட பிரம்ம நிலையிலேயே வித்தியாசமா?! ஏன் அப்படின்னா பிரம்மஞானத்திலே வித்தியாசம் இல்லை. அவங்க எப்படி நடந்துக்கிறாங்க என்பதை பொருத்து வித்தியாசம் இருக்கு. சொல்லுங்க கேக்கலாம்ன்னா...

94.

> சீவன் முத்தர் எத்தனை விதம்?
> ஞானமார் சீவன் முத்தர் நால்வகை யாவர் கேளாய்
> வானிகர் பிரம வித்து வரன்வரி யான்வ ரிட்டன்
> ஆனவர் நாம மாகு மவர்களிற் பிரம வித்தின்
> தானமு மற்றை மூவர் தாரதம்மியமுஞ் சொல்வேன்

ஞானமார் (பரி பூரண ஞானம் உள்ள) சீவன் முத்தர் நால்வகையாவர் கேளாய். வான் நிகர் (ஆகாசத்துக்கு ஒப்பான) பிரம வித்து; வரன்; வரியான்; வரிட்டன். ஆனவர் நாமம் ஆகும்.

அவர்களில் பிரம வித்தின் தானமும் (ஸ்திதியும்) மற்றை மூவர் தாரதம்மியமுஞ் சொல்வேன்.
--
இவர்களில் ஞானத்தில் வித்தியாசம் இல்லை, ஆனால் இவர்கள் நடத்தையில் வேறுபாடு உள்ளது.

முதலிலே பிரம்ம வித்து என்ன செய்வார்ன்னு பார்க்கலாம்.

அவரை ப்ரம்ம வித்துன்னு கண்டு பிடிக்கிறதே கஷ்டமா இருக்கும்!

ரொம்ப சாதாரணமான ஆசாமி போல அவர் பாட்டுக்கு மத்தவங்க போலவே இருப்பார். இந்த ஆசைகளையும் கோபங்களையும் உண்டாக்குகிற உலகத்திலேயே இருந்துகொண்டு அவற்றால பாதிக்கப்படாம இருப்பார். ஞானம் வரு முன்னே என்ன வேலை பாத்தாரோ அதையே அவர் பாட்டுக்கு பாத்துகொண்டு இருப்பார். அவரோட குல ஆசாரங்களை நேர்த்தியா கடைபிடிப்பார். விருந்து கிடைக்கிறதா ஜம்ன்னு சாப்பிடுவார். ஒண்ணுமே சாப்பிட கிடக்கலையா, அதுவும் சரிதான்...... அவரோட பிராரத்த கர்மாவால வருகிறது என்னவோ அதை அவர் பாட்டுக்கு அனுபவிப்பார்! என்ன வந்தாலும் போனாலும் ப்ரம்ம நிலையிலேயே உள்ளுக்குள்ள இருந்து கொண்டு இருப்பார்.

95.

பிரம வித்தின் இயல்பு:

தீரராய்ப் பிரம வித்தாய் தெளிந்தவர் தெளியு முன்னம்
வாரமாயிருந்த தங்கள் வருணமாச் சிரமஞ் சொன்ன
பாரகா ரியமானாலும் பலர்க்குப காரமாக
நேரதாச் செய்வார் தீர்ந்த நிலைவிடார் சீவன் முத்தர்.

தீரராய்ப் பிரம வித்தாய் தெளிந்தவர், தெளியும் முன்னம் வாரமாய் (உரிமையாக) இருந்த தங்கள் வருண ஆச்சிரமம் சொன்ன பார (துன்பத்தை கொடுக்கும் பெரிய) காரியமானாலும் பலர்க்கு உபகாரமாக நேரதா (நேர்த்தியாக மந்திர லோபம், கிரியா லோபம், தன லோபம் ஆகியன இல்லாது விதிப்படி) செய்வார். (அப்போதும்) தீர்ந்த நிலை (தான் பிரமம் என்ற முடிந்த நிச்சயம்) விடார் (நீங்காது இருப்பார்) சீவன் முத்தர்.
--
தீரர்: ஆற்றில் எதிர்த்து நீந்துவது போல காமாதி உண்டாக்கும் விவகாரத்தில் இருந்து கொண்டே மைத்ரி (சகோதரத்துவம்) முதலானதை சம்பாதிக்கும் வல்லமை உடையவராய் இருத்தல்; ஆற்று ஜலத்தை அடைத்து பயிர் செய்தல் போல் ஈஸ்வரனால் வெளி முகத்துக்கு சிருஷ்டிக்கப்பட்ட இந்திரியங்களை தன் வசப்படுத்தி ஆத்ம தரிசனம் செய்து ஆநந்தம் அனுபவிக்கும் வல்லவர்.

தெளிந்தவர்: மண் சேர்ந்து கலங்கிய ஜலம் தேற்றாம் கொட்டையால் தெளிந்தது போல தாமஸ இராஜஸ விருத்திகளால் தோன்றிய சீவேஸ்வர ஜகத்தை சத்துவ விருத்தியால் சிவாகாரமாய் காணல்.

தெளியு முன்னம்...செய்வார்: பிரம சொரூபமான தமக்கு கருமஞ் செய்ய தேவையில்லை ஆயினும் செய்தால் துன்பம் வரக்கூடும் எனினும், கருமம் செய்யாத அஞ்ஞானிகள் தம்மைப்பார்த்து கருமம் செய்து பரம்பரையாக முத்தி அடையும் பொருட்டு தங்கள் வர்ணம் முதலானவற்றுக்கு உரிய கர்மத்தை மந்திர லோபம் கிரியா லோபம் தனலோபம் இன்றி செய்வர்.

இப்படி மகிழ்ச்சியா இருக்கிற சீவன் முக்தர் எல்லாரையும் பிரம்மமாகவே பார்க்கிறதால அரசனும் ஆண்டியும் அவருக்கு ஒண்ணுதான். குபேரன் போல செல்வம் இருக்கிற ஆசாமியும் பரம ஏழையும் ஒண்ணுதான். கல்விக்கடலா மக்கள் போற்றுகிறவங்களும் ஒண்ணும் தெரியாத அறிவிலியும் ஒண்ணுதான். கடவுளையும் அவருக்கு சமதையான ஞான ஆசிரியர்களையும் தவிர யாரையும் துதிக்க மாட்டார், போற்ற மாட்டார்.

அதே நேரம் தான் யாரோ பெரிய ஆசாமின்னோ நினைக்கவோ நடந்துக்கவோ மாட்டார்.

ஞானம் வந்த ஆசாமி ஏன் இப்படி கிடந்து உழலணும்? பிரம்மத்தோட ஐக்கியம் ஆகி அப்படியே போக வேண்டியதுதானேன்னா...

காரணம் பிராரப்த கர்மா.

நினைவிருக்கா? இதைப்பத்தி முன்னேயே பேசினோம்!

பிறக்கும் போது மூட்டை கட்டி வந்த மொத்த கர்மா சஞ்சித கர்மா. அதிலே இனி வர இருக்கிறது ஆகாமி கர்மா. ஏற்கெனவே பலன் கொடுக்க ஆரம்பிச்சு விட்டது பிராரப்த கர்மா.

ஞானம் வந்தா இந்த ஆகாமி போயிடும். ஆனா பிராரப்த கர்மாவை அனுபவிச்சு தீரணும்.

இந்த கர்மாக்கள்தான் சீவன் முத்தரை வேலை செய்ய தூண்டுகிறன. விளைவுகளை அனுபவிக்க வைக்கிறன. ஞானி அஞ்ஞானத்திலேயாவது அல்லது ஆசைகள் துவேஷங்களால் தூண்டப்பட்டாவது ஒரு காரியத்தை செய்கிறதில்லை. பிராரப்தம் பலவிதமாயும் இருக்கும். அதனால நடத்தையும் பல விதமா இருக்கும். பலரும் போற்றுகிற மாதிரி பெரிய தவம் செய்கிற ஆசாமியாவும் இருக்கலாம். ஏதோ ஒரு பெட்டிக்கடை வைச்சு கொண்டு வியாபாரம் செய்யலாம். தள்ளு வண்டிலே ஐஸ் க்ரீம் வித்துகிட்டு இருக்கலாம். ஒரு ஆசாமி அரசாளலாம். ஒத்தர் பிச்சை எடுத்து கிடைக்கறதை சாப்பிடலாம்;

யாக்ஞவல்கியர்ன்னு ஒத்தர். அவர் சபைகளிலே பிரசங்கம் செய்து ஜீவிச்சார்; ஜனகன் அரசாண்டார்; சுகர், வாமதேவர் என்கிறவங்க தவம் பண்ணாங்க; தாயுமானவர், மாணிக்கவாசகர் மந்திரியா இருந்தாங்க; பட்டினத்தடிகள் வியாபாரம்; இதே பட்டினத்தடிகள் பின்னாலே வெறுங்கையிலே பிச்சை வாங்கி சாப்பிட்டார். அதே போல பத்ரகிரியார்.

இப்படி எது வேண்டுமானாலும் செய்வார்கள் சீவன்முத்தர்.

97.

பிரம வித்துக்கள் இப்படி நான்கு விதமாக இருப்பானேன்?

> பேதகர் மத்தால்வந்த பிராரத்த நாநாவாகும்
>
> ஆதலால் விவகாரங்க ளவரவர்க் காவவாகும்
>
> மாதவஞ் செயினுஞ்செய்வார் வாணிபஞ் செயினுஞ்செய்வார்
>
> பூதலம் புரப்பாரையம் புகுந்துண்பார் சீவன்முத்தர்.

பேத கர்மத்தால் வந்த பிராரத்தம் நாநாவாகும். (அனேக விதமாக இருக்கும்) ஆதலால் விவகாரங்கள் அவரவர்க்காக (அவரவருக்கு தக்கனவாக) ஆகும். மாதவம் (பெரிய தவம்) செயினுஞ் செய்வார், வாணிபம் செயினும் செய்வார், பூதலம் புரப்பார் (உலகளவார்), ஐயம் புகுந்துண்பார் (பிச்சை எடுத்து உண்பார்) [இப்படி எது வேண்டுமானாலும் செய்வார்கள்] சீவன்முத்தர்.

தாத்பர்யம்: பிரம வித்துக்களுக்கும் ஞானம் உதிக்குமுன் சஞ்சித கர்மத்தால் உண்டான பிராரத்த கர்மம் பல விதமாகையால் அவர்களும் பல வகையாக இருப்பர்.

98.

சென்றது கருதார்நாளைச் சேர்வதுநினையார் கண்முன்

நின்றதுபுசிப்பார் வெய்யி னிலவாய்விண் விழுதுவீழ்ந்து

பொன்றின சவம்வாழ்ந்தாலும் புதுமையா வொன்றும்பாரார்

நன்றுதீ தென்னார்சாட்சி நடுவான சீவன்முத்தர்.

சென்றது கருதார் (முன்பு நீங்கினதை நினைத்து வாடார்) நாளைச் சேர்வது நினையார் (நாளை வரக்கூடியதை நினைத்து மகிழ்ச்சி அடையார்). கண்முன் (நிகழ் காலத்தில்) நின்றது புசிப்பார் (விதி வசத்தால் கிடைத்ததை அனுபவிப்பர்) வெய்யில் நிலவாய் விண் விழுது வீழ்ந்து (வெப்பமான சூரிய கதிர்கள் சந்திரன் போல குளுமையாக ஆகாயத்திலிருந்து விழுதாக இறங்கினாலும்) பொன்றின (இறந்து போன) சவம் [உயிர் பெற்று] வாழ்ந்தாலும் புதுமையாய் ஒன்றும் பாரார். நன்று தீது என்னார் (ஒரு பொருளை நல்லது என்றும் ஒரு பொருளை தீயது என்றும் சொல்ல மாட்டார்) சாட்சி நடுவான (எல்லாவற்றையும் விலட்சணமாக இருந்து அறியும்) சீவன் முத்தர்.

தாத்பர்யம்: பிரமவித்து, கோர மூட மனம் அடங்கி அநுபவமாக நிற்பதால் ஒன்றை கருதுவதும் வியப்புறுவதும் இல்லை.

மதியம் வியாழன், ஏப்ரல் 30, 2009
வெறும் சாட்சியா....
நாம பல பேர் நடந்ததை நினைச்சுகிட்டே இருக்கோம் இல்லையா? அதனாலேயே துக்கம், கோபம் எல்லாமே வரும்! அட, அதான் நடந்து முடிந்த கதையாச்சே ன்னா யாரும் கேட்கிற மாதிரி இல்லே! சிலர் ஆமாம் சரிதான் ன்னு ஒத்துப்பாங்க. அப்புறம் திருப்பி அதே நினைவுகள் கோபதாபங்கள்...

இல்லை வரும் காலத்தைப்பத்தி கனவுகள், திட்டங்கள்... இப்படி செய்யணும், அப்படி செய்யணும், நான் இப்படி ஆவேன், அப்படி ஆவேன்... நினைத்த மாதிரி நடக்காட்டா கோப தாபங்கள்!

சீவன் முத்தர் இதுக்கு எல்லாம் அப்பாற்பட்டவர். இப்படி நடந்ததேன்னு வருந்தவும் மாட்டார்; இப்படி நடக்கும்ன்னு குஷியாவும் இருக்கமாட்டார்! நிகழ்காலத்திலே இருப்பார். விதி வசத்தாலே கிடைச்சது எதுவோ அதை அனுபவிப்பார். அது நல்லதோ கெட்டதோ... சூடா கேசரி கிடைச்சாலும் சரிதான், சில்லுன்னு பழையது கிடைச்சாலும் சரிதான், ஒண்ணே போல இருக்கும் அவருக்கு!

நாம நல்ல வெயில்லே உஸ்உஸ்ன்னு "நாசமா போற வெயில்" ன்னு திட்டிக்கிட்டே தார்ரோட்டிலே போறோம். திடீர்ன்னு பாத்தா வெயில் சில்லுன்னு இருக்கு! இது என்ன அதிசயம்ன்னு இல்லே பாப்போம்! சீவன் முத்தர் இப்படி ஏதாவது நடந்தா அதை பாத்து எல்லாம் அசரமாட்டார்! இது ஏதோ வழக்கமா நடக்கற மாதிரி நடந்துப்பார்.

எதையும் இது நல்லதுன்னும் சொல்லமாட்டார். இது கெட்டதுன்னும் சொல்லமாட்டார்! ஒத்தரை செத்து போயிடார்ன்னு சுடுகாட்டுக்கு எடுத்துப்போகும் போது திடுதிப்புன்னு செத்த

பொணம் (அப்ப உயிருள்ள பொணம் உண்டா?!) எழுந்து உக்காந்தா நாம எவ்வளோ ஆச்சரியப்படுவோம்! சீவன் முத்தருக்கு அது ஒண்ணும் ஆச்சரியமாவே தோணாது!
ஒண்ணும் புரியலையே!
ஒண்ணுமில்லே, நமக்கு இதெல்லாம் நடக்க காரணம் மனசுதானே! அது அடங்கிப்போனா வேற எப்படி இருப்பாங்க!
நடக்கிற விஷயங்களுக்கு வெறும் சாட்சியா மட்டும் இருப்பாங்க.

98.

சென்றது கருதார்நாளைச் சேர்வதுநினையார் கண்முன்
நின்றதுபுசிப்பார் வெய்யி னிலவாய்விண் விழுதுவீழ்ந்து
பொன்றின சவம்வாழ்ந்தாலும் புதுமையா வொன்றும்பாரார்
நன்றுதீ தென்னார்சாட்சி நடுவான சீவன்முத்தர்.

சென்றது கருதார் (முன்பு நீங்கினதை நினைத்து வாடார்) நாளைச் சேர்வது நினையார் (நாளை வரக்கூடியதை நினைத்து மகிழ்ச்சி அடையார்). கண்முன் (நிகழ் காலத்தில்) நின்றது புசிப்பார் (விதி வசத்தால் கிடைத்ததை அனுபவிப்பர்) வெய்யில் நிலவாய் விண் விழுது வீழ்ந்து (வெப்பமான சூரிய கதிர்கள் சந்திரன் போல குளுமையாக ஆகாயத்திலிருந்து விழுதாக இறங்கினாலும்) பொன்றின (இறந்து போன) சவம் [உயிர் பெற்று] வாழ்ந்தாலும் புதுமையாய் ஒன்றும் பாரார். நன்று தீது என்னார் (ஒரு பொருளை நல்லது என்றும் ஒரு பொருளை தீயது என்றும் சொல்ல மாட்டார்) சாட்சி நடுவான (எல்லாவற்றையும் விலட்சணமாக இருந்து அறியும்) சீவன் முத்தர்.

தாத்பர்யம்: கோர மூட மனம் அடங்கி அநுபவமாக நிற்பதால் பிரமவித்து ஒன்றை கருதுவதும் வியப்புறுவதும் இல்லை.

சரி சரி நாலு வகைன்னு சொன்னீங்க! ஒண்ணு ஆச்சு - சீவன் முக்தர். மீதி மூணு?

மூணிலே ரெண்டு பேர் சமாதியிலே இருப்பாங்க.

அதானே பாத்தேன். இப்படி இருந்தாதான் ஏதோ விசேஷம்ன்னு தோணுது. அப்புறம்?

ஒத்தர் இந்த உடம்பை காப்பாத்திக்க அப்பப்ப சமாதி நிலையிலேந்து வெளியே வந்து ஏதாவது உணவு சம்பாதித்து சாப்பிடுவார். உலக வியாபாரம் ஏதேனும் இருக்கலாம். திருப்பி சமாதிக்கு போயிடுவார். இவர் பிரம்மவரன்.

இன்னொருத்தர் தானா சமாதி நிலையிலேந்து வெளியே வர மாட்டார். யாரான ஏதாவது செய்து இவரை வெளியே கொண்டு வருவாங்க. டமர டமரடம் ன்னு எதேனும் வெச்சு சத்தம் எழுப்புவாங்க. மணி அடிப்பாங்க. சத்தம் போட்டு நாமசங்கீர்த்தனம் பண்ணுவாங்க. வெளியே வந்த பிறகு ஏதேனும் சாப்பிடுவார். உலக வியாபாரம் ஏதேனும் இருந்தா இருக்கும். அல்லது உடனே திருப்பி சமாதிக்கு போயிடுவாங்க. இவர் பிரம்ம வரியான்.

இப்படிப்பட்ட ஒத்தரை கவனிச்சுக்கிட்டவர் சமாதியிலே இருக்கிறவரை தடியால அடிச்சு வெளீலே கொண்டு வருகிறதும் உண்டு! அநியாயமா தோணுது இல்லே? ஹூம், அவருக்கு வேற வழி இருக்கல்லே!

இப்படி எந்த வழியாலும் வெளியே வராம எப்பவுமே சமாதியிலே இருக்கிறவங்க பிரம்ம வரிட்டன்.

99.

மற்ற மூவரின் இயல்பு?

பின்னைமூ வரி லிரண்டு பேர்களுஞ் சமாதி யோகம்

தன்னையுற்றிருப்பார் தேக சஞ்சார நிமித்தந் தானாய்

உன்னுவோன் வரன்வேற்றோரா லுணர்பவன் வரியானாகும்

அன்னியர் தம்மாற்றன்னா லறியாதோன் வரிட்டனாமே

பின்னை மூவரில் இரண்டு பேர்களும் சமாதி யோகம் தன்னை உற்றிருப்பார். தேக சஞ்சார (பயண) நிமித்தம் தானாய் உன்னுவோன் (சமாதியிலிருந்து வெளி வந்து உணவு ஆகியவற்றை நினைப்பவன்) வரன்; [சீடன் முதலான] வேற்றோரால் உணர்பவன் (சமாதி கலைந்து உணவு ஆகியவற்றை நினைப்பவன்) வரியானாகும். அன்னியர் தம்மால் (மற்றவர்களாலும்) தன்னால் (தானாகவும்) அறியாதோன் (உணவு கொள்ளல் முதலியனவற்றை கொள்ள அறியாதவன்) வரிட்டனாமே.

ஹூம். அப்ப இந்த நாலு பேரும் வித்தியாசமானவங்க. அவங்க அனுபவிக்கிறதுலேயும் வித்தியாசம் இருக்கும் இல்லையா?

இல்லை. இவங்க அனுபவிக்கிற பிரம்ம ஆனந்தம் ஒண்ணே! வித்தியாசமே இல்லை.

அட பின்னே ஏன் சமாதி நிலையிலே இருக்கணும். அல்லது உலக விவகாரங்களிலே இருக்கணும்? பாடு பட்டு சமாதி பழகறதிலே என்ன பிரயோசனம்?

பிரம்ம வித்து உலக வியவகாரியங்களிலே இருக்கிறதால அதுக்கான பலன்களா நாம் பாக்கிறது போல துக்கம், சந்தோஷம் அனுபவிப்பார். முள்ளு குத்தி ரத்தம் வரும். அடி படும். ஏதோ நோய் வந்து உடம்பு கத்தியாலே வெட்டப்படும்! மத்தவங்க சுகமா இருப்பாங்க!

ஸ்ரீ ரமணர் க்கு சார்க்கோமா வந்து அதுக்காக அறுவை சிகித்சை செய்தாங்க. அனெஸ்தீஷியா எல்லாம் ஒண்ணும் வேணாம்னுட்டார். ஆபரேஷன் நடந்தது. ரமணரோ வேடிக்கை பாத்து கொண்டு இருந்தார்.

எல்லாம் முடிஞ்ச பிறகு ஒத்தர் ஸ்ரீரமணரை கேட்டார்:

ஆமாம், உங்களுக்கு வலியே தெரியலையா?

தெரியாம என்னா நல்லாவே தெரிஞ்சது?

பின்னே?

அந்த வலியோட சாதாரணமா இருக்கிற வேதனை இல்லை.

ஆயிரமாயிரம் சீவன்கள்! அதிலே மனிதப்பிறவி வாய்க்கிறது துர்லபம்! அப்படியே வாய்ச்சாலும் ஆன்மீகம் பத்தி நாட்டம் வரது துர்லபம். வந்தாலும் அவருக்கு ஏத்த சரியான வழியை கண்டுபிடிச்சு அதிலே போகிறது துர்லபம். போனாலும் இடையிலே வருகிற தடைகளை எல்லாம் தாண்டி மேலே போகிறது கஷ்டம். குருநாதர் அமையணும். பிறகு பிரம்ம அனுபவம் கிடைக்கணும். அப்படி கிடைச்சாலும் சந்தேகம் முதலான இடையூறுகள் வேற வராம இருக்கணும். (குரு வந்தாச்சுன்னா அப்புறம் மீதி தாண்டிடக்கூடியதுதான்:)

இதனால் இவர்கள் மிகவும் அரிதானவர்களாவே இருப்பாங்க.

100.

வித்தியாசம் உள்ள இந்த நால்வருக்கும் மோட்சமும் வித்தியாசமானதா?

அரிதாகு மிவர்க ளிவ்வா றநேகரா னாலுமுத்தி

சரியாகும் பாடு பட்ட சமாதிக்குப் பலனே தென்றால்

பெரிதான திருஷ்ட துக்கம் பிரமவித் தநுப விப்பன்

வரியானும்வரனு மற்றை வரிட்டனுஞ் சுகமாய்வாழ்வார்.

அரிதாகும் இவர்கள் இவ்வாறு அநேகரானாலும் முத்தி சரியாகும். (முத்தியில் வேறுபாடில்லை). [பின்னே] பாடு பட்ட சமாதிக்குப் பலன் ஏதென்றால், [விவகாரத்தில் பிரவிருத்தி உள்ளதால்] பெரிதான திருஷ்ட (பிரத்யக்ஷமான) துக்கம் பிரமவித்து அநுபவிப்பன். [விவகாரம் இல்லை ஆதலாலும் பிரவிருத்தியும் இல்லாததாலும்] வரியானும் வரனும் மற்றை வரிட்டனும் சுகமாய் வாழ்வார்.

--

ஜகத்தில் உயிர்களுக்கு மற்ற விருப்பம் நீங்கி மோட்ச விருப்பம் வருதல் அரிது; வரினும் கர்ம சாத்திரம் முதலியனவற்றை விட்டு வேதாந்த சாத்திர விருப்பம் வருதல் அரிது; வரினும் அதில் சொன்னதை அநுசந்தானம் செய்தல் அரிது; செய்யினும் சுகாநுபவம் கிடைத்தல் மிக அரிது (ஆகவே அரிதாகும் இவர்கள்...) இவர்கள் நானா ரூபமாய் இருப்பினும் எல்லா நதிகளும் சமுத்திரத்தில் ஐக்கியமாவது போல மோட்சத்தில் ஒரே தன்மை உடையவராவர். நித்திரையோடு வழி செல்வோனுக்கு வழியில் உள்ள கல் முள் இவற்றால் நினைவுண்டாகி அச்சுகத்துக்கு கேடு உண்டாவது போல் பிராரத்தினால் வரும் தொழில்களால் பிரவிருத்தி உண்டாகி தன் ஆனந்தத்துக்கு விக்கினமுண்டாகி பிரமவித்து துன்பம் அனுபவிப்பான்.

--

ஜகத்தில் உயிர்களுக்கு மற்ற விருப்பம் நீங்கி மோட்ச விருப்பம் வருதல் அரிது; வரினும் கர்ம சாத்திரம் முதலியனவற்றை விட்டு வேதாந்த சாத்திர விருப்பம் வருதல் அரிது; வரினும் அதில் சொன்னதை அநுசந்தானம் செய்தல் அரிது; செய்யினும் சுகாநுபவம் கிடைத்தல் மிக அரிது (ஆகவே அரிதாகும் இவர்கள்...) இவர்கள் நானா ரூபமாய் இருப்பினும் எல்லா நதிகளும் சமுத்திரத்தில் ஐக்கியமாவது போல மோட்சத்தில் ஒரே தன்மை உடையவராவர். நித்திரையோடு வழி செல்வோனுக்கு வழியில் உள்ள கல் முள் இவற்றால் நினைவுண்டாகி அச்சுகத்துக்கு கேடு

உண்டாவது போல் பிராரத்தினால் வரும் தொழில்களால் பிரவிருத்தி உண்டாகி தன் ஆனந்தத்துக்கு விக்கினமுண்டாகி பிரமவித்து துன்பம் அனுபவிப்பான்.

// ஆசையாத்தான் இருக்கு இப்படி சீவன் முக்தர் ஆக.
அதுக்கெல்லாம் ஒரு அம்சம் வேணாமா?
இப்படி இருந்தாப் பைத்தியக்காரப் பட்டம்
வந்துரும், இந்தக் கலிகாலத்தில்.//

இப்படி ஒரு பின்னூட்டம் போட்டாங்களா? அவங்களுக்கு ஒரு கதை சொல்லறேன்னு சொல்லி இருந்தேன்.

இதோ:

சீனாவிலே ஒரு புத்த துறவி. கிராமத்திலே நல்ல பேர் வாங்கி இருந்தார். அவருக்கு ஒரு நாள் ஒரு பிரச்சினை வந்தது. அந்த ஊரை சேர்ந்த ஒத்தர் திடுதிப்புன்னு வந்து "சாமி! நாங்க அவசரமா வேற ஊருக்கு போக வேண்டி இருக்கு. இந்த பொண்ணை கூப்பிட்டுகிட்டு போக முடியாத சூழ்நிலை. இப்பதான்+2 பாரீட்சை நடக்குது. உங்க பொறுப்பிலே விட்டுட்டு போறேன். கொஞ்சம் பாத்துக்குங்கன்னார். துறவி "அடடா நானோ பிரம்மசரியம் இருக்கறவன். எப்படி ஒரு கன்னிப்பெண்ணை பாத்துகிறது? நான் சரியா இருந்தாலும் ஊர் என்ன சொல்லும்?" ன்னார். வந்தவர் "சாமி, ஊரைப்பத்தி எனக்கு கவலை இல்லை. உங்களை நான் நம்பறேன். அது போதும் ன்னார்; பொண்ணை விட்டுட்டு போயிட்டார். முத நாள் இரவு துறவி வெளியெ கடும் குளிரிலே படுக்க வேண்டியதாச்சு. உடம்பெல்லாம் விறைச்சு போச்சு. அடுத்த நாள் "என்னடா இது! எவ்வளவு நாள் இப்படி காலம் தள்ள முடியும்? உடம்பை வெச்சுதானே சித்திரம் எழுதணும். இன்னும் இந்த உடம்புன்னு நினைப்பெல்லாம் இருக்கே! இதை காப்பாத்திக்கணுமே! என்ன பண்ணறதுன்னு யோசிச்சார். தன் ஆசிரியர்கிட்டே போய் என்ன செய்யன்னு கேட்டார். அவர் சிரிச்சுகிட்டே அரை நாள் பயணத்துலே இருந்த ஒரு ஊர் பேர் சொல்லி அங்கே இந்த பேர்ல ஒத்தர் இருக்கார். அவரை போய் பாருன்னார். துறவியும் "அம்மா பத்திரமா இரு. அடுத்த ஊர் போயிட்டு சாயந்திரம் வந்துடறேன்" னார். கிளம்பி அந்த ஊருக்கு போனார். பேரை சொல்லி விசாரிச்சார். பேரை கேட்டதுமே ஊர்காரங்க முகத்தை சுளிச்சாங்க. "அவனா? இப்படீ போ" ன்னு வழிகாட்டினாங்க. துறவிக்கு ஆச்சரியம்! "என்னடா இது! அவருக்கு இங்கே ஒண்ணும் மதிப்பு இல்லையா? அப்படிப்பட்ட ஒத்தர்கிட்டேயா நம்ம வாத்தியார் அனுப்பி இருக்கார்?"ன்னு நினைச்சுண்டார். விசாரிச்சு கொண்டே அவர் வீட்டுகிட்டே போயாச்சு. கடசியா ஒத்தரை விசாரிச்சப்ப அவரும் முகத்தை சுளிச்சுகிட்டே "அதோ பாரு! அவன்தான்"னு சொன்னார். காட்டின நபரை பாத்தா அந்த நபரும் ஒரு பிள்ளையும் வீட்டுக்கு வெளியே உக்காந்து டம்ளர் டம்ளரா ஏதோ குடிக்கிறாங்க! பக்கத்திலே மது குடுவை வேற. "இதென்னடா இது?" ன்னார் துறவி. வழி காட்டியவர் "ஆமா. அப்பனுக்கும் பிள்ளைக்கும் இதே வேலை. காலைல எழுந்தா ராத்திரி வரை குடிச்சுகிட்டே இருக்காங்க" ன்னுட்டுபோயிட்டார். துறவி என்னடா செய்கிறது ன்னு யோசிச்சார். அப்புறம் வாத்தியார் சொல்லி இருக்காரே; போய் கேட்டுடலாம் ன்னு கிட்டே போனார். கிட்டே போனா சாராய வாசனை கொஞ்சம் கூட இல்லை. வெறும் தண்ணியைத்தான் குடிக்கிறாங்க ன்னு தெரிஞ்சது! ஏன் இப்படி ஏமாத்தறீங்க ன்னார். 'குடியர்' பதில்சொன்னார்: அப்பதான் பொண்ணை பாத்துக ன்னு யாரும் வர மாட்டாங்க!

--

இப்படி பிரமவித்து ஏன் துக்கம் அனுபவிக்கணும் ன்னு ஒரு கேள்வி இருக்கு.

இந்த நாலு பேரோட கர்மாக்களும்தான் வேறு வேறா இவர்கள் இருக்க காரணம்.

சமாதி என்கிறது உலகநாட்டமே இல்லாம இரண்டற ஐக்கிய நிலையிலே இருக்கிறதாகும்.

வரன் பசி முதலியது வரும் போது ஆகாரம் சம்பாதிச்சு சாப்பிட பகிர் முகமாவான்.

வரியன் அன்னியர் தூண்டினால் மட்டுமே பகிர் முகமாகி உணவை ஏத்துப்பான்.

வாரிட்டன் தானாவும் வராமாட்டான். மத்தவங்க தூண்டியும் வரமாட்டான். எப்பவுமே தேகம்

கட்டை போல கிடக்க தான் சதா அதீத நிலையிலேயே இருப்பான். அவன் நிலைதான் முடிவான முடிவுன்னு சிலர் சொல்கிறது. மத்தவங்க பார்வைக்குத்தான் அவன் உடம்போட இருக்கானே தவிர தன் வரை தேகம் இருக்கிற நினைப்பே இல்லாத பேரின்பத்திலே இருப்பான்.

முந்திய ரெண்டு பேரும் பிரம்ம நிலையிலே இருக்காங்கன்னா இந்த உலகத்தை எப்படி பார்ப்பாங்க? அவங்களுக்கும் தன்னோட உடம்புன்னு ஒரு உணர்ச்சி இருக்காது. அதை சாக்ஷியா மட்டும் பார்ப்பாங்க. நாம் ஒரு சினிமாவை பார்க்கிறபோது எப்படி பார்க்கிறோமோ அப்படி. இன்னும் சரியா சொல்லணும்னா ஒரு நாடகத்திலே நடிக்கிற மாதிரி. அதிலே தனக்கும் ஒரு பாத்திரம் -ரோல்- இருக்கு இல்லையா?

இவங்க இப்படி பகிர்முகமா வரதால அப்போதைக்கு அனுபவிக்கும் சுகம் குறையுதே தவிர மத்தபடி அவங்களோட ஞான நிலையை அது பாதிக்காது.

இப்படி வித்தியாசம் இருக்கிறது அவங்களோட பிராரத்த கர்மாவிலே இருக்கிற வித்தியாசம்ன்னு சொன்னோம். முக்தி நிலைக்கு போகணும்ன்னா ஒத்தரோட கர்ம கணக்கு பாலன்ஸ் ஆகணும். அதாவது அனுபவிக்க வேண்டிய புண்ணியமோ பாபமோ இல்லைன்னு ஆகணும். பத்து புண்ணியம் பண்ணி இருக்கேன். பத்து பாபம் பண்ணி இருக்கேன். தானிக்கி தீனி சரி போயிந்தின்னு சொல்ல முடியாது. பாபமோ புண்ணியமோ விளைவை அனுபவிச்சே தீரணும். சில பிராயச்சித்தங்கள் அவற்றோட கடுமையை குறைக்கலாமே தவிர வராம தடுக்காது. இல்லை கொஞ்சம் தள்ளிப் போட முடியுமோ என்னவோ?

ஞானம் வந்தா சஞ்சித கர்மா காணாம போயிடும். பற்றில்லாத போனதாலே இப்ப செய்கிறதிலே கர்ம பலன் ஒட்டாது. ஆகாமி கர்மா கிடையாது. ஆனா ஏற்கெனெவே பலன் தர ஆரம்பிச்சுவிட்ட கர்மாவான பிராரத்த கர்மாவை அனுபவிச்சு தீரணும்ன்னு முன்னேயே பாத்தோம். உலக விவகாரத்திலே இல்லாம இதை அனுபவிச்சு தீர்க்க முடியாதே? அதனால அவங்க அப்பப்ப தேவையான அளவு பகிர்முகமா இருக்காங்க. ஆகாரம் எடுத்துக்க வேண்டிய அளவு கூட பிராரத்தம் இல்லாதவனே வரிட்டனா இருக்கிறவன். அப்ப மத்தவங்களைப்பத்தி யூகிச்சுக்கலாம். ஆனா நாலு பேருமே ஞானிகள்தான். அதுல சந்தேகமே இல்லை.

முக்தி என்கிறது மோட்சம். அதை அடைஞ்சவங்க முத்தர். இவர்கள் ரெண்டு விதம்: ஜீவன் முத்தர், விதேக முத்தர்ன்னு பாத்தோம். விதேக முத்தருக்கு தேகம் போயிடுத்து. மறு பிறவி இல்லாம பரமாத்மாவோட ஐக்கியம் ஆயிட்டார்.

ஜீவன் முத்தர் உடம்போட இருக்கிறபோதே பிரம்ம நிலையை அனுபவிக்கக்கூடியவர் ன்னு பாத்தோம். இதிலே 4 வகையும் பாத்தோம்.

அதனால முத்தி என்கிறது ஏதோ இறந்து போனாதான் வரும்ன்னு இல்லை என்பது தெளிவு.

இவங்க சில காரணங்களுக்காக தன்னை வெளியே அதிகமா காட்டிக்கிறதில்லைன்னும் பாத்தோம். அப்ப எப்படி ஒத்தர் ஜீவன் முத்தர்ன்னு கண்டு பிடிக்கிறது?

அவங்களுக்கு பத்து குறிகள் உண்டுன்னு சிவப்பிரகாச ஸ்வாமிகள் சொல்லி இருக்காங்க.

குறிகளோர் பத்துளவா ஞானமயர்ச் சுவைதாங்

குரோதமின்மை வைராக மைம்பொறிக ளடக்க

லறமுதவு சமைதமையே சனப்பிரியத்துவமே
யலோபமொடு கொடையபய நிருமதமென் றறிக
நெறிமருவு சீடரொடு பத்தருதா சீனர்
நிலையில்பா விகளென்னு நால்வகையோ ரிடத்து
முறையினனுக் கிரகம்வந் துறுமருள்கொள் சீவன்
முத்தனா லென்பரவை முறையினெடுத் துரைப்பாம்.

பிரிச்சுப்பாக்க:
குறிகளோர் பத்துளவாம் ஞானமயர்ச் சுவைதாம்
குரோதமின்மை வைராகம் ஐம்பொறிகள் அடக்கல்
அறம் உதவு சமை தமையே சனப்பிரியத்துவமே
லோபமொடு கொடை அபயம் நிருமதம் என்றறிக
நெறி மருவு சீடரொடு பத்தர் உதாசீனர்
நிலையில் பாவிகளென்னும் நால் வகையோர் இடத்து
முறையின் அனுக்கிரகம் வந்துறு மருள் கொள் சீவன்
முத்தனால் என்பர் அவை முறையின் எடுத்துரைப்பாம்.
(வேதாந்த சூடாமணி)

1.குரோதமின்மை 2. உலோபமின்மை 3. அகங்காரமின்மை 4. பஞ்ச இந்திரியங்களையும் அடக்குதல் 5. சமை (சமம்) 6. தமை (தமம்) 7. ஜனப்பிரியத்துவம். 8. கொடை 9. அபயம். 10. வைராக்கியம்.

இதை எல்லாம் சாதனா சதுஷ்டயத்திலே (நினைவிருக்கா? :) பாத்தாச்சு இல்லையா?

அபேதமா பாக்கிறதாலே சீடனானாலும் சரி, பகதர்கள் ஆனாலும் சரி, "இவரோட சமாசாரம் ஒண்ணும் எனக்கு வேணாம்பா" என்கிற உதாசீனரானாலும் சரி, இல்லை அவரை திட்டி பிரச்சினை செய்கிற பாவிகளானாலும் சரி - எல்லாருக்குமே அனுக்கிரகம் செய்கிறாராம்!

இப்ப சீடன் கேக்கிறான் ஸ்வாமி ஞானமடைஞ்ச ஜீவன் முத்தரும் கர்மங்களிலே உழலுகிற அஞ்ஞானிகள் மாதிரி பிரபஞ்ச விவகாரங்களை பண்ணா எப்படி? இச்சை, கர்மங்கள் ஒழிஞ்சு எப்படி இவங்களுக்கு முக்தி கிடைக்கும்?

குரு சொல்கிறார்: அப்பனே ஆகாசம் இருக்கு. அது எல்லா இடத்திலேயும் இருக்கு. ஆனா எதையும் அது பற்றி இல்லை. மத்த நாலு பூதங்களையும் பாத்தா ஒண்ணோட ஒண்ணு சம்பந்தம் வந்தா உறவு கொண்டாடி விடும். ஆகாசம் எல்லாத்துக்கும் இடம் கொடுத்தாலும் எதையுமே பற்றாம இருக்கும்.

அது போல அஞ்ஞானிகள் நாம் தேகி; கர்மம் செய்யறோம்ன்னு நினைவோட செய்வதால அவங்களுக்கு அந்த செயலாலே பற்றுதல் உண்டாகும். பலனை அவங்க அனுபவிக்கனும். ஆனா ஞானியோ தனக்கு தேகம் இருக்கறதாவே நினைக்கிறதில்லை. தான் செய்கிறோம் என்கிற நினைப்பு அவனுக்கு இல்லை. பிராரத்தத்தினாலே தானா வருகிறதை செய்து கொண்டு போறாங்க. வெளியே இருக்கிறவங்களுக்கு இவங்க காரியம் செய்கிறதா தோணினாலும் இவங்களோ சாட்சியா மட்டுமே இருக்காங்க. (தானே செய்கிற விஷயங்களையே அவங்க ஒரு

சினிமாவை பாக்கிறது போல பாப்பாங்க.) ஆதனால கர்ம பலன் அவங்களை பிடிக்கிறது இல்லை.

பிரம்ம வித்து சாட்சியா மட்டும் தாமரை இலை நீர் போல இருந்து உலகிலே இருந்தாலும், அன்னியர் துக்கத்தைப்பாத்து தான் துக்கிக்கிறாராம்.

ஏன் அன்னியர் துக்கம்? அதான் இவருக்குன்னு இருக்கிற உடம்பை நாம பாத்தாலும் இவர் பாக்கிறதில்லையே? அப்ப இவரோட உடம்புக்கு நேருகிற துன்பங்கள் இவரை பாதிக்கிறதில்லை. பின்னே எப்படி பிராரத்த கரமா அனுபவிச்சு கழிகிறது? இப்படி மறைமுகமாவும் இன்னுமொரு பின்னால் சொல்லப்போகிற ஆச்சரியமான விஷயத்தாலும்!

மத்தவங்களுக்கு ஏற்படுகிற துன்பத்தை தனக்கு ஏற்பட்டதாவே இவர் பாத்து கஷ்டப்படுவார்! இந்த மாதிரியான ஜீவ காருண்ய செயல்களாலே கர்மா அனுபவிக்கப்பட்டு நீங்கும்! இதுக்கான வாய்ப்பை இவர் தேடிப்போக வேணாம். பிராரத்த கர்மாவே அவற்றை கொண்டுவந்து சேர்க்கும்!

ஆனா எப்பவுமே ஜீவ முக்த தன்மை கெட்டுப்போகாது. பற்று இல்லையானாலும் திரிபுடி (செய்கிறவன், செய்கை, செய்யப்படுவது) உண்டு. மனசும் இருக்கும். ஆனா அது சத்துவமாகவே இருக்கும்.

101.

பிரமவித்துக்களும் அஞ்ஞானிகளைபோலே விவகாரம் செய்தால் சம்சார பந்தம் எப்படி நீங்கும்?

பிரமஞானிகளுங் கன்மப் பேதையர் போலே வாழ்ந்தால்

திரமுறுமஞ்ஞா னம்போய்ச் செனியாத வழியேதென்றால்

பரவுமா காச மொன்றிற் பற்றாது மற்றை நாலும்

விரவின தோடுங் கூடும் விதமிரு வோரு மாவார்

பிரமஞானிகளும் (பிரமவித்துக்களும்) கன்மப் பேதையர் (கர்மிகளான அஞ்ஞானிகள்) போலே வாழ்ந்தால், ஸ்திரமுறும் (நிலையான) அஞ்ஞானம் போய் செனியாத (மீண்டும் பிறக்காத) வழியேது என்றால், பரவும் ஆகாசம் (மற்ற 4 பூதங்களில்) ஒன்றில் பற்றாது, மற்றை நாலும் (4 பூதங்களும்) விரவினதோடும் கூடும் (கலந்து நிற்கும்) விதம் இருவோரும் ஆவார் (ஞானி அஞ்ஞானிகள் இருவரும் ஆவார்)

தாத்பர்யம்: கர்மம் ஒன்றானாலும் கருத்து வேறானதால் பிரமவித்து அஞ்ஞானம் நீங்கி மோட்சம் அடைவர்.

ஒரு பஞ்சுப்பொதி இருக்கு. அதை எரிக்கணும்னா ஒரு சின்ன தீக்குச்சி தீயே போதும். ஊழித்தீ ன்னா? கேக்கவே வேணாம். பல ஜன்மங்களா சேர்ந்து நம்ம துரத்திக்கிட்டே வர சஞ்சித கர்மங்கள் இருக்கு இல்லையா? அவை எல்லாம் தத் பத தரிசனம் என்கிற அஹம் ப்ரம்மாஸ்மி என்கிற பாவனை திடமா வந்ததுமே எரிந்து போகும். ஞானத்தீயால அத போல அழிக்கப்படுதாம். த்வம் பத தரிசனம் என்கிற தான் யார்ன்னு நிச்சயமா அறிஞ்ச உடனே

அன்னியமா ஒண்ணும் இல்லாததால யார் யாருக்கு என்ன செய்ய முடியும்ன்னு ஒரு நிலை வந்து விடுகிறதாலே பற்றில்லாத கர்மத்தால ஆகாமியம் வராமல் போகும். மீதி இருக்கிறது பிராரத்தம்தான். அது வில்லுலேந்து கிளம்பின அம்புபோல. இலக்கை அடைஞ்சே தீரும். அதனால அது அனுபவிக்க அனுபவிக்கத்தான் தீரும். அது தீரும் போது அஸி பத நிலை வந்துடும். அடியோட தான் என்கிறது போய் சகஜ சமாதி அடைந்துடுவார். அதுக்கு அப்புறம் வெளியே வர வேலையே இல்லை. அவர் வரனாகி, வரீயானாகி, அப்புறம் வரிட்டனாயிடுவார்.

சஞ்சிதமுன் கட்டுவினை சற்குருநோக் காற்சரியும்

பஞ்சுமலை பட்ட நெருப்பாய்.

கொடுப்பானு மீசனதை கொள்வானுமீசனெனின்

மடுக்கா வெதிர் வினைகள் வந்து.

உள்ளப் பொசிப்பெல்லா முண்டொழிப்ப தன்றியிதைத்

தள்ளப் படாதெவர்க்குந் தான்

வள்ளலார் _ பாசவியல்

102.

கன்மத்திரயம் நீங்குதல்:

பஞ்சினை யூழித்தீப்போற் பலசன்ம விவித வித்தாஞ்

சஞ்சித மெல்லாஞானத் தழல்சுட்டு வெண்ணீறாக்கும்

கிஞ்சிதா காமியந்தான் கிட்டாமல் விட்டுப்போகும்

விஞ்சின பிராரத்தத்தின் வினையநு பவித்துத்தீரும்.

பஞ்சினை ஊழித்தீப்போல் பல சன்ம விவித (பல விதமான) வித்தாம் சஞ்சிதம் எல்லாம் ஞானத் தழல்சுட்டு வெண்ணீறாக்கும். கிஞ்சித் (கொஞ்சம்) ஆகாமியம்தான் கிட்டாமல் விட்டுப்போகும் (சம்பவியாமல் நீங்கும்). விஞ்சின (மீதி) பிராரத்தத்தின் வினை அநுபவித்துத்தீரும்.

தாத்பர்யம்: சஞ்சித கர்மம் பரஞானத்தாலும், ஆகாமியம் ஜீவத்துவம் நஷ்டமடைவதாலும், பிராரத்தம் அனுபவித்தும் தீரும்.

---

நினைவுறுத்தல்: சஞ்சித கர்மம்: பிறவி எடுக்கும் போது நாம் கொண்டு வந்த மூட்டை. ஆகாமியம்: இந்த ஜன்மத்தில் நாம் உண்டாக்கிக் கொள்வது. பிராரத்தம்: பலன் தர துவங்கிவிட்ட கர்மா.

--

அநுபவித்துத்தீருதல்: புலி என நினைத்து விட்ட அம்பு பசு என அறிந்தாலும் எப்படி நிற்காதோ அது போல பலன் தர தொடங்கிவிட்ட கர்மா ஞானம் வரினும் நிறுத்த இயலாமல் இச்சை, அனிச்சை, பர இச்சைகளாக புசித்து தீரும்.

சரி, ஜீவன் முத்தரா இருக்காரு. அடுத்த பிறவி இல்லே. ஆனா இந்த பிறவி கர்மாவ தீர்க்க

உலகத்திலே வாழணும். பற்றில்லாம கர்மம் செய்யறாரு. அதனால இந்த நிலை வந்த பிறகு கர்மம் பிடிச்சுக்காது சரிதான். ஆனா பிறக்கறப்பவே ஞானியா பிறக்கலையே! பிறந்ததுலேந்து இந்த பிறவில செஞ்சது? அதோட கர்ம பலன் என்ன ஆகும்? அதெப்படி அது ஒட்டாம போகும்? அது எங்கேயாவது போய் சேரணுமே?

எப்படின்னா ...

பிராரத்த கர்மா சில "நல்ல" விஷயங்களையும் செய்யத்தூண்டும். அதே சமயம் சில "கெட்ட" விஷயங்களையும் செய்யத்தூண்டும்.

அட! இவனெல்லாம் சாமியாரு வேஷம் போட்டுகிட்டு வந்துட்டான். இவனை எனக்கு தெரியாதா? (இப்படி பண்ணான், அப்படி பண்ணான்...) சுத்த பிராடு சார்!.... இந்த ரீதியிலே சிலர் அவரை திட்டிகிட்டு இருப்பாங்க. அவங்க புதுசா கர்மாவால வரக்கூடிய பாவத்தை எல்லாம் சேர்த்து வாங்கிக்கிறங்களாம்!

விஷயம் தெரிஞ்ச சிலர் ஜீவன் முத்தரை பூஜை பண்ணி, போற்றி புண்ணியத்தை எல்லாம் வாங்கிப்பாங்களாம். ஞானி லெவெல்லே அதுவும் பிரச்சினைதானே? பொன் விலங்கு!

அப்ப இருந்த ஒரே கர்மாவான பிராரத்த கர்மாவும் ஜீவன் முத்தரை விட்டு போயிடும்.

103.

சீவன் முத்தர் செய்யும் இருவினை எப்படி நீங்கும்?

> பொறுமையாற் பிராரத்தத்தைப் புசிக்குநாட் செய்யுங் கர்மம்
>
> மறுமையிற் றொடர்ந் திடாமன் மாண்டுப்போம் வழியேதென்றால்
>
> சிறியவ ரிகழ்ந்து ஞானி செய்தபா வத்தைக் கொள்வார்
>
> அறிவுளோ ரறிந்து பூசித் தறமெலாங் கைக்கொள்வாரே

மறுமையில்[லாத சீவன் முத்தர்] பொறுமையால் பிராரத்தத்தை புசிக்கும் நாள் [சீவன் முத்தராய் உள்ள போது] செய்யும் கர்மம் [அவர்களை] தொடர்ந்திடாமல் மாண்டுப்போகும் வழி ஏதென்றால், [அவர்களை] சிறியவர் (மூடர்கள்) இகழ்ந்து ஞானி செய்த பாவத்தைக் கொள்வார். அறிவுளோர் (விவேகிகள்) அறிந்து (அவர்கள் தன்மை அறிந்து) பூசித்து அறமெலாம் (புண்ணியங்களை) கைக்கொள்வாரே (ஏற்றுக்கொள்வார்).

தாத்பர்யம்: சீவன் முத்தர் செய்யும் வினைகளின் புண்ணிய பாப பலன்களை விவேகியும் அவிவேகியும் ஏற்பர்.

--

பொறுமையால்- ‘‘சுக விஷயம்” வரின் உடனே முன்வந்தும் “துக்க விஷயம்” வரின் பின் தங்கியும் இல்லாது இரண்டையும் சமமாக ஏற்பதால்.. சாரத்தைவிட்டு சக்கையை பார்ப்பது போல மூடர்கள் பிராரத்தத்தால் வரும் அகுணத்தை பார்த்து இகழ்ந்து பாவத்தை கைப்பற்றுவர். ஜலத்தை விட்டு பாலை கொள்ளும் அன்னம் போல் முமுட்சுக்கள் அகுணத்தை விட்டு

சொற்பமாக இருந்தாலும் குணத்தைப் பார்த்து சிவ சொரூபமாய் எண்ணி அர்சனையாதி செய்து புண்ணியத்தை கைக்கொள்வர்.

காயத்தில் வேறாகத் தன்னைக் கண்டோன்

காயமீ றினுமறியான் கன்னற் கட்டி
தீயிற்கா யினுமறிந்த போது மின்பந்
தீராத வாறுபோற் றெளிந்த ஞானி
மாயத்தின் மோகத்தாற் பேத மாகான்
மணந்தபர புருடன்மேல் மனஞ்சேர் மங்கை
நேயத்தான் மனைதொழில்கள் செய்யு மாபோ
னிகழ்தொழிற்செய் யினும்பரத்தி னிலமை நீங்கான்

-வாசிட்டம்

¨நினைப்பெலாம் விட்டு நிர்த்தொந்தனாய் ஞான சீலனாய் இருக்கிறவனுக்குத் தனக்குத்தானே வந்த போகத்தில் சுக துக்கங்களில்லை.¨

¨பிரம்ம ஞானியை புண்ணிய பாவ பலன்கள் தொடர மாட்டா; நிர்மல ஆகாசத்தைப் புகை தொடராதது போல¨

என்கிறது அஷ்டா வக்கிர கீதை.

ஏன்னா அவன் அஞ்ஞானிகளை மாதிரி சீவ பாவத்திலே பலனை கருதி எதையும் செய்கிறதில்லை. செயல்கள் எல்லாமே பிராரப்த பலனை பொறுத்தவை. அந்த பலன் வறுத்த விதை மாதிரி பொசிப்புக்கு மட்டுமே தகுதி உள்ளது. பாப புண்ணியங்களை உண்டாக்க தகுதி இல்லாதது என்கிறார் வள்ளலார்.

வறுத்தவிதை யுண்பதன்றி மாநிலத்தை கீன்று

செறுத்துவிதைப் பாரோ தெளி

-வள்ளலார்- பாசவியல்

குரு சொல்கிறார்: அன்புள்ள மகனே, ஜீவன் முத்தரை சேவிச்சவங்க பிரம்மா, விஷ்ணு, சிவன் மூணு பேரையும் மகிழ்ச்சி அடைய வைச்சு அரிய தவமெல்லாம் பண்ணி ஜன்ம சாபல்யம் பெற்றவங்களா ஆவாங்க ன்னு வேதங்கள் சொல்லுது.

தபஸ் பண்ணி திரிமூர்த்திகளிலே ஒத்தரை பாத்து வரம் வாங்கினா சிலசித்திகளும் புண்ணியங்களும் மட்டுமே கிடைக்கும், ஆனா மூணு பேரையும் ஒண்ணாவே பாத்துடலாமே! ப்ரம்மத்தோட சத்வ நிழல்தானே இந்த மூணு விதமா காணப்படுது! ஜீவன் முத்தரோ பரப்பிரம்ம சொரூபமே! இந்த ஞானியோட தரிசனத்தால வரங்களும் கிடைக்கும்; குரு கிடைத்து அவர் மூலமா முத்தியும் கிடைக்குமே!

அறிவால பல விஷயங்களை சாதிக்கலாம். ஆனா பிரம்மஞானத்தை அடைய முடியாது. அதனாலே எல்லாத்தையும்விட அதுவே கஷ்டமானது. அதனால ஞானிகளோட மகிமை அளவிட முடியாதது.

யாரான ஒரு பெரிய விஷயம் செய்துட்டதா சொன்னா, ஆமா, இதென்னடா பெரிய பிரம்ம

வித்தை ன்னு சொல்வோம்.

கீதையிலே கண்ணனும் பிரம்ம ஞான சாதனமே மிகவும் வருத்தம் தருவதுன்னு சொல்கிறான். அதை அடைந்தவங்கள் நிசமாவே பெரியவங்கதானே!

திரிவித வுலகத் தரிதொரு ஞானி
தேர்விடத் தென்றுமோ ரொன்றை
யுரைசெயிற் பிரம வித்தையொத் தரிதோ
வென்றுமிவ் வுலகுரைப் பதனா
லரிசொல்கீ தையினும் பிரமசாதகரி
னார்க்குள வருத்தமென் பதனாற்
பெரியதோர் வருத்த மெனமறை துணிந்த
பிரமநா னெனவிருத் தலினான்

--

பிரிச்சு பாக்க
திரிவித உலகத்து அரிதொரு ஞானி
தேர்விடத்து என்றும் ஓர் ஒன்றை
உரை செயிற் பிரம வித்தை ஒத்தது அரிதோ
என்றும் இவ் உலகு உரைப்பதனால்
அரி சொல் கீதையினும் பிரம சாதகரினார்க்கு
உள வருத்தம் என்பதனால்
பெரியதோர் வருத்தம் என மறை துணிந்த
பிரம நான் எனவிருத்தலினால்.

-வைராக்கிய தீபம்.

104.

அதற்கு வேத பிரமாணம்:

சீவன்முத்தரைச் சேவித்தோர் சிவனயனெடு மாலான
மூவரு மகிழ நோன்பு முழுவதுஞ் செய்துசன்ம
பாவன மானாரென்று பழமறை முழங்கு மிப்பான்
மேவருஞ் சீவன்முத்தர் விதேகமுத்தியுநீ கேளாய்

சீவன்முத்தரைச் சேவித்தோர் சிவன், அயன் (பிரமன்), நெடு மாலான (விஷ்ணு) மூவரும் மகிழ நோன்பு முழுவதும் (தவங்கள் அனைத்தும்) செய்து சன்ம பாவனமானார் (பரி சுத்தமானார்) என்று பழ மறை முழங்கும். இப்பான் (இனி) மேவருஞ் (மேவ அரும்=பொருந்துதற்கு அரிய)

சீவன்முத்தர் [அடையும்] விதேகமுத்தியும் (உடல் நீங்கிய முத்தி) நீ கேளாய்.

--

சீவன் முத்தருக்கு மூணு உடம்பும் போகணுமே. அப்பதானே பிரம்மத்தோட ஐக்கியமாகலாம்.

ஸ்தூல உடம்பு காலப்போக்கிலே விழுந்துடும். அதாவது பிராரப்த கர்மா முடிஞ்சதுமே மேலே கர்மா செய்ய, அனுபவிக்க வேலை இல்லாததால உடம்பு சவமாயிடும்.

சாதாரணமா இந்த நேரத்தில சூக்கும சரீரம் அவித்தையான காரண சரீரத்தோட ஒட்டிக்கும். இந்த காரண சரீரம்தான் அடுத்த பிறவிக்கு காரணம். இதுதான் ஆன்மாவோட கர்ம மூட்டை ஒட்டிகிட்டு போக கோந்து போல உதவும்.

ஆனா எப்ப ஞானம் வருதோ அப்பவே ஞானத்தீயால அவித்தை எரிஞ்சு சாம்பலாகுமாம். ஆணவம், கன்மம், மாயை என்கிற இந்த காரண சரீரம்தான் இந்த அவித்தை.

அதாவது ஞானத்தாலே காரண சரீரம் அழியும்.

கொல்லன் உலையிலே பாத்தா பழுக்க பழுக்க இரும்பை காய்ச்சுவார். தேவையான உருவம் கிடைக்கிறாப்போல இரும்பு துண்டை சம்மட்டியால அடிப்பார். அப்பறம் மேலே தண்ணிய கொட்டுவார். நல்லா பழுக்க காய்ச்சியதாலே தண்ணி மேலே விழுகிற அந்த வினாடியே ஆவியா போய் காணாம போகும்.

அது போல அவ்வளவு சீக்கிரமா சூக்கும சரீரமும் காணாம போகும்.

எப்படின்னா பசை மாதிரி ஒட்டிகிட்டு அடுத்த இடத்துக்கு கொண்டு போன காரண சரீரம் இல்லை என்கிறதால அதை கட்டுப்படுத்த ஒண்ணும் இல்லாம அதோட இயல்பான நிலையை அடையும். இயல்புன்னா? எங்கிருந்து வந்ததோ அங்கேயே போக வேண்டியதுதான். எல்லா காரியங்களும் அததோட காரணத்தில ஒடுங்குகிறாப்போல சூக்கும தேக சத்துவங்கள் சத்துவ ரஜோ குண தன் மாத்திரைகளாக மாறும்.

முன்னே ஆகாசாத் வாயு... ன்னு இறங்கி வந்தாப்பல இப்ப ஒவ்வொண்ணும் வந்த வழியே ஆகாசத்தில ஒடுங்கி, ஆகாசம் விட்சேப சக்தியில ஒடுங்கி, விட்சேபம் மூல ப்ரக்ருதில ஒடுங்கி, இதுவும் பர ப்ரம்ம சொரூபத்தில லயம் ஆகிடும்.

தலை சுத்துதா! ஒண்ணுமில்லை. சீவன் வந்த அதே வழில திரும்பி போயிடும். அவ்வளோதான்.

அந்த நிலையிலே சாக்கிரத்/ ஸ்வப்ன/ சுசுப்தி இல்லை. அதனால துரியம் ன்னு பேர். இந்த துரிய பரம்பொருள் எல்லா இடத்திலேயும் நீக்கமற நிறைஞ்சு இருக்கிறதால அதுக்கு விபு ன்னு பேர்.

105.

சீவன் முத்தருக்கு சரீர த்ரயம் நீங்கும் விதம்:

அரியமெஞ் ஞானத்தீயா லவித்தையா முடனீறாகும்

பெரியதூ லமுங்காலத்தாற் பிணமாகி விழுமந்நேரம்

உரியசூக்கும சரீரமுலையிரும் புண்டநீர் போல்

துரியமாய் விபுவாய்நின்ற சொரூபத்தி லிறந்துபோமே.

அரிய மெஞ்ஞானத் தீயால் அவித்தையாம் உடல் (காரண சரீரம்) நீறாகும் (சாம்பலாகும்). பெரிய தூலமும் (பருத்த ஸ்தூல சரீரம்) காலத்தால் (காலப்போக்கில் பிரார்த்த கர்மா முடிந்ததும்) பிணமாகி விழும். அந்நேரம் உரிய (தன்னை அறிய சாதனமான) சூக்கும சரீரம் உலை இரும்பு உண்ட நீர் போல் (கொல்லன் உலையில் பழுக்க காய்ச்சிய இரும்பு மீது ஊற்றிய நீர் ஆவியாதல் போல) துரியமாய் விபுவாய் நின்ற சொரூபத்தில் இறந்து போமே.

--

த்வைத, விசிஷ்டாத்வைதம் போல அல்லாது அத்வைத அப்ரதிபந்த அபரோட்ச ஞானம் ஆகையால் அரிய மெய்ஞானம். ஜடமான ஸ்தூல சரீரமும் அறியாமையே சொரூபமான காரண சரீரமும் தன்னை அறிய ஹேது இல்லை. சூக்கும சரீரமே ஹேதுவாம்.(-உரிய சூக்கும சரீரம்) சூக்கும சரீரம் பிரளயத்தில் பிரதம சரீரத்துடன் உண்மையாகிய பிரமத்தில் அத்தியாச ஐக்கியம் ஆதலின் மறுபடி ஜன்மிக்கும். ஆனால் அகண்ட அறிவு சொரூபத்தில் “காய்ச்சின இரும்பு கிரகிக்கின்ற நீர் போல” இறந்த பின் ஜன்மிக்காது.

தாத்பர்யம்: சீவன் முத்தருக்கு தத்துவ ஞானம் வந்தவுடன் காரண சரீரம் நீங்கும். பிராரத்த கர்மம் புசித்து தீர்த்தவுடன் ஸ்தூல சரீரம் நீங்கும். அப்போது சூட்சும சரீரம் பரிபூரண சொரூபத்தில் லயித்து நீங்கும்.

--

மண் பானை ஒண்ணு இருந்தது. அது இருந்த வரைக்கும் அதால பிரிக்கப்பட்டு கட ஆகாசம் ன்னு ஒண்ணு இருந்தது. மாமியாரோ மருமகளோ யாரோ ஒத்தர் அதை போட்டு உடச்சுட்டாங்க. அப்ப அது காணாம போச்சு. "காணாம" ன்னா வெளியே இருக்கிற மகா ஆகாசத்தோட ஒண்ணா போச்சு.

சீவன் முக்தருக்கு ஒட்டிகிட்டு இருந்தது உடம்புதான்.

இந்த உபாதி போன உடனே ஆதி/ அந்தம்/ நடு ன்னும் உள்ளே வெளியேன்னும் ஒண்ணுமில்லாத கைவல்லிய நிலைக்கு போய் அங்கேயே எப்பவும் இருப்பார்.

106.

விதேக முத்தன் இயல்பு:

கடமெனு முபாதிபோனாற் ககனமொன் றானார்போல

வுடலெனு முபாதி போன வுத்தரஞ் சீவன்முத்தர்

அடிமுடி நடுவுமின்றி யகம்புற மின்றிநின்ற

படிதிகழ் விதேகமுத்திப் பதமடைந் திருப்பரென்றும்

கடம் (குடம்) எனும் உபாதி போனால் ககனம் (ஆகாயம்) ஒன்று ஆனார் போல உடலெனும்

உபாதி போன உத்தரம் (பிறகு) சீவன் முத்தர், அடி முடி நடுவும் இன்றி அகம் புறம் இன்றி நின்றபடி திகழ் (இருந்தபடி விளங்குகின்ற) விதேக முத்திப் பதம் அடைந்து என்றும் இருப்பர்.

--

எங்கும் பரவிய ஆகாயம் குட ஆகாயம். மகா ஆகாயம் என குடத்தால் மட்டுமே பிரிக்கப்படுகிறது. குடம் உடைந்து போன அந்த வினாடியே எப்படி அந்த இரண்டு ஆகாயங்களும் ஒன்றாகி விடுமோ அப்படி உடல் நீங்கிய அந்த வினாடியே சீவன் முத்தரும் பரி பூரணமான பிரமமும் ஒன்றாவர்கள்.

"மறு பிறப்புன்னு ஒண்ணும் கிடையாது; ஆன்மா பற்றி இருந்த உடம்பு போச்சுன்னா வந்த இடமான பரமாத்மாவோட கலந்துடும்" ன்னு ஒரு வாதம் உண்டு. இதை சாத்திரங்கள் தப்புன்னு நிரூபிச்சு இருக்கு.

இதை உண்மைன்னு ஒத்துண்டா கடவுள் இல்லை ன்னு சொல்லனும். அல்லது கடவுள் செய்கிறது அநியாயம் ன்னு சொல்லணும். ஏன்னா எல்லாரும் ஒரே மாதிரி இல்லை. சிலர் புத்திசாலியாவும் சிலர் என்னை மாதிரி டம்மியாவும் பிறந்து இருக்காங்க. சிலர் பணக்கார குடும்பத்திலேயும் சிலர் ஏழ்மையிலேயும் பிறந்து இருக்காங்க. இப்படி எக்க சக்கமா சொல்லிட்டே போகலாம் இல்லியா?

இப்ப பிறந்து இருக்கோம். அதனால முன்னே ஒரு ஜன்மம் இருந்து இருக்கணும். அதுக்கு முன்னே ஒண்ணு இருந்து இருக்கணும். இப்படியே அநாதியா.... போன பிரலயத்தையும் தாண்டி பின்னாலே போகும். ஒரு ஜன்மத்தில செய்கிற கர்மா அடுத்த நாலு ஜன்மத்துக்கு வித்தா இருக்காம். அதாவது ஒரு ஜன்மத்தில செய்கிற பாப கர்மாவுக்கு அடுத்த நாலு ஜன்மாவுக்கு அனுபவிச்சு தீக்கணும். அதனால யாருக்கு பிராரப்த கர்மா இந்த ஜன்மத்தில அனுபவிச்சு தீர்க்கிறாப் போல இல்லையோ அவங்களுக்கு ஞானம் வராது. மூணு ஜன்மங்கள்லே ஏறக்குறைய எல்லாம் அனுபவிச்சு தீர்த்து புதுசா ஒண்ணும் ஒட்டிக்காம இருந்தாதான் ஞானம் உண்டாகும்.

பானை உதாரணம் போல எல்லா ஆன்மாக்களும் பரமான்மாவில் கலக்காது.

ஜீவன் முத்தனுடைய ஆன்மா பிரியும்போது அதனிடம் கர்மா பற்று இல்லை. அது பரமான்மாவையே பற்றி இருக்கு. மத்தவங்க ஆத்மாக்களுக்கு கர்ம பற்று இருக்கு. அதனால அதிலே கலந்து அந்த நிலையை அடையும். சாதாரணமா நடக்கிற ஒருவன் ஒரு காலை முன்னாலே வைத்து அப்புரமா அடுத்த காலை எடுத்து வைக்கிறது போல உயிர் பிரியும் தருணத்திலே அடுத்து போற இடம் முடிவாயிடும். அதனால ஜீவன் முத்தர் ஆன்மா போல அது பற்றில்லாம தேகத்தை விட்டு வெளியே வருகிறதில்லை. பரமாத்மாவிலே கலக்கிறதும் இல்லை.

ஜட பரதர் அவரோட முன் ஜன்மம் ஒண்ணிலே ராஜாவா இருந்தார். பிறகு சன்னியாசம் மேற்கொண்டு மோக்ஷம் வேண்டி தபஸ் பண்ணார். சந்தியையிலே ஆற்றுக்கு போய் சூர்ய உபாசனை செய்கிற நேரம் ஒரு நிறை கர்ப்பமான மான் அங்கே வந்தது; அது தண்ணி குடிக்கப்போச்சு.

தண்ணியிலே வாயை வைச்ச அதே சமயம் ஒரு சிங்கம் கர்ஜிக்கிற சத்தம் கேட்டது. மான் மிரண்டு போய் ஆற்றிலே குதிச்சு இறங்கி நீஞ்சி அக்கரைக்கு போகப்பாத்தது. அதே சமயம் மான்குட்டி கர்பத்திலேந்து நழுவி பிரசவம் ஆயிடுத்து. மான் களைப்பினாலேயும் நீஞ்ச முடியாமையாலும் செத்துப்போச்சு.

இதை பாத்துகிட்டு இருந்த பரதருக்கு இரக்கம் மேலிட்டது. அடப்பாவமே! இந்த மான்குட்டிக்கு இப்படி ஒரு கதியான்னு பரிதாபப்பட்டு அதை எடுத்துப்போய் வளக்க ஆரம்பிச்சார். அது மேலே உசிரையே வெச்சுட்டார். அதுக்கு உணவு தரதும் அதை மத்த மிருகங்கள்கிட்டேந்து காப்பாத்தனுமேன்னு கவலை படுகிறதும்... இப்படியே இருக்கும் போது உயிரும் பிரிஞ்சது.

மானைப்பத்தி நினைச்சுகிட்டே இருக்கிறப்ப உயிர் பிரிஞ்சதால அது மேல பற்று வைச்சு இருந்ததால அடுத்து ஜன்மமும் வாய்ச்சது; மானா பிறந்தார். போன ஜன்மத்திலே அவர் செஞ்ச தபஸால அந்த பிறப்பு சமாசாரங்கள் நினைவு இருந்தது. இப்படி ஒரு தபஸ்வியா இருந்து மோக்ஷம் பெறுகிற வாய்ப்பை வீணாக்கிட்டோமேன்னு வருத்தப்பட்டது. இந்த ஜன்மத்திலே அதே தப்பை செய்யக்கூடாதுன்னு கவனமா இருந்து இறை நினைவோடேயே இருந்து அடுத்த ஜ்ன்மத்திலே ஒரு அந்தணருக்கு மகனா பிறந்தது. அவரே ஜட பரதர்.

என்ன சொல்ல வந்தேன்னா உயிர் பிரிகிறபோது எந்த நினைவோட இருக்கோமோ அதே பிறவியை அடைவோம். அதுக்குத்தான் பகவான் நாமாவை எப்பவும் சொல்லிகிட்டே இருக்கணும்; பகவத் சிந்தனையே சதாசர்வ காலமும் இருக்கணும் என்கிறது. அப்பதான் இறக்கும்போதும் அதே நினைப்பு இருக்கும்; பகவானையும் அடைஞ்சுடுவோம். இதுக்குத்தான் இறக்கும் தறுவாய்லே இருக்கிறவங்க பக்கத்திலே இருந்து கொண்டு பகவான் நாமாக்களை உரக்க சொல்லணும்ன்னும் சொல்லி இருக்காங்க.

ஜீவன் முத்தர் எப்பவும் பரமான்மாவையே நினைத்து அதிலேயே ஒன்றி இருக்கிறதாலே அவர் அதோட ஐக்கியம் ஆகிடுவார். சிவன் விஷ்ணு அம்பாள் ன்னு ஒரு கற்பனையிலே இருக்கிறவங்க அந்த அந்த ஈசனோட லோகத்தை அடைவாங்க. அது மோக்ஷம் இல்லை. முன்னாலே பரமாத்ம அனுபவம் இருந்தாதான் இறக்கிற நேரம் அதிலே இருக்க முடியும். இது சாதாரணமா யாருக்கும் வாய்க்கிறதில்லை.

ஞானிக்கு தன்னோட தேகம் எங்கே விழணும் எப்ப விழணும்ன்னு ஒண்ணும் லட்சியமே இல்லை. பரிசுத்தமான இடம் வேணும்ன்னு இல்லை, சிவராத்திரி, ஏகாதசி, உத்தரயணம் ன்னு ஒண்ணும் வேணாம்.

சூக்குமந் தனது காரணமடையத்

தூலமிங் ககன்றதே யென்றாற்

சூக்குமந் தனது காரணம் விடுத்துத்

தூலமொன் றெடுத்ததென் றுணர்வாய்.

ஒரு கிணறு தோண்டுகிறோம்.

அதிலே ஒரு வெளி இருக்குன்னு நினைக்கறோம். பள்ளத்திலே ஸ்பேஸ்! இது இப்பதான் வந்ததுன்னு நினைக்கிறது மாயை. முன்னமேயே அங்கே ஆகாசம் இருந்தது. அதிலே அப்ப மண் இருந்தது. இப்ப காத்து இருக்கு. ஆகாசம் எப்பவுமேதான் இருக்கு.

அது போல பிரம்ம நிலை சிரவண, மனன, நிதித்யாசம் செய்து அப்ப வருகிறதுன்னு இல்லை. அப்பதான் நாம் பிரம்மம்; நம் மட்டுமே இருக்கோம் என்கிற நினைப்புதான் வருது. அது எப்பவும் இருக்கிற நிலையை அறிகிறதேதானே ஒழிய புதுசா அப்படி ஆகலை.

கடலோரத்திலே ஒரு பெரிய பள்ளம் இருக்கு. அதிலே கடல் நீர் இருக்கு. கடல் கொஞ்சம் உள் வாங்குக்கிறதால அது கரைன்னு ஒண்ணாலே பிரிக்கப்பட்டு தனியா தோணுது. கடல் தன்னோட இயல்பு நிலையை அடைகிறபோது அதுவே கடலோட சேர்ந்து விடுகிறது. அந்த பள்ளத்திலே முன்னே இருந்ததும் கடல்தான். இப்ப இருக்கிறதும் கடல்தான். தனி என்கிற பாவனைதான் போச்சு!

அது போல நாம் எப்பவுமே அகண்ட பிரம்ம சொரூபிகள்தான். நான் என்கிற நினைப்பு அதை கெடுத்தது. "நான்" போகிற போது அதுவும் போய்விடுகிறது.

107.

சீடன் முன் (88 ஆம் செய்யுளில்) கூறிய அநுபவம் புதிதன்று எனல்.-

> சொல்லிய மகனேயெங்குஞ் சூழ்வெளியிருக்க மண்ணைக்
> கெல்லிய பின்புதோன்றுங் கிணற்றினா காசம்போலே
> ஒல்லையாம் பிரமநூலா லுற்றதுபோலே தோன்றும்
> எல்லையி னாமெப்போது மேகமென் றிருந்து வாழ்வாய்

[அநுபவம்] சொல்லிய மகனே, எங்கும் சூழ் வெளி (space, ஆகாசம்) இருக்க மண்ணைக் கெல்லிய பின்பு தோன்றும் கிணற்றின் ஆகாசம் போலே, (ஆகாசம் எப்போதும் எங்கும் உள்ளது என அறியாதவனுக்கு கிணற்றில் புதிதாக ஆகாசம் உள்ளதாக தோன்றுவது போல்) ஒல்லையாம் (அனாதியான) பிரமம் நூலால் (வேதங்களால்) உற்றது போலே தோன்றும் (புதிதாக அப்போது பிரத்யேக ஆத்மா நாம் மட்டுமே, நாம் என்றும் வியாபகமாக இருக்கிறோம் என்றும் அந்நிலை அப்போது அடையப்பட்டது போலவும் தோன்றும். அது பிராந்தியேயாம்.) எல்லையில்லா நாம் எப்போதும் ஏகம் என்றிருந்து வாழ்வாய்.

அடுத்து இந்த பிரபஞ்சம் முழுவதும் அநித்தியம். அதனால மாயைதான் அசத்தியம்தான். ஞான ரூபமான பிரம்மம் மட்டுமே உண்மை. இதை என்னிக்கும் மறக்காம இரு என்கிறார் தாண்டவராய ஸ்வாமிகள்.

நல்ல வெயில் ஆரம்பிச்சாச்சு. தார் ரோடில போனா ரோடிலே தண்ணீர் இருக்கா மாதிரி தோணுது. விவரம் தெரிஞ்சவங்க அது தண்ணி இல்லே கானல் நீர் ன்னு சொல்லுவாங்க. அது கானல் நீர் ன்னு தெரிஞ்சாக்கூட அந்த தோற்றம் இல்லாம போகாது.

பீச்சுக்கு போறோம். தூரத்தில ஏதோ பளபளக்குது. வெள்ளியில செய்தது ஏதோ கிடக்குன்னு நினைக்கிறோம். கிட்டப்போனா அது கிளிஞ்சல் ன்னு தெரியுது. அடுத்த நாள் நம்ம நண்பரோட பீச்சுக்குப் போறோம். நாம ஏமாந்த மாதிரியே அவரும் வெள்ளின்னு ஏமாறுகிறார். ஆனா நாம சிரிச்சுகிட்டே சொல்கிறோம் "நல்லா பாரு, அது கிளிஞ்சல்" ன்னு. நேத்து வெள்ளியா தெரிஞ்சது இப்ப அப்படி தெரியலை. ஏன்னா இப்ப விஷயம் தெரியும்.

மெஸ்மெரிசம், ஹிப்நாடிஸம் என்கிற வித்தை நமக்கு புதுசு இல்லை. முன் காலத்திலேயே கண்கட்டு வித்தைக்காரன் ஒரு நகரத்தையே உருவாக்கி காட்டுவான். அங்கே கந்தர்வர்கள் பறப்பாங்க; அப்சரஸ்கள் டான்ஸ் ஆடுவாங்க.... மந்திரவாதி ச்சூ! ன்னதும் எல்லாம் காணாம போயிடும்.

இதெல்லாம் இல்லாம மேலே வானத்தை பாத்தா நீல வண்ணமா குடை கவுத்தாப்போல தெரியறதும் கயிற்றிலே பாம்புன்னு பிரமை தோன்றுகிறதும் பருத்த கட்டையிலே மனிதன் போல தோன்றுகிறதும் பாத்து இருக்கோம்.

மலடியின் சேய், முயலின் கொம்பு ன்னு சொல்கிறது உண்டு. யோசனை பண்ணி பாத்தா அது ரெண்டும் இருக்கவே முடியாது.

இதெல்லாம் பலவிதமான மாயைகள்.

மலடியின் சேய், முயலின் கொம்பு போல அசத்து - பிரம்மத்தை தவிர வேற ஒண்ணு இருக்கிறது. (அசத்து = இருப்பு இல்லாதது)

பின்னே எனக்கு பிரபஞ்சம்ன்னு ஒண்ணு தோணுதேன்னா அது கிளிஞ்சில் வெள்ளி, கயிற்றிலே பாம்புன்னு பிரமை தோன்றுகிறதும்; பருத்த கட்டையிலே மனிதன் போல தோன்றுகிறதும்; மந்திரவாதி தோற்றுவிக்கிற கந்தர்வ நகரம் என்றது போல பொய்யான தோற்றமாம். இது தப்பு, இல்லைன்னு தெளிவு வந்துட்டா அதெல்லாம் அப்புறமா தோணுகிறதில்லை.

என்னதான் தியரி படிச்சு சரிதான் ன்னு ஒத்துண்டாலும் இன்னும் பிரபஞ்சம் தோணுதேன்னால் அது கானல் நீர் போல; கானலில் நீரில்லை, ஆகாயத்தில் நீல நிறம் இல்லை. இப்படி தெளிந்தபின்னும் அவை தோன்றினாலும் அவை அநுபவத்துக்கு வருவதில்லை. தியரி தெரிஞ்சு இது தப்புன்னாலும் அது தோன்றி கொண்டேதான் இருக்கும். பிரபஞ்சம் பொய்ன்னு உணர்ந்த பின்னும் சொப்பனப் பிரபஞ்சம் போல அநுபவத்துக்கு வரும்.

108.

சத் அசத்தின் தன்மை கூறி முன் சொல்லியபடி அநுபவித்து இருப்பாய் என்றது:

கானனீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர்க னாவூர்

வானமை கயிற்றிற் பாம்பு மலடி சேய் முயலின் கோடு

பீனமாந்தறி புமானிற் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே

ஞானமெய் மகனே யுன்னை நம்மாணை மறந்திடாதே

கானல் நீர், கிளிஞ்சில் வெள்ளி, கந்தர்ப்ப நகர், கனாவூர், வான மை (ஆகாயத்தில் நீல வண்ணம்) கயிற்றில் பாம்பு, மலடி[யின்] சேய், முயலின் கோடு (கொம்பு), பீனமாம் (பருத்த) தறி[யில்] (கட்டையில்)- புமான் (மனிதன்) [போல] இப் பிரபஞ்சம் எல்லாம் பொய்யே. ஞானம் மெய் மகனே, நம்மாணை (நம் மேல் ஆணை) உன்னை (நீ பிரமம் என்பதை) மறந்திடாதே.

--

மலடியின் சேய், முயலின் கோடு என்றது சீவேஸ்வர ஜகத் அத்யந்தம் அசத்து; பிரமமே உள்ளது என்றதாம். “பிரமமே உள்ளது, பிரபஞ்சம் அத்யந்தம் அசத்தானால்” மலடியின் சேய்,

முயலின் கோடு போல தோன்றாமலே இருக்க வேண்டும். அப்படி இல்லாது தோன்றுவதால் எப்படி கூடும்? பிரபஞ்சம் அசத்து என்பதற்கு மட்டுமே மலடியின் சேய், முயலின் கோடு என்றதாகவும், பிரபஞ்ச தோற்றம் கிளிஞ்சில் வெள்ளி, கயிற்றில் பாம்பு, பீனமாம் தறிபுமான், கந்தர்வ நகரம் என்றது போல பொய்யான தோற்றம் என்றார். கிளிஞ்சலை தவிர வெள்ளியும், கயிற்றைத்தவிர பாம்பும், கட்டையைத்தவிர மனிதனும், சூன்யத்தைத் தவிர கந்தர்வ நகரமும் இல்லை என தெளிந்தபின் வெள்ளி, பாம்பு ஆகியன தோன்றா. அப்படி இல்லாமல் மண்ணையன்றி குடத்தின் பொருள் இன்னதென்று ஆய்ந்து அறிய முயன்றால் அது பெயர்த்தும் தோன்றும். அது போல பிரபஞ்சம் காரணமான பிரமத்தை தவிர இல்லை என உணரினும் அது தோன்றுகிறபடியால், இது எப்படிக்கூடும்? பிரபஞ்சம் பொருள் அன்று என்பதற்கு மாத்திரம் கிளிஞ்சில் வெள்ளி ஆகிய திட்டாந்தங்கள் சொல்லப்பட்டது. பிரபஞ்சம் பொய், பொருளற்றது என உணரினும் அது மறுபடி கானல் நீர் போல தோன்றும். கானலில் நீரில்லை, ஆகாயத்தில் கரு நிறம் இல்லை. இப்படி தெளிந்தபின்னும் அவை தோன்றினாலும் அவை அநுபவத்துக்கு வருவதில்லை. பிரபஞ்சம் அப்படி இல்லாது சப்த ஸ்பரிசம் முதலானவற்றால் அநுபவிக்கப்படுகிறது. பிரபஞ்சம் அசத்து என உணரினும் பெயர்த்தும் தோன்றும். இதற்கே கானல் நீர் ஆகிய திட்டாந்தங்கள் சொல்லப் பட்டது. பிரபஞ்சம் பொய் என உணர்ந்த பின்னும் சொப்பனப் பிரபஞ்சம் போல அநுபவத்துக்கு வரும் எனக் கொள்க.

தாத்பர்யம்:

த்ருஷ்யமாய் அசத்தான சகத்துக் காலத்ரயத்திலும் த்ருக்காய், சத்தா மாத்திரமான ஆத்மா த்ரி காலத்திலும் உள்ளது. அவ்வாத்ம சொரூபமே தான் என்ற அநுபவம் விட்டு நீங்காதிருப்பாய் என்றதாம்.

தத்துவ விளக்கப்படலம் நிறைவுற்றது.

சிவோஹம்